
# கிறிஸ்தவ அஸ்திபார சத்தியங்கள்

## சீஷருக்கான வலுவான அடிப்படை

### பயிற்சிப் புத்தகம்



**கிரேக் காஸ்டர்**

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28: 19-20)

கிரேக்காஸ்டர்

*Christian Foundational Truths* in Tamil

**Christian Foundational Truths in Tamil**

## FDM World பிற பயிற்சிப்புத்தகங்கள்

திருமணம் ஓர்ஊழியத்தொடர் –கிரேக் காஸ்டர்

பிள்ளை வளர்ப்பு ஓர்ஊழியத்தொடர் – கிரேக் காஸ்டர்

பதின்மவயதினரைப் புரிந்துகொள்ளுதல் – கிரேக் காஸ்டர்

FAMILY DISCIPLESHIP MINISTRIES
தொலைப்பேசி: (619) 590-1901
மின்னஞ்சல்: info@FDM.world
வலைதளங்கள்: www.FDM.world, www.discipleshipworkbooks.com

*சீஷருக்கான வலுவான ஒரு அடிப்படைப் பயிற்சிப்புத்தகம், கிரேக் காஸ்டர்*
ISBN 978-1-7331045-5-5

அச்சு மற்றும் மின்னணு பதிப்பு பதிப்புரிமை © 2020 கிரேக் காஸ்டர். அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. 09012020 திருத்தம்.

இந்த புத்தகத் திட்டத்தில் என்னுடன் பணியாற்றிய என் மகன் ஜஸ்டினுக்கு ஒரு சிறப்பு நன்றி.

குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வசனங்களும் TAOVBSI: பரிசுத்த வேதாகமம் O.V. (BSI) யிலிருந்து எடுக்கப்பட்டது.

*Translated by*
*Rev. Dr. D. Samuel.DD.*
*Indian Rural Gospel Mission (IRGM)*
*www.irgm.org*
*Email: revdsamuel@gmail.com*
*Whatsapp: 00917904967179.*

பதிப்புரிமையின் கீழ் உள்ள உரிமைகளை வரையறுக்காமல், இந்த வெளியீட்டின் எந்தப் பகுதியும்-அச்சிடப்படவோ அல்லது மின்-புத்தக வடிவத்தில் அல்லது வேறு எந்த விதத்திலும் வெளியிடப்படவோ - மீண்டும் உருவாக்கவோ, சேமித்து வைக்கவோ அல்லது மீட்டெடுக்கும் அமைப்பில் அறிமுகப்படுத்தவோ, அல்லது எந்த வடிவத்தில் அல்லது எந்த விதத்திலும் (மின்னணு, இயந்திர, புகைப்பட நகல், பதிவு அல்லது வேறு எந்த விதத்திலும்) முன் எழுத்துப்பூர்வ அனுமதி இல்லாமல் அனுப்பவோ முடியாது.

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியரிடமிருந்து ஒரு கடிதம் ........................................................................... | 4 |
| அத்தியாயம் 1: குமாரனாகிய இயேசு கிறிஸ்து.................................... | 5 |
| அத்தியாயம் 2: பிதாவாகிய தேவன் ............................................................... | 22 |
| அத்தியாயம் 3: பரிசுத்த ஆவியானவர் ........................................................ | 38 |
| அத்தியாயம் 4: ஆவிக்குரிய வளர்ச்சியும், முதிர்ச்சியும்............... | 52 |
| அத்தியாயம் 5: மன்னிப்பு மற்றும் ஒப்புரவாகுதல் ........................... | 73 |
| அத்தியாயம் 6: ஆவிக்குரிய யுத்தம் ............................................................... | 94 |
| அத்தியாயம் 7: மரணமும்,கடைசிகாலங்களும்.................................. | 120 |
| பின் இணைப்பு A: தேவனோடு அனுதினமும் நெருங்கிய உறவை வளர்த்துக் கொள்ளுதல் .................. | 149 |
| பின் இணைப்பு பி: பரிந்துரைக்கப்பட்ட புத்தகங்கள் .................. | 151 |
| சொற்களஞ்சியம் ............................................................................................... | 152 |
| சீஷருக்கு ஒரு கடிதம் ..................................................................................... | 157 |
| ஆசிரியர் பற்றி........................................................................................................ | 158 |
| குடும்ப சீஷத்துவ ஊழியங்கள் பற்றி ......................................................... | 160 |

**ஆசிரியரிடமிருந்து கடிதம்**

**அன்புள்ள சீஷரே,**

எனது இரண்டு வருட முழுநேர ஊழிய அனுபவத்தில், நான் ஆலோசனை வழங்கியவர்களில் அனேக கிறிஸ்தவர்கள் தங்கள் அனுதின தியான வாழ்க்கை மற்றும் அடிப்படை வேத சத்தியங்களையும் அறியாதிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன். எனது சக ஊழியர்களுடன் எனது கவலைகளைப் பகிர்ந்து கொண்ட பிறகு, ஒரு காலை பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் பின் எனது செயலாளர் “அவர்களுக்கு உதவக்கூடிய ஒரு பக்திக்குரியகாரியத்தை நாம் ஏன் எழுதக்கூடாது?” என்று கேட்டார்

என் மனதிற்குள் பல கேள்விகள் எழுந்தன: எழுதுவதற்கு எனக்கு நேரம் இருக்குமா? அப்படி எழுதினால் யார் அதை படிப்பார்கள்? வேத தியானங்களைப்பற்றி எழுத நான் தகுதியுள்ளவனா? நான் ஒருபோதும் வேதாகமக் கல்லூரிக்கு சென்று படித்ததில்லை, ஓர் உயர்நிலைப் பள்ளியில் பட்டம் பெற்றதுமில்லை.

நான் ஆண்டவரின் வழிகாட்டுதலுக்காக மன்றாடி, ஜெபிக்கத் தொடங்கியபோது, அவரை அறிந்து கொள்ளவும், விசுவாசிக்கவும் எனக்கு ஆவிக்குரிய அடித்தளத்தை அமைத்த வேத சத்தியங்களைப் பகிர்ந்து கொள்ள கர்த்தர் என் இருதயத்தில் உணர்த்தினார். சத்தியங்களில் நமக்கு இருக்கிற இப்படிப்பட்ட குறைவான அறிவும், விசுவாசமும், சாத்தான் நம்மை ஏமாற்றவும், திசை திருப்பவும், சோதிக்கவும், தேவன் யார், அவருடைய பிள்ளைகளாக நாம் யார் என்ற, பயத்தையும் சந்தேகத்தையும் நம் மனதில் ஏற்படுத்த அவனுக்கு ஒரு நேரடி பாதையை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது.

இப்படிப்பட்ட சிந்தையை மனதில் கொண்டு, ஊழியர்களின் தொடர்ச்சியான ஊக்கமும் ஆதரவும் எனக்கு இருந்தபடியால், இந்த பயிற்சிப்புத்தகத்தை உருவாக்கும் செயல்முறையில் உந்தப்பட்டு கடினமாக உழைத்தேன். இப்போது, இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கானவர்களின் வாழ்வில் தாக்கத்தை உண்டாக்க தேவன் இந்த பயிற்சிபுத்தகத்தை பயன்படுத்துவதைக் கண்டு நான் வியப்படைகிறேன்.

இந்த பயிற்சிப்புத்தகமானது இயேசு கிறிஸ்துவுடனான ஒரு ஆழமான உறவுக்கு உங்களை வழிநடத்தவும், உங்கள் விசுவாசத்திற்கு ஒரு உறுதியான ஆவிக்குரிய அடித்தளத்தை நிறுவி, தினமும் அவரிடம் நெருங்கி வரவும், அவருடைய நீதியில் நடக்கவும் உதவ வேண்டும் என்பதுதான் என் ஜெபமாக இருக்கிறது. இந்த புத்தகத்தை நீங்கள் படித்து முடிக்கும்போது, ஆண்டவரின் பிரதான கட்டளையை நிறைவேற்றுவதற்கேதுவான ஒரு கருவியாக இதை பயன்படுத்துவீர்கள் என்று நம்புகிறேன், இதைக்கொண்டு நீங்கள் யாரோடு பயணிக்ககூடும் என்பதை ஆண்டவரிடம் ஆலோசனைகேட்டு சீஷர்களாக்கும் பணியைச் செய்யுங்கள்.

மேலும், திருமணம் ஒரு ஊழியம் என்ற புத்தகத் தொடரையும், பெற்றோராக குழந்தைகளோடு இருப்பதால், தேவ ஞானத்தைபெற்றுகொள்ளும்படி பெற்றோர் என்பது ஒரு ஊழியம் என்ற புத்தகத் தொடரையும் வாசிக்கும்படி உங்களை உற்சாகப் படுத்துகிறேன். இவைகள் இரண்டையும் எங்கள் வலைத்தளமான FDM.World இல் காணலாம்.

நீங்கள் தினமும் இயேசுவிடம் நெருங்கி, அவரால் அபிஷேகம் பண்ணப்பட்ட சீஷர்களாக மாறுங்கள்.

ஆமென்!

கிறிஸ்துவில்,

**பாஸ்டர் கிரேக் காஸ்டர்**

# அத்தியாயம் 1

## குமாரனாகிய இயேசு கிறிஸ்து

நான் கத்தோலிக்க பெற்றோர்களால் வளர்க்கப்பட்டேன், ஆறாம் வகுப்பு வரை கத்தோலிக்கப் பள்ளியில் படித்தேன். நான் ஒரு குழந்தையாக இருந்தபோது பக்தியில் ஆர்வம் காட்டவில்லை, ஆனால் ஆண்டவரைப் பற்றிய அடிப்படை புரிதல் எனக்கு இருந்தது. அவர் தான் உலகத்தை உருவாக்கியவர் என்றும் அவருக்கு இயேசு என்ற குமாரன் இருந்தார் என்றும் நான் நம்பினேன், ஆனால் இயேசுவின் தோற்றம் குறித்து நான், தேவன் அவரை படைத்தாரா? அவருடைய வாழ்க்கை கன்னி மரியாளிடமிருந்து துவங்கியதா? என்பவைகளைக் குறித்து ஓரளவு புரிதல் இல்லாதவனாக இருந்தேன்.

ஆறாம் வகுப்புக்குப் பிறகு, மதத் தாக்கங்களில் நான் அதிக கவனம் செலுத்தவில்லை. தேவனைப்பற்றி அல்லது இயேசுவைப் பற்றி நான் சிந்திக்க விரும்பவில்லை, ஏனென்றால் அப்படி சிந்திப்பது எனக்குப் பிடிக்கவில்லை என்று உணர்ந்தேன். நான் ஏதோ வாழ்க்கை ஓடுகிறது என்று இருந்தேன், என் மாம்ச விருப்பத்தின்படி வாழ்ந்து மகிழ்ச்சியாக இருக்க தீவிரமாக முயன்றேன். அது என் வாழ்க்கையின் இருண்ட காலமாக இருந்தது. ஆனால் இருபத்தொரு வயதில் இயேசு தம்மை எனக்கு வெளிப்படுத்தினார், நான் அவரை என் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டேன். பல ஆண்டுகளுக்குப் பிறகு, நான் வேத வசனத்தைப் படிக்கத் தொடங்கினேன், முதிர்ந்த, கிறிஸ்தவ விசுவாசிகளால் நெறிபடுத்தப்பட்டேன். கிறிஸ்துவைப் பற்றிய உபதேசங்களையும் அவர் ஏன் இந்த பூமிக்கு வந்தார் என்பதையும் அறிய அவர்கள் எனக்கு உதவினார்கள்.

### பாடம் 1 - இயேசு கிறிஸ்து யார்?

இயேசு கிறிஸ்துவின் அடையாளத்தைக் குறித்து பலவிதமான கருத்துகள் உள்ளன. ஒரு சிலர் அவரை சிறந்த தீர்க்கதரிசி அல்லது போதகர் என்று நம்புகிறார்கள். மற்றவர்கள் அவரை நீண்ட காலத்திற்கு முன்பு வாழ்ந்து மரித்துப்போன ஒரு மனிதாபிமானமிக்க நபராகப் பார்க்கிறார்கள். மத்தேயு 16-ல் தம்முடைய சீஷர்களிடம் கேட்ட அதே கேள்வியை இயேசு உங்களிடம் கேட்டால் என்ன செய்வீர்கள்? "நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்"? (வசனம் 15).

**நீங்கள் எவ்வாறு பதிலளிப்பீர்கள்?**

________________________________________

________________________________________

________________________________________

‘கிறிஸ்தவ விசுவாசமானது இயேசுவின் தனித்துவத்தில் மட்டுமே இருக்கிறது, அவருடைய அடையாளம் வெளிப்படும் ஒரே இடம் பரிசுத்த வேதாகமம். அவர் யார் என்று நீங்கள் நம்புகிறீர்களோ அப்படிபட்டவராகவே உங்கள் முழு வாழ்க்கையும் வடிவமைக்கப்படும்.

### இயேசு நம் சிருஷ்டிகர்

ஆதியாகமம் 1: 1-ல் விவரிக்கப்பட்டுள்ளபடி, சிருஷ்டிப்பை நம்புகிற பெரும்பாலான மக்கள் அதை தேவனுடன் தொடர்புபடுத்துவதால் இப்படி சொல்வது பாதுகாப்பானது என்று நான் நினைக்கிறேன். பிரபஞ்சத்தின் படைப்புக்கு இயேசு பங்களித்தார் என்று நான் சொன்னால் என்னவாகும்?அது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்குமா?

இயேசுவைப் பற்றி நீங்கள் கற்றுக்கொண்டவற்றை சுருக்கமாக எழுதுங்கள்.

கொலோசெயர் 1: 16–17

________________________________________

________________________________________

________________________________________

எபிரெயர் 1:10

இந்த வசனங்களில், படைப்பில் இயேசு முக்கிய பங்கு வகித்தார் என்பதை நாம் அறிவோம். மேலும் அவர் ஆதியிலிருந்தே பரிசுத்த திரித்துவத்தின் சம பங்கு உடையவராக இருக்கிறார் இயேசு எல்லாவற்றையும் தமக்குள் தம்மைக்கொண்டு தமக்கென்று சிருஷ்டித்தார்.

அடுத்து, அவருடைய படைப்புடனான அவரது ஈடுபாடு அதன் தொடக்கத்தோடு முடிவடைந்து விடவில்லை என்பதை நாம் பார்ப்போம். எல்லாவற்றிற்கும் அவருடைய தொடர்ச்சியான பங்களிப்பு தேவைப்படுகிறது.

**இயேசு நம்மை பராமரிக்கிறவர்.**

எபிரெயர் 1: 3-ன் படி, இயேசு எப்படி சர்வத்தையும் தாங்குகிறவராயிருகிறார்?

கிறிஸ்து எல்லாவற்றையும் படைத்த ஞானமுள்ள வல்லமையான சிருஷ்டிகர் மாத்திரம் அல்ல, அவர் தமது படைப்பை உண்மையாகப் பராமரிக்கிறார். அவர் பூமியிலிருந்த காலத்திற்கு முன்பும், பின்பும், அதற்குப் பிறகும் ஆதியில் இருந்தே ஜீவிக்கிறார். அவர், இப்பொழுது, பரலோகத்தில் அவருடைய சிம்மாசனத்தில், பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்து, பிரபஞ்சத்தை நிலைநிறுத்துகிறார்.

உயிரினங்களை உருவாக்கி அதைப் பராமரிப்பவராக இருப்பது போதாதென்று, இயேசு விலைக்கிரயத்தையும் செலுத்தி உலக இரட்சகர் மற்றும் மீட்பருமாக இருக்கிறார்.

**இயேசு நம்முடைய மீட்பர்**

தீத்து 2:14 மற்றும் கொலோசெயர் 1: 13-14 நம்முடைய விடுதலை , மீட்பு மற்றும் மீண்டெழுதல் பற்றி என்ன சொல்கிறது?

> *நிலைநிறுத்த*-ஆதரவு கொடுக்க; தாங்க. நிலைநிறுத்த;
>
> *மீட்பு*-பணம் செலுத்துவதன் மூலம் உடைமையை மீண்டும் பெறுதல்; பணையம் வைத்தல், விடுவி அல்லது சிறை அல்லது அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தல்; மீட்பு அல்லது திரும்ப பழைய நிலைக்கு கொண்டு வருதல்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, பரிகார பலியாக மாறுவதற்காக இயேசு தம்முடைய பரலோக சிங்காசனத்தைவிட்டு தம்முடைய சிருஷ்டிப்பின் மத்தியில் வாழ முன்வந்தார். மனிதகுலத்தை மீட்டு, மீண்டும் நமது அசல் நோக்கத்தை அடைய ஒப்புரவாக்கினார்.

**பாடம் 2.**

**நமக்கு ஏன் ஒரு மீட்பர் தேவைப்பட்டார்?**

மனிதகுலத்தின் மையத்தில் உள்ளுணர்வாக ஏதோ தவறு இருக்கிறது என்பதற்கான ஆதாரங்களைக் கண்டுபிடிக்க நீங்கள் அதிகம் ஆராய வேண்டியதில்லை. எனது சொந்த இருதயத்தைப் பார்க்கையில் அதற்கு போதுமான ஆதாரங்களைக் காண்கிறேன். உங்களை நீங்கள் பார்க்கும்போது என்ன காண்கிறீர்கள்? சிக்கலின் மூலவேரை கண்டறிய ஆரம்பத்திற்குச் செல்வோம்.

மனிதகுலமும் இயற்கையும் சரியான இணக்கத்துடன் வாழ்ந்த, உருவாக்கப்பட்ட பரலோகமாகிய ஏதேன் தோட்டத்தில் இவைகள் அனைத்தும் தொடங்கியது. சிருஷ்டிகர் தமது சிருஷ்டிகளுடன் முழுமையான ஐக்கியத்தில் நடந்து வந்த காலமது. துரதிர்ஷ்டவசமாக, இந்த கற்பனாவாதத்தை நாம் கற்பனை மட்டுமே செய்து பார்க்க முடியும், ஏனென்றால் ஏதோ மோசமான ஒரு தவறு நடந்துள்ளது.

ஆதியாகமம் 1:26 -ஐ வாசியுங்கள். முதலில் உருவாக்கபட்ட மனிதன் யாருடைய சாயலை வெளிப்படுத்தினான்?

---

பின்னர், ஆதாம் என்று பெயரிடப்பட்ட முதல் மனிதனின் படைப்பில் தேவன் இயேசுவோடு இணைந்து செயல்படுவதை வெளிப்படுத்தும் நாம் மற்றும் நமது என்ற சொற்களைக் கவனியுங்கள்.

ஆதியாகமம் 2: 15–17 -ஐ வாசியுங்கள். ஆதாமுக்கு தேவன் தவிர்க்கச் சொன்ன ஒரு காரியம் என்ன? அவன் அதற்கு கீழ்ப்படியவில்லை என்றால் என்ன நடக்கும்?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

ஆதியாகமம் 2: 18–22 -ஐ வாசியுங்கள். ஆதாமுக்கு இந்த கட்டளையை வழங்கிய பிறகு, தேவன் அவருக்கு ஒரு துணையை வழங்கினார், பின்னர் அவளுக்கு ஏவாள் என்று பெயரிடப்பட்டது. இப்போது ஆதியாகமம் 1:28 ஐப் படித்து, அவருடைய சாயலை உடையவர்களுக்கு ஆண்டவர் கொடுத்த அறிவுறுத்தல்களை எழுதுங்கள்.

______________________________________________________________________

______________________________________________________________________

___________________________________________________________________

ஆதாம் ஏவாளை தன் மனைவியாக்கிகொள்ளும்படி தேவன் உண்டாக்கினார், மேலும் அவர் ஆதாமுக்கு அவருடைய எல்லா படைப்புகள் மேலும் உண்மையான பராமரிப்பைக் காட்டும்படி அறிவுறுத்தினார். எல்லாம் சரியாகத்தான் இருந்தது, ஆனால் ஆதியாகமம் 3-ல் குறிபிடப்பட்டுள்ளபடி, சாத்தான் ஒரு பாம்பின் உருவத்தோடு காட்சிக்குள் நுழைந்தான். ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் கொடுக்க விரும்பியதைத் திருடவும், கொல்லவும், அழிக்கவும் அவன் ஒரு திருடனைப் போல வந்தான் (யோவான் 10:10). தேவனின் நற்குணத்தை சந்தேகிக்க ஏவாளைத் தூண்டுவதே சாத்தானின் முதல் தந்திரமாயிருந்தது.

ஆதியாகமம் 3: 1-ல் சாத்தான் ஏவாளிடம் என்ன கேட்டான்?

__________________________________________________________________________

ஆதியாகமம் 3: 2-3-ல் ஏவாள் எவ்வாறு பதிலளித்தாள்?

இங்கே கவனிக்கவேண்டியது என்னவென்றால் அவள் உண்டாக்கப்படுவதற்கு முன்பு, ஆதாமுக்குக் கொடுத்த கட்டளையை ஏவாள் அறிந்திருந்தாள். ஆதாம் இந்த ஆணையை ஏவாளுடன் பகிர்ந்துள்ளார், தேவனின் சட்டத்தை தனது மனைவியுடன் உண்மையாக பகிர்ந்து கொள்வதன் மூலம் ஆண்டவரின் எச்சரிக்கையின் முக்கியத்துவத்தை நன்கு புரிந்திருந்தார்.

ஆதியாகமம் 3: 4 ல் சாத்தான் ஏவாளுக்கு என்ன பொய் சொன்னான்?

ஆதியாகமம் 3: 5-ல் உள்ள கனியை அவள் சாப்பிட்டால் என்ன நடக்கும் என்று சாத்தான் சொன்னான்?

ஆதியாகமம் 3: 6-ல் உள்ள கனியில் ஏவாளைக் கவர்ந்தது எது?

அவள் என்ன செய்ய முடிவு செய்தாள்?

ஏவாள் கனியை அவனுக்குக் கொடுத்தபோது ஆதாம் என்ன சொன்னான், என்ன செய்தான்?

முதல் பெண் பொய்க்குப் பிதாவை நம்பி, அவளுடைய சிருஷ்டிகரின் நல்ல குணத்தை சந்தேகித்தாள், முதல் மனிதன் எதுவும் பேசாமல் கீழ்ப்படியாமையைப் பின்பற்றினான்.

ஆதாம் அவனுடைய மனைவியை பராமரிப்பதில் உண்மையுள்ளவனாக இருக்கவேண்டி, தேவனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி ஆண்டவரின் அறிவுரைகளுக்கு செவிசாய்க்க தவறிவிட்டான். அவன் அவளைப் பாதுகாத்து, தேவனின் சித்தம் நிறைவேறுவதை உறுதிப்படுத்த தேவையான அனைத்தையும் செய்திருக்க வேண்டும். ஆதாமும் ஏவாளும் சாத்தானின் பொய்களை நம்பி தேவனுக்கு எதிராக பாவம் செய்தனர், அவர் எச்சரித்த பின்விளைவுகளை சந்தேகித்ததால், ஒட்டுமொத்த மனிதகுலத்தையே கடுமையாக பாதித்தது:

- தேவனுக்கும் அவருடைய சாயலை தரித்தவர்களுக்கும் இடையிலான ஐக்கியம் முறிந்தது (ஆதியாகமம் 3: 8-10).
- தேவன் மனிதகுலத்தை ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றினார் (ஆதியாகமம் 3: 23-24).
- கீழ்ப்படியாமைக்கான தண்டனை மரணம் (ஆதியாகமம் 5: 5).

- ஆதாமின் பாவம் மனித இனம் முழுவதும் பரவியது (ரோமர் 5: 17-19).
- மனித இனம் தன்னைதானே மீட்டுக்கொள்ள எந்த வழியும் இல்லாமல் நம்பிக்கையை இழந்தது (எபேசியர் 2:12).

நாம் தேவனின் சாயலில் படைக்கப்பட்டோம்; அதாவது, கோட்பாடு மற்றும் பகுத்தறிவு சிந்தனைத் திறன் கொண்ட ஒரு மனமும், உணர்ச்சியை அனுபவிக்கவும், அன்பை உணரவும் ஒரு இருதயம் நம்மிடம் இருந்தது. தேவன் நமக்கு சுதந்திரமான விருப்பத்தை அளித்தார், ஆனால் துரதிர்ஷ்டவசமாக நமக்கு அளிக்கப்பட்ட வரமாகிய சுய சிந்தையை நம்முடைய சிருஷ்டிகரை மீறி நடக்க பயன்படுத்தினோம். காலம் செல்லச் செல்ல, தோட்டத்தில் நடந்த சம்பவத்திற்குப் பிறகு, விஷயங்கள் அவ்வளவு சிறப்பாக எதுவும் நடக்கவில்லை.

தேவன் மனிதகுலத்தை உற்று நோக்கும்போது அவர் கண்டதை சுருக்கமாக விளக்குங்கள்.

ஆதியாகமம் 6: 5

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

யாத்திராகமம் 32:22

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

சங்கீதம் 53: 1–3

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

மனிதகுலம் நம்பிக்கையற்ற முறையில் பாவத்தில் தொலைந்துவிட்டது. ஆரம்பத்திலிருந்தே, நம்முடைய சிருஷ்டிகரிடமிருந்து விலகி, அவரிடமிருந்து அகந்தையுடன் நம் மாம்ச இச்சைகளை நிறைவேற்ற அவரைவிட்டு பிரிந்து போக நாடினோம். இன்றும் எதுவும் மாறவில்லை. நம் வாழ்க்கையில் ஏற்படும் வேதனைக்கும், துன்பத்துக்கும், துக்கத்துக்கும் காரணம் நாம் தேவனுக்கு கீழ்ப்படியாதது தான்.

**பாவம் என்றால் என்ன?**

**தேவனுக்கு எதிரான எந்தவொரு குற்றமும்,**
**சிருஷ்டிகருக்கு மேலாக தன்னை உயர்த்திக் கொள்வது,**
**தேவனின் எந்த ஒரு கட்டளைகளுக்கு கீழ்ப்படியாதிருத்தல்,**
**தேவனுக்குரிய இடத்தில் தன் சுயத்தை நிலைநிறுத்துவது.**

***அஸ்திபார சத்தியம்*** இயேசு கிறிஸ்து ஜீவனை உண்டாக்கினவர் மற்றும் பராமரிப்பவர் அவர் மனித குலத்தை மீட்க பூமிக்கு வந்தார்.

உங்கள் சொந்த வாழ்க்கையையும் உங்களைச் சுற்றியுள்ள உலகத்தையும் பார்க்கும்போது, மீட்புக்கான நமது ஒரே நம்பிக்கை தேவனிடம் திரும்புவது தான் என்று மனித இனத்தைப் பற்றி தேவனுடைய மதிப்பீட்டை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

**பாடம் 3.**

**நாம் எவ்வாறு மீட்கப்பட்டோம்?**

**கிறிஸ்துவின் சிலுவை**

இயேசு கிறிஸ்து மனிதகுலத்தின் பாவ நிலையிலிருந்து எவ்வாறு மீட்பை வழங்கினார்?

எபேசியர் 1: 7 ________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________1 பேதுரு 1: 18–19

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

ரோமானியர்கள் சிலுவையில் அறையப்படுவதன் மூலம் மரணத்தை வகுத்தனர், இது மிகக் கீழ்த்தரமான குற்றவாளிகளுக்கு பொதுவான நடைமுறையிலிருந்த சித்திரவதை வழக்கமாகும். இது ஒரு வெட்கக்கேடான, வேதனையான மற்றும் மிக தாமதமாக மரணத்தைக் கொடுக்கும் ஒன்று. இயேசுவின் சக யூதர்கள் பலர் அவரை நிராகரித்ததாகவும், அவருடைய நண்பர்கள் அவரைக் கைவிட்டதாகவும், மத மற்றும் அரசாங்கத் தலைவர்கள் அவரைக் கடிந்துகொண்டதாகவும், பரிசுத்த வேதாகமம் கற்பிக்கிறது. அவர் கேலி செய்யப்பட்டார், வாரினால் அடிக்கப்பட்டார் அவரது வெற்று முதுகில் தோல் சவுக்கால் தாக்கப்பட்டார், அதில் உள்ள உலோகத்தின் துகள்கள் அவர் சரீரத்தில் புதைந்திருந்தன. ரோமானிய போர்ச்சேவகர்கள் அவருடைய தாடியைப் பிடிங்கி அவர் முகத்தில் துப்பினர். பின்னர் அவர்கள் அவரை நிர்வாணமாக்கி, அவருடைய ஆடைகளுக்காக சீட்டுப்போட்டார்கள்.

நம்முடைய சிருஷ்டிகரான இயேசுவை, சிலுவையிலே தூக்கிப்போட்டு உயிருடன் சிலுவையில் அறைந்தனர் வேதனையான ஆறு மணிநேரங்களில் அவர் மரித்தார். சிலுவையில் அவரது முதல் மூன்று மணி நேரம், பல வழிப்போக்கர்கள் அவரை கேலி செய்தனர், மற்றவர்கள் திகிலுடன் அழுதனர். இறுதி மூன்று மணி நேரத்தில், உலகின் பாவங்கள் அவர் மீது வைக்கப்பட்டதால் வானம் கருப்பாக மாறியது. அந்த நாளில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, நம்முடைய பாவங்கள் எல்லாம் அவருடைய மரணத்திற்குட்படுத்தப்பட்டது. (மத்தேயு 26: 3–27: 56).

ஏசாயா 53: 3–6 -ஐ வாசியுங்கள். முன்னறிவிக்கப்பட்ட மேசியாவைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசி சொன்னதை சுருக்கமாகக் கூறுங்கள்.

________________________________________________________________

________________________________________________________________

________________________________________________________________

சிலுவையில் நம்முடைய பாவங்களுக்காக இயேசு மரிப்பதற்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஏசாயா இந்த வார்த்தைகளை பேசினார் என்பதை நம்ப முடிகிறதா? இயேசுவின் மரணம் இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலும், மற்றும் அவரை உண்மையான இரட்சகராகவும் சுட்டிக்காட்டக் கூடியதாயிருக்கிறது.

> ***அஸ்திபார சத்தியம்.***
>
> நமது பாவத்தின் காரணமாக, தேவனுக்கு நாம் செலுத்த முடியாத ஒரு கடன்பட்டிருக்கிறோம். இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தி நமது கடனை தீர்த்ததின் மூலம் நம்மை இரட்சித்தார்.

யோவான் 19:30-ஐ வாசியுங்கள். இயேசு மரிப்பதற்கு முன் சொன்ன இறுதி வார்த்தைகள் என்ன?

____________________________________________

இயேசு கிறிஸ்து இரட்சிப்பின் பணியை சிலுவையில் செய்துமுடித்தார். அவரது மரணத்திற்குப் பிறகு, அரிமத்தியாவைச் சேர்ந்த யோசேப்பு அவரை ஒரு கல்லறையில் அடக்கம் செய்தார் அங்கு அவர் மூன்று நாட்கள் இருந்தார். ஆனால் மரணத்திற்கு இயேசுவின் மீது அதிகாரம் இல்லாதிருந்தது.

**இயேசுவின் உயிர்த்தெழுதல்**

யோவான் 20-ன் படி, தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்! 1 கொரிந்தியர் 15:17 -ஐ வாசியுங்கள். அவருடைய உயிர்த்தெழுதல் ஏன் மிகவும் முக்கியமானது?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இல்லாமல் பாவமன்னிப்பும் இல்லை அல்லது தேவனோடு கூட வாழும் நித்திய ஜீவனுக்கான வாக்குதத்தமும் இல்லை என்பதை கொரிந்தியர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அப்போஸ்தலர் பவுல் அறிவுறுத்துகிறார்.

ரோமர் 4:25 -ஐ வாசியுங்கள். இயேசு ஏன் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

இயேசு தமது மரணத்தின்போது நம்முடைய பாவங்களை அவர் சுமந்தார். உயிர்த்தெழுதல் அவருடைய நீதியையும், நித்தியமாக தேவனோடு வாழும் பரிசையும் குறிக்கின்றது. மரணத்தை ஜெயித்ததினிமித்தம் அவர் தம்மை ஒரு தகுதியான பலி என்பதையும், மற்றும் தேவன் அவரது வாழ்க்கையை நம்முடைய வாழ்க்கைக்கு மாற்றாக ஏற்றுக்கொண்டார் என்பதையும் நிரூபித்தார்

> *நியாயப்படுத்துதல்-* குற்றம் அல்லது பழியிலிருந்து விடுபடுவது; விடுவிக்க; நீதிமானாக நடத்துதல்; பாவத்தின் தண்டனையிலிருந்து விடுபடுவது.

> **அடிப்படை சத்தியம்.**
>
> இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு மிகவும் முக்கியமானது, ஏனென்றால் அது இல்லையெனில், இயேசு ஒரு சாதாரண மனிதனைப் போல இறந்துவராயிருப்பார். அவருடைய பிள்ளைகளுக்கான நித்திய வாழ்வின் வாக்குறுதி விருதாவாக இருந்திருக்கும், அவரும் தேவனாக இருந்திருக்கமாட்டார்.

இயேசு ஏன் சிலுவைக்கு சென்றார்?

இது ஒரு எளிய கேள்வி. மேய்ப்பனாகிய தாவீது தேவனிடம் தனது சங்கீதங்களில் இதைப் போல ஒன்றை கேட்டார். மகத்துவம், வல்லமை, மற்றும் அவர் உருவாக்கிய அனைத்தையும் கருத்தில் கொண்ட பிறகு, தாவீது இப்படியாக கேட்கிறார், "மனுஷனை நீர் நினைக்கிறதற்கு, அவன் எம்மாத்திரம் என்கிறேன்?". (சங்கீதம்8:3–4).

இயேசு ஏன் மனப்பூர்வத்துடன் சிலுவைக்கு சென்றார்?

ரோமர் 5: 7–8

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

யோவான் 3:16

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

அது அவ்வளவு எளிமையாக இருக்க முடியுமா? இது. அவருடைய அன்பின் ஆழத்தையும் அவர் நம்மீது வைத்திருக்கும் மதிப்பையும் நாம் முழுமையாக புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், அது ஆண்டவரின் அளவற்ற கிருபையும், இரக்கத்தையும், உறுதியான மற்றும் நித்திய சான்றாக, அவர் நமக்கு அதை அளிக்கிறார்.

**பாடம் 4.**

## கிருபையினால் இரட்சிக்கப்பட்டோம்

இந்த உலகத்தின் பாவங்கள் மீது தம்முடைய நீதியான தீர்ப்பை வழங்க தேவனுக்கு அனைத்து உரிமையும் இருந்தாலும், அவரோ கருணையையும் கிருபையையும் காண்பிக்கிறவராய் இருக்கிறார். எபேசியர் 2: 1–9 ஐப் படித்து, நீங்கள் கற்றுக்கொண்டவற்றைச் சுருக்கமாகக் கூறுங்கள்.

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________
__________________________________________________

தேவனின் கிருபையும் இரக்கமும் ஈட்டக் கூடியதல்ல, மற்றும் தகுதிக்கு அப்பாற்பட்டது, மேலும் இயேசு கிறிஸ்துவின் ஜீவன், மரணம், மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் உருப் பெற்றிருந்தது. அது காலைதோறும் பெரிதாக இருந்து, அவருடைய மாறாத அன்பின் அடையாளமாக விளங்கியது. அவர் நம்மை அதிகமாக நேசிக்க நாம் எதுவும் செய்ய முடியாது, மேலும் அவர் நம்மை குறைவாக நேசிக்கவும் நாம் எதுவும் செய்ய முடியாது. அவருடைய இரக்கம் தேவனிடமிருந்து நம்முடைய தகுதியான நித்தியப் பிரிவைத் தடுக்கிறது. அவருடைய கிருபை கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் இலவச இரட்சிப்பை அளிக்கிறது.

கிருபை என்பது நமக்குத் தகுதியில்லாத பரிசு, இரக்கம் என்பது நமக்கு தகுதியானதை பெறாமல் இருப்பது. அவருடைய நீதியான தீர்ப்புக்குப் பதிலாக தேவன் அனைவருக்கும் இரட்சிப்பை கொடுக்கின்றார்.

*கருணை-* தண்டனையால் தீங்கு விளைவிக்காமல், சகித்துகொள்தல்; இரக்கம் மற்றும் மன்னிப்புக்கான மனப்பான்மை; உதவுதல் அல்லது உதவுவதற்கான விருப்பம்; கருணை அல்லது தயவின் வெளிப்பாடாகக் கருதப்படும் ஒரு ஆசீர்வாதம்.

*கிருபை-*தகுதி பாராமல் அருளும் தெய்வீக தயவு; மனித குலத்தின் மீளுருவாக்கம் அல்லது புனிதப்படுத்துதலுக்காக இயற்கைக்கு அப்பாற்பட்ட, இலவசமாக அருளப்படும் தேவனுடைய பரிசு; இயேசு கிறிஸ்துவின் தகுதி மூலம் இரட்சிப்பு; தெய்வீக அன்பு; மனந்திரும்பிய பாவிக்கு மன்னிப்பு.

**இரட்சிப்பு என்றால் என்ன*?***

**பாவத்தின் வல்லமை மற்றும் விளைவுகளிலிருந்து விடுவித்தல்.**

**இருள் மற்றும் மாயையிலிருந்து விடுதலையாகுதல்**.

**ஒரு தெய்வீக நியாயத் தீர்ப்பிலிருந்து தெய்வீக மீட்பு.**

**மரணம் மற்றும் நித்திய துயரத்திலிருந்து பாதுகாத்தல்.**

ரோமர் 6: 23 ல் இரட்சிப்பு எவ்வாறு விவரிக்கப்படுகிறது?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

ரோமர் 10: 11-13 படி, யார் இரட்சிக்கப்படுகிறார்கள்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

1 யோவான் 2: 2 -ஐ வாசியுங்கள். இயேசு யாருடைய பாவங்களுக்காக மரித்தார்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

1 தீமோத்தேயு 2: 4–6 -ஐ வாசியுங்கள். தேவன் யாரைக் இரட்சிக்க விரும்புகிறார்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

ஒட்டுமொத்த மனித இனத்தின் பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து மரித்தார். நாம் அனைவரும் அவரை அழைக்கவும், நியாயத்தீர்ப்பு மற்றும் மரணத்திலிருந்து அவருடைய இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளவும் அவர் விரும்புகிறார்.

**பாடம் 5**

## நாம் எவ்வாறு இரட்சிக்கப்படுகிறோம்?

**இயேசுதான் இரட்சிப்பிற்கு ஒரே வழியா?**

நாம் ஒரு நல்ல வாழ்க்கையை வாழ்ந்து, மற்றவர்களை நேசித்து, தவறாமல் திருச்சபைக்கு சென்றால், ஆண்டவர் நம்மை ஏற்கமாட்டாரா? பின்வரும் வேத வசனங்களிலிருந்து நீங்கள் கற்றுக்கொள்வதை எழுதுங்கள்.

யோவான் 14: 6

அப்போஸ்தலர்: 4:12

1 யோவான் 5:12

***அடிப்படை சத்தியம்***

தேவனுடைய கிருபை மற்றும் இயேசுவின் பலியைத் தவிர பாவத்தின் தண்டனையிலிருந்து மனிதகுலம் இரட்சிக்கப்பட வேறு வழியே இல்லை. கிறிஸ்துவின் சிலுவையை நிராகரிப்பது இரட்சிப்பின் ஒரே வழியை நிராகரிப்பதாகும், இப்படியாக நம்பிக்கை இழந்து தேவனுக்கு முன்பாக குற்றவாளியாக இருக்க வேண்டியதுதான்.

தேவனுடனான ஒரு தனிப்பட்ட உறவு உலகிற்கு அவருடைய சட்டத்திட்டத்தின்படி மட்டுமே நீட்டிக்கப்பட்டுள்ளது. இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தால் மட்டுமே அவருடன் நெருக்கமான உறவில் பிரவேசிப்பதற்கு தேவன் ஏற்பாடு செய்துள்ளார்.

**இரட்சிப்பின் வரத்தை நாம் எவ்வாறு பெற்றுக்கொள்வது?**

இங்கே கொடுக்கப்பட்ட வேத வசனங்களின் மூலம் தேவனுடைய அற்புதமான இரட்சிப்பின் வரத்தைப் பெற்றுக் கொள்வதை பற்றி நீங்கள் என்ன கற்றுக் கொள்கிறீர்கள் என்பதை எழுதுங்கள்.

மாற்கு 1:15

அப்போஸ்தலர் 16: 30–31

கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக் கொள்ள, நீங்கள் பின்வரும் நான்கு காரியங்களை செய்ய வேண்டும்:

- ஒப்புக்கொண்டு (தேவனிடத்தில் ஒத்துக் கொள்வது) நீங்கள் பாவி என்று அறிக்கை செய்தல்.
- மனம் திரும்புதல். உங்கள் பாவத்திலிருந்து திரும்புதல். (வருத்தம் அடைதல் மனத்தாங்கல் அடைதல்).
- தேவனிடத்தில் மன்னிப்பு கேட்டல்.
- இயேசு கிறிஸ்து உங்கள் இருதயத்தில் கர்த்தரும் இரட்சகருமாய் இருக்கும்படி அவரை அழைத்தல்.

உங்கள் இரட்சகரை பெற்றுக் கொள்வதற்கு கீழே உள்ள ஜெபத்தை ஏறெடுங்கள்.

> ***அடிப்படை சத்தியம்***
>
> தேவன் அளிக்கும் இரட்சிப்பானது விசுவாசத்தில் அவருக்குக் கீழ்ப்படிந்து, தங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவை தங்கள் இருதயங்களில் ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் இலவசம்.

கர்த்தராகிய இயேசுவே நான் ஒரு பாவி, நீர் எனக்கு தேவை, என்னை மன்னிக்கும்படியாக வேண்டுகிறேன். எனக்காக சிலுவையில் மரித்ததற்காக நன்றி செலுத்துகிறேன், உம்மை என்னுடைய கர்த்தரும், இரட்சகருமாக ஏற்றுக் கொள்வதற்கு என் இருதயக் கதவை திறந்து கொடுக்கிறேன். எனக்கு நித்திய ஜீவனை அருளுகின்ற உம்முடைய கிருபை, இரக்கங்களுக்காக நன்றி செலுத்துகிறேன். என் வாழ்க்கையை நீர் பொறுப்பேற்றுக் கொண்டு என்னை உம்முடைய சீஷனாகவும் உமக்கு பிரியமான மனிதனாகவும் நீர் விரும்புகிறது போல உருவாக்கும் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் ஆமென்.

**பரலோகத்தில் மகிழ்ச்சி**

நீங்கள் உங்கள் வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு கொடுத்தால், பரலோகத்திலிருக்கிற தேவதூதர்கள் உங்கள் மனமாற்றத்தைக் கண்டு சந்தோஷப்படுவார்கள்!

மனம் திரும்புகிறவர்களை பற்றி லூக்கா 15:7 என்ன சொல்லுகிறது?

________________________________________________________________________
________________________________________________________________________
________________________________________________________________________

அவரை ஏற்றுக் கொண்டவுடன், உங்கள் சிருஷ்டிகரால் நீங்கள் போற்றப்படுகிறீர்கள், நேசிக்கப்படுகிறீர்கள், நீங்கள் உங்கள் கடந்த கால பாவங்களிலிருந்து சுத்தமாக கழுவப்பட்டு, கிறிஸ்துவுடன் ஒரு புதிய வாழ்க்கையில் நியாயப்படுத்தப்படுகிறீர்கள்.

> **அடிப்படை சத்தியம்**
>
> நாம் நம்முடைய வாழ்க்கையை இயேசு கிறிஸ்துவிடம் அர்ப்பணிக்கும் போது, நாம் ஆவியில் பிறந்து புதிய ஜீவனை பெறுகிறோம்.

உங்கள் சிருஷ்டிகரால் நீங்கள் போற்றப்பட்டு, நேசிக்கப்படுகிறீர்கள், மற்றும் அடிப்படை சத்தியம் அவரை ஏற்றுக்கொள்வது, நாம் நமது வாழ்க்கையை ஒப்புக்கொடுக்கும்போது நமது பழைய பாவங்களிலிருந்து சுத்தமாக கழுவப்பட்டு, கிறிஸ்துவுடனான புதிய வாழ்க்கைக்கு நாம் நீதிமானாகின்றோம்.

**பாடம் 6. விசுவாசிகள் என்பதன் பொருள் என்ன?**

விசுவாசிகள் நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.

பின்வரும் வேத வசனங்களிலிருந்து நீங்கள் கற்றுக்கொண்டவற்றை சுருக்கமாகக் கூறுங்கள்.

ரோமர் 3: 23–26

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

அப்போஸ்தலர் 13: 38–39

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

கொலோசெயர் 2: 13-14 -ஐ வாசியுங்கள். நம்முடைய பாவச் சுமையை தேவன் என்ன செய்தார்?

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

2 கொரிந்தியர் 5: 21-ன் படி, பாவிகள் கிறிஸ்துவிடம் சரணடையும்போது அவர்கள் என்னவாகிறார்கள்?

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

**சிலுவையில் என்ன நடந்தது*?***

**மனந்திரும்பும்போது நமது பாவங்கள் அனைத்தும், கிறிஸ்துவின் மீது வைக்கப்பட்டது.**

**அவருடைய நீதியானது நம்மீது வைக்கப்படுகிறது.**

**பாவம் அறியாத ஒருவர் விலைக்கிரயம் செலுத்தினார்.**

**குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டார்கள்!**

***அடிப்படை சத்தியம்***

நாம் நம்முடைய வாழ்க்கையை இயேசு கிறிஸ்துவிடம் அர்ப்பணிக்கும் போது நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு நாம் கிறிஸ்துவில் நீதிமான்கள் என்று அறிவிக்கப்படுகிறோம்.

**விசுவாசிகள் மறுபடி பிறந்தவர்கள்**

யோவான் 3: 1–8 -ஐ வாசியுங்கள்.தேவனுடைய ராஜ்ஜியத்தில் நாம் பிரவேசிக்க நிக்கோதேமுவிடம் என்ன செய்ய வேண்டும் என்று இயேசு சொன்னார்?

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________

எபேசியர் 2: 1–5 -ஐ வாசியுங்கள். மறுபடியும் பிறந்தவருக்கு என்ன மாற்றங்கள் செய்யப்படுகின்றன?

*மறுபடியும் பிறத்தல்*- மீளுருவாக்கம்; *புதுப்பித்தல்*- ஆவிக்குரிய வாழ்வை பெறுதல்.

நித்தியமான- முடிவில்லாமல், ஆரம்பம் அல்லது முடிவு இல்லாமல், காலமற்ற.

________________________________________________________________________________

_____________________________________________________________________________

விசுவாசிகளுக்கு நித்திய ஜீவன் பரிசாக வழங்கபடுகிறது**.**

யோவான் 3:16 மற்றும் யோவான் 11: 25-26-ல் உள்ள அற்புதமான வாக்குறுதிகளிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

1 யோவான் 5: 11-13 ஐப் படியுங்கள், பின்னர் 12 வது வசனத்தை உங்கள் சொந்த வார்த்தைகளில் மீண்டும் எழுதவும்.

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

_______________________________________________________________________________

நித்திய ஜீவ வாழ்க்கை என்ற பரிசை புரிந்துக் கொள்வது கடினம் ஏனென்றால், உண்மையில் இந்த உலக வாழ்க்கையில் எல்லோரும் மரித்துப் போகின்றார்கள். ஒரு கிறிஸ்தவராக நம்முடைய சரீரம் வியாதி, வயதான காரணத்தினால் அல்லது விபத்துக்கள் ஏற்பட்டு மரித்துப் போனாலும், நம்முடைய ஆவி அழியாதது, அதற்கு மரணமே இல்லை. உண்மையிலேயே நாம் மீண்டும் உயிர் பெற்று எழும்புவோம், அங்கே மரணம், வயதான தோற்றம் மற்றும் வியாதி ஆகியவைகளால் பாதிக்கப்படாத புதிய பரலோக சரீரம் கொடுக்கப்பெறுவோம்!

1கொரிந்தியர் 15:35 -58 லிருந்து நித்திய ஜீவனை குறித்து என்ன சத்தியங்களை கற்றுக் கொள்கிறீர்கள்?

நம் வாழ்வுக்கான தேவனின் திட்டம் நித்தியம் முழுவதும் நீட்டிக்கப்படுவதால், அநித்தியமான காரியங்களில் முழுமையான நிறைவுக்காக நாம் பாடுபடுவதை நிறுத்த வேண்டும். இந்த உலகத்தில் தேவன் நம் வாழ்வை ஆசீர்வதிக்க விரும்புகிறார், ஆனால் நம் பரலோகத் தகப்பன் மற்றும் நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் முன்னிலையில் நம் நித்திய இலக்கை அடையும் வரை முழுமையான மகிழ்ச்சியும் திருப்தியும் அடைய முடியாது.

***அடிப்படை சத்தியம்***

நாம் நம்முடைய வாழ்வை கிறிஸ்துவிற்கு அர்ப்பணிக்கும்போது அவர் நித்திய ஜீவன் என்னும் பரிசை தருகிறார்.

**தேவனோடுள்ள புதுப்பிக்கப்பட்ட ஐக்கியம்**

யோவான் 17: 20–23-ஐ வாசித்து, அனைத்து விசுவாசிகளுக்குமான இயேசுவின் ஜெபத்தை சுருக்கமாகக் கூறுங்கள்

_______________________________________________________________________________

நம்முடைய பரிசுத்த படைப்பாளருடன் ஐக்கியம் கொள்வதற்காகவே நாம் படைக்கப்பட்டோம். நாம் அவருடைய கற்பனைகளை மீறி, அவருடைய சமூகத்தில் இருக்க தகுதியற்றவர்களாகிவிட்டோம்; மரண ஆக்கினையோடு அவரிடமிருந்து நித்திய பிரிவினைக்கு ஏதுவாக தண்டிக்கப்பட்டோம். அவருடைய அன்பின் நிமித்தம், இயேசு கிறிஸ்து சிலுவையில் நம்முடைய பாவத்திற்கான விலையை செலுத்தினார். நாம் மறுபடியும் பிறக்கும்படி அவர் தமது ஜீவனை கொடுத்தார். அவருடைய நீதியில் புதிய ஜீவனை பெறும்படிக்கு அவர் உயிர்த்தெழுந்தார். கிறிஸ்து தகுதியானவர் என்பதால் நாமும் இப்போது தகுதியானவர்களாய் இருக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலும் நாம் நம்முடைய சிருஷ்டிகரோடுள்ள ஐக்கியத்தை புதுப்பித்துக் கொள்ள போதுமானதாக இருக்கிறது.

கிறிஸ்துவின் மீது உங்களுக்குள்ள அன்பு, உங்கள் பாவங்களுக்காக அவர் செய்த தியாகம் மற்றும் உங்களுடன் தனிப்பட்ட உறவைப் பெறுவதற்கான அவரது விருப்பம் பற்றி இந்த அத்தியாயத்தில் நீங்கள் கற்றுக்கொண்டவற்றை சிந்திக்க சற்று நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். எந்தப் பாடம் உங்கள் விசுவாசத்தில் மிகவும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதா? என்பதை விளக்கவும்.

நீங்கள் ஒரு சீஷனாக உங்கள் பாதையில் முதல் அத்தியாயத்தை முடித்துவிட்டீர்கள் மற்றும் கிறிஸ்தவர்களாகிய நம் நம்பிக்கையின் மூலைக்கல்லான இயேசு கிறிஸ்துவின் உபதேச சத்தியங்களைக் கற்றுக்கொண்டீர்கள். அதில் தொடர்ந்துச் செல்ல நான் உங்களை ஊக்குவிக்கிறேன்!

அடுத்த அத்தியாயத்தில், உங்கள் பரலோகத் தகப்பனாக தேவனுடைய உறவில் வாழ்வது என்றால் என்ன என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

## அத்தியாயம் 2

## பிதாவாகிய தேவன்

தந்தை என்ற சொல்லை நீங்கள் கேட்கும்போது, நம் நினைவுக்கு வருவது என்ன? இந்த பூமியில் உள்ள அனைவருக்கும் சரீரப்பிரகார தந்தை ஒருவர் இருக்கிறார், ஒவ்வொரு தந்தையும் தனித்துவமானவர்தான்; எனவே ஒவ்வொருவரின் தந்தையுடனான அனுபவமும் தனித்துவமானதே. சிலருக்கு நல்ல தந்தைகள் உள்ளனர், அவர்கள் தங்கள் குழந்தைகளை நன்றாக வளர்க்க முயற்சி செய்கிறார்கள். மற்றவர்களோ அறியாத, இயலாத, அல்லது தேவன் விரும்புகிற பெற்றோராக இருக்க விருப்பமில்லாத கடுமையான தந்தையர்களை மட்டுமே அறிந்திருக்கிறார்கள். இன்னும் மற்றவர்களோ பலவீனமான அல்லது செயலற்ற தந்தைகளை அறிவார்கள், அவர்கள் அன்பான தலைமைத்துவத்தையும் பயிற்சியையும் அறிவுறுத்தும் தேவவார்த்தையை புறக்கணிக்கிறவர்களாயிருக்கிறார்களள. இன்னும் சிலர் தங்கள் தந்தையை சிறிதும் அறிந்திருக்க மாட்டார்கள், ஏனெனில் அத்தகைய தந்தைகள் தங்கள் பொறுப்பை முற்றிலுமாக புறக்கணித்து, தங்கள் குடும்பங்களை முற்றிலும் கைவிட்டவர்களாயிருக்கிறார்கள். இந்த அத்தியாயத்தில், உண்மையான தந்தை என்றால் என்ன என்பதைக் கற்றுக்கொள்ள இருக்கிறோம்.

**பாடம் 1 - நம்முடைய பரலோகத் தந்தையாகிய தேவன்**

நமது சரீரப் பிரகாரமான தந்தையுடனான நம் அனுபவத்தைப் பொருட்படுத்துவதில்லை, கிறிஸ்துவையும் அவருடைய இரட்சிப்பின் பணியையும் நாம் விசுவாசித்து, ஏற்றுக்கொண்டால், நாம் தேவனால் பிள்ளைகளாக தத்தெடுக்கப்பட்டு, நம்முடைய பிதாவாகிவிடுகிறார் என்று வேதம் உறுதியளிக்கிறது. இந்த அத்தியாயத்தில் நீங்கள் அறிந்து கொள்வது, நமது பரலோகத் தகப்பன் ஒரு அப்பழுக்கற்ற பெற்றோராக, அவருடைய அன்பிலும் அக்கறையிலும் உண்மையுள்ளவராக, பயிற்சியளிப்பதில் திறமையானவராக, வழிகாட்டுவதில் புத்திசாலியாக, எப்போதும் ஆயத்தமாயிருக்க கூடியவர், உங்கள் பரிபூரண வளர்ச்சிக்கு உறுதியளித்துள்ளார்.

**தேவனின் குடும்பத்தில் தத்தெடுக்கப்படுதல்**

ஆவிக்குரிய வட்டாரத்தில், அனைத்து மனித இனமும் தேவனின் குழந்தைகள் என்று குறிப்பிடப்படுகிறது. ஒரு போதகர் அல்லது பிற மதத் தலைவர் கூறுவதை நீங்கள் நினைவில்கொள்ளலாம், "நாம் அனைவரும் தேவனின் குழந்தைகள்." இருப்பினும் நாம் அனைவரும் தேவனின் படைப்பாக இருந்தாலும், தேவனின் தந்தை என்ற உறவு உலகளாவியது அல்ல என்று வேதம் தெளிவாகக் கற்பிக்கிறது. தேவனை “தந்தை” என்று அழைக்க யாருக்கு உரிமை உள்ளது?

> தத்தெடுத்தல்- சொந்தமாக எடுத்துக்கொள்வது அல்லது பெறுவது; அங்கீகரிக்க; ஏற்க குழந்தையாக, வாரிசாக, நண்பராக, அல்லது குடிமகனாக, ஒரு உறவில் தேர்வு செய்து எடுத்துக்கொள்வது;

யோவான் 1:12

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

கலாத்தியர் 3:26

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

எபேசியர் 2: 18–19

பரிசுத்த வேதம் கெட்ட குமாரன் கதையில் ஒரு தந்தையாக தேவனின் இருதயத்தை தெளிவாக உருவகப்படுத்தி கூறுகிறது.

லூக்கா 15: 11–24 -ஐ வாசியுங்கள்.

மகன் தன் சுயநினைவுக்கு வந்தபோது, அவன் தன் தந்தையைப் பற்றி நினைவில் கொண்டது என்ன?(வசனம் 17)?

மகன் எப்படி தன் தந்தையை அணுக திட்டமிட்டான் (வசனங்கள் 18–19)?

தந்தை அவனை எவ்வாறு ஏற்றுகொண்டார் (வசனங்கள் 20-24)?

பரலோகத் தகப்பன் நம்மீது வைத்திருக்கும் அன்பின் ஆழம் கிரகிக்கமுடியாதது. அவருடைய குடும்பத்தின் தத்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாக, நாம் அவருடைய முடிவற்ற அன்பு, பொறுமை மற்றும் இரக்கத்தைப் பெறுபவர்களாயிருக்கிறோம்.

***அடிப்படை சத்தியம்***

இயேசு கிறிஸ்துவுக்கு தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் மாத்திரமே தேவனை அவர்களின் பிதா என்று அழைக்க உரிமை பெற்றிருக்கிறார்கள் தேவன் நம்மை மீட்க, நம் பாவங்களை மன்னிக்க, மேலும் நம்மை அவருடைய பிள்ளைகளாக தத்தெடுக்க தமது குமாரனை அனுப்பினார்.

**உங்களை அறிந்த தந்தை**

நம்முடைய பரலோகத் தந்தை, நம் சிருஷ்டிகராகவும் இருப்பதால், அவர்

நம் ஒவ்வொருவரையும் தனித்தனியாகவும் தனித்துவமாகவும் புரிந்திருக்கிறார். தேவனின் அந்தரங்க அறிவைப் பற்றி தாவீது பல சங்கீதங்களில் எழுதியுள்ளார். உங்களை தேவன் எப்படியெல்லாம் அறிவார்? என்பதை கீழே உள்ள பகுதிகளை கொண்டு சுருக்கமாக விவரிக்கவும்.

சங்கீதம் 71: 6

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

சங்கீதம் 103: 13-14

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

சங்கீதம் 139: 1–6

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

சங்கீதம் 139: 7–12

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

சங்கீதம் 139: 13-18

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

,

நீங்கள் பிறப்பதற்கு முன்பே தேவன் உங்களை அறிந்திருந்தார், மேலும் உங்கள் தாயின் வயிற்றில் உங்களை தனித்துவமாக உருவாக்கினார். அவர் உங்கள் பெற்றோரைத் தேர்ந்தெடுத்து, உங்கள் வாழ்க்கையில் சூழ்நிலைகளை மகிழ்ச்சியாகவோ அல்லது கடினமாகவோ நியமித்தார். நீங்கள் அவரை அறிந்திருக்கவில்லை அல்லது ஏற்றுக் கொள்ளவில்லை என்றாலும், அவர் உங்களைக் கவனித்து, உங்களை அவரிடம் இழுக்கிறார். அவர் உங்கள் படைப்பாளர், நீங்கள் அவரை அறிவதற்கு முன்பே உங்களை அறிந்தவர், உங்களை நீங்கள் அறிவதை விட உங்களை நன்கு அறிவார்.

**பயிற்சி அளிக்கும் தந்தை**

ஒரு அன்பான தந்தையாக, தேவன் தம் பிள்ளைகள் வலிமையான, ஆரோக்கியமான, முதிர்ந்த பெரியவர்களாக வளர விரும்புகிறார். வலிமைபெறவும், வழிகாட்டுதலுக்காகவும் அவரை சார்ந்து, அவருடைய குணத்தை நாம் பிரதிபலிக்க வேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். கிறிஸ்துவிடம் வருவதற்கு முன்பு, நாம் ஆவிக்குரிய அனாதைகளாக இருந்தோம்-தேவனிடமிருந்து தனித்து, சுயநலவாதிகளாக, பாவமான நடத்தைகளில் ஈடுபடும் பழக்கம் உள்ளவர்களாக இருந்தோம். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பிறகு, நாம் தேவனின் குடும்பத்தில் தத்தெடுக்கப்பட்டு, அவர் மூலமாக ஒரு புது வாழ்க்கையும் அளிக்கப்பட்டோம். ஆனால் புதிதாகப் பிறந்த கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய சொந்த பலத்தை நம்பி, நம்முடைய சொந்த வழியில் காரியங்களைச் செய்யப் பழகிவிட்டோம். நாம் எவ்வளவு சுயாதீனமானவர்கள், பாவமுள்ளவர்கள், அறிவற்றவர்கள் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் நம்முடைய ஒவ்வொரு வாழ்க்கையிலும் இந்த விஷயங்களை எவ்வாறு வெளிப்படுத்துவது என்பதை தேவன் தமது எல்லையற்ற ஞானத்தில் அறிவார்.

தேவன் நம் ஒவ்வொருவரையும் நெருக்கமாக அறிவார். நமக்கு எது மிகுந்த மகிழ்ச்சியைத் தரும், எது ஆழ்ந்த துக்கத்தைத் தரும் என்று அவருக்குத் தெரியும். நம்முடைய தனித்துவமான மனோபாவங்கள் ஒவ்வொன்றையும் அவர் புரிந்துக்கொள்கிறார்-நமது ஆளுமையின் பலவீனங்கள், பலங்கள், வரம்புகள் மற்றும் நம்மை கவர்ந்திழுக்கும் சோதனைகளையும் அவர் அறிவார். ஒரு ஞானமுள்ள பிதாவாக, தேவன் நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவதால் அனைத்தையும் கருத்தில் கொள்கிறார், ஆவிக்குரிய ரீதியில் முதிர்ச்சியடைய நம் ஒவ்வொருவருக்கும் பயிற்சி அளிக்கிறார்.

தேவன் தம்மைப் போலவே நம்மை நேசிக்கிறார், ஆனால் துல்லியமாக அவர் நம்மை நேசிப்பதால் அவர் தம்மைப் போலவே நம்மை விட்டுவிட மாட்டார்.

2 கொரிந்தியர் 3:18 நம் உருவத்தைப் பற்றி என்ன சொல்கிறது?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

தேவன் தாம் தத்தெடுத்த குழந்தைகளில், குடும்ப ஒற்றுமையை அவர்களுக்குள் புகுத்த, மற்றும் பயிற்சி அளிக்க, கற்பிக்க, புதிய வேலைகளைத் தொடங்குகிறார். அவர் தமது குழந்தைகள் தமது பரிசுத்தத்தில் பங்குபெற்று தமது குமாரனின் சாயலாக மாற்றப்பட வேண்டும் என்று விரும்புகிறார்.

***மறுரூபம்-உருமாற்றம்-*** வடிவத்தை மாற்ற; சுபாவம், நிலைகளில், இருதயம் அல்லது, சாயல் போன்றவற்றை மாற்றுதல்.

## பாடம் 2.

## மறுரூபத்திற்கான தேவனுடைய கருவிகள்

**ணறறநசவர**ஒரு குயவன் தனது கைகளையும், சிறப்பு கருவிகளையும் பயன்படுத்தி ஒரு களிமண்ணை ஒரு அழகான பாத்திரமாக வடிவமைப்பதுபோலவே தேவன் தமது கரத்தையும், கருவிகளையும் பயன்படுத்தி நமது வாழ்க்கையை வடிவமைக்கிறார். அவருடைய மென்மையான, இன்னும் உறுதியான, தொடுதலுக்கு நாம் விட்டுக்கொடுத்தால், அவர் நம்மை தனித்துவமுள்ள உள்ளான வலிமை மற்றும் அழகுடைய மனிதர்களாக மாற்றுவார். தேவன் தமது மறுரூபமாற்று செயல்பாட்டில் மூன்று முதன்மை கருவிகளைப் பயன்படுத்துகிறார். அவையாவன: பரிசுத்த வேதம், சோதனைகள், சிரமங்கள் மற்றும் பிற மனிதர்கள்.

### பரிசுத்த வேதம்

மேலும் தேவனுடைய வார்த்தையை தினமும் படிப்பதன் மூலம் நாம் நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபார சத்தியங்களை கற்றுக் கொள்கிறோம், மேலும் ஞானம், அறிவு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றில் வளர்கிறோம்.

சங்கீதம் 119: 105. தேவனின் வார்த்தை ஒரு ________________________.

எபிரெயர் 4:12. தேவனின் வார்த்தை _______________________________.

எரேமியா 23:29. தேவனின் வார்த்தை __________________ போன்றது.

யோபு 23:12. தேவனின் வார்த்தை_______________________________ ஐ விட பொக்கிஷமாக இருக்க வேண்டும்.

எபேசியர் 5:26. தேவனின் வார்த்தை பரிசுத்தப்படுத்துகிறது மற்றும் _____________________ ____________________________________________.

1 பேதுரு 2: 2. தேவனின் வார்த்தை ____________________________________.

யோவான் 5: 38-40 -ஐ வாசியுங்கள். மதத் தலைவர்களான யூதர்களை இயேசு ஏன் கண்டித்தார்?

__________________________________________________________________________________
__________________________________________________________________________________
__________________________________________________________________________________

> நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.
>
> நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதனால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள். (யோவான் 15: 7–8)

*நிலைத்திருத்தல்-* தக்கவைத்தல்; சமர்ப்பிக்க; விட்டுக் கொடுக்காமல் தொடர்ந்து தாங்க; நிலையான அல்லது நிலையானதாக இருக்க.

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு தம்முடைய போதனைகளில் முழு கவனம் செலுத்த, அவரிலும் அவருடைய வார்த்தையிலும் நிலைத்திருக்கும்படி அறிவுரை வழங்கினார். நாம் ஆண்டவரின் வார்த்தையை கடமைக்காக, அல்லது வேத அறிவைப் பெறுவதற்காக வெறுமனே வாசிக்கக் கூடாது. நம் குறிக்கோள் இயேசுவையும் அவருடைய விருப்பத்தையும் இன்னும் நெருக்கமாக அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, அவருடைய அறிவுரைகளை பின்பற்ற விரும்ப வேண்டும், நாம் அவருடைய வார்த்தையில் நிலைத்திருக்கும்போது, நம் விருப்பங்கள் அவரை பிரதிபலிக்கத் தொடங்குகின்றன, இதன் விளைவாக நாம் என்ன கேட்க வேண்டும் என்பது நமக்கு வெளிப்படுகிறது, இதன் விளைவாக நம் வாழ்க்கையானது பரலோக பிதாவை மகிமைப்படுத்துகிறது.

*அடிப்படை சத்தியம்*

தேவனுடைய வார்த்தை ஒரு சக்திவாய்ந்த கருவியாகும், நம் வாழ்க்கையை மாற்றுவதற்காக அவர் அதை பயன்படுத்துவார்.

**சோதனைகள் மற்றும் சிரமங்கள்**

நமது சோதனைகள் மற்றும் கடினமான சூழ்நிலைகள் பற்றி ஆண்டவரின் வார்த்தை என்ன சொல்கிறது?

யாக்கோபு 1: 2–4

1 பேதுரு 1: 6–7

சங்கீதம் 66:  10-12

நம்முடைய பரலோகத் தகப்பன் நம்முடைய தன்னிச்சையை வெளிப்படுத்தவும், அநீதியை அம்பலப்படுத்தவும், பாடங்களைக் கற்றுகொடுக்கவும், விசுவாசத்தை முதிர்ச்சியடையச் செய்யவும், ஆவிக்குரிய ஜீவியத்தில் செழிப்படையத்தக்க இடத்திற்கு கொண்டு வரவும் நம்முடைய சிரமங்களைப் பயன்படுத்துகிறார். நம்முடைய சோதனைகளின் போது, அவருடைய கிருபையிலும், அன்பிலும், கனிவான கவனிப்பிலும் நாம் இளைப்பாற வேண்டும். தேவனின் கண்ணோட்டத்தை நாம் பற்றிக்கொள்ளவில்லை என்றால், அவருடைய நியதியை நிராகரிப்பதோடு, வாழ்க்கையின் கஷ்டங்கள் நம் வாழ்வை சிதைத்துவிட அனுமதிக்கிறவர்களாய் இருப்போம்.

கர்த்தர் உங்களை அவரிடம் நெருங்கி வர கடினமான அல்லது வேதனையான சூழ்நிலைகளைப் பயன்படுத்திய ஒரு தருணத்தை நினைவுகூர்ந்துப்பாருங்கள்.

***அடிப்படை சத்தியம்***

நாம் ஆயத்தமாக இருந்தால் தேவன் நம்முடைய கடினமான சூழ்நிலைகளை அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக மாற்றும்படி பயன்படுத்துவார்.

**மற்ற மக்கள்**

தேவன் நம் வாழ்வில் அறிவுரை மற்றும் உற்சாகபடுத்த மற்ற மக்களை ஏற்படுத்துகிறார். ஏமாற்றமளிக்கும் அனுபவங்கள் மூலம், அவர் மீது மட்டும் நம்பிக்கை வைக்க கற்றுக்கொடுக்கும்படியும் அவர் மற்ற மக்களை ஏற்படுத்துகிறார். பின்வரும் வசனங்களில் மற்ற மக்களைப் பற்றி நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

நீதிமொழிகள் 27:17

ரோமர் 1: 11–12

சங்கீதம் 41: 9–12

2 தீமோத்தேயு 4: 16–17

உங்கள் விசுவாசத்தில் உங்களை ஊக்குவிக்க தேவன் உங்கள் வாழ்க்கையில் ”யாராக"இருக்கிறார்?

,

பொறுமையாகவும் அன்பாகவும் இருக்க உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு சவாலாய் இருப்பவர் யார்?

## பாடம் 3.

### தேவனின் சிட்சை

சிட்சை என்ற வார்த்தையை நீங்கள் நினைக்கும் போது, என்ன நினைவுக்கு வருகிறது? இது பொதுவாக அன்பு மற்றும் அரவணைப்பு ஆகிய மென்மையான உணர்வுகளை வெளிப்படுத்தும் வார்த்தை அல்ல. ஒழுக்கத்துடனான நமது பெரும்பாலான அனுபவங்கள் ஏமாற்றமடைந்த அல்லது கோபமடைந்த பெற்றோரின் வார்த்தைகளோடு இணைக்கப்பட்டதாய் இருக்கிறது. சிட்சிப்பது கடினமானது, சங்கடமானது, சில சமயங்களில் வேதனையானதும் கூட. இது நாம் திறந்த கைகளால் உடனடியாக பெறக்கூடிய ஒன்றல்ல. ஆனாலும், தேவன் நம்மை சிட்சிக்கிறார் என்று வேதம் சொல்கிறது.

தேவனின் சிட்சிப்பைப் பற்றி பிரசங்கிப்பது அவ்வளவு பிரபலமானதாக இல்லை, பெரும்பாலான மக்கள் தேவனின் அன்பு மற்றும் மன்னிப்பில் கவனம் செலுத்துவார்கள்-தேவனின் குணாதிசயங்கள் நம்மை சுகமாக இருக்க வைக்கின்றன. ஆனால் நம் அன்பான, பரலோகத் தகப்பன் எப்போதுமே நாம் சுகமாய் மட்டும் இருந்து விட்டால் போதும் என்று விரும்புவதில்லை, மாறாக நாமும் அவரைப் போல் நல்லவர்களாக மாற வேண்டும் என்று விரும்புகிறார்.

*சிட்சை*-கற்பிக்க; சுய கட்டுப்பாட்டை பயிற்சி செய்தல், அல்லது கொடுக்கப்பட்ட தரங்களுக்கு கீழ்ப்படிதல்; அறிவுறுத்தல்களை செயல்படுத்தி வளருதல்.

எபிரெயர் 12: 5–11 -ஐ வாசியுங்கள்.

கர்த்தர் யாரை சிட்சிக்கிறார் (வசனம் 6)?

________________________________________

இந்த சிட்சை எதை நிரூபிக்கிறது (வசனம் 8)?

________________________________________

அவர் ஏன் நம்மை சிட்சிக்கிறார் (வசனம் 10)?

________________________________________

;

சிட்சையானது என்ன விளைவைக் கொடுக்கும் (வசனம் 11)?

____________________________________

தம்மைப் பிரியப்படுத்தாத எண்ணங்கள், மனப்பான்மைகள் மற்றும் செயல்களை தேவன் பொறுமையுடனும், விடாமுயற்சியுடனும் தூய்மைப்படுத்துகிறார், அவற்றை "நீதியின் சமாதானக் கனியாக"மாற்றுகிறார்.

கலாத்தியர் 5: 22–23-ஐ வாசித்து, தேவன் நம் வாழ்க்கையில் விளைவிக்க விரும்பும் கனிகளை பட்டியலிடுங்கள்.

________________________________________

________________________________________

பிலிப்பியர் 1: 6 ஐ சுருக்கமாகக் கூறுங்கள்.

தேவன் அவருடைய நல்ல கனிகளைத் தர உங்கள் வாழ்க்கையை மாற்றுவார் என்ற உறுதி உங்களுக்கு இருக்கிறது. உங்களை அவருடைய சாயலின்படி வடிவமைக்க அவர் தீவிரமாக செயல்பட்டு வருகிறார். ஆனால் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டியது, அவர் தமது வேலையைச் செய்யும்போது நீங்கள் செயலற்றமுறையில் நிற்க முடியாது. மறுரூபமாக்கப்படுவதற்கு அவருடைய சிட்சையை தீவிரமாகப் ஏற்றுக்கொண்டு அதற்கு அர்ப்பணித்து தீவிரமாக செயலாற்றும் பொறுப்பு உங்களுக்கு உள்ளது.

தேவனின் மறுரூபமாக்கும் கருவிகள்- பரிசுத்த வேதம், சோதனைகள், கஷ்டங்கள் மற்றும் பிற மனிதர்கள்- அதோடுகூட கிறிஸ்துவைபோல மாறுவதில் நமக்கிருக்கும் பற்றாகுறை, அவருடைய சித்தத்தைப் பற்றிய நமது அறியாமை, மற்றும் அவரிடமிருந்து நாம் தனித்திருப்பது ஆகியவைகளை வெளிபடுத்தும் நம்மில் வாழும் பரிசுத்த ஆவியின் வல்லமையுமே. தேவனுடைய அன்பான தன்மையை பிரதிபலிக்காத வகையில் நீங்கள் செயல்பட்ட தருணத்தை நினைவுகூர முடியுமா? பரிசுத்த வேதத்தை படிக்கும்போது அல்லது ஒரு பிரசங்கத்தைக் கேட்கும்போது நீங்கள் குற்றவாளியாக உணர்ந்ததுண்டா? ஒரு சோதனைக்கு அல்லது ஒரு நபர் பாவமான வழியில் செயல்பட்ட பிறகு பரிசுத்த ஆவியானவர் உங்களை உணர்த்தியதுண்டா ?

தேவன் உங்களை முழுமையாக அறிந்தும், உங்கள் வாழ்க்கையின் பகுதிகளை தெரிந்தும், மறுரூபமாக்குவதை செய்து முடிக்காமலிருக்கிறார். ஏனெனில் மறுரூப அனுபவத்தைப் பெற, அவருடைய மறுரூபமாக்கும் முறைகளை நீங்கள் ஏற்க வேண்டும். அவர் உங்கள் பாவத் தன்மையை அவருடைய மறுரூபமாக்குதலை கருவிகளின் மூலம் வெளிப்படுத்துகையில், நீங்கள் உங்கள் பாவத்தை அவரிடம் அறிக்கையிட்டு, அவருடைய மன்னிப்பைப் பெறுவதோடு, நீங்கள் யாருக்கு விரோதமாக பாவம் செய்தீர்களோ அவர்களிடமிருந்து மன்னிப்பைப் பெற முற்பட வேண்டும். இதுதான் தேவனின் சிட்சையுடன் ஒத்துழைப்பதன் அர்த்தமாகும், மேலும் தேவன் விரும்பும் மறுரூபம் மற்றும் "ஆவிக்குரிய வளர்ச்சியை" பெறுதற்கான ஒரே வழியும் இதுதான். இது ஒரு தீவிரமான பங்கேற்பு.

1 யோவான் 2: 6 மற்றும் எபேசியர் 5: 1-7 ஆகியவற்றிலிருந்து நீங்கள் கற்றுக்கொள்வதென்ன?

உங்கள் வாழ்க்கையின் பகுதிகள் (எண்ணங்கள், வார்த்தைகள் அல்லது செயல்கள்) கிறிஸ்துவை ஒத்திருக்கவில்லையா? தேவனின் மறுரூபமாக்கும் செயல்முறைக் கருவிகள் மூலம் கிறிஸ்துவைப் போல் மாறுவதில் காணப்படும் குறைபாடுகளை வெளிக்கொண்டு வரும்போது, நீங்கள் அவைகளை மனந்திரும்புதல், ஜெபம், தேவ வார்த்தையை வாசிப்பது மற்றும் வாக்குத்தத்தங்களை நாடுவதின் மூலம் அவற்றை தீவிரமாக அழித்துவிடவேண்டும்

ரோமர் 12: 1-2 மற்றும் எபேசியர் 5:17 ஆகியவற்றிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

உங்கள் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் (அவருடனான உங்கள் உறவு, உங்கள் மனைவி, உங்கள் குழந்தைகள், உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்கள், உங்கள் நிதி மற்றும் பிறகாரியங்களில்) தேவனின் விருப்பம் என்ன என்று அறிவீர்களா?, உங்கள் அறியாமை வெளிப்படும்போது, மனந்திரும்புதல், ஜெபம், தேவ வார்த்தையை வாசிப்பது மற்றும் உங்களுக்கு

உதவ ஒரு சீஷரைக் கண்டுபிடிப்பதன் மூலம் உங்கள் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் அவருடைய நல்ல மற்றும் பரிபூரண சித்தத்தின் அறிவை நீங்கள் தீவிரமாக நாட வேண்டும்.

ரோமர் 6: 1-4, யாக்கோபு 1: 22-25, 1 பேதுரு 1: 13-16 ஆகியவற்றிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

நீங்கள் தாழ்மையுடன் ஆண்டவரின் அதிகாரத்திற்கு அடிபணிகிறீர்களா, அல்லது தேவபக்தியற்ற நடத்தைகள் மற்றும் கீழ்ப்படியாமை ஆகியவற்றால் சாக்குபோக்கு சொல்கிறீர்களா? நீங்கள் கீழ்ப்படிய வேண்டுமா இல்லையா என்பதில் உங்கள் சொந்த நிபந்தனைகளை வைத்திருக்கிறீர்களா? தேவனை விட்டு நீங்கள் தனித்திருப்பது, அவருடைய மறுரூபமாக்கும் உபகரணங்கள் மூலம் வெளிப்படுத்தப்படுவதால், நீங்கள் மனந்திரும்புதலின் மூலம் அவருடைய அதிகாரத்திற்கு தீவிரமாக அடிபணிந்து, கீழ்ப்படிதலுடன் வாழ மனத்தாழ்மையையும் வல்லமையையும் அவரிடம் கேட்க வேண்டும். பொறுப்புணர்வை நாடுவதும் உதவியாக இருக்கும்.

2 பேதுரு 1: 5–9 ஐப் படித்து நீங்கள் கற்றுக்கொண்டவற்றைச் சுருக்கமாகக் கூறுங்கள்.

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

நீங்கள் மறுரூபமடைவது உடனே நிகழக் கூடிய காரியம் அல்ல அதற்கு நேரம் எடுக்கும். ஆனால் தேவனோ ஒரு உண்மையுள்ள தந்தையாக நல்லவரும் பொறுமையுள்ளவருமாகவும் இருக்கிறார். உங்களில் அவர் தொடங்கிய வேலையை முடிக்க அவர் வாக்குக் கொடுத்திருக்கிறார். இருப்பினும், நீங்கள் தேவனின் சிட்சைக்கு அடிபணிய மறுத்தால், நீங்கள் அவரிடம் சவுக்கடி கேட்கிறீர்கள்.

*தண்டித்தல்-* தீவிரத்தோடு தண்டிக்க அல்லது துன்புறுத்த; திருத்தங்களுக்காக பாவங்கள் அல்லது தவறுகளுக்காக தண்டிக்க வேண்டும்.

எபிரெயர் 12: 6 -ஐ வாசியுங்கள். தேவன் ஏன் தன் பிள்ளைகளைத் தண்டிக்கிறார், துன்புறுத்துகிறார்?

____________________________________________________________________________

____________________________________________________________________________

____________________________________________________________________________

தேவன் உங்களை நிபந்தனையின்றி நேசிக்கிறார், அளவிட முடியாத அளவிற்கு உங்களை ஆசீர்வதிக்க விரும்புகிறார். ஆனால் அவருடைய சிட்சையைப் பெற நீங்கள் விரும்பவில்லை என்றால், அவர் உங்களுக்குக் கொடுக்க விரும்பும் மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் நீங்கள் பெற மாட்டீர்கள். அதற்கு பதிலாக, மனச்சோர்வு, பயம், அதிருப்தி, ஏமாற்றம் மற்றும் சந்தேகம் போன்றவைகளை அனுபவிப்பீர்கள். உங்கள் வாழ்க்கையில் ஆவியின் கனிகள் இல்லாமல், மாம்சத்தின் கனிகளின் பலனை அனுபவிக்க தொடங்குவீர்கள்.

கலாத்தியர் 5: 19–21-ஐ வாசித்து, உங்களுக்குள் இருக்கும் மாம்சத்தின் சில கனிகளைப் பட்டியலிடுங்கள்.

நாம் தேவனுடைய சிட்சையை அனுபவிக்கும்போது மற்றவர்களையும் அல்லது நம் கடினமான சூழ்நிலைகளையும் குறை சொல்வது என்பது இயல்பான காரியம். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் சாத்தானிடம் இருந்தோ அல்லது நம்மிடம் இருந்தோ வந்திருக்கலாம் என்று சொல்வது சரியான காரியமாய் இருக்காது. மாறாக நாம் நம்முடைய முரட்டாட்டங்களுக்கு பொறுப்பேற்று தேவனுடைய சிட்சைக்கு நம்மை ஒப்புக் கொடுப்பதை குறித்து பேசுவதை நாம் மறுத்து விடுகிறோம். தேவன் தம்முடைய பிள்ளைகளை தண்டிப்பது, சிட்சைக்கு உட்படுத்துவது என்பது அவருக்குப் பிரியமான காரியம் அல்ல, ஆனால் நாம் உண்மையாக இருந்து, அதிக பலன் கொடுக்கத்தக்கதாக நம்மை உற்சாகப்படுத்துவதற்கு ஏதுவாக சில சமயங்களில் நமக்கு குறிப்பிட்ட அளவு உபத்திரவமுமோ, கஷ்டமோ, வேதனையோ அவசியம் என்பதை அறிந்திருக்க வேண்டும். உங்கள் பரலோகத் தகப்பன் உங்களை அதிகமாய் நேசிக்கிறபடியினால் உங்கள் கவனத்தை ஈர்க்கும்படியாக அவர் உங்களிடத்தில் தொடங்கிய வேலையை செய்து முடிக்க அப்படி செய்கிறார் என்று ஆறுதல் அடைய வேண்டும்.

**பாடம் 4.**

**தேவனின் கனிவான பராமரிப்பு பற்றிய வாக்குறுதிகள்.**

நம்முடைய பரலோகத் தகப்பன், அவருக்காக முழுமையாக ஒப்புக்கொடுத்து அர்ப்பணித்தவர்களின் வாழ்க்கைக்கான முழுப் பொறுப்பையும் ஏற்கத் தயாராக உள்ளார். அவருடைய கனிவான கவனிப்பால் நாம் சூழப்பட்டிருக்கிறோம்.

சங்கீதம் 91: 4. நமக்கு மேலே அவருடைய ___________________________________.

உபாகமம் 33:27. நமக்கு கீழ் அவருடைய ____________________________________.

சங்கீதம் 34: 7. நாம் ____________________ ஆல் சூழப்பட்டிருக்கிறோம்.

பிலிப்பியர் 4: 6–7. நமது இருதயங்களும் மனங்களும் __________________________________ஆல் பாதுகாக்கப்படுகின்றன.

நம்முடைய பரலோகத் தகப்பனிடமிருந்து நாம் பெறும் அன்பும் அக்கறையும் அவருடைய வாக்குத்தத்தத்தின் மூலம் நமக்கு கிடைக்கும் அவருடைய பிரசன்னம், அவருடைய ஆசீர்வாதம் மற்றும் பாதுகாப்பின் மூலமாக வெளிப்படுகிறது.

**தேவ பிரசன்னத்தைக்குறித்த வாக்குத்தத்தம்.**

அவர் நம்மோடு கூட இருப்பதைக் குறித்து நீங்கள் என்ன கற்றுக் கொண்டீர்கள் என்று சுருக்கமாக எழுதவும்.

சங்கீதம் 23: 4

___________________________________________________________________
___________________________________________________________________
___________________________________________________________________

சங்கீதம் 121: 1–5

___________________________________________________________________
___________________________________________________________________
___________________________________________________________________

சங்கீதம் 139: 7-10

___________________________________________________________________
___________________________________________________________________
___________________________________________________________________

எபிரேயர் 13: 5–6

தேவனின் பிள்ளைகளாகிய நாம் ஒருபோதும் தனிமையாக இல்லை. நமது பிதாவாகிய தேவன் எப்போதும் கண்ணும் கருத்துமாக நம்மோடு கூடவே இருக்கிறார்.

***அடிப்படை சத்தியம்***

நம்முடைய பரலோகத் தந்தை தனது மென்மையான பராமரிப்புடன், நம்மோடு எப்போதும் இருக்கிறார்.

**தேவ பராமரிப்பின் வாக்குத்தத்தங்கள்**

உங்களை பராமரிப்பவராக தேவனை நம்புவது பற்றி பின்வரும் வசனங்கள் உங்களுக்கு என்ன கற்பிக்கின்றன?

மத்தேயு 6: 25–26

ரோமர் 8:32

பிலிப்பியர் 4:19

மத்தேயு 7: 7–11 -ஐ வாசியுங்கள். 11 வது வசனத்தின்படி, தம்மிடம் கேட்பவர்களுக்கு பிதா என்ன வகையான வரங்களை கொடுப்பார்?

தேவன் தமது பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளையே கொடுக்கிறார் அவர் தம்முடைய அன்பு மற்றும் ஞானத்தினால் நாம் கேட்கும் எல்லாவற்றையும் நமக்கு கொடுக்காமல், நமக்கு எது சரியானது என்று தேர்ந்தெடுத்து, அதற்கு தக்கவாறு அருளுகிறார். நாம் அவருடைய வழிகளை இதுவரை அறியவில்லை என்று சொன்னால் அவருடைய நன்மையும், ஞானத்தையும் நம்புவதற்கான நல்ல தருணம் இதுதான்.

மத்தேயு 6: 24–34 -ஐ வாசியுங்கள். தேவன் ஆகாயத்துப் பறவைகளையும் காட்டுப் புஷ்பங்களையும் கவனித்துக் கொள்வார் என்று சொன்னால் அவர் தமது அன்புக்குரிய பிள்ளைகளையும் நிச்சயமாகவே கவனித்துக் கொள்வார் என்று நாம் நம்ப வேண்டும்.நாம் அழிந்து போகிற பொருளுக்காக கவலைப்படக் கூடாது என்று போதிக்கப்பட்டு இருக்கிறோம். 32 வது வசனத்தில், அவைகளெல்லாம் தேவனை அறியாத அஞ்ஞானிகளின் கவலை என்று அறிகிறோம்

உங்களிடம் தற்போது உள்ள கவலைகள் என்ன, நீங்கள் கவலைப்படும் காரியங்கள் என்ன ?

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

மத்தேயு 6: 33-ன் படி, கவலைப்படுவதற்கான தீர்வு என்ன?

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

நாம் தேவனை தேடி அவரோடு கூட உள்ள உறவை முதன்மையாக முன்னுரிமையாக மாற்ற வேண்டும். நாம் எல்லாவற்றையும் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்து எல்லாவற்றிலும் அவரை விசுவாசிக்கிற பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும்போது, கவலைப்படுகிற பாவப் பழக்கத்திலிருந்து மேற்கொள்ள அவர் நமக்கு உதவி செய்வார்.

***அடிப்படை சத்தியம்***

அவர் பரலோக பிதா, அவர்தம் கனிவான பராமரிப்பில் நம் தேவைகளை எல்லாம் சந்திப்பார்.

**தேவன் வாக்குப் பண்ணின பாதுகாப்பு**

வேதத்தில் 365 பயப்படாதே என்ற கட்டளை அடங்கியுள்ளது. எல்லாம் வல்ல தேவனின் பிள்ளைகளாக, நாம் அவரிடம் பாதுகாப்பாக இளைப்பாரலாம். பின்வரும் வேத வாக்கியங்களிலிருந்து தேவனின் பாதுகாப்பு பற்றி நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

ஏசாயா 54:17

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

சங்கீதம் 91: 1–12

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

சங்கீதம் 121: 5–8

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

> ***அடிப்படை சத்தியம்***
>
> நம்முடைய பரலோகப் பிதா தமது கனிவான பராமரிப்பில் நம்மை பாதுகாத்து வைக்கிறார்.

நம்முடைய பரலோகத் தகப்பன் அவருடைய சிட்சை, பாதுகாப்பு மற்றும் கொடுத்தல் பற்றி நமக்கு உறுதியளிக்க அவருடைய வார்த்தைகளில் அதிகமாக கூறியுள்ளார். நம்முடைய வாழ்க்கையையும் நமது கவலைகளையும் அவரிடம் ஒப்படைத்து விசுவாசத்தில் நாம் பதிலளிக்க வேண்டும். தேவனின் மகிமை, வல்லமை, மற்றும் இறையாண்மை அவரது படைப்பில் நிரூபிக்கப்பட்டாலும், அவருடைய தெய்வீக குணத்தின் ஆழம் தந்தை என்ற தன்மையில் நிரூபிக்கப்பட்டுள்ளது. தேவனின் அன்பு பொறுமை, இரக்கம், கருணை மற்றும் நன்மை ஆகியவை அவருடைய பிள்ளைகளாக நம்முடனான அவரது உறவில் வெளிப்படுகிறது.

பின்வரும் வசனங்களிலிருந்து தேவனின் தன்மையைப் பற்றி நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

1 யோவான் 3: 1

______________________________

______________________________

______________________________

2 பேதுரு 3: 9

______________________________

______________________________

______________________________

எபேசியர் 1: 3–6

______________________________

______________________________

______________________________

2 கொரிந்தியர் 1: 3–4

______________________________

______________________________

______________________________

தேவனால் தத்தெடுக்கப்பட்ட பிள்ளைகளாக, அவர் வைத்திருக்கும் எல்லாவற்றிற்கும் நாம் வாரிசுகளாகிறோம். நாம் சுதந்தரிக்கப் போகும் அந்த செல்வத்தைப் பற்றி பின்வரும் வசனங்கள் என்ன சொல்கின்றன?

சங்கீதம் 50: 10–12

______________________________

______________________________

______________________________

ஆகாய்2: 8

______________________________

______________________________

______________________________

1 பேதுரு 1: 3-4-ஐ வாசியுங்கள். நமது சுதந்திரவீதம் எங்கே இருக்கிறது?

________________________________________________________________________________________________________________

________________________________________________________________________________________________________________

________________________________________________________________________________________________________________

நீங்கள் தேவனின் தத்தெடுக்கப்பட்ட பிள்ளைகள் என்ற சத்தியம் உங்களை நீங்கள் பார்க்கும் போது எவ்வித தாக்கத்தை ஏற்படுத்துகிறது?

________________________________________________________________________________________________________________

________________________________________________________________________________________________________________

________________________________________________________________________________________________________________

உங்கள் பரலோகத் தகப்பனாக தேவனைப் பற்றிய உங்கள் புரிதலை ஆழப்படுத்த இந்த அத்தியாயம் உதவி இருக்கும் என்று நம்புகிறேன். அடுத்த அத்தியாயம் தேவனிடமிருந்து வரும் மற்றொரு வரத்தை மையமாகக் கொண்டுள்ளது, குறிப்பாக மனந்திரும்பி கிறிஸ்து இயேசுவை இரட்சகராக பெறுபவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பரிசுத்த ஆவியானவரைப் பற்றியது.

# அத்தியாயம் 3
# பரிசுத்த ஆவியானவர்

கத்தோலிக்க திருச்சபையில் உட்கார்ந்து குருவானவர் பரிசுத்த ஆவியானவரை பற்றி குறிப்பிடுவதை நான் ஞாபகப்படுத்தி பார்க்கிறேன். அது என்னவென்று எனக்குத் தெரியாது, ஆனால் “ஆவியானவர்” எப்படியோ முக்கியமானவர் என்று எனக்குத் தெரியும். ஆவியானவரை சுற்றியுள்ள இரகசியம் என் வாழ்க்கையின் அடுத்த பதினைந்து ஆண்டுகளுக்கு நீடித்தது. நான் கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக் கொண்டபோது பரிசுத்த ஆவியானவருடன் ஒரு வல்லமையான சந்திப்பை நான் அனுபவித்த பிறகும், அதைப் பற்றி எனக்கு போதுமான அறிவு இல்லாமல் இருந்தது. துரதிர்ஷ்டவசமாக சபைகளில் பரிசுத்த ஆவியானவர் விஷயத்தில் நிறைய குழப்பங்கள் இருக்கிறது. "ஏதோ தேவனிடமிருந்து வெளிப்படும் ஒரு ஆற்றல் அல்லது கிறிஸ்தவர்களுக்கு தேவன் அளிக்கும் ஒரு வல்லமை” என்று பலர் நம்புகிறார்கள் - மேலும் அது ஒரு வகையான ஸ்டார் வார்ஸ் “படை” எனவே ஒரு கிறிஸ்தவன் தனக்காக பயன்படுத்திக்கொள்ளலாம் என்று எண்ணுகிறார்கள். ஆவியானவரைப் பற்றி பரிசுத்த வேதம் என்ன கற்பிக்கிறது என்பதை நான் கற்றுக்கொள்ளத் தொடங்கியபோது, அவர் யார் என்று நான் விரைவில் உணர்ந்தேன்.

**பாடம் 1 பரிசுத்த ஆவியானவர் யார்?**

பரிசுத்த ஆவியானவர் இயேசுவைப் போலவே தேவனின் ஒரு பகுதியாகும், வல்லமையிலும், மகிமையிலும் சமமானவர், பரிசுத்த திரித்துவத்தை ஒன்றாகச் செயல்படுத்துகையில் அவற்றை நிறைவு செய்கிறார். ஆவியானவர் மூலமாகவே தேவன் தம் பிள்ளைகளுடன் தொடர்புகொண்டு, தம்மையும் இருதயத்தின் ஆழத்தில் உள்ள பாவங்களையும் வெளிப்படுத்துகிறார். பிதாவையும் குமாரனையும் போலவே, பரிசுத்த ஆவியானவரும் நித்தியமானவர். (சர்வ வியாபி), சர்வ வல்லவர், மற்றும் சர்வ ஞானி).

பரிசுத்த ஆவியானவரைப் பற்றி பின்வரும் வசனங்கள் என்ன சொல்கின்றன?

எபிரேயர் 9: 4. பரிசுத்த ஆவியானவர்____________________________________________.

சங்கீதம் 139: 7-10. பரிசுத்த ஆவியானவர்________________________________________.

லூக்கா 1: 35. பரிசுத்த ஆவியானவர்______________________________________________.

1 கொரிந்தியர் 2: 10-11. பரிசுத்த ஆவியானவர்_____________________________________.

பின்வரும் வசனங்களில் வெளிப்படுத்தப்பட்ட வரையறுக்கப்பட்ட ஆளுமைப் பண்புகளையும் அவர் கொண்டிருக்கிறார்:

- அவர் விருப்பம் உடையவர் (1 கொரிந்தியர் 12:11).
- அவர் நேசிக்கிறார் (ரோமர் 15:30).
- அவர் துக்கப்படுகிறார் (எபேசியர் 4:30).
- அவரிடத்தில் பொய் சொல்லலாம் (அவர் சொல்ல மாட்டார் நாம் வேண்டுமானால் அவரிடத்தில் சொல்ல நேரிடலாம்) (அப்போஸ்தலர் 5: 3).
- அவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சை உடையவராக இருக்கிறார் (யாக்கோபு 4: 5).
- அவரைத் தணிக்கலாம் அல்லது அடக்கலாம் (1 தெசலோனிக்கேயர் 5:19).

- மனிதன் இரட்சகரை நிராகரிக்கும் போது இவர் அவமானப் படுத்தப்படுகிறார். (எபிரெயர் 10:29).
- அவர் பேசுகிறார் (1 தீமோத்தேயு 4: 1).
- அவர்தான் சத்தியம் (1 யோவான் 5: 6).

***அடிப்படை சத்தியம்***

பரிசுத்த ஆவியானவர் நாடக கதைகளில் வருகிற தெளிவற்ற ஒரு அண்ட சக்தியோ, ஆற்றலோ அல்ல. அவர் தெய்வீகத்தில் ஒரு நபர். அவர் தேவன்.

## பாடம் 2

### பரிசுத்த ஆவியானவரின் வேலை

**பரிசுத்த ஆவியானவர் புதிய பிறப்பைக் கொடுக்கிறார்.**

பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவில் ஒரு புதிய வாழ்க்கையைப் பெறுவதற்கான வழிகளை வழங்குகிறார். ஆவியானவரின் மீளுருவாக்கம் செய்யும் வேலையை தம்மைப் பின்பற்றுபவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று ஆண்டவர் இயேசு விரும்புகிறார். யோவான் 3: 1–8 -ஐ வாசியுங்கள்.

தேவனுடைய ராஜ்ஜியத்தைக் காண, நிக்கொதேமுவுக்கு என்ன செய்ய வேண்டும் என்று இயேசு சொன்னார்?

________________________________________

________________________________________

________________________________________

ஒவ்வொரு ஆணும், பெண்ணும், பரலோகத்திற்குச் செல்ல இரண்டு பிறப்புகளை அனுபவிக்க வேண்டும் என்று இயேசு கற்பித்தார்-சரீர பிரகார பிறப்பு (தண்ணீரினால்) மற்றும் ஆவிக்குரிய பிறப்பு (ஆவியானவரால்). இங்கே எட்டாவது வசனத்தில் நிக்கொதேமு பரிசுத்த ஆவியானவரையும் அவருடைய செயலையும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அவர் பரிசுத்த ஆவியானவரை காற்றோடு ஒப்பிட்டு பேசுகிறார்.

- காற்று விரும்பும் இடத்தில் வீசுகிறது, அதேபோல் ஆவியானவர் இறையாண்மையும் சுதந்திரமும் உடையவர், எந்த மனிதனும் அவரைக் கட்டுப்படுத்துவதில்லை. அவர் விருப்பப்படி செயல்படுகிறார்.
- காற்று கண்ணுக்கு தெரியாதது, ஆனாலும் சக்தி வாய்ந்தது. நீங்கள் காற்றைப் பார்க்க முடியாது, ஆனால் அதன் விளைவுகளை காணமுடியும். அதேபோல், பரிசுத்த ஆவியானவர் கண்ணுக்கு தெரியாதவர், ஆனாலும் அவருடைய சக்தியின் சான்றுகள் ஒரு நபரின் வாழ்க்கையிலும் சூழ்நிலையிலும் வெளிப்படும்.
- இறுதியாக, காற்று ஜீவனை அளிப்பது போல, பரிசுத்த ஆவியானவரும் ஜீவனை அளிக்கிறார்.

பின்வரும் வசனங்களிலிருந்து நம் வாழ்வில் பரிசுத்த ஆவியின் செயலைப் பற்றி நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

யோவான் 6:63

________________________________________

________________________________________

________________________________________

தீத்து 3: 5

________________________________________

________________________________________

________________________________________

**பரிசுத்த ஆவியானவர் தான் நம் வாழ்க்கையை மறுரூபமாக்குகிறார்.**

பரிசுத்த ஆவியானவர் கண்ணுக்குத் தெரியாதவர், ஆனால் சக்திவாய்ந்தவர், மேலும் அனைத்து விசுவாசிகளின் இருதயங்களிலும் வந்து தங்கி புதிய வாழ்க்கையை அருளுபவர். நாம் அவரைப் பார்க்க முடியாது, ஆனாலும் அவருடைய பிரசன்னத்தின் விளைவுகள் நம் வாழ்வில் தெரியும். ஒவ்வொரு விசுவாசியையும் கிறிஸ்துவைப் போல உருவாக்குவதுதான் அவருடைய வேலை. பின்வரும் வேத வசனங்களில் இருந்து ஆவியானவரைப் பற்றி நீங்கள் கற்றுக் கொள்பவைகள் என்ன?

2 பேதுரு 1: 3-4

________________________________________________
________________________________________________
________________________________________________

எசேக்கியேல் 36: 26-27

________________________________________________
________________________________________________
________________________________________________

1 கொரிந்தியர் 2: 12-16

________________________________________________
________________________________________________
________________________________________________

கிறிஸ்தவ விசுவாசத்தில் உள்ள நற்செய்தியின் ஒரு அம்சம் என்னவென்றால், தேவன் நம்மை சீர்திருத்தவோ மேம்படுத்தவோ கூறவில்லை. மாறாக உள்ளிருக்கும் பரிசுத்த ஆவியால், தேவன் நம்மை உள்ளும், புறமும் மாற்றுகிறார்! தினசரி அவருடன் நெருக்கம் தேடுவதன் மூலமும், அவருடைய பரிசுத்த ஆவியின் வல்லமையால் அவருடைய சிட்சிப்புடன் ஒத்துழைப்பதன் மூலமும் இந்த மாற்றத்தின் செயல்பாட்டில் நாம் பங்குபெருகிறோம். தனிப்பட்ட விதத்தில் ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் தேவனை நெருங்குகையில், அவர் தம்முடைய இருதயம், மனம் மற்றும் இயல்பை நமக்கு அருளுகிறார். ஆகவே நாம் அவரிடம் தினமும் சரணடைந்து, சமர்ப்பித்து, ஒத்துழைக்க வேண்டும்.

*சரணடைதல்-* அதிகாரத்திற்கு அடிபணிதல் அல்லது மற்றொருவரின் உடைமையாக இருத்தல்; பொருளிலிருந்து விலகு; முற்றிலும் விட்டுக்கொடு.

*சமர்ப்பிக்க-* கீழ் வைக்க அல்லது வைக்க; மற்றொருவரின் விருப்பத்திற்கோ அல்லது தீர்ப்புக்கோ ஒப்புக்கொடுக்க வேண்டும்.

*ஒத்துழைப்பு-* மற்றொருவருடன் இணைந்து செயல்படு அல்லது செயல்படு.

***அடிப்படை சத்தியம்***
பரிசுத்த ஆவியானவர் புதிய வாழ்க்கை வழங்குவதற்கும், கிறிஸ்துவின் சாயலுக்கு நம்மை மாற்றுவதற்கும், ஒவ்வொரு விசுவாசியினுள் வாசம் செய்ய வருகிறார்.

## பாடம் 3

### பரிசுத்த ஆவியானவர் நம் உதவியாளர்

இயேசு கைது செய்யப்படுவதற்கு சில மணிநேரங்களுக்கு முன்பு, அவர் தமது சீஷர்களை கடைசி விருந்தில் பங்கேற்க மேல் அறைக்கு அழைத்துச் சென்றார். யோவான் 13–17 கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பு அவர்கள் கடைசியாக பந்தியிலிருந்தபோது அவர்களுக்குக் கற்றுக்கொடுத்த அனைத்தையும் விவரிக்கிறது. அவர் பரமேறிய பிறகு அவரை அனுப்புவார் என்று பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் கூறினார். பின்வரும் வசனங்களிலிருந்து பரிசுத்த ஆவியானவரைப் பற்றி நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

யோவான் 14: 16-27

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

யோவான் 15:26

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

யோவான் 16: 7-15

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

இயேசு சீஷர்களிடம் பரிசுத்த ஆவியானவர் இன்னொரு தேற்றவாளனாக இருப்பார், அவர் அவர்களுக்குள்ளும் அவர்களுடனும் இருப்பார் என்று கூறினார்.

பரிசுத்த ஆவியானவர் நமக்கு எப்படி உதவுகிறார்?

பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவுகிறார் ____________________________________ (ரோமர் 8: 26-27).

பரிசுத்த ஆவியானவர் நமது ______________________________________ (ரோமர் 8:14; யோவான் 16:13).

பரிசுத்த ஆவியானவர் நமது _______________________________________ (1 யோவான் 2:27; ஜான் 14:26).

பரிசுத்த ஆவியானவர் நமக்கு கற்பிக்கிறார் ________________________________ (லூக்கா 12: 11-12).

**பாடம்- 4.**

**ஆவியானவரின் நிறைவு.**

நாம் நம்மை ஆவியானவருக்கு விட்டுக் கொடுக்கும் போது, அவர் நம்மை நிரப்புகிறார். எபேசியர் 5: 18 ல், ஒரு நபர் மதுவை உட்கொள்ளும் போது, அவர்கள் மதுவால் ஆதிக்கம் செலுத்தப்பட்டு பாதிக்கப்படுகிறார்கள்.

இதேபோல், நாம் பரிசுத்த ஆவியானவரிடம் சரணடையும்போது, அவர் நம் வாழ்க்கையை ஆளுகை செய்து மாற்றத்தை ஏற்படுத்துகிறார். அவர் நம் எண்ணங்கள், நோக்கங்கள் மற்றும் விருப்பங்களை சுத்திகரிக்கிறார், இதன் விளைவாக நம் சுபாவங்கள் மறுரூபம் ஆக்கப்படுகிறது யோவான் 7: 37-39 ஐப் படியுங்கள். 37 வது வசனத்தில், ஆவிக்குரிய தாகமுள்ளவர்களை நோக்கி இயேசு செய்யச் சொன்ன இரண்டு காரியங்கள் என்ன?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

அப்படியானால் அவர்களின் வாழ்க்கையிலிருந்து என்ன வரும் (வசனம் 38)?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

நம்முடைய தேவையை (தாகத்தை) ஒப்புக்கொள்வதும், இயேசுவை நம்புவதும், அவரிடமிருந்து (குடிப்பதும்) பெறுவதும், அவர் நம்மை நிரம்பி வழியப்பண்ணவும் செய்கிறார். அவருடைய ஜீவன் நம்மில் நிரம்பி நமக்குள் வழிகிறது!

எரேமியா 2: 13-ன் படி, இஸ்ரவேலர் செய்த இரண்டு தீமைகள் என்ன?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

தேவன் தங்களை நிரப்புவதற்கும் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவரை நம்புவதற்குப் பதிலாக, இஸ்ரவேல் புத்திரர் அவரைக் கைவிட்டு, திருப்தி மற்றும் நிறைவுக்கான பிற ஆதாரங்களைத் தேடினார்கள்.

நீங்கள் உருவாக்கிய கையால் செய்யப்படுகிற தண்ணீர் தொட்டி பற்றி உங்களுக்கு தெரியுமா? நீங்கள் திருப்தியை பெற கிறிஸ்துவைத் தவிர என்ன காரியங்களில் முயற்சிக்கிறீர்கள் என்பதை விவரிக்கவும்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

**ஆவியின் கனிகள்**

பரிசுத்த ஆவியானவர் நாம் பக்திவிருத்தி அடையவேண்டும் என்று வைராக்கியத்துடன் எதிர்பார்க்கிறார். அவர் ஒரு பண்புள்ளவர், நம்முடைய விருப்பத்தை மீறவோ, கீழ்ப்படியவோ கட்டாயப்படுத்தவோ மாட்டார். நம்முடைய பாவங்களுக்கான பலியாக இயேசு தானாக முன்வந்து, தம்மை ஒப்புக்கொடுத்தார். இதையொட்டி, மனந்திரும்பி, மன்னிக்கப்பட்ட பாவிகள் தானாக முன்வந்து அவரிடம் சரணடைவதன் மூலம் எதிர்வினையாற்ற வேண்டும். நாம் தினமும் ஆவியானவருக்கு விட்டுக் கொடுக்கும்போது அவர் நம்மை அபிஷேகம் செய்து நிரம்பி வழியும்படி செய்கிறார். அவருடைய ஜீவ தண்ணீர் உள்ளே இருந்து பாய்ந்து நம் வாழ்வில் கனிகளைக் கொடுக்கும்.

இந்த கனிகள் கலாத்தியர் 5: 22–23 ல் விவரிக்கப்பட்டுள்ளது. கனிகளை கீழே பட்டியலிடுங்கள்.

________________________________________

________________________________________

________________________________________

எந்த குறிப்பிட்ட ஆவியின் கனி உங்கள் வாழ்க்கையில் இல்லை?

________________________________________

நம்முடைய வாழ்க்கையில் ஆவியின் கனியின் அளவானது, நாம் அவரைச் சார்ந்திருக்கும் அளவோடு நேரடியாக தொடர்புடையது. ஒரு மரத்திற்கு அதன் கனியை தயாரிக்க சூரிய ஒளி, நீர் மற்றும் ஆரோக்கியமான மண் தேவைப்படுவது போல, தேவ பிள்ளைகள் ஆவியின் கனியைக் கொடுக்க பரிசுத்த ஆவியானவரை முற்றிலும் சார்ந்து இருக்க வேண்டும். உங்கள் வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் அவருடைய வழிநடத்துதலைப் பெறவும், உங்கள் இருதயத்தை ஆவியின் கனிகளால் நிரப்பவும் இப்போதே தேவனிடம் கேளுங்கள்.

**ஆவியின் வரங்கள்**

பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வாழ்க்கையில் ஆவியின் கனியை உருவாக்குவது மட்டுமல்லாமல், அவர் நமக்கு ஆவிக்குரிய வரங்களையும் அளிக்கிறார். ஆவியின் வரங்களை நாமே முயன்று பெற்றுகொள்ள முடியாது; அவைகள் உண்மையுள்ள சேவைக்காக கொடுக்க கூடியது அல்ல. அவை நமது இயல்பான திறன்கள், ஆளுமைகள் அல்லது குணநலன்களுடன் தொடர்புடையவையுமல்ல. இந்த வரங்கள் தேவனுடைய கிருபையால் மட்டுமே கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபைக்கு வழங்கப்படுகின்றன. புதிய ஏற்பாட்டில் மூன்று அத்தியாயங்கள் ஆவிக்குரிய வரஙகளை கற்பிப்பதற்காக பிரத்தியேகமாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன.

1 கொரிந்தியர் 12-14 -ஐ வாசியுங்கள்.

1 கொரிந்தியர் 12: 7 மற்றும் 11 ன் படி, கிறிஸ்துவின் சரீரத்தின் எந்த அவயங்களுக்கு பரிசுத்த ஆவி ஆவிக்குரிய பரிசுகளை வழங்குவார்?

________________________________________

________________________________________

________________________________________

ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்துவதற்கான முக்கிய நோக்கம் என்னவாக இருக்க வேண்டும்? (1 கொரிந்தியர் 14:12, 26 ஐப் பார்க்கவும்.)

________________________________________

________________________________________

________________________________________

ஆவியின் வரங்கள் பெருமை மற்றும் சுயநலத்துடன் அல்லது சகோதரர்கள் மீது அன்பு இல்லாமல் பயன்படுத்தப்படும்போது விளைவு என்னவாக இருக்கும்? (1 கொரிந்தியர் 13: 1-2 ஐப் பார்க்கவும்.)

___

___

___

ஆவியின் வரங்களைப் பயன்படுத்துவதில் சாத்தியமான துஷ்பிரயோகத்தின் காரணமாக, பல திருச்சபைகள் இது சம்பந்தமானவைகளை முற்றிலும் தவிர்க்கின்றன. பவுல் வரங்களைப் பற்றி என்ன வசனங்களை எச்சரிக்கையாக கொடுக்கிறார்?
1கொரிந்தியர் 12: 1

*பக்திவிருத்தி* - கட்டமைத்தல்; ஒழுக்கம், அறிவுசார் அல்லது ஆவிக்குரிய முன்னேற்றம்; அறிவுறுத்தல்

___

___

___

1 கொரிந்தியர் 12: 8-10, 28 ல் காணப்படும் ஆவியின் வரங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன, மேலும் ஒவ்வொன்றையும் குறிக்கும் கூடுதல் வேதவசனங்களும் உள்ளன:

- ஞானத்தைப் போதிக்கும் வசனம் (அப்போஸ்தலர் 6:10)
- அறிவை உணர்த்தும் வசனம் (1 கொரிந்தியர் 1: 5; ரோமர் 15:14)
- அற்புதம் செய்கிற விசுவாசம் (அப்போஸ்தலர் 3: 1-16)
- குணமாக்கும் வரங்கள் (மாற்கு 6:13; யாக்கோபு 5: 14-16)
- அற்புதங்களும் அடையாளங்களும் செய்யக்கூடிய வரம் (அப்போஸ்தலர் 5: 12–15; எபிரெயர் 2: 4)
- தீர்க்கதரிசனம் உரைத்தல் (யாத்திராகமம் 7: 1, 2; எரேமியா 1: 9; 1 கொரிந்தியர் 14: 1–5, 24, 25, 39)
- ஆவிகளை பகுத்தறிதல் (அப்போஸ்தலர் 13: 9–11; எபிரெயர் 5:14)
- பற்பல பாஷைகளை பேசுதல் (1 கொரிந்தியர் 14: 1–5; அப்போஸ்தலர் 2: 3–11; ரோமர் 8:26, 27)
- பற்பல பாஷைகளை வியாக்கியானம் செய்தல் (1 கொரிந்தியர் 14:13, 27, 28)
- உதவிசெய்தல் (அப்போஸ்தலர் 20:35)
- நிர்வாகம் செய்தல் (1 தீமோத்தேயு 5:17)

கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அவயங்களுக்கும், ஆவியின் வரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. நீங்கள் அதை அறிந்திருந்தால், உங்கள் ஆவிக்குரிய வரம் எது?

___

___

___

***அடிப்படை சத்தியம்***
நாம் பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்படியும்போது அவர் நம்மில் ஆவிக்குரிய கனிகளை உருவாக்கி ஆவிக்குரிய வரங்கள் நம்மிடத்திலே வெளிப்படும்படி செய்கிறார்.

**பாடம் 5.**

**பரிசுத்த ஆவியானவரால் அதிகாரம் வழங்கப்படுதல்.**

1 கொரிந்தியர் 6: 17-20 ஐ சுருக்கமாகக் கூறுங்கள்.

நாம் இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொள்ளும்போது, பரிசுத்த ஆவியானவர் நமக்குள் தங்குகிறபடியால், நாம் அவரோடு ஆவியில் ஒன்றாகி, நமது சரீரமும் ஆவியானவர் தங்கும் வாசஸ்தலமாக அல்லது ஆலயமாக மாறுகிறது! அவர் நமக்குள் இருந்து, நம்முடைய எண்ணங்கள், வார்த்தைகள், மற்றும் செயல்களில் தேவனை மகிமைப்படுத்தும் சக்தியை உண்டாகிறார், இதுதான் நாம் மன மாற்றம் அடையும்போது ஆவியானவரை பெறுதல் அல்லது ஆவியானவருடைய நிறைவை பெறுதல் என்று அறியப்படுகிறது.

மனமாற்றத்தின்போது பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதற்கும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவதற்கும் தெளிவான வேறுபாட்டை வேதத்தில் காண்கிறோம். அவைகள் இரண்டும் ஒரே மூலத்திலிருந்து வந்தவை, ஒரே பரிசுத்த ஆவியானவர் என்றாலும், அவை இரண்டிற்கும் வெவ்வேறான நோக்கங்கள் உண்டு.

பரிசுத்த ஆவியானவர் தொடர்பாக, யோவான் ஸ்நானகனைப் பற்றி லூக்கா 1:15 என்ன சொல்கிறார்?

யோவான் ஸ்நானகன் பரிசுத்த ஆவியானவரால் நிறைந்து இருந்தது போலதான், நாமும் மன மாற்றமடைகிற வேளையிலே பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுகிறோம்.

லூக்கா 3: 16 ல், இயேசு வரும்போது என்ன செய்வார் என்று யோவான் ஸ்நானகன் கூறுகிறார்?

அப்போஸ்தலர் 1: 4-8-ல் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அல்லது ஞானஸ்நானம் பெறுவது பற்றி இயேசு தம்முடைய சீஷர்களுக்கு என்ன கற்பித்தார்?

இயேசு அப்போஸ்தலர் 2: 3–47 படி நடந்த பெந்தெகொஸ்தே நாளைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார். பின்வரும் நிகழ்வுகளை விவரிக்கவும்.

அப்போஸ்தலர் 2: 3–13

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

அப்போஸ்தலர் 2: 14-36

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

அப்போஸ்தலர் 2: 37–41

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

அப்போஸ்தலர் 2: 42–47

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

மற்றொரு முறை செசரியாவில் உள்ள புறஜாதியார் மீது ஆவியின் ஞானஸ்நானம் நடந்தபோது அப்போஸ்தலனாகிய பேதுரு அதை ஆவணப்படுத்துகிறார். அப்போஸ்தலர் 11: 15-16-ல் ஆவியானவரைப் பற்றி பேதுரு என்ன சொன்னார்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

பேதுரு, ஆவியானவர் புறஜாதியார் மீது இறங்கினதையும் பெந்தெகொஸ்தே நாளில் நடந்த ஆவியின் ஞானஸ்நானத்தையும் வேறுபடுத்தவில்லை என்பதைக் கவனியுங்கள். அவை இரண்டும் ஒன்றுதான். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம், ஆவியின் வல்லமையை அதிசயமான வழிகளில் வெளிப்படுத்துவதாகும். இது அசாதாரணமானது என்று உணரப்பட்டாலும், பயப்பட வேண்டிய ஒன்றல்ல. செயல்படும் தேவனின் இயல்பான பண்பு அல்ல.

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்பது கட்டாயமாக அடையவேண்டிய ஒன்றல்ல. நாம் இயேசுவை வணங்கி மகிமைப்படுத்த வேண்டுமே ஒழிய, அவருடைய வல்லமையின் வெளிப்பாட்டை நாடித் தேட வேண்டும் என்று இல்லை. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நாம் வரம் அளிப்பவரை நேசிக்க வேண்டுமேயொழிய அந்த வரத்தை அல்ல. செசரியாவில் உள்ள புறஜாதியார் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கும்படி பேதுரு திட்டமிடவும் இல்லை கேட்கவுமில்லை. தேவனின் நோக்கம் மற்றும் மகிமைக்கான திட்டம் அதுதான். உங்கள் இருதயத்தின் நோக்கங்களை எப்போதும் கட்டுக்குள் வைத்திருங்கள்.

**பாடம் 6 ஆவியானவரின் ஊழியம்.**

இயேசு கிறிஸ்து பூமியிலே தம்முடைய ஊழியத்தின்போது தம்முடைய சீஷர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ததைப் போலவே, பரிசுத்த ஆவியானவர் அர்ப்பணிக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் நடைமுறை வழியில் ஊழியம் செய்கிறார். இந்த பாடம் பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தை மையமாகக் கொண்டுள்ளது, அவர் நம்முடைய வாழ்க்கையில் தேற்றரவாளனாக, நண்பனாக, கண்டித்து உணர்த்துபவராக இருக்கிறார்.

**ஆறுதல் அளிப்பவர்.**

> என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். (யோவான் 14:16)

பரிசுத்த ஆவியானவர் அளிக்கும் ஆறுதல், இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. நாம் வேதனைப்படும்போது அல்லது தேவைப்படும்போது, ஒரு தாயின் எல்லையற்ற கரிசனையை அவர் நமக்கு அளிக்கிறார், ஆனால் அதேவேளையில் வாழ்க்கையின் சோதனைகளையும் ஏமாற்றங்களையும் தாங்க தைரியத்தை அளிக்கிறார். ஆறுதல் என்ற சொல் ஃபோர்டிஸ் (fortis) என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து வந்தது, அதிலிருந்து நாம் பலப்படுத்துதல் என்ற வார்த்தையைப் பெறுகிறோம்.

பரிசுத்த ஆவியின் மென்மையான அல்லது பலப்படுத்தும் ஆறுதலை நீங்கள் தனிப்பட்ட விதத்தில் அறிந்த அனுபவத்தைப் பற்றி எழுதுங்கள்.

**தோழர்**

> இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:20).

கிறிஸ்தவர்களாகிய நாம், ஒருபோதும் தனியாக இல்லை. இருப்பினும், நம் வாழ்க்கையின் சூழ்நிலைகள் பெரும்பாலும் நம்மை மேற்கொண்டு தனிமையை உணரவைக்கின்றன. இப்படிப்பட்ட காலங்களில் எதிரிகள் நம்மை சுலபமாக தாக்கி விட கூடும். நாம் தேவனிடம் நெருங்கி வந்து, அவருடைய அன்பும் அரவணைப்பும் நிறைந்த பிரசன்னத்தை வாக்குறுதி செய்கிற அவருடைய வார்த்தைகளை நாம் தியானிக்க வேண்டும். அவருடைய தோழமையை நாம் அனுமதிக்கும் போது; அது நம் எண்ணங்களின் தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கிறது.

யாக்கோபு 4: 7-10-ஐ வாசியுங்கள். எதிர்காலத்தில் தனிமை, மனச்சோர்வு அல்லது எதிரியின் தாக்குதல்களுக்கு நீங்கள் எவ்வாறு பதிலளிக்க முடியும்?

**கண்டித்து உணர்த்துகிறவர்**

> அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். (யோவான் 16: 8)

ஆவியானவர் பரிசுத்தராக இருப்பதால், அவர் தம்முடைய பரிசுத்தத்தை நம்மில் பலுகச்செய்வார். பரிசுத்தம் என்றால் தேவனுக்காக பிரித்தெடுக்கப்படுதல் என்பதாகும். நம்முடைய வாழ்க்கையில் பரிசுத்தம் இல்லாத எந்த செயலும் எண்ணங்களும் பரிசுத்தராக நமக்குள் வாழும் ஆவியானவரை வேதனைப்படுத்துகிறது. ஆனால், நாம் பாவம் செய்யும்போது அவர் நம்மை விட்டு கடந்து போய் விடாமல், நம் மனசாட்சியோடு அவர் பேசி கண்டித்து உணர்த்துகிறார்.

நம்முடைய மனசாட்சி என்பது நம்முடைய உள்ளான நீதிபதி, நாம் பாவத்தை சிந்திக்கும்போது அல்லது அதில் பங்கேற்கும்போது ஆவியானவரின் வருத்தத்தை உணர அனுமதிக்கிறது. சுத்த மனசாட்சியைக் கடைப்பிடிக்கும்படி பரிசுத்த வேதம் நம்மை வலியுறுத்துகிறது ஆவியானவரின் கடிந்து கொள்ளுதலுக்கு உடனடியாக கீழ்ப்படிந்து, மனந்திரும்பி, செயலாற்ற கற்றுக் கொள்வோம் என்றால், அவர் நம்மை பாவத்திலிருந்து விலக்கிக் காப்பார்.

பரிசுத்த ஆவியானவர் உங்களை கண்டித்து உணர்த்திய காலங்களையும் விவரிக்கவும், நீங்கள் அதற்கு விட்டு கொடுத்தீர்களா?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

**ஆலோசகர்**

> மேலும் அவரது பெயர் அற்புதமான ஆலோசகர் என்று அழைக்கப்படும். (ஏசாயா 9: 6)

தேவன் தமது வார்த்தையின் மூலமும், ஆவிக்குரிய மனிதர்கள் மூலமாகவும், அவருடைய பரிசுத்த ஆவியின் உள் வழிகாட்டுதலின் மூலமும் நமக்கு அறிவுரை வழங்குகிறார். நாம் தேவனின் சமூகத்தில் நேரத்தை செலவழிக்கும்போது, அவருடைய குரலைக் கேட்கவும் அவருடைய விருப்பத்தைப் புரிந்துகொள்ளவும் கற்றுக்கொள்வோம். பல கிறிஸ்தவர்கள் தினசரி வழிபாடுகளின் மூலம் தேவனோடு நெருக்கத்தை வளர்ப்பதை புறக்கணித்து, பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலையும் ஆலோசனையையும் இழந்து வாழ்க்கையில் தடுமாறிக்கொண்டே இருக்கிறார்கள். இந்த ஒழுக்கத்தை தொடங்க பரிந்துரைக்கப்பட்ட புத்தகங்களுக்கு பின் இணைப்பு B ஐ பார்க்கவும்.

தேவனின் ஞானம் தேவை என்கிற, எந்த சூழ்நிலையில் இன்று நீங்கள் இருக்கிறீர்கள்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

யாக்கோபு 1: 5-6 இல் தேவன் என்ன வாக்குறுதி அளிக்கிறார்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

***அடிப்படை சத்தியம்.***

பரிசுத்த ஆவியானவர், நம் கஷ்டங்களில் நமக்கு ஆறுதலளிப்பவர், நமக்கு எப்போதும் துணையாக இருப்பவர், சோதனையின் போது கண்டித்து உணர்த்துபவர், மேலும் நமக்கு வழிகாட்டுதல், மற்றும் ஞானம் தேவைப்படும்போது ஆலோசகர்.

தேவனின் மூன்று ஆள்த்தத்துவங்களை நீங்கள் இப்போது நன்கு புரிந்துகொண்டிருப்பீர்கள்: பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியாக தேவன். அவர்கள் ஒன்றாக, பரிசுத்த திரித்துவமாக இருந்து, வல்லமை மாட்சிமையில் சமமாக, மூன்றில் ஒன்றாக, திரியேக தேவனாக இருக்கிறார்கள். அடுத்த அத்தியாயத்தில், கிறிஸ்துவின் பரிசுத்தப்படுத்தும் பணி உங்கள் வாழ்க்கையில் செயல்படுவதால், ஒரு முதிர்ந்த கிறிஸ்தவராக வளர்வதன் அர்த்தம் என்ன என்பதை நீங்கள் கற்றுக் கொள்வீர்கள்.

## அத்தியாயம் 4

### ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் முதிர்ச்சி

எனக்கு பதின்மூன்று வயதாக இருந்தபோது, என் நண்பர் ஒருவர் தனது பேஸ்பால் அணியில் சேர என்னை வற்புறுத்தினார். எந்தவொரு ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டிலும் நான் ஒருபோதும் பங்கேற்றதில்லை, பள்ளி விளையாட்டு மைதானத்தில் அவ்வப்போது நடப்பதுதான் எனது ஒரே பேஸ்பால் அனுபவம். பயிற்சியின் முதல் நாளில், நான் இரண்டு விஷயங்களைக் கற்றுக்கொண்டேன்: நான் பேஸ்பால் விளையாட்டில் மோசமாக இருந்தேன், அணியில் உள்ள அனைவரும் மிகவும் நன்றாக விளையாடினர்.

அடுத்த சில வார பயிற்சிக்கு பின்பு, நான் நின்றுவிட விரும்பினேன். எனக்கு உடல் திறன் இருந்தது ஆனால் விளையாட்டுக்கான வளர்ச்சித் திறன்கள் எதுவும் இல்லை. நான் தொடர்ந்து அதற்கு சரி வர மாட்டேன் என்று உணர்ந்தேன், ஆனால் என் நண்பர் என்னை அங்கேயே தொடர்ந்திட ஊக்குவித்தார். காலப்போக்கில், நான் பந்தைப் பிடிக்கவும், களமிறக்கவும், மேலும் எளிதாக அடிக்கவும் ஆரம்பித்தேன். அந்த விளையாட்டு காலங்களின் முடிவில் நன்றாக "மேம்பட்டவன்" ஆக சராசரி அதிகபட்ச பேட்டிங் செய்தவன் என்ற முறையில் ஒரு பரிசு கோப்பையும் பெற்றேன்.

ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்வதும் தேவனோடு கூட கீழ்ப்படிந்து நடப்பதும் கற்றுக் கொள்ளக் கூடிய ஒரு ஒழுக்க முறை தான். ஆவிக்குரிய வாழ்க்கையில் முதிர்ச்சி அடைவது எப்படி என்று அறிந்து கொள்ளாமல் அல்லது அதன் செயல்முறையை அலட்சியப்படுத்தி ஒரு கிறிஸ்தவன் ஒருக்காலும் முழுமையான மறுரூமாக்கப்படுதல் மற்றும் அதன் நோக்கம் ஆகிய தேவனுடைய விருப்பத்தை அனுபவிக்கவே முடியாது.

**பாடம் 1 –**

**பவுலின் எடுத்துக்காட்டு**

ஒரு புதிய விசுவாசியை கிறிஸ்துவில் ஒரு குழந்தை என்று வேதம் விவரிக்கிறது. ஒரு ஆரோக்கியமான குழந்தை முதிர்வயதை அடைவதற்கு முன்னர் வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களைக் கடந்து வருவது போல, குழந்தை கிறிஸ்தவரும் ஆவிக்குரிய முதிர்ச்சிக்கான பாதையில் சீரான முன்னேறத்தை பெற வேண்டும். ஒரு குழந்தை வளர்ந்து ஆரோக்கியமான முதிர்ச்சியடைந்த ஆளாக மாறவில்லை என்றால் அது மிகவும் துயரம் நிறைந்த காரியமாக இருக்கும், அதுபோல ஒரு கிறிஸ்தவரும் ஆவிக்குரிய வாழ்க்கையில் முழுமையான முதிர்ச்சி அடையாமல் இருப்பதும் வருத்தத்துக்குரியதே. நமது பரலோகத் தகப்பன் நாம் அனைவரும் விசுவாசத்திலே நன்கு வளர்ந்த ஆண்களாகவும் பெண்களாகவும் இருக்க விரும்புகிறார்.

ஆவிக்குரிய முதிர்ச்சியை எவ்வாறு முயற்சிப்பது என்பதற்கு அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது.

### பவுலின் இரட்சிப்பு

பவுல் தனது இளமை பருவத்திலிருந்தே ஒரு பக்தியுள்ள மனிதராக இருந்தார், ஆனால் அவர் தன் வாழ்க்கையின் அனேக நாட்களுக்குப் பிற்பாடு தான் கிறிஸ்துவின் விசுவாசத்திற்கு வந்தார். பின்வரும் வசனங்களிலிருந்து பவுலின் வாழ்க்கையைப் பற்றி நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

அப்போஸ்தலர் 22: 3

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

அப்போஸ்தலர் 23: 6

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

அப்போஸ்தலர் 26: 4–5

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

கலாத்தியர் 1:14

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

பிலிப்பியர் 3: 4–6

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

பவுல் தனது யூத மார்க்கத்தின் மீதும், நியாயப் பிரமாணங்கள் மீதும் கொண்டுள்ள வைராக்கியம் கிறிஸ்தவ திருச்சபைகள் ஐ உபத்திரவப் படுத்துவதன் மூலம் தெளிவாக தெரிகிறது. கிறிஸ்துவின் சீஷர்களைத் துன்புறுத்துவது தான் தேவனுக்கு செய்கிற சேவை என்று அவர் நம்பினார். அதை அவர் தெளிவான மனசாட்சியுடனே செய்தார். விசுவாசிகளுக்கு எதிரான பவுலின்

நடவடிக்கைகளை பின்வரும் வேத வசனங்களைக் கொண்டு சுருக்கமாக விவரிக்கவும் (குறிப்பு: பவுல் கிறிஸ்துவுக்கு மாறுவதற்கு முன்பு, அவர் சவுல் என்று அழைக்கப்பட்டார்.)

அப்போஸ்தலர் 7: 54-60; 8: 1–3; கலாத்தியர் 1:13

அப்போஸ்தலர் 22: 4; 22:19; 26: 9–11

ஆரம்பகால திருச்சபையை அழிக்க முயற்சித்ததன் பின்னணியில் பவுல் ஒரு முக்கிய சக்தியாக இருந்தார், கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதில் அதற்கான யுக்தியாக இருந்தார். இது நிமித்தமாக அவர் கிறிஸ்தவத்திற்கு மாறியது சபை வரலாற்றில் மிகப்பெரிய ஒரு முக்கியமான நிகழ்வு என்று அநேகர் ஒப்புக்கொள்கிறார்கள். அப்போஸ்தலர் 9: 1–22 ல் உள்ள தொகுப்பைப் படியுங்கள். உங்கள் சொந்த வார்த்தைகளில் கதையை சுருக்கமாக மீண்டும் எழுதவும்.

பவுல் முதலாவது ஆதி திருச்சபைக்கு ஒரு கொடுங்கோலனாக வாழ்ந்தார், ஆனால் இயேசு கிறிஸ்துவோடு நடந்த சந்திப்பிற்குப் பிறகு அவருடைய வாழ்க்கை முற்றிலும் மறுரூபம்மாக்கப்பட்டது. 1 தீமோத்தேயு 1: 12-16-ல் அவருடைய சாட்சியைப் படித்து சில முக்கிய விஷயங்களை எழுதுங்கள்.

**பவுலின் ஞானஸ்நானம்**

பவுல் பார்வை பெற்ற உடனேயே ஞானஸ்நானம் பெற்றதாக அப்போஸ்தலர் 9:18 கூறுகிறது. ஞானஸ்நானம் என்பது இயேசு திருச்சபைக்காக நிறுவிய மூன்று கட்டளைகளில் ஒன்றாகும். மத்தேயு 28: 19-20-ஐ வாசிக்கவும். இயேசு கொடுத்த மூன்று கட்டளைகள்.

1. ______________________________

2. ______________________________

3. ______________________________

இந்த அறிவுரை தான் பிரதான கட்டளை என்று அழைக்கப்படுகிறது மேலும் இதை செயலாற்றுவது கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாய் இருக்கிற ஒவ்வொருவரின் கடமையாக இருக்கிறது. சீஷனாகிய அனனியா கர்த்தருடைய இந்த அறிவுரைகளுக்கு பதில் தரும் வண்ணமாக பவுலை சீஷனாக ஞானஸ்நானம் கொடுத்து அவருடைய விசுவாசத்தில் முதிர்ச்சி அடைய கற்றுக்கொடுத்தது மூலம் இந்தப் பிரதான கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்.

ஞானஸ்நானம் என்பது சரீரப் பிரகாரமானது, அல்லது இருதயத்தில் என்ன நடந்தது என்பதை அறிவிக்கிற ஒரு வெளியரங்கமான அறிவிப்பு தண்ணீருக்கு அடியில் மூழ்கும் செயல் கிறிஸ்து இல்லாத பழைய வாழ்க்கையின் மரணத்தைக் குறிக்கிறது, மேலும் தண்ணீரிலிருந்து வெளியேறுவது சுத்தமாக கழுவி, கிறிஸ்துவுடன் ஒரு புதிய வாழ்க்கையில் பிறந்ததைக் குறிக்கிறது. கிறிஸ்துவின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஒரு கிறிஸ்தவர் ஞானஸ்நானம் எடுக்கத் தேர்ந்தெடுக்கும்போது, இயேசு அவர்களின் பாவங்களுக்காக மரித்தார், கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்ற ஒரு பொது அறிவிப்பை வெளியிடுகிறோம். ஞானஸ்நானம் என்பது இரட்சிப்புக்கு அவசியமான செயல் அல்ல என்பதை புரிந்துக்கொள்வது அவசியம், ஆனால் அது ஏற்கனவே நடந்த இரட்சிப்புக்கு பதிலளிக்கும் கீழ்ப்படிதலின் செயலாகும். ஞானஸ்நானம் முக்கியமானது, ஏனென்றால் அதை செய்யும்படிக்கு இயேசு கட்டளையிட்டிருக்கிறார்.

> ***அடிப்படை சத்தியம்***
>
> ஞானஸ்நானம் என்பது சரீரப் பிரகாரமானது, அல்லது இருதயத்தில் என்ன நடந்தது என்பதை அறிவிக்கிற ஒரு வெளியரங்கமான அறிவிப்பு.
>
> நம்முடைய சொந்த குணங்களின் காரணமாக தேவன் தமது குழந்தைகளாக நம்மைத் தமது குடும்பத்தில் தத்தெடுக்க விரும்பவில்லை.

**பவுலின் ஊழியம்**

பவுல் ஒரு அப்போஸ்தலனாக மாறினார், தேவனுடைய கையில் ஒரு கருவியாக இருந்தார். அவர் மிகுந்த வைராக்கியத்தோடு பெரிய காரியங்களை நிறைவேற்றும்படிக்கு பரிசுத்த ஆவியினாலே அதிகாரத்துடன் அனுப்பப்பட்டார்.

- மிஷனரியாக திருச்சபையை ஸ்தாபிக்கும் படிக்கு கர்த்தர் பவுலை இதுவரையில் சுவிசேஷத்தை கேள்விப்படாத மூன்று முக்கியமான பகுதிகளுக்கு மிஷினரி பயணம் செல்லும் படிக்கு அனுப்பினார். அவர் கிறிஸ்துவை இரட்சகராக அறிவித்து, இந்த பிராந்தியங்களில் பல திருச்சபைகளை ஸ்தாபித்தார். பவுலின் மிஷனரி பயணங்கள் அப்போஸ்தலர் 13–21 இல் பதிவு செய்யப்பட்டுள்ளன.

> *அப்போஸ்தலன் - ஒரு தூதர்;* ஒரு குறிப்பிட்ட பணிக்காக அனுப்பப்பட்டவன், அவன் அனுப்பப்பட்டவரிடத்திலிருந்து அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளுகிறான்.

- பிரசங்கியாராக போதகராக முன்னறிவிக்கப்பட்டபடி, பவுல் கிறிஸ்துவை புறஜாதியினருக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் பிரசங்கித்தார். மற்றவர்கள் அவரை கேலி செய்து துன்புறுத்தினாலும், பலர் கிறிஸ்துவை விசுவாசித்தார்கள். பவுலின் பிரசங்கங்களின் எடுத்துக்காட்டுகள் அப்போஸ்தலர் 13: 16–41 மற்றும் அப்போஸ்தலர் 17: 22-34 ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- எழுத்தாளர் புதிய ஏற்பாட்டில் உள்ள இருபத்தேழு புத்தகங்களில், பவுல் பதின்மூன்று, அல்லது அனேகமாக பதினான்கு புத்தகங்களை எழுதியுள்ளார். இந்த புத்தகங்கள் அவரது மிஷனரி பயணங்களில் அவர் நிறுவிய திருச்சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்கள் ஆகும், இவைகள் நிருபங்கள் என்று அறியப்படுகிறது.

ஒரு புகழ்பெற்ற மதத் தலைவர், மற்றும் கிறிஸ்தவர்களை கொடுமைப்படுத்தினவர் என்ற நிலையிலிருந்து, சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு பணிவான ஊழியக்காரன், என்ற பவுலினுடைய வாழ்க்கை அனேக விசுவாசிகளுக்கு ஒரு முன்னுதாரணமாய் இருக்கிறது.

சிலர் வாழ்க்கையில் இத்தகைய உச்ச நிலையை அடைகின்றனர் என்றாலும், அனைத்து கிறிஸ்தவர்களும் பவுலைப்போலவே இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வந்தவர்களே, தேவனுடைய சத்தியத்தை இறுமாப்பாய் மறுதலிக்கிறவர்கள் பின்பு கிருபையினாலே தாழ்மையோடு இரட்சிப்பைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

எபேசியர் 2: 10-ல் அனைத்து விசுவாசிகளுக்கும் தேவன் என்ன அற்புதமான வாக்குறுதியைக் கொடுக்கிறார்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

உங்கள் வாழ்க்கையில் தேவனுக்கு ஒரு திட்டமும் நோக்கமும் இருப்பதாக நீங்கள் நம்புகிறீர்களா?

***அடிப்படை சத்தியம்***

நமது கடந்தகால தவறு அல்லது தோல்விகளைப் பொருட்படுத்தாமல், ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் தேவனின் அழைப்பும் நோக்கமும் என்னவென்றால், அவருடன் ஒரு உறவைக் கொண்டிருப்பதும், மற்றும் மற்றவர்களுக்கு சேவை செய்வதன் மூலம் அவருக்கு சேவை செய்வதுமாகும்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

___________________________________________________________

## பாடம்- 2

## சுத்திகரித்தல்

கிறிஸ்தவர்களின் முதிர்ச்சிக்கான செயல்முறைகளுக்கான வேதாகமத்தின் சொல் தான் சுத்திகரித்தல். இந்த வார்த்தையை பரிசுத்தமாக்கப்படுவதற்கான செயல்முறை என்றும் கூறலாம். பரிசுத்தம் என்பது ஒரு உணர்வு அல்லது அனுபவமோ அல்ல, மாறாக விசுவாசிகள் தங்கள் அன்றாட வாழ்க்கையில், தேவ குமாரனுடைய சுபாவங்களில் வளர்ந்து அதையே தங்கள் வாழ்க்கை முறையாக வாழ்ந்து காட்டுவதாகும்.

> *சுத்திகரித்தல்*-சுத்திகரிக்கப்பட்ட நிலை; தேவனின் கிருபையின் செயல்முறை, இதன் மூலம் மனிதர்களின் விருப்பங்கள் பாவத்திலிருந்து விலகி, தேவனுடைய உயர்ந்த அன்பு மற்றும் நீதிக்கு உயர்த்தப்படுகின்றன.

1 பேதுரு 1: 14-16-ஐ வாசித்து கீழே உள்ள வசனங்களை எழுதுங்கள்.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

பரிசுத்தமாக்கப்படுதலின் செயல்முறையானது மூன்று தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளது: அவைகள் தொடக்கநிலை, வளர்ச்சியுறும் நிலை, மற்றும் நிறைவான நிலை,

### தொடக்கநிலை பரிசுத்தமாக்கப்படுதல்

தொடக்கநிலை பரிசுத்தமாக்கப்படுதல், என்பது ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் தேவன் அருளும் ஒரு பதவியாகும். இந்த நிலைப்பாட்டுக்கும் நடத்தைக்கும் சம்பந்தம் இல்லை. அனைத்து விசுவாசிகளும் தங்கள் மனமாற்றத்தின் போது இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, மன்னிக்கப்பட்டு, நியாயம் தீர்க்கப்பட்டு, நீதிமான்களாக்கப்படுகிறார்கள். பரிசுத்த வேதம் கிறிஸ்தவர்களை பரிசுத்தவான்கள் என்று அழைக்கிறது, அது அவர்கள் குற்றமற்றவர்களோ, அல்லது பாவமற்றவர்களோ, என்று பொருளாகாது, ஏனென்றால், கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து அவர்களுடைய பாவங்களை தம் மீது சுமந்து கொண்டு, தேவனுக்கு முன்பாக அவர்களை குற்றமற்றவர்களாக நிலை நிறுத்தினார்.

நீங்கள் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டால் நீங்களும் சுத்திகரிக்கப்படுவீர்கள்.

### வளர்ச்சியுறும் நிலை பரிசுத்தமாக்கப்படுதல்

வளர்ச்சியுறும் நிலை பரிசுத்தமாக்கப்படுதல், என்பது முழுவதுமாக கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் வல்லமை பெற்று, அதிலேயே நிலைத்திருப்பதற்கு, தினந்தோறும் அவர்கள் எடுக்கும் தீர்மானத்தைச் சார்ந்தே அமைகிறது. இந்தத் தொடர்ச்சியான செயல்முறைக்கு கிறிஸ்தவர்களின் தொடர்ச்சியான பங்களிப்பு தேவைப்படுகிறது. அவர்கள் தானாகவே முன்வந்து, தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, அவருடைய சித்தத்தை தங்கள் வாழ்க்கையில் விரும்பி, அவர் அளிக்கும் பயிற்சி முறைக்கு முழுவதுமாக ஒத்துழைக்க வேண்டும்.

ஒவ்வொரு முறையும், நாம் உளப்பூர்வமாக நம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, அல்லது அர்ப்பணித்து, நம் நினைவுகளை மேலானவைகளுக்கு நேராக நிலைநிறுத்தி, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் சஞ்சரித்து, தேவனுக்காக நம்மை நாமே பிரித்தெடுத்து வாழ்வதுதான் வளர்ச்சியுறும் நிலை பரிசுத்தமாகுதல் ஆகும். இந்த நொடிக்கு, நொடியான வெற்றி தொடர்ந்து நம் வாழ்க்கையில் பெருக, நாம் நம்முடைய வாழ்வின் இயலாமையையும் தேவனுடைய முழுமையான வல்லமை நமக்குள் இருக்கிறது என்பதையும் அறிந்து இருக்க வேண்டும்.

**நிறைவான நிலை சுத்தமாக்கப்படுதல்**

இந்த நிறைவான பரிசுத்தமாகுதல் என்ற நிலை, இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவர் இருக்கும் வண்ணமாகவே விசுவாசிகளாகிய நாமும் இருப்போம் என்ற நிலையில் ஏற்படுவதாகும். கிறிஸ்தவர்கள் இந்த பூமிக்குரிய உடலில் இருக்கும் வரை, அவர்கள் பாவத்திற்கு ஆளாகக்கூடிய இயல்பு உடையவராகவே இருக்கிறார்கள்; இருப்பினும், அவர்கள் முழுவதுமாக கிறிஸ்து இருக்கும் வண்ணமாக மாறும்போது, அவர்கள் இவ்வாழ்க்கையை விட்டு கடந்து தேவ சமூகத்தில் காணப்படுகிறவர்களாக இருக்கிறார்கள்.

**பரிசுத்தமாக்கப்படுதலின் எடுத்துக்காட்டு**

ஒரு நல்ல கைதேர்ந்த, பித்தளை கொல்லன் ஒரு நகரத்தின் கடைக்கோடியில் குப்பை கூளங்களில் சோதனை செய்தபோது திடீரென்று அவருடைய கண்களில் ஒரு பழைய பொலிவிழந்த பித்தளை பானை தென்பட்டது, அது அசுத்தமாகவும், கறை படிந்தும், அடித்து நொறுக்கப்பட்டதுமாக இருந்தது, ஒரு பொருளின் மதிப்பை கண்கள் அனுபவத்தில் அறிந்து கொள்கின்றது. அவர் குப்பை வழியாக சென்று ஒரு பழைய பானயை கண்டு, அதை தனியாக பிரித்து வைக்கிறார். இவ்வாறாக அவர் அந்த பாத்திரத்தை பரிசுத்தப்படுத்துகிறார். இதுதான் ஆரம்பநிலை பரிசுத்தமாகுதலின் செயல்முறை. நிச்சயமாக அவர் பழைய பானையை சுத்தப்படுத்தவும், மறுவடிவமைக்கவும், மெருகூட்டவும், அது தன்னுடைய மேசையில் ஒரு அழகான பொருளாக மாறும் வரை, பல மணிநேரம் செலவிட்டிருக்க வேண்டும். இந்த செயல்முறைகள் தான் பரிசுத்தமாக்குதலின் இரண்டாம் நிலையாக இருக்கிறது.

பரிசுத்தமாக்குதலுக்கான விளக்கத்தை உங்கள் சொந்த வார்த்தைகளில் எழுதுங்கள்.

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

____________________________________________________________________________________________

இயேசுகிறிஸ்து ஒவ்வொருவருடைய வாழ்க்கையும், மதிப்பு நிறைந்த ஒன்றாகவே பார்க்கிறார். அந்த அளவிற்கு மனித குலத்தை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கான இறுதி விலையை அவர் செலுத்தி இருக்கிறார். யாரெல்லாம் அவருடைய தியாகத்திற்கு, இரட்சிப்புக்கு ஏற்ற விசுவாசத்தோடு கூட பதிலளிக்கிறார்களோ, அவர்கள் தங்களுக்கான வாழ்க்கையை உலகத்தை விட்டு பிரித்துக் கொள்கிறார்கள். பின்னர் அவர் அவர்கள் ஒவ்வொருவரையும் சுத்தப்படுத்தவும், மறு வடிவமைக்கவும் மெருகூட்டவும், செய்து தம்முடைய மகிமைக்கான அழகான பொருளாக மாற்றுகிறார்.

இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும், தொடங்கிய வேலையை முடிக்க உண்மை உள்ளவராக இருக்கிறார். இதில் நம்முடைய பங்கு என்னவென்றால், தினந்தோறும் நம்மை அவருக்கு அடிபணிய விட்டுக் கொடுப்பது தான். நாம் அவரிலும் அவருடைய வார்த்தை நம்மிலும் நிலைத்து இருந்தால், நாம் அவருடைய சித்தத்திற்கு உண்மையாக ஒப்புக்கொடுத்து, அவருடைய பரிசுத்தமாக்கும் கரம் நம்முடைய வாழ்க்கையில் இருப்பதை உணர்ந்து அவர் நமக்காக வைத்திருக்கும் யாவற்றையும் அனுபவிப்போம்.

> ***அடிப்படை சத்தியம்***
>
> நாம் கர்த்தரை ஆண்டவரும் இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது தேவன் நம்மை பரிசுத்தப்படுத்துகிறார். நாம் அன்புடன் கீழ்ப்படிந்து அவரோடு கூட சஞ்சரிக்கும்போது தொடர்ந்து நம்மை சுத்தப்படுத்துகிறார். ஒருநாள் அவர் நம்மை தம்முடைய சமூகத்துக்கு அழைப்பார் அந்த க்ஷணத்தில் இந்த பரிசுத்தபடுத்தும் செயல்முறை நிறைவடையும்.

பரிசுத்தப்படுத்தும் செயல்முறையில், கர்த்தர் முழுவதும் ஒப்புக்கொடுத்து செயல்படுவதை பவுல் பிலிப்பியருக்கு எழுதும்போது விவரிக்கிறார். பிலிப்பியர் 1: 6 ஐப் படித்து மீண்டும் அந்த கீழே உள்ள வசனங்களை எழுதுங்கள்

________________________________________________

________________________________________________

________________________________

**பாடம் 3**

**பவுலின் பரிசுத்தமாக்குதல்**

இயேசு கிறிஸ்து பவுலை இரட்சித்து, ஊழியத்திற்காக பிரித்தெடுத்தார். அவருடைய இருதயத்தின் விருப்பம் என்னவென்றால் தனது இரட்சகரோடு ஐக்கியம் கொண்டு, ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்து,மென்மேலும் கிறிஸ்துவைப் போல மாற வேண்டும் என்பதுதான்.

பிலிப்பியர் 3 ஐப் படியுங்கள்.
பவுல் ஏன் எல்லாவற்றையும் இழக்க விரும்பினார் (7-8 வசனங்கள்)?

___
___
___

பவுலின் இருதயத்தின் ஆசை என்ன (வசனம் 10)?

___
___
___

பவுல் தேவனைப் பற்றி அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டுவதை விட தேவனோடு நெருங்கி இருப்பதையே விரும்பினார். ஒரு நபரை எவ்வாறு நாம் நெருக்கமாக அறிய முடியும்?

*தனிப்பட்ட நெருக்கமான உறவு* அல்லது நட்பு; பழக்கமான; நெருக்கமாக ஐக்கியம்; உள்ளார்ந்த சுயத்தைப் பற்றியது.

___
___
___

யாத்திராகமம் 33: 13 ல் மோசே தேவனிடம் என்ன கேட்டார்?

___
___
___

மோசே பவுலின் இருதயத்தை பகிர்ந்து கொள்ளுகிறார். அவர் தேவனையும் அவருடைய வழியையும் பற்றி ஆழமான அறிவை பெற்றுக் கொள்ள விரும்புகிறார். நீங்கள் தேவனை இன்னும் நெருக்கமாக அறிந்து கொள்ள முடியும் என்று நினைக்கிறீர்களா?

___
___
___

பிலிப்பியர் 3: 12-14-ல் பவுல் தான் இன்னும் அடையவேண்டிய முதிர்ச்சியை அடையவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறார். அவர் தன்னை ஓட்டப்பந்தயத்தில் ஓடும் ஒரு வீரனோடு ஒப்பிடுகிறார். ஆவிக்குரிய வளர்ச்சிக்கான, முயற்சியை விளக்குவதற்கு அவர் மூன்று விளக்க சொற்றொடர்களை பயன்படுத்துகிறார்.

*அழுத்தம் தரல்*- முயற்சியை பயன்படுத்துவது; பாடுபட; ஒருவரின் வழியை முன்னோக்கி அல்லது கட்டாயப்படுத்த அல்லது தள்ள.

பிடித்துக்கொள்- கைப்பற்ற, பிடிக்க, பற்றிக்கொள்ள.

முன்னானவைகளை நாடி- எதையாவது பின்தொடர; முயற்சி செய்ய.

- "தொடர்தல்" (அர்ப்பணித்தல்)
- "பிடித்துக்கொள்ளும்படிக்கு" (சகித்துக் கொள்ளுதல்)
- முன்னானவைகளை நாடி (தனிப்பட்ட முயற்சி)

கிறிஸ்தவர்களை ஒரு விளையாட்டு வீரருடன் பவுல் ஒப்பிடுவது ஆவிக்குரிய முதிர்ச்சி என்பது அர்ப்பணிப்பு மற்றும் சிட்சையின் விளைவு என்பதை வெளிப்படுத்துகிறது. மனந்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுகிற அனைவருக்கும் இரட்சிப்பு இலவசமாய் கிடைக்கிறது; ஆனபோதிலும் முதிர்ச்சி என்பது தினந்தோறும் நாம் எடுக்கும் அர்ப்பணிப்பு மற்றும் முயற்சியைப் பொருத்து அமைகிறது.

***அடிப்படை சத்தியம்***
ஆவிக்னுரிய வளர்ச்சிக்கு தேவை, அர்ப்பணிப்பு, சகிப்புத்தன்மை, மற்றும் தனிப்பட்ட முயற்சி.

## பாடம் 4

### ஆவிக்குரிய வளர்ச்சிக்கு இடையூறுகள்

ஓட்டப்பந்தய வீரர்கள் பந்தயத்தை பலமாக முடிக்க நியமிக்கப்பட்ட கோட்டிலிருந்து எந்தவிதமான இடையூறுகளையும் அனுமதிக்ககூடாது. தனக்குப்பின் வருபவரையோ, தன் மீதோ கவனம் செலுத்தினால், நியமிக்கப்பட்டக் கோட்டை அடைவதில் நமது திறமையை தடைசெய்யக்கூடியதாய் இருக்கும்.

பிலிப்பியர் 3-ல், ஆவிக்குரிய வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் மூன்று ஆபத்துக்களை பவுல் குறிப்பிடுகிறார்.

*இடையூறு-* பின்னால் அல்லது பின்னால் வைக்க; தொடங்குவதை அல்லது முன்னோக்கி நகர்த்துவதைத் தடுக்க

### பின்னிட்டுப்பார்ப்பதின் ஆபத்து

பிலிப்பியர் 3: 13-ன் படி, பவுல் செய்த இரண்டு காரியங்கள் என்ன?

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

இந்த அத்தியாயத்தில் பவுலைப் பற்றி நீங்கள் கற்றுக்கொண்டவற்றின் அடிப்படையில், அவருடைய கடந்த கால நிகழ்வுகளில் அவர் மறக்கவேண்டுமென்று நீங்கள் நினைக்கும் காரியம் என்ன?

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

மறக்க வேண்டும், என்பது, நினைக்க மறந்து விடுவது என்ற அர்த்தத்தில் அல்ல, மாறாக அதை நமக்கு பின்னாக தூக்கி எறிந்து விடுவது. நம்முடைய எதிர்காலத்தையும், நிகழ்காலத்தையும் சீரழிக்கும், நமது கடந்த கால பாவங்களையும் மோசமான நினைவுகளையும் ஆளுகை செய்ய விடக்கூடாது. நாம் அதை பின்னாக தூக்கி போட்டு விட்டு,தேவக்கிருபையிலும், மன்னிப்பிலும், வல்லமையிலும் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

1 கொரிந்தியர் 15: 9-10-ல், பவுல் தன்னை எப்படி விவரிக்கிறார், கிறிஸ்து அவருக்காக என்ன செய்தார்?

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

பவுல் தேவ கிருபையின் மீது கவனத்தை வைக்காமல், தன் பழைய பாவத்தையும், தோல்வியின் மீதும் கவனம் செலுத்தி இருந்தால், பவுலின் கர்த்தருடைய ஊழியம் பாதிக்கப்பட்டிருக்கும் என்று நீங்கள் எவ்வாறு நினைக்கிறீர்கள்?

______________________________________________________

______________________________________________________

______________________________________________________

தனது கடந்த காலத்தைப் பற்றி வெட்கப்பட்ட போதிலும், தேவனுக்கு முன்பாக மனந்திரும்பி, தொடர்ந்து பிதாவின் கிருபையில் நடந்து, கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய கிரியையின் மூலம் விடுதலை உண்டு என்று அறிந்திருந்தார். இயேசுவின் நீதியை அறிந்து, பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடினார்.

பந்தயத்தில் திறம்பட ஓடுவதற்கு உங்கள் வாழ்க்கையில் தடையாக இருப்பது என்ன?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

தற்போதைய சூழ்நிலையில் உங்களுக்கு வெட்கத்தை ஏற்படுத்துவதற்காக அல்லது அத்தகைய நினைவுகளை வெளிப்படுத்துவதற்காக, இந்த அத்தியாயத்தை ஆண்டவர் பயன்படுத்தி இருக்கலாம். இது ஏதோ ஒரு பாவம் மற்றவர்கள் உங்களுக்கோ, அல்லது நீங்கள் மற்றவர்களுக்கோ செய்திருக்கலாம். இவ்விரண்டும் உங்களை தேவனுடைய அன்பிற்கும் மதிப்பிற்கும் அபாத்திரனாக உணர வைத்து வெட்கம் என்னும் சிறையிலே வாழ்வதற்கு காரணமாக இருந்திருக்கும். உங்கள் பரலோக பிதா வெட்கத்தில் இருந்து விடுதலையை கொடுக்கிறவராயிருக்கிறார். அவர் உங்களிடத்தில் கேட்பதெல்லாம் உங்கள் கடந்த காலங்களை அவரிடத்தில் ஒப்புக் கொடுத்துவிட்டு, உங்கள் வாழ்க்கையில் காணப்படும் வெட்கத்தையும், பாவத்தையும் உதறித் தள்ளிவிட்டு, அவருடைய ஆலோசனையும் சுகத்தையும் பெற்று, அதைத்தொடர்ந்து பற்றிக் கொள்ளும்போது உங்கள் கடந்தகால கட்டுகளில் இருந்து விடுதலை பெறுவீர்கள்.

இந்தக் காரியங்களை உங்கள் மீது பொறுப்பாளியாக இருக்கக்கூடிய, நண்பர்களாகிய உங்கள் வழிகாட்டிகளுக்கு, அல்லது உங்கள் ஜெப நண்பர்களுக்கு, பகிர்ந்து கொள்ளுங்கள். இந்த சவாலுக்கு நீங்கள் எவ்விதம் பதில் அளிப்பீர்கள்?

## பாடம் 5

## மற்றவர்கள் மீது கவனம் செலுத்துவதின் ஆபத்து

பிலிப்பியர் 3: 2, 18-19-ல் பவுல் தனது வாழ்க்கையில் சிலரை எவ்வாறு விவரித்தார்?

நாம் கற்றுக்கொண்டபடி, பவுல் தனது முந்தைய வாழ்க்கையில் சிலுவைக்கு எதிரியாக இருந்தார்.

அப்போஸ்தலர் 7: 54-60 மீண்டும் படித்து பவுல் கண்ட காட்சியை விவரிக்கவும்.

தன்னைத் துன்புறுத்தியவர்களுக்கு ஸ்தேவான் எவ்வாறு பதிலளித்தார்?

2 தீமோத்தேயு 4: 14–17 -ஐ வாசியுங்கள். தனக்குத் தீங்கு செய்த மற்றும் கைவிட்டவர்களுக்கு பவுல் எவ்வாறு பதிலளித்தார் என்பதை விவரிக்கவும்.

2 கொரிந்தியர் 11: 23–33-ஐ வாசியுங்கள். பவுலுக்கு எதிராக செய்யப்பட்ட மற்ற குற்றங்களை சுருக்கமாகக் கூறுங்கள்.

பவுல் தனது ஊழியத்தின் போது பல துன்பங்களைத் தாங்கினார், ஆனாலும் அவர் தன்னைத் தாக்கியவர்களை மன்னித்தார். தன்னைக் கல்லெறிந்தவர்களை ஸ்தேவான் மன்னிப்பதைக் கண்டு அவர் பெரிதும் பாதிக்கப்பட்டார், நான் அதை கற்பனை செய்கிறேன். குறிப்பாக ஸ்தேவான் துன்புறுத்தலில் அவரும் ஒரு பங்காளியாக இருந்தார், என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

தம்முடைய சீஷர்களுக்கு ஜெபம் செய்யக் கற்றுக் கொடுத்தபோது, மன்னிப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி இயேசு அவர்களுக்கு அறிவுறுத்தினார். மத்தேயு 6: 9-15-ல் நீங்கள் கற்றுக்கொண்டவற்றைச் சுருக்கமாகக் கூறுங்கள்.

மாற்கு 11: 25-26 இலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

மற்றொருவருக்கு எதிரான குற்றம், கடன்பட்டிருப்பதைப் போன்றது என்று பரிசுத்த வேதம் கற்பிக்கிறது. புண்படுத்தப்பட்டவர் கடனை மன்னிக்கலாம், அல்லது பணம் கோரலாம். இந்த மன்னிப்பு குற்றம் செய்தவரின் தகுதியையோ, விருப்பத்தையோ சார்ந்தது அல்ல. இருப்பினும், மன்னிப்பை தேர்வு செய்யாததன் விளைவு கசப்பு. இது இருதயத்தை விஷமாக மாற்றுகிறது. ஒரு பாவியாக நாம் தேவனுக்கு அடைக்கமுடியாத அளவு பெரியதாக கடன் பட்டிருக்கிறோம். கிறிஸ்துவை நம் இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது, நம் கடன்கள் கிருபையாக மன்னிக்கப்படுகிறது. அந்த கடனுக்கான அபராதத்தை கட்டும் பொறுப்பு கிறிஸ்துவின் மேல் வந்தது. இவ்வளவு பெரிய பாவத்தை அவர் நமக்கு மன்னித்திருக்க, நாம் எப்படி நம்மை காயப்படுத்தியவர்களை மன்னியாமல் இருக்க முடியும்?

தேவன் தினந்தோறும் தொடர்ந்து நம்மை மன்னிப்பதோடு நம்மை துன்பப் படுத்துகிறவர்களை மன்னிக்க வேண்டுமென்று கட்டளையிடுகிறார். கீழே லூக்கா 6:35 ஐ எழுதுங்கள்.

**பாடம் 6**

**நம்மீது கவனம் செலுத்துவதன் ஆபத்து**

பிலிப்பியர்களுக்கு அவர் எழுதிய நிருபத்தில், தன் சொந்த சாதனைகள் மீது நம்பிக்கை வைப்பதற்கான சாத்தியம் இருப்பதாக பவுல் ஒப்புக்கொண்டார். பிலிப்பியர் 3: 3–6 ஐ வாசித்து, பவுல் என்ன வெளிப்படுத்தியிருந்தார் என்று நீங்கள் நம்புகிறீர்களோ அதை எழுதுங்கள்.

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

ஒரு பக்தியுள்ள யூதராக, பவுல் அவர் ஒரு நல்லவர், நீதிமான் என்று நம்பினார், பிலிப்பியர் 3: 6 ல், அவர் தனது பழைய வாழ்க்கை மற்றும் மதத்தின் அடிப்படையில் தான் ஒரு குற்றமற்றவர் என்று கூறினார். அவர் கிறிஸ்துவை பின்பற்றுகிறவராய் மாறியபோது, அவர் தான் விழுந்துபோன நிலையை உணர்ந்து, தன்மீது அல்லது தனது நற்பண்புகள் மீது வைக்கப்படும் பற்றுறுதியை நிறுத்திக்கொண்டார்.

*சுய- நம்பிக்கை* - ஒருவரின் சொந்த வலிமை அல்லது சக்திகளின் நம்பிக்கை; தன்னம்பிக்கை.

*பெருமை* - ஒருவரின் சொந்த மதிப்பு மற்றும் கீழேயுள்ள அல்லது தகுதியற்றவற்றின் வெறுப்பு உணர்வு; நியாயமற்ற மேன்மையின் கர்வம்.

தன்னம்பிக்கைக்கு இன்னொரு வார்த்தை *பெருமையாகும்.*

நீதிமொழிகள் 16:18 ன் படி பெருமைக்கு எப்போதும் கிடைக்கும் பலன் என்?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

சுய-கவனம் செலுத்துவதில் பல பாதிப்புகள் உள்ளன: சுய-மையம், சுய -சேவை, சுய-பெருமை, சுய- வஞ்சகம், சுய -இன்பம், சுய-தேடல், சுய-சார்பு, சுயநலம் மற்றும் இறுதியில் சுய வழிபாடு.

யாக்கோபு 3: 13-16 -ஐ வாசியுங்கள். இந்த வசனங்களிலிருந்து சுயநல விருப்பம் பற்றி நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

லூக்கா 9: 23-24 படி, ஒவ்வொரு விசுவாசியும் என்ன செய்ய வேண்டும் என்று இயேசு சொன்னார்?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

சுயத்தை மறுப்பது என்றால் என்ன என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

***அடிப்படை சத்தியம்***

ஆவிக்குரிய முன்னேற்றம் அடைய, கிறிஸ்துவுடனான நெருக்கம் மற்றும் ஆவி முதிர்ச்சியின் குறிக்கோளில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

______________________________________________________________________

______________________________________________________________________

பாடம் 7

## பாவத்தின் பாரம்

ஒரு ஓட்டப்பந்தயத்தின்போது அதிக எடை அவர்களின் வேகத்தையும் சகிப்புத்தன்மையையும் தடுக்கும் என்று ஒரு ஓட்டப்பந்தய வீரருக்குத் தெரியும். அதேபோல, கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் அதிகப்படியான பாவத்தின் இடையூறு குறித்து தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும். பாவம் ஆவிக்குரிய முன்னேற்றத்திலிருந்து நம்மைத் தடுக்கிறது, ஏனென்றால் அது நம் ஆவிக்குரிய முதிர்ச்சியின் இலக்கிலிருந்து நம்மைத் திசை திருப்புகிறது, நம் பரலோகத் தகப்பனுடனான ஐக்கியம் மற்றும் நெருக்கத்திலிருந்து நம்மைப் பிரித்து, நம் வாழ்வில் பரிசுத்த ஆவியின் ஆற்றலைத் தணிக்கிறது.

எபிரெயர் 12: 1 மற்றும் நீதிமொழிகள் 5: 21-22 பாவத்தை எப்படி வரையறுக்கின்றன?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

ஒப்புரவாகுதலின் மூலம் அவருடனான உரிமை அல்லது உறவை மீட்டெடுக்க வேண்டும் என்று, தேவன் பாவத்தின் சிக்கல்களை தூர -தூக்கி எறிவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளார்.

| |
|---|
| *ஒப்புரவாகுதல்* - நல்லிணக்கம் அல்லது நட்புக்கு மறுசீரமைப்பு. |

### தேவனோடு ஒப்புரவு செய்வதற்கான படிகள்

#### படி 1: அறிக்கை செய்தல்.

*உங்கள் பாவங்களை ஒப்புக்கொள்வது* என்பது "தனிப்பட்ட, மறைக்கப்பட்ட அல்லது தனக்குத் தீங்கு விளைவிக்கும் ஒன்றை ஒப்புக்கொள்வது" - தேவன் பாவம் என்று அழைப்பதை உண்மையில் பாவம் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். உங்கள் செயல்கள் அவருடைய விருப்பத்திற்கும் வழிகளுக்கும் எதிரானது என்பதை நீங்கள் அவருடன் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

1 யோவான் 1: 9 இன் படி தாழ்மையுடன் தங்கள் பாவங்களை ஒப்புக்கொள்பவர்களிடம் தேவனின் பதில் என்ன?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

#### படி 2: மனந்திரும்புங்கள்

மனந்திரும்புவது என்றால் "துக்கம் அல்லது வருத்தத்தை உணர்தல்; கடந்த கால அல்லது வேண்டுமென்றே செய்த செயல்கள் தொடர்பாக ஒருவரின் மனதை அல்லது ஒருவரின் இருதயத்தை மாற்றுதல்; ஒருவர் செய்த அல்லது செய்யத் தவறியதற்காக மனவருத்ததை உணர்தல் என்பதாகும். " தேவனிடம் மன்னிப்பைக் கோருவது, உங்கள் செயல்கள் அவருக்கு

எதிராக இருந்ததற்காகவும், உடைந்து, வருத்தப்பட்டு, மனந்திரும்பி, அவருடன் உங்கள் இருதயத்தின் ஒற்றுமைக்கு இடையூறாக இருப்பதற்காகவும், தேவனுடைய மன்னிப்பை கோருவது உங்கள் பொறுப்பு.

சங்கீதம் 25:18 இல் தாவிது தேவனிடம் என்ன சொன்னார்?

நீங்கள் ஒரு நபரை புண்படுத்தியிருந்தால் அல்லது பாவம் செய்திருந்தால், மத்தேயு 5: 23-24 படி நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று இயேசு கூறுகிறார்?

ஆவிக்குரிய முன்னேற்றத்திற்கு நாம் கிறிஸ்துவுடனான நெருக்கத்தையும் ஆவிக்குரிய முதிர்ச்சியையும் இலக்காக கொள்ள வேண்டும். தன்னம்பிக்கை - ஒருவரின் சொந்த பலம் அல்லது நம்பிக்கை. பெருமை - ஒருவரின் சொந்த மதிப்பு பற்றிய உணர்வு மற்றும் தனக்குக் கீழே உள்ளவற்றின் அல்லது தன்னை விட மதிப்பு குறைந்தவர்கள் மீது வெறுப்புணர்வு; மற்றும் மேன்மையின் மீது காரணமில்லாத இறுமாப்பு.

**படி 3: விசுவாசி மற்றும் பெற்றுக்கொள்**

விசுவாசித்துப் பெற்றுக்கொள்ளக்கூடிய இந்த இறுதியான படி மிக முக்கியமானது. நீங்கள் எப்படி உணருகிறீர்கள் என்பதைப் பொருட்படுத்தாமல், உங்கள் மனந்திரும்புதலையும் அறிக்கையிடுதலையும் அவர் ஏற்றுக் கொண்டதோடு, அவருடைய மன்னிப்பை பரிபூரணமாக பெற்றுக் கொண்டதாக நீங்கள் விசுவாசிக்க வேண்டும். அவர் மன்னிப்பதற்கு உண்மை உள்ளவராய் இருக்கிறார் என்கிற அவருடைய வார்த்தையின் மீது உறுதி கொண்டு, அதினிமித்தம் முழு விசுவாசத்தோடு தொடர்ந்து முயற்சிக்கும் போது அவரோடு கூட உள்ள ஐக்கியம் புதுப்பிக்கப்படும்.

மத்தேயு 21: 22 ல் இயேசு என்ன சொன்னார்?

நாம் நம்மில் பலவீனமாக இருந்து, தேவன் எதிர்பார்க்கும் பரிசுத்த

வாழ்க்கை வாழ்வதில் நாம் தொடர்ந்து தோற்றுப் போகிறோம். நாம் மற்றவர்களை மன்னிப்பதில், பொறுமையாக இருப்பதில், இரக்கம் காட்டுவதில், பரிபூரண அன்பு செலுத்துவதில் தோற்றுப் போகிறோம். இயற்கையாகவே நாம் எளிதில் புண்படவும், புண்படுத்தவும், சுயநலத்தோடு நேர்மையற்று இருக்கிறோம்-நாம் நம்மைக் குறித்து அதிகமாகவும், மற்றவர்கள் குறித்து கொஞ்சமாகவும், சிந்தித்து, நம்மாலேயே கடைபிடிக்க முடியாத தரத்தை மற்றவர்களுக்கு வைத்து, அவர்களை நியாயந்தீர்க்கும் விதமாக நம்முடைய வாழ்க்கையிலே வைத்திருக்கிறோம். ஆகையினாலே இந்த படிநிலைகளை நாம் தினந்தோறும் கட்டாயமாக பின்பற்ற வேண்டும்.

***அடிப்படை சத்தியம்***

தேவையில்லாத பாரம் ஒரு ஓட்டப்பந்தய வீரனுடைய வேகத்தை குறைப்பது போல, நம்முடைய வாழ்க்கையில் இருக்கும் பாவம் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியை தடை செய்யும். ஆகவே தேவனுடைய பரிபூரணமான இந்த பயிற்சி திட்டத்திற்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்

**பாடம்- 8**

## விசுவாசியின் இலக்குகள்

பிலிப்பியர் 3 ம் அதிகாரம் முழுவதும், பவுல் தனது தனிப்பட்ட குறிக்கோள் மற்றும் அவரது வாழ்க்கையின் நோக்கம், கருப்பொருள் ஆகியவற்றை எடுத்துரைக்கிறார். வசனம் 14 இல், அவர் தனது குறிக்கோள் மற்றும் நோக்கம் " இயேசு கிறிஸ்துவில் தேவனுடைய மேல் நோக்கிய அழைப்பு" என்று விவரித்தார், “இதை இரண்டு வார்த்தைகளில் சுருக்கலாம்: கிறிஸ்து மற்றும் நித்திய ஜீவன்.”

பிலிப்பியர் 3-ல் பின்வரும் வசனங்களைப் படிக்கும்போது, உங்கள் சொந்த விஷயங்களைப் பற்றி தேவன் உங்களிடம் பேச அனுமதிக்கும் தனிப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் வாழ்க்கையின் நோக்கம் ஆகியவற்றின் உங்கள் எண்ணங்களை எழுதுங்கள்.

கிறிஸ்துவை அறிதல் (வசனம் 8)

________________________________________

கிறிஸ்துவில் காணப்படுதல் (வசனம் 9)

________________________________________

கிறிஸ்துவின் வல்லமையை அறிதல் (வசனம் 10)

________________________________________

கிறிஸ்துவைப் போல மாறுதல் (வசனம் 10)

________________________________________

பரலோகம் (வசனங்கள் 11, 20-21)

_______________________________________________
_______________________________________________
_______________________________________________

பவுல் விருப்பத்துடன் தனது இருதயத்தை தனது வாசகர்களிடம் வெளிப்படுத்தினார். அவர் தனது தவறுகளையும், பலவீனங்களையும் ஒப்புக்கொண்டு, அதற்கான கணக்கு ஒப்புவித்து, கிறிஸ்துவின் மேல் உள்ள தனது, வைராக்கியம், பரிசுத்தம், மற்றும் ஆவிக்குரிய முதிர்ச்சி ஆகியவைகளை தைரியத்தோடு பகிரங்கமாக அறிவித்தார். அவருடைய வாழ்க்கை வரலாறு நமக்கு உற்சாகத்தை ஊட்டவும், நாம் பின்பற்றுவதற்கான உதாரணமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியை ஊக்கப்படுத்துகிற மற்றும் உங்கள் மீது பொறுப்புள்ள ஒரு முதிர்ந்த விசுவாசியைக் கண்டுபிடித்து அவருக்கு சீஷனாயிருப்பது முக்கியம். இந்த வகையான உண்மையான உறவுக்கு நீங்கள் திறந்த, நேர்மையான மற்றும் வளைந்து கொடுக்க கூடியவராக இருக்க வேண்டும். உங்கள் வாழ்க்கையில் இதுபோன்ற ஒருவர் உங்களிடம் இல்லையென்றால், அவரைத் தேடுங்கள். ஒருவரை உங்களிடம் கொண்டு வரும்படி தேவனிடம் கேளுங்கள். உங்கள் போதகரை, மற்ற சபைத் தலைவரைத் தொடர்புகொண்டு, இந்த வகையான ஊக்கம் மற்றும் பொறுப்புணர்வுக்கான உங்கள் விருப்பத்தை வெளிப்படுத்துங்கள்.

*கணக்கொப்புவித்தல்-*

ஒரு கணக்கை வழங்குவதற்கு அழைக்கப்படும் பொறுப்பு-பொறுப்பு; ஒருவரின் நடத்தைக்கு பொறுப்பானவர்.

உங்களை வழிநடத்த முன்வருகிற ஒரிரு நபர்களை குறித்து சிந்திக்க முடியுமா? அவர்களுடைய பெயரை கீழே எழுதுங்கள்.

1. ________________________________________.
2. ________________________________________.

நீங்கள் எப்போது அவர்களை தொடர்பு கொள்வீர்கள்?
_______________________________________________

"இலக்கை நோக்கி முன்னேற" தேவன் உங்களை ஊக்குவித்தது என்ன?

_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________
_______________________________________________

கிறிஸ்துவோடு கூட நடந்து உங்கள் ஆவிக்குரிய முதிர்ச்சி மற்றும் வளர்ச்சி எப்படி இருக்கிறது என்பதற்கான அடிப்படை புரிதல் இப்போது உங்களுக்கு உள்ளது. தினசரி தேவனோடு நெருங்கி எப்படி வளர வேண்டும் என்பதற்கு ஒரு பின் இணைப்பு A ஐ பார்க்கவும். அடுத்த அத்தியாயம் மன்னிப்பு, மற்றும் ஒப்புரவாகுதலின் வேதாகம கோட்பாடுகள் பற்றிய ஆழமான ஆய்வை வழங்குகிறது. உங்கள் இருதயத்தில் கிறிஸ்து அளிக்க விரும்பும் சுகத்தை பெற்றுக் கொள்ளத்தக்கதாக உங்கள் இருதயம் திறக்கப்பட வேண்டும் என்பதே என்னுடைய ஜெபமாக இருக்கிறது.

## அத்தியாயம் 5

## மன்னிப்பு மற்றும் ஒப்புரவாகுதல்

நான் இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்ட சிறிது நேரத்தில், என் தந்தையின் மீது நான் கொண்டிருந்த வெறுப்பை அவர் எனக்கு வெளிப்படுத்தினார். நான் அதிகமாகப் பகிர்வதற்கு முன், என் தந்தை என்னையும் என் உடன்பிறந்த ஏழு பேரையும், வளர்க்க தனது சிறந்த முயற்சியை செய்த ஒரு நல்ல மனிதர் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அவருக்கு என் மீது எந்தவிதமான கெடுதல் எண்ணமோ அல்லது என்னை காயப்படுத்த வேண்டுமென்ற நோக்கமோ இல்லை, என்பது எனக்குத் தெரியும். எனக்கு தேவையானதை என் தந்தை வேண்டுமென்று எனக்குத் தராமல் போனதில்லை. அவரது சிறந்த முயற்சிகள் இருந்தபோதிலும், அவர் செய்த, செய்யாத மற்றும் சொன்னவைகள் என்னை காயப்படுத்துவதற்கு ஏதுவாய் அமைந்தது, அது முடிவில் அவர் மீது வெறுப்பாக வளர்ந்தது. நான் என் தந்தையிடம் சென்று அவரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கர்த்தர் என்னிடம் தெளிவாகத் தெரிவித்தார்.

பலருடைய கதைகள் என்னுடையதைப் போலவே இருக்கின்றன. பெற்றோரிடம் காணப்படும் இடைவெளிதான் விவரிக்கப்பட்ட கசப்புகளும், கோபங்களும், பொதுவான காரணங்களாக இருக்கின்றன. தேவன் ஒவ்வொரு குழந்தைகளையும் விசேஷித்த விதமாக அவர்களுடைய சரீரம் மற்றும் உணர்வுபூர்வமான தேவைகளில் பெற்றோர்களால், அதாவது தாய் தந்தையாகிய இருவராலும் சந்திக்கப்பட வேண்டுமென்று வடிவமைத்திருக்கிறார். இதில் யாரோ ஒருவர் அல்லது இரண்டு பேருமே தங்கள் கடமையை செய்யத் தவறும்போது, குழந்தையின் வாழ்க்கையில் வெற்றிடங்கள் உருவாக்கப்படுகின்றன, அவை மன ரீதியான காயங்களைப் வெளிப்படுத்தக்கூடியதாய் இருக்கிறது. உதாரணமாக, ஒரு தந்தை தெய்வீக தலைமைத்துவத்தையும் அவருடைய மனைவிக்கும் குழந்தைகளுக்கும் அன்பான தியாகத்தையும் வழங்க வேண்டும். ஒரு தாய் அன்பான, வளர்ப்புச் சூழலை வழங்குவதோடு, தன் கணவனை மதித்து நல்லொழுக்கப்படுத்தவேண்டும். பெற்றோர்கள் இருவரும் தங்கள் குழந்தைகளுக்கு அன்பு, சரியான பாசம் மற்றும் தெய்வீக ஒழுக்கத்தை வழங்க வேண்டும். ஒரு குழந்தை தனது பெற்றோரிடமிருந்து அறியாமை அல்லது சண்டை, துஷ்பிரயோகம் அல்லது விவாகரத்து போன்ற அதிர்ச்சியான காரணங்களின் நிமித்தம் இந்த விஷயங்களைப் பெறாவிட்டால், அவர்களின் உணர்ச்சி நல்வாழ்வு மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படும்.

நமது குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், சக பணியாளர்கள், அயலவர்கள் மற்றும் அந்நியர்கள் கூட வேண்டுமென்றே அல்லது தற்செயலாக புண்படும்படி நடந்து கொள்ளலாம். துரதிர்ஷ்டவசமாக, நாம் மிகவும் நேசிக்கும் நபர்கள் மிகப்பெரிய வடுக்களை ஏற்படுத்தலாம். ஆனால் நாம் எப்போதும் பாதிக்கப்படுகிறவர்கள் அல்ல. நாமும் மற்றவர்களை புண்படுத்தக் கூடியவர்களே, இதற்கு யாரைக் குற்றம் சொல்வது உங்களையா? அவர்களையா? அல்லது தேவனையா? இந்த அத்தியாயத்தில் மக்கள் உங்களை பண்படுத்தும் போதும் அல்லது நீங்கள் மற்றவர்களை புண்படுத்தும் போது என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் கண்டறிவோம்.

**பாடம் 1**

**தேவனின் இராஜரீகம்**

சங்கீதம் 139: 1–18 தேவன் நம் ஒவ்வொருவரையும் நெருக்கமாக அறிந்திருக்கிறார் என்பதையும், நம்முடைய நாட்கள் அனைத்தும் அவரால் வடிவமைக்கப்பட்டவை என்பதையும் கற்பிக்கிறது.

ஏசாயா 46: 9-10 -லிருந்து தேவனைப் பற்றி நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?

________________________________________

________________________________________

________________________________________

> *இராஜரீகம்-* நிகரிலாதவர் அல்லது அதிகாரத்தில் உயர்ந்தவர், மற்ற அனைவரையும் விட உயர்ந்தவர், சுதந்திரமான அல்லது உயர்ந்த அதிகாரம் கொண்டவர்.
>
> *எல்லாம் அறிந்தவர்-* உலகளாவிய அறிவைக் கொண்டவர், எல்லாவற்றையும் அறிந்தவர், எல்லையற்ற ஞானமுள்ளவர்.

வசனத்தின்படி, தேவன் சர்வ வல்லமை உள்ளவர், எல்லாவற்றையும் அறிந்தவர். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால் அவர் இறையாண்மை உடையவர், எல்லாம் அறிந்தவர்,. இந்த சத்தியத்தை ஏற்றுக் கொள்வது கடினம், விசேஷமாக மற்றவருடைய கரங்களில் ஒப்புக் கொடுக்கப்பட்டு அனேக கஷ்டங்களை சகித்தவர்களுக்கு இதை ஏற்றுக் கொள்வது கடினமாக இருக்கும்.

சர்வ வல்லமை உள்ளவரும், எல்லாவற்றையும் புரிந்தவருமாகிய தேவன் தெரிந்தே எதற்கு தம் பிள்ளைகளை கஷ்டப்பட அனுமதிக்கிறார்? என்ற இந்தக் கேள்வி எல்லையற்ற புத்திசாலித்தனம் உடையதாய் இருக்கிறது. அனேக மக்களின் இருதயங்களை எளிதில் தேவன் மீது அவநம்பிக்கை மற்றும் கசப்புக்கு நேராக இட்டுச் செல்கிறது. அவர் எல்லாவற்றையும் அறிந்து எல்லாவற்றையும் செய்யக்கூடியவரானால் அவர் தானே இவைகள் எல்லாவற்றுக்கும் பொறுப்பேற்க வேண்டுமல்லவா?

இந்த கேள்வி உங்கள் மனதில் நீடித்தால், உங்கள் கண்ணோட்டத்திலிருந்து ஒரு கணம் பின்வாங்கி, நீங்கள் மேலே இருந்து பூமியைப் பார்க்கிறீர்கள் என்று கற்பனை செய்து பாருங்கள். தேவனைப் பற்றியும் அவருடைய நற்குணத்தைப் பற்றியும் நீங்கள் கற்றுக்கொண்டதை நினைவு கூறுங்கள். நீங்கள் அவரை நம்புகிறீர்களா?

தேவன் அனைவருக்கும் சுயாதீன விருப்பம் என்ற கொடையை அளித்திருக்கிறார். மனிதகுலம் அவரைப் பின்தொடர்ந்து நன்மை செய்யலாம் அல்லது அவரை நிராகரித்து தீமையைச் செய்யலாம். நல்லதோ கெட்டதோ, ஒவ்வொரு தேர்ந்தெடுத்தலும் பலன் தரக்கூடியதாயிருக்கிறது. விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் இருவரும் தங்கள் சொந்த தேர்ந்தெடுத்தல் மற்றும் அவர்களைச் சுற்றியுள்ளவர்களின் தேர்ந்தெடுத்தலின் விளைவுகளை அனுபவிக்கிறார்கள். நம்முடைய தீய தேர்வுகளுக்கான விளைவுகளை ஏற்பது கடினம் இல்லை என்றாலும் மற்றொருவரின் தீய விருப்பத்தால் நாம் துன்பத்தை அனுபவிக்கும்போது அல்லது எங்கும் இல்லாத பாடுகளை அனுபவிக்கும் போது என்ன செய்வது?

தேவன் பரிந்துரை செய்து மனிதகுலத்தின் தீமையை தேர்ந்தெடுக்கும் திறனை நிறுத்தினால், சுயாதீன விருப்பம் இனி இருக்காது. அதேபோல், தேவன் தம்மை விசுவாசிப்பவர்களை தீமைகளிலிருந்து பாதுகாத்து, நல்லதை மட்டுமே தங்கள் வாழ்க்கையில் தொட அனுமதித்தால், பின்பு அவிசுவாசிகள் வலியற்ற வாழ்க்கைக்கான உத்தரவாதத்திற்காக மட்டுமே அவரிடம் திரும்புவதற்கு தூண்டப்படுவார்கள். நீங்கள் அவரிடம் திரும்பினதற்கு இதுதான் காரணமா? தேவன் உங்களுக்கு எளிதான வாழ்க்கையை அளிப்பார் என்றும் எல்லா தீமைகளிலிருந்தும் உங்களை பாதுகாப்பார் என்றும் எதிர்பார்த்தீர்களா?

**மனிதனின் பாடுகள்**

வேதத்தில் யோபு என்ற ஒரு மனிதனுக்கு சாதகமான வாழ்க்கை இருந்தது. அவருக்கு ஒரு மனைவி, குழந்தைகள் மற்றும் பல வேலைக்காரர்களுடன் ஒரு வெற்றிகரமான தொழிலையும் கொண்டிருந்தார்.

யோபு 1: 8 ஐப் படியுங்கள். தேவன் அவரை எப்படிப் பார்த்தார்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

யோபு 1: 9-11 ஐப் படியுங்கள். யோபுவைப் பற்றி சாத்தான் தேவனிடம் என்ன சொன்னான்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

வசனம் 12 இல் தேவன் எவ்வாறு பதிலளித்தார்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

அனைத்து உடைமைகளையும் இழந்து, அவருடைய வேலைக்காரர்கள் மற்றும் குழந்தைகள் இறந்து போகத்தக்கதாகவும், கடைசியாக அவருடைய சரீரத்தை பயன்படுத்துவதின் மூலமும் அவர் மீது சாத்தான் அனைத்துத் தீமைகளையும் கொண்டுவர தேவன் அனுமதித்தார். தேவன் ஏன் இவ்வளவு கஷ்டங்களை அனுமதிக்கிறார் என்று யோபுக்கு புரியவில்லை. இவை அனைத்திற்கும் மத்தியிலும், அவர் தேவனுக்குப் பயந்து, நீதிமானாக வாழ்ந்தார். நிச்சயமாக, அவர் அத்தகைய துன்பத்திற்கு தகுதியான எதையுமே செய்யவில்லை.

யோபு 7:20 இல் யோபு தேவனிடம் என்ன கேட்டார்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

பல அத்தியாயங்களில் நாம் பார்க்க முடியும், யோபு ஏன்? என்ற கேள்வியோடு வேதனைகளை அனுபவித்தார். அவர் தேவனிடம் கூக்குரலிட்டு தனது நண்பர்களிடம் ஆலோசனை கேட்டார். தேவன் சிறிது நேரம் அமைதியாக இருந்தார், ஆனால் இறுதியில் பதிலளித்தார்.

யோபு 38: 1–3 -ல் தேவன் என்ன சொன்னார்?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

யோபுவின் கேள்விக்கு தேவன் ஒருபோதும் பதிலளிக்கவில்லை. அதற்கு பதிலாக, அவருடைய படைப்பில் காட்டப்படும் வல்லமை மற்றும் மகிமைக்கு யோபுவின் கவனத்தை செலுத்த அவர் கேள்விகளைக் கேட்டார். தேவனின் கேள்விகள் யோபு தன்னிடமிருந்த கவனத்தை அவரிடம்

எடுத்துச் சென்றன. அவருடைய சூழ்நிலைகள் மற்றும் தேவனின் இறையாண்மை பற்றிய ஒரு பரந்த பார்வையை அவருக்கு வழங்கியது.

யோபு 40: 3-5 மற்றும் 42: 1–6 இல் யோபு எவ்வாறு பதிலளித்தார்?

________________________________________________

________________________________________________

________________________________________________

நம்முடைய பாடுகளுக்கு விளக்கம் தேடுவது என்பது இயற்கையான ஒன்றுதான் நாமும் கூட யோபுவைப் போல தேவனிடத்தில் கதறி என் ஆண்டவரே எப்படி என்று கேட்கிறோம். யோபுவிடம் இருந்து நாம் கற்றுக் கொள்ளும் அநேக பாடங்களில் ஒன்று "ஏன்" என்ற கேள்வி தவறானதாகும். அதற்கு பதிலாக நாம் தேவனிடத்தில் என்ன கேட்க வேண்டும் என்றால் இதைக் கொண்டு நீர் எனக்கு என்ன போதிக்க விரும்புகிறீர்? இந்தத் துன்ப காலங்களில் என்னிடத்தில் உம்முடைய சித்தம் என்ன? என்று கேட்க வேண்டும்.

தேவன் ஒரு அன்பான தந்தை, அவர் நம் வாழ்வில் தீமையைக் கொண்டுவரமாட்டார். இருப்பினும், அவர் தமது நோக்கத்திற்காகவும் நமது நன்மைக்கேதுவாகவும் தீமையால் நம்மைத் தொட அனுமதிக்கிறார். அவரை நம்புவதற்கு தேவனிடம் விசுவாசத்தைக் கேளுங்கள். அவர் உங்கள் பிரார்த்தனைக்கு பதிலளிப்பார்.

**பாடம் 2 - சோதனைகள் மற்றும் உபத்திரவம்.**

யோவான் 16:33 -ஐ வாசியுங்கள். சோதனைகள் மற்றும் உபத்திரவங்கள் குறித்து இயேசு தமது சீஷர்களுக்கு என்ன போதித்தார்?

________________________________________________

________________________________________________

________________________________________________

நமக்கு கஷ்டங்களும் உபத்திரவங்களும் வாக்குப் பண்ணப்பட்டு இருக்கிறது. நமக்கு கஷ்டத்தில் இருந்து விடுபடுவதற்கான வாய்ப்பு ஏதும் இல்லை ஆனால் உபத்திரவத்தில் நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற பொறுப்பு இருக்கிறது.

*துன்புறுத்தல்*-துன்புறுத்தல் அல்லது அடக்குமுறையால் வரும், துன்புறுத்தல், துன்பங்கள்; ஒரு சோதனை.

மல்கியா 3: 3 -ஐ வாசியுங்கள். நமது சோதனைகளின் மூலம் தேவன் என்ன செய்வார்?

________________________________________________

________________________________________________

________________________________________________

நாம் நம் வலியினால் தேவனிடத்திலும், மற்றவரிடத்திலும் கடினமாகலாம். அல்லது சோதனைகளின் மூலம் நம் இருதயத்தை தூய்மையாக்க, அவரிடத்தில் அர்ப்பணிக்கலாம். இருதயத்தை சுத்தம் செய்வது என்பது தங்கத்தை செம்மைப்படுத்துவது போன்றதாகும். தங்கம் நெருப்பால் சூடுபடுத்தப்படுவதால், அசுத்தங்கள் மேற்பரப்புக்கு உயரும், அதனால் அவை அகற்றப்படும். தேவன் நம் ஒவ்வொருவரையும் துன்பத்தை சகிக்க அனுமதிக்கிறார், அதனால் நாம் சுத்திகரிக்கப்பட்டு கிறிஸ்துவின் சாயலில் மாற்றப்படுகிறோம்.

நம் சோதனைகள் பற்றி 1 பேதுரு 1: 6-7 என்ன சொல்கிறது?

________________________________________________

________________________________________________

நாம் எவ்வளவு சோதனைகளை அனுபவிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக சுத்திகரிக்கப்படுகிறோம். நம் இருதயங்களின் நிலையை சோதிக்க ஒரே வழி சோதனைகள் மட்டுமே. தங்கம் மேற்பரப்பில் தூய்மையானதாக தோன்றலாம், ஆனால் அதன் கண்ணுக்கு தெரியாத மையத்தில் அது அசுத்தங்களால் நிறைந்து இருக்கலாம். நம் இருதயத்தின் ஆழத்தில் என்ன இருக்கிறது என்பதை சோதனைகள் வெளிப்படுத்துகின்றன. இந்த செயல்பாட்டில் நாம் தேவனை நம்பினால், நம் வாழ்க்கை இயேசு கிறிஸ்துவின் அன்பு, நம்பிக்கை மற்றும் தன்நம்பிக்கையுடன் ஊடுருவும்.

ரோமர் 8: 28–29 ஐ எழுதுங்கள்.

ரோமர் 8: வசனம் 28 "சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று" தெளிவாக கூறுகிறது. இதில் முக்கியமானது விசுவாசம். நாம் தேவனின் வாக்குறுதிகளை நம்பி, நம் சோதனைகள் மற்றும் இன்னல்களுக்கு மத்தியில் அவர் மீது விசுவாசம் வைத்தால், நாம் ஜெயங்கொள்வோம், தேவன் மகிமைப்படுவார். நம்முடைய சோதனைகளின் மூலம் நம் நடத்தையைக் கண்டவர்கள் நம் வாழ்வில் கிறிஸ்துவின் கிரியைகளைப் பார்க்க முடியும், பரிசுத்த ஆவியின் வல்லமையால், அவர்கள் நம்மில் அவருடைய பிரதிபலிப்பைக் காணலாம்.

யோபு, அவரது துன்பத்தின் போது ஒரு உண்மையுள்ள ஊழியராக இருந்தார், இதன் விளைவாக அதிக நம்பிக்கை, அதிக விசுவாசம் மற்றும் தேவனோடு ஆழமான நெருக்கம் ஏற்பட்டது.

யோபு 42: 11-16 வாசிக்கவும். அவருடைய துன்பத்திற்கு தேவன் எவ்வாறு யோபுக்கு ஆறுதல் அளித்தார் (வசனம் 11)?

யோபுவின் மீதமுள்ள வாழ்க்கை எப்படி இருந்தது (வசனங்கள் 12-16)?

தன் துன்பத்திற்கு தேவனை தூஷிக்க மறுத்து, தன் பாடுகளின் மூலம் அவரை நம்பினார். தேவன் மீது யோபு கொண்ட நம்பிக்கையினால் அவருடைய இருதயத்தில் கசப்பு குடிகொள்ள இடமில்லாமல் போனது. யோபின் விசுவாசம் அவருடைய பரலோகத் தகப்பனிடமிருந்து அவருடைய குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் மூலம் ஆறுதல் பெற வழி வகுத்தது. தேவனும் யோபுவின் விசுவாசத்தைக் கண்டு முன்பு இருந்ததை விட இரண்டு மடங்கு வெகுமதி அளித்தார். ஆகவே எல்லா உபத்திரவங்களும் நம்மை பூமியில் அதிகப்படியான ஆசீர்வாதங்களுக்கு நேராக வழி நடத்தும் என்று அர்த்தமல்ல, அதே வேளையில் பாடுகள் என்பது நமக்கு இந்த பூமியிலே உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாக இருக்கிறது. ஆனால் எவ்வளவு துன்பங்களும், துயரங்களும், வேதனைகளும், தற்போதைய உலகத்தில் நாம் அனுபவித்தாலும், நித்திய நித்தியமாக தேவனுடைய சமூகத்தில் இருப்போம் என்கிற தான வாக்குத்தத்தம் நமக்கு இருக்கிறது, அங்கே துன்பமோ, அல்லது கண்ணீரோ இருக்காது.

2 கொரிந்தியர் 1: 3–4 ஐ வாசியுங்கள். மற்றவர்களுக்கு உதவ உங்கள் அனுபவங்கள் எவ்வாறு பயன்படும்?

___

___

___

> இயேசு சொல்கிறார், சில நேரங்களில் தேவன் உங்களுடைய இருளை அகற்ற முடியவில்லை; என்ற சூழ்நிலையிலும் அவர் மீது நம்பிக்கையாக இருங்கள். தேவன் ஒரு இரக்கமற்ற நண்பராகத் தோற்றமளிக்கலாம், ஆனால் அவர் அப்படிப்பட்டவர் அல்ல; அவர் இயற்கைக்கு மாறான தந்தையைப் போல் தோன்றுவார், ஆனால் அவர் அப்படிப்பட்டவர் அல்ல; அவர் ஒரு நியாயமற்ற நீதிபதி போல் தோன்றுவார், ஆனால் அவர் அப்படிப்பட்டவர் அல்ல. எல்லாவற்றுக்கும் பின்னால் தேவனின் எண்ணத்தை நினைவுகளை வலுவாகவும், வளரும்படியும் வைத்திருங்கள். எந்த ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையிலும் தேவனின் விருப்பம் இல்லாவிட்டால் எதுவும் நடக்காது, எனவே நீங்கள் அவரை முழுமையாக நம்பலாம்.
> .-ஒஸ்வால்ட் சேம்பர்ஸ்

தேவனுக்கு ஒரு நித்திய நோக்கம் இருக்கிறது. நிச்சயமாக நன்மையானது தீமையை வெல்லும் அப்பொழுது துன்பங்களும் துயரங்களும் இல்லாமல் போகும். நமக்கு துன்பத்தை ஏற்படுத்தியவர்களிடம் கசப்புணர்வை நாம் தேர்வு செய்யலாம், அல்லது எல்லாவற்றையும் ஆளுகை செய்கிற தேவன் மீது நம் நம்பிக்கையை வைத்து மற்றவர்களின் குற்றங்களையும் தோல்விகளையும் மன்னிக்கலாம்.

நீங்கள் கிறிஸ்துவை இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டபோது, உங்கள் நித்திய முடிவிற்காக நீங்கள் அவர் மீது நம்பிக்கை வைக்கிறீர்கள். உங்கள் கடந்தக் கால அனுபவத்தோடும் மற்றும் தற்போதைய சூழ்நிலைகளிலும் அவரை நம்ப வேண்டும். அவர் மட்டுமே உங்கள் சோதனைகளின் அனைத்துப் பகுதிகளிலும் உங்களுக்கு ஆறுதலளித்து, பலப்படுத்தி அவர்களுக்கு நீதியாக பதிலளிக்க முடியும். அவர் மட்டுமே கெட்டவற்றிலிருந்து நல்லதை உருவாக்கி, முறிந்த உறவுகளை மீட்டெடுக்க முடியும். உங்கள் துன்பங்களுக்கு மத்தியில் ஆண்டவரின் வார்த்தைக்கு நீங்கள் கீழ்ப்படிவது உங்களுக்கு சமாதானத்தையும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு புகழையும், மரியாதையையும், மகிமையையும் கொண்டுவரும்.

1 பேதுரு 1: 3-7 -ஐ வாசியுங்கள். இந்த வசனம் உங்கள் சூழ்நிலைக்கு எவ்வாறு பொருந்துகிறது?

___

___

___

***அடிப்படை சத்தியம்***
அவர் நம்முடைய பாடுகளையும் உபத்திரவங்களையும் பயன்படுத்தி அவருடைய சாயலுக்கொப்பான மறுரூபமாக்குவதற்கும் இதுபோன்ற உபத்திரவபடுகிறவர்களுக்கு உதவும்படியும் நம்மை ஆயத்தப்படுத்துகிறார் என்று தேவனுடைய வார்த்தை சொல்கிறது.

**பாடம் 3**

**ஏன் மன்னிக்க வேண்டும்?**

நான் என் தந்தையை மன்னிக்க வேண்டும் என்று தேவன் விரும்புவதை நான் உணர்ந்தபோது, நான் உடனடியாக எதிர்த்தேன். நான் பல வாரங்களாக தேவனுடன் போராடினேன், என் கசப்பிலிருந்து விடுவிக்கப்பட விரும்பவில்லை. நான் ஏன் அவரை மன்னிக்க வேண்டும்? அவர் என்னிடம் ஒருபோதும் மன்னிப்பு கேட்கவில்லை. அவர் என் மன்னிப்புக்கு தகுதியானவரா?

*மன்னிப்பது* - விட்டுக் கொடுப்பது, ராஜினாமா செய்வது, தவறு செய்ததற்கு எதிராக மனக்கசப்பை உணருவதை நிறுத்துவது, விடுவித்தல், மன்னிப்பு.

ஒரு கடன் மன்னிக்கப்படும் போது, அந்தக் கடனை திரும்ப பெறுவதற்கான உரிமையும் விட்டு கொடுக்கப்படுகிறது. என்னிடம் தவறு செய்த ஒருவரை நான் மன்னித்து விட்டேன் என்றால், அவன் மீது நான் தொடர்ந்து கோபமாகவோ மன வருத்தமாக இருப்பதற்கான சுதந்திரத்தை உரிமையை இழந்து விடுகிறேன். நான் பழி சுமத்தவோ, பழி வாங்கவோ, வருத்தம் அடைவதற்கோ எனக்கிருக்கும் சுயாதீனத்தையும் விட்டுவிடுகிறேன். நான் என் சொந்த பெலனை இழந்து, இழப்பை நானே உள்வாங்கிக் கொள்கிறேன். உண்மையான மன்னிப்பு என்பது தகுதியற்றவர்களுக்கும், குறை உள்ளவர்களுக்கும் இலவசமாக அளிக்கப்படுவதாகும். இது நியாயமானதோ சரியோ அல்ல. எனவே ஏன் மன்னிக்க வேண்டும்?

தேவன் மன்னிக்க கட்டளையிடுகிறார். லூக்கா 6: 35-37 இல் இயேசு என்ன சொன்னார்?

____________________________________________
____________________________________________
____________________________________________

கொலோசெயர் 3: 12-13 இல் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பண்புகள் என்ன?

____________________________________________
____________________________________________
____________________________________________

நம் பரலோகத் தந்தைக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பது கட்டாயமல்லாத விஷயமல்ல. நமக்கு பிடித்த தேவனுடைய கட்டளைகளுக்கு மட்டும் கீழ்ப்படிவோம் என்றால், நாம் பலனற்ற, பயனற்ற, மற்றும் ஆவிக்குரிய மலட்டு வாழ்வை வாழ்கிறவர்களாய் இருப்போம்.

மன்னிப்பவர்கள் கிறிஸ்துவின் சாயலை அடைந்திருக்கிறார்கள். லூக்கா 23:34 இல் இயேசுவின் ஜெபம் என்ன?

____________________________________________
____________________________________________
____________________________________________

கிறிஸ்தவர்களாகிய நாம், கிறிஸ்துவின் பெயரை, அழிந்து போகிற ஆத்துமாக்களுக்கு, எடுத்துச் செல்லும் சிலாக்கியமும் அழைப்பும் பெற்றிருக்கிறோம். கிறிஸ்தவன் என்ற சொல்லுக்கு "சிறிய கிறிஸ்து" என்று பொருள். அவர் நடந்தபடியே நாம் நடக்க தயாராக இருக்க வேண்டும். குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குவதற்காகவே கிறிஸ்து இந்த பூமிக்கு வந்தார், மன்னிப்பின் இறுதி செயலை சிலுவையிலே நிரூபித்தார். உலகிற்கு மன்னிப்பை தொடர்ந்து பிரகடனப்படுத்த அவர் திருச்சபையை நியமித்தார். நாம் அவருடைய பெயரைச் சுமக்க வேண்டுமானால், நம்மை புண்படுத்தியவர்களை நாம் மன்னிக்க வேண்டும். மன்னிப்பின் நோக்கம் என்ன?

**மன்னிப்பு குற்றம் சுமத்துவது மற்றும் துன்பத்தின் சுழற்சியை உடைக்கிறது.**

நாம் நேர்மையாக இருந்தால், ஒருவர் செய்த குற்றங்களுக்கு தொடர்ந்து குற்றம் சொல்வது எவ்வளவு வேதனையானது என்பதை நாம் ஒப்புக்கொள்வோம். இது குற்றத்தை விட வேதனையானது. இது குற்றவாளிக்கும் கூட வேதனையாக இருக்கிறது, குறிப்பாக அவர்கள் செய்த தவறுக்கு பிராயச்சித்தம் செய்ய நினைத்தாலும், மன்னிப்பை அளிப்பது கடினமாக இருக்கலாம். ஏனென்றால், அது குற்றம் மற்றும் நியாயத்தின் அனைத்து கேள்விகளையும் தீர்க்காது; மாறாக, மன்னிப்பு நீட்டிக்கப்படும்போது இதுபோன்ற கேள்விகள் பொருத்தமற்றதாகிவிடும். மன்னிப்பு சச்சரவிலிருந்து வெளியேற வழி செய்து, ஒரு உறவை மீண்டும் தொடங்க அனுமதிக்கிறது.

யோசேப்பின் வாழ்க்கை, ஆதியாகமம் 37-45 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது, மன்னிக்கும் ஆற்றலை அழகிய விதத்தில் நிரூபிக்கிறது. நீங்கள் யோசேப்பின் கதையைப் படிக்கவில்லை என்றால், அதை படிக்க நான் பரிந்துரைக்கிறேன். யோசேப்பு தவறாக புரிந்து கொள்ளப்பட்டார், தவறாக நடத்தப்பட்டார், காட்டிக்கொடுக்கப்பட்டார், கைவிடப்பட்டார், மேலும் அவரது சொந்த சகோதரர்களால் அடிமைத்தனத்திற்கு விற்கப்பட்டார். அவர் சகித்த அனைத்தையும் பொருட்படுத்தாமல், அவர் கசப்பான வேர் தனது வாழ்க்கையைப் பிடிக்க அனுமதிக்க மறுத்துவிட்டார். பல வருட பிரிவினைக்குப் பிறகு, தனது சகோதரர்களுடன் மீண்டும் இணைவதற்கு சற்று முன்பு, தேவன் தனது முதல் மகனுக்கு மனாசே மற்றும் அவரது இரண்டாவது மகனுக்கு எப்பிராயீம் என்று பெயரிடுவதன் மூலம் தேவன் தனது வாழ்க்கையில் வலிகளை ஆற்றும் செயலுக்கு சாட்சி பகறுகிறார்.

ஆதியாகமம் 41: 51-52 ஐ வாசிக்கவும். இந்த இரண்டு பெயர்களின் அர்த்தம் என்ன?

____________________________________________
____________________________________________
____________________________________________

மறந்து விடுதல் என்பது நினைப்பதை நிறுத்திவிடு, என்ற இந்த அர்த்தத்தில் சொல்லப்படவில்லை, மாறாக விட்டுவிடு, அதாவது உங்கள் தற்போதைய வாழ்க்கையை ஆளுகை செய்கிற புண்படுத்தக் கூடிய நினைவுகளை நிறுத்திக் கொள்வதாகும். யோசேப்பு தன் சகோதரர்களால் மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டார். அவர்கள் மீது கசப்பு உணர்வுகளால் கோபம் கொள்வதற்கு பதிலாக, அவர் எகிப்தில் தனிமையாக இருந்த காலங்களில் உடைக்கப்பட்ட இருதயம் குணமாகும்படி தேவனுக்கு தன்னை ஒப்புக் கொடுத்தார். யோசேப்பின் கனிகள் நிறைந்த வாழ்க்கை அவரது புண்படும் நினைவுகளை நினைக்காமல் இருப்பததற்கு நேரடி தொடர்புடையதாயிருக்கிறது. அவர் தனது உணர்வுகள், உணர்ச்சிகள் மற்றும் அவரது கடந்த காலம் அனைத்தோடும் தேவன் மீது நம்பிக்கை வைக்க தெரிந்து கொண்டார். அவருக்கு வாய்ப்பு கிடைத்தபோது, தனது சகோதரர்களுக்கு அன்பு, மன்னிப்பு மற்றும் கருணை ஆகியவற்றை காண்பித்தார்.

ஆதியாகமம் 45: 5-8 -ஐ வாசியுங்கள். யோசேப்பு தனது சகோதரர்களிடம் என்ன சொன்னார்?

____________________________________________
____________________________________________
____________________________________________

ஆதியாகமம் 45:15 படிக்கவும். யோசேப்பு என்ன செய்தார்?

____________________________________________
____________________________________________
____________________________________________

யோசேப்பு அவர்களைக் குற்றஞ்சாட்டவோ அல்லது விளக்கம் கோரவோ இல்லை; அவர் அவர்களுக்கு இரக்கத்தையும், மன்னிப்பையும் வழங்கினார். மன்னிப்பானது யோசேப்பும், அவரது சகோதரர்களும் மீண்டும் ஒன்றிணைந்து புதிய உறவைத் தொடங்க வழி வகுத்தது.

**மன்னிப்பு குற்றவாளியின் குற்றச் சுமையை நீக்குகிறது.**

ஆதியாகமம் 50:15 படிக்கவும். யோசேப்பின் சகோதரர்கள் எதற்கு பயந்தார்கள்?

________________________________________

________________________________________

________________________________________

ஆதியாகமம் 50: 19–21 இல் யோசிப்பு எவ்வாறு பதிலளித்தார்?

________________________________________

________________________________________

________________________________________

சகோதரர்கள் தங்கள் வருத்தத்தையும் குற்றத்தையும் தங்கள் கல்லறை வரைக்கும், எடுத்துச் சென்றிருப்பார்கள், ஆனால் யோசேப்பு அவர்களிடம் மன்னிப்பைக் காண்பித்தார். பெற்றுக்கொள்ள முடியாத, இயலாத மற்றும் தகுதியற்ற, அவர்களுக்கு குற்றத்தை நீக்கி அவர்களின் உறவை மீட்டெடுத்தது அவருடைய மன்னிப்புதான் என்பதை அறிந்து கொள்ள முடிகிறதா?

***அடிப்படை சத்தியம்***

தேவன் அனைவரையும் மன்னிக்கும்படி கூறுகிறார். கீழ்ப்படிபவர்கள் அவருடைய குமாரனின் சாயலைத் தாங்கி, மீண்டும் புதுப்பித்தல் மற்றும் ஒப்புரவு ஆகியவைகளை ஆரம்பிக்க அனுமதிக்கிறார்கள்.

பாவம் உலகத்திற்குள் வந்தபோது நாம் யாவரும் நம்முடைய நித்தியத்தை குற்றத்தோடும் அவமானத்தோடும் கழிக்க வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டோம், ஆனால் தேவனோ, நம்முடைய குற்றத்தை நீக்கவும் அவரோடு கூட உள்ள உறவைப் புதுப்பிக்கவும், இயேசு கிறிஸ்துவை அனுப்பி நம்மை மன்னிக்கும்படி தம் கரத்தை நீட்டினார். நீங்கள் கிறிஸ்துவின் மூலம் பெற்றுக்கொண்ட மன்னிப்பிற்கு தகுதியானவர்களா?

## பாடம் 4

## மன்னிக்காததின் விலைக்கிரயம்.

மன்னிப்பு இலவசம் என்றாலும், அதற்கு மாற்றாக இருப்பதின் விலை அதிகம். மன்னிப்பு வழங்க மறுப்பது தவறு செய்ததற்கான கிரயத்தைக் கோரும் உரிமையைப் பராமரிக்கத் தேர்ந்தெடுப்பதாகும். மன்னிக்க விரும்பாதது கசப்பு மற்றும் மனக்கசப்பில் முடிகிறது.

மனக்கசப்பு கடந்த காலத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கிறது, அதை மீண்டும் மீண்டும் நினைவூட்டுகிறது. ஒரு சிரங்கு தினவு எடுப்பது போல், மனக்கசப்பு காயங்களை குணப்படுத்துவதைத் தடுக்கிறது. கசப்பு என்பது அதை கையாளும் அனைவரையும் பாதிக்கும் ஒரு விஷம். உங்கள் இருதயத்தில் கசப்பு இருந்தால் உங்களையும் பாதித்து, உங்கள் ஒவ்வொரு உறவையும் தொடர்ந்து பாதிக்கும். இத்தகைய நோய்க்கான மாற்று மருந்து மன்னிப்பு மட்டுமே.

கசப்பு பற்றி எபிரேயர் 12:15 என்ன சொல்கிறது?

*கசப்பு-* கடுமையாக நிந்திக்கப்படக்கூடிய நிலை; விரோதம் அல்லது கொடுமையால் வகைப்படுத்தப்படும்.

*மனக்கசப்பு-*தவறு, அவமதிப்பு அல்லது அது போன்ற ஏதோவொன்றின் காரணமாக உணர்ச்சியை உணரும் நிலை, அஜாக்கிரதையின் உணர்வு, அடிக்கடி விரோதம், பகை, வெறுப்புடன் தொடர்புடையது.

*கடும் சினம்-* வன்முறை கோபம்; ஆழ்ந்த மற்றும் உறுதியான கோபம்; அடிக்கடி எரிச்சலூட்டும் கோபம்,

*கோபம்*-எரிச்சல்; ஒரு விசித்திரமான உணர்வு அல்லது அதிருப்தி உணர்வு.

*தீமை பேசும் பேச்சு* -புண்படுத்தும், தவறான, புண்படுத்தும் மற்றும் விரும்பத்தகாத பேச்சு; பேரிடர், துக்கம், துன்பம் ஆகியவற்றை உருவாக்குகிறது.

*தீங்கிழைக்கும் விருப்பம்*; சட்டவிரோதமான செயலைச் செய்யும் நோக்கத்தால் வெளிப்படும் மனநிலை; தீங்கு.

_______________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________கசப்பு இருதயத்தில் வேரூன்றி, வளர்ந்து, சிக்கலை ஏற்படுத்தும் கசப்பான கனியை உற்பத்தி செய்கிறது. ஒரு உறவை கெடுப்பதோடு, தேவன் நம் வாழ்வில் உற்பத்தி செய்ய முடிவு செய்யும் நல்ல கனியின் வளர்ச்சியைத் தடுக்கிறது.

எபேசியர் 4:31 -ஐ வாசியுங்கள். கசப்புணர்வைக் கொண்டிருக்கும் ஒருவரின் இருதயத்தில் என்ன ஆதாரம் உள்ளது?

____________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________

## மன்னிக்காமல் இருப்பதின் கனிகள்

பின்வரும் பண்புகளில் ஏதேனும் உங்கள் வாழ்வில் தெரிகிறதா? நீங்கள் அடையாளம் காணுகின்ற ஒன்றுக்கு அடையாளக் குறியை வையுங்கள்.

- பெருமை
- சுய நீதி
- சுய பரிதாபம்
- உணர்ச்சி உறுதியற்ற தன்மை

- கவலை, பதற்றம் மற்றும் மன அழுத்தம்
- உடல்நலப் பிரச்சினை
- உணவுக் கோளாறுகள்
- உறவுகளில் நம்பிக்கை இல்லாமை
- திருமணத்தில் நெருக்கம் இல்லாமை
- பாலியல் செயலிழப்பு
- நியாதீர்ப்பு செய்தல் மற்றும் மற்றவர்களை விமர்சித்தல்
- சீக்கிரம் உணர்ச்சி வசப்படுதல் மற்றும் எளிதில் புண்படுதல்
- அமைதி மற்றும் மகிழ்ச்சி இல்லாதது
- இயேசுவுடனான நட்பை முறித்துக் கொள்வது.

***அடிப்படை சத்தியம்***

மன்னிக்காதது கசப்புக்கு வழிவகுக்கிறது, மற்ற உறவுகளைத் தீட்டுப்படுத்துகிறது, மற்றும்மனித இருதயத்தை தொந்தரவு செய்கிறது.

மன்னிக்காததினால் உண்டாகும் விளைவுகளை குறித்து இயேசு கிறிஸ்து தம் சீஷர்களோடு பகிர்ந்துகொண்ட உவமை. மத்தேயு 18: 21-35 ஐ படிக்கவும்.

27 ஆம் வசனத்தில் வேலைக்காரன் மீதான எஜமானரின் மனநிலை என்ன?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

28 வது வசனத்தில் வேலைக்காரன் தன் சக ஊழியரை எப்படி நடத்தினான்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

வசனங்கள் 34 ன் படி, எஜமான் தனது வேலைக்காரன் மன்னிக்க விரும்பாததற்கு எப்படி பதிலளித்தார்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

35 வது வசனத்தில் இயேசு எச்சரித்ததென்ன?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

சிலுவையையும், கிறிஸ்துவிடம் இருந்து நாம் பெற்ற மன்னிப்பையும் இரட்சிப்பையும் பற்றி சிந்தியுங்கள். மற்றவர்களுக்கு மன்னிப்பு வழங்க மறுக்கும் அதேவேளையில், நாம் எப்படி கிறிஸ்துவினுடைய மன்னிபைப் பெற முடியும்?

இந்த உவமை, கிறிஸ்துவில் மறுபடியும் பிறந்த அனுபவமுள்ள ஒரு தேவனுடைய பிள்ளை, மன்னிக்க விரும்பவில்லை என்றால் நித்திய அழிவை அனுபவிப்பார் என்று கற்பிக்கவில்லை; இருப்பினும், அவர்கள் மன்னிக்காததால் கடந்த கால வலியை மீண்டும் மீண்டும் சிந்திக்க வைக்கும் ஒரு நிலையான சுழற்சியில் சிக்கி கொள்ளும் சிறையில் அடைக்கப்படுவார்கள் என்று அது போதிக்கிறது. நம்மாலும் மற்றவர்களாலும் ஏற்படும் வலியிலிருந்து விடுபட முடியுமா? பாவம் மற்றும் முறிவு நிறைந்த உலகில் நாம் எப்படி மற்றவர்களுடன் இணக்கமாக வாழக் கூடும்?

## பாடம் 5

### உங்கள் அண்டை வீட்டாரை எப்படி நேசிப்பது.

**பிறனை நேசி**

நாம் ஒருவருக்கொருவர் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதற்கான தெளிவான வழிமுறைகளை பரிசுத்த வேதம் வழங்குகிறது.

மத்தேயு 22: 37-40 -ஐ வாசியுங்கள். இயேசுவின் கூற்றுப்படி, இரண்டு பெரிய கட்டளைகள் யாவை?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

உங்களை நேசிக்கிறது போலவே மற்றவர்களையும் நேசிக்க வேண்டியது முக்கியம் என்று இயேசுவே சொன்னார், இதில் எது உங்களுக்கு எளிதானது? அந்தக் கேள்வியின் சொல்லாடல் உண்மை என்றாலும். உன்னை முதலாவது உண்மையாகவும் எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல் உங்களுக்கு பதிலாக தம்முடைய ஜீவனையும் கொடுக்கத்தக்கதாக நேசித்தவரை நீங்கள் நேசிப்பது கடினமல்ல. ஆனால் உங்களை தொடர்ந்து தோல்விக்கு உட்படுத்துகிற, நிபந்தனையின் அடிப்படையில் உண்மை இல்லாமல் நேசிக்கிற ஒருவரை நேசிப்பது இயல்பாகவே, தானாகவே வலியை உண்டு பண்ணுமல்லவா? இது சுலபமானதா?

1 யோவான் 4: 19–21 ஐ சுருக்கமாக விவரிக்கவும்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

நாம் கற்றுக்கொள்ளும் முதல் காரியம் என்னவென்றால், தேவனின் மீதான நம் அன்பு, அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பின் பிரதிபலிப்பாகும். இரண்டாவது விஷயம் என்னவென்றால், தேவனை நேசிப்பது மற்றவர்களை நேசிப்பதை உள்ளடக்கியது. அவர் உங்கள் வாழ்க்கையில் வைத்திருக்கும் மக்களை நேசிக்காமல் தேவனின் அன்பை நீங்கள் கோர முடியாது.

ரோமர் 13: 8-10 -ஐ வாசியுங்கள். இந்த வசனங்களில் உங்களுக்கு என்ன தெரிகிறது?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

ஒரு கிறிஸ்தவராக, நீங்கள் உங்கள் அயலானை நேசிக்க கடமைப்பட்டிருக்கிறீர்கள். நீங்கள் அதை கருத்தில் கொண்டீர்களா? கிறிஸ்து சிலுவையில் அந்தக் கடனைச் செலுத்தியதால் நீங்கள் இனி உங்கள் பாவங்களுக்குக் கடன்பட்டிருக்க மாட்டீர்கள். ஆனால் அவருடைய இரட்சிப்பைப் பெறுவதன் மூலம், உங்கள் அயலானை நேசிப்பதற்கு கடன்பட்டு இருக்கிறீர்கள். நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கலாம், *நிச்சயமாக என் பக்கத்து வீட்டுக்காரர் இந்த நபர் அல்லது அந்த நபர் என்று யாரையும் குறிப்பிட்டு கூறப்படவில்லை. எல்லாவற்றிற்கும் மேலாக, அவர்கள் எனக்கு என்ன செய்தார்கள் என்று பார்க்க வேண்டும்!*

மத்தேயு 5: 43–48 ஐ சுருக்கவும்.

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

உங்கள் அன்பை யாரால் தடுத்து நிறுத்த முடியும்? பதில் ஒருவரும் இல்லை. எல்லோரையும் நேசிப்பதற்கு கடன் பட்டிருக்கிறோம். ஏன்?

கீழே 1 கொரிந்தியர் 6:20 ஐ எழுதுங்கள்.

நீங்கள் எந்த சாக்குபோக்கும் இல்லாமல், கிறிஸ்துவை மகிமைப்படுத்தி, பிரதிபலிக்க வேண்டும். அன்பற்ற அல்லது கிறிஸ்துவைப் போல் இல்லாமல், மற்றவர்களிடம் நெருங்க தயக்கம் காட்டுவது, ஏற்றுக் கொள்ளக் கூடிய செயல் அல்ல, ஆகவே, அவர்கள் தேவனிடத்திலும் மற்றவரிடத்திலும் மன்னிப்பு கேட்கப்படவேண்டியவர்கள்.

மத்தேயு 5: 23-24 இல் இயேசு என்ன கற்பித்தார்?

நாம் எப்போது பலிபீடத்திற்கு செல்கிறோம்? இது இயேசுவுடனான நமது ஐக்கியத்தையும், - ஜெபம் மற்றும் வழிபாடுகளில் நமது நேரம் மற்றும் அவருடைய நாமத்தில் செய்யப்படும் எந்த சேவைச் செயல்களையும் குறிக்கிறது. மற்றவர்களுடனான நமது உறவுகள் அவருக்கு எவ்வளவு முக்கியம் என்பதை இயேசு கற்பித்தார். இது அவரோ நாமோ லேசாக எடுத்துக்கொள்ளும் விஷயம் அல்ல. நீங்கள் யாரிடத்திலாவது மன்னிப்பு கேட்க வேண்டுமா? அல்லது நீங்கள் யாரையாவது மன்னிக்க வேண்டுமா? இந்த தருணத்தில் அவர்களுடன் ஒப்புரவாகும்படி இயேசு உங்களுக்கு அறிவுறுத்துகிறார்.

**ஒப்புரவாகுதல்**

மனிதனுடைய வீழ்ச்சிலிருந்து தகர்க்கப்பட்ட அனைத்துமே புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதுதான், தேவனுடைய இருதயத்தின் விருப்பமாய் இருக்கிறது. கிறிஸ்து, இந்த பூமிக்கு வந்ததற்குக் காரணம் – பாவத்தினிமித்தம், தேவனுக்கும், அவருடைய சிருஷ்டிப்புக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைக்கவேயாகும். கிறிஸ்துவின் மூலம் தேவனுக்கும் மனிதகுலத்துக்கும் இடையிலான உறவு ஒப்புரவாக்கப்பட்டது.

தேவனுடனான ஒப்புரவு என்கிற உறவு, நாம் பெறும் மிகப் பெரிய பரிசு, மற்றும் அது தேவனின் இருதயத்தின் மிகப்பெரிய ஆசை, ஆனால் இந்த உறவின் மறுசீரமைப்பு ஒரு ஆரம்பம்தான்.
எபேசியர் 4: 31 -32 ஐ வாசிக்கவும். மற்றவர்களுடனான நமது உறவுகளுக்கு தேவனின் விருப்பம் என்ன?

*ஒப்புரவாகுதல்*- மீண்டும் அனுகூலம் அல்லது சமாதானம் நட்பு ஆகியவைகளை புதுப்பித்தல்; நல்லிணக்கத்தை திரும்பப் பெறுதல், மீண்டும் அடைதல், ஐக்கியத்தை மீட்டெடுத்தல்.

அநேக கிறிஸ்தவர்கள், யாரோ ஒருவரிடம் கசப்பு, மனத்தாங்கல் அல்லது மன்னிக்கக் கூடாமல் இருப்பார்கள். இந்த உணர்வுகள் அவர்கள் பெற்ற வலிக்கு ஒரு தர்க்கரீதியான உணர்ச்சிப்பூர்வமான பதில் என்று முடிவு செய்வது எளிது. ஒருவேளை அவர்களை காயப்படுத்திய நபர் அவர்கள் செய்ததற்குப் போதுமான துன்பத்தை அனுபவிக்காமலோ, அல்லது அவர்களின் நடத்தைக்கு போதுமான பொறுப்பை ஏற்காமலோ இருக்கலாம். அவர்கள் தங்கள் காயமடைந்த

நிலையை நியாயப்படுத்த முயற்சி செய்யலாம், மற்றும் அவர்கள் அனுபவித்த கஷ்டங்களுக்கு மற்றவர்களிடம் அனுதாபம் தேடலாம். ஆனால் அவைகளை உங்களால் தொடர்பு படுத்த முடியுமா?

> நான் எந்த அளவிற்கு மற்றவர்களை மன்னிக்கத் தயாராக இருக்கிறேனோ, அந்த அளவிற்கு தான், என் தந்தையாகிய தேவனிடத்தில் மன்னிப்பை நான் தனிப்பட்ட முறையில் அனுபவித்திருக்கிறேன், என்பதற்கான தெளிவான அளவுகோலாக இருக்கிறது. - பிலிப் கெல்லர்

உங்கள் வாழ்க்கையில் கடந்த கால மற்றும் நிகழ்கால உறவுகளைக் கருத்தில் கொள்ளுங்கள். நீங்கள் ஒப்புரவாகாத மனிதர்கள் யாராவது இருக்கிறார்களா? நீங்கள் காயப்படுத்தியவர்கள், அல்லது புண்படுத்தியவர்கள் யாராவது இருக்கிறார்களா? அப்படி நினைவுக்கு வருகிறவர்கள் யார்?

உங்கள் இருதயத்தில் கசப்பு, மனக்கசப்பு, அல்லது மன்னியாமை, இருப்பதை நீங்கள் உணர்ந்தால், அதற்கான ஆதாரம் என்னவென்று உறுதியாகத் தெரியாவிட்டால், உங்கள் எண்ணங்களை கீழே எழுதுங்கள்.

மன்னிப்பு, மற்றும் ஒப்புரவாகுதல், ஆகிய இரண்டும் வெவ்வேறு விஷயங்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். மன்னிப்பு என்பது உங்களுக்கு வலியை ஏற்படுத்திய எவருக்கும் வழங்கப்படலாம். ஆனால் தெய்வீக ஒப்புரவாகுதல் என்பது ஏற்கனவே முறிந்த உறவை மீண்டும் அடைவதற்கானது. அந்நியர்களுடன் அல்லது சாதாரணமாக நட்பில் உள்ளவர்களோடு ஒப்புரவாகுதல் என்பது தேவையில்லாதது.

சில ஒப்புரவாக்கப்பட்ட உறவுகளுக்கு, அறிவுபூர்வமான எல்லைகள் தேவைப்படுகிறது. மன்னிப்பு, மற்றும் ஒப்புரவாகுதல், நிச்சயமாக மற்றவர்கள் உங்களை அற்பமாகவும், கடினமாகவும் நடத்தவே விடாது. உங்களை காயப்படுத்தியவர்களால், நீங்கள் அவர்களை மன்னித்தப்பின்பும், தொடர்ந்து உணர்ச்சி அல்லது உடல் ரீதியான வலியை ஏற்படுத்தகூடும். உங்கள் உணர்ச்சி, மற்றும் உடல் நலத்திற்கு தேவையான வரம்புகளை ஏற்படுத்துவது அவசியம். வெற்றிகரமான ஒப்புரவாகுதல், சமாதானம், மற்றும் தயவுடன் கூடியதாக இருக்கும். ஆனால் அறிவு பூர்வமற்ற, ஒப்புரவாகுதல் வலியையும் வேதனையும், கொடுக்கக் கூடியதாக இருக்கும். உங்கள் ஒப்புரவாக்கப்பட்ட, உறவுகளுக்கு புத்திசாலித்தனமான வரம்புகளை ஏற்படுத்த, உதவி தேவைப்பட்டால், உங்கள் போதகர் அல்லது முதிர்ந்த கிறிஸ்தவ நண்பரிடம் ஆலோசனை பெறவும்.

**பாடம் 6**

**மன்னிப்புக்கான படிகள்.**

**நீங்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்றால்**

உங்கள் பாவத்தால் பாதிக்கப்பட்டுள்ள, உங்கள் வாழ்க்கையில் ஒப்புரவாகப்படாத உறவுகளை வெளிப்படுத்தும்படி, பரிசுத்த ஆவியானவரிடம் கேளுங்கள். நீங்கள் மற்றவர்களுக்கு, எப்படி வலியை ஏற்படுத்தினீர்கள் என்பது பற்றி தற்போது உங்களுக்கு தெரியாமல் இருக்கலாம், என்பதை நினைவில் கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியானவர் உங்கள் பாவங்களில் உங்கள் கடந்தகாலம், நிகழ்காலம் அல்லது எதிர்காலத்தில் ஏதேனும் ஒரு தருணத்தில் உங்கள் பாவத்தை வெளிப்படுத்தினால், நீங்கள் உங்களைத் தாழ்த்தி இந்தப் படிகளைப் பின்பற்ற வேண்டும்.

**படி 1: உங்கள் பாவத்தை தேவனிடம் ஒப்புக் கொள்ளுங்கள், உங்களை மன்னிக்கும்படி அவரிடம் கேளுங்கள்.**

1 யோவான் 1: 9 -ஐ வாசியுங்கள். நாம் அவரிடம் நம் பாவங்களை ஒப்புக்கொள்ளும்போது தேவன் எவ்வாறு பதிலளிப்பார்?

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

சங்கீதம் 103: 12 -ஐ வாசியுங்கள். அவர் நம் பாவத்தை என்ன செய்கிறார்?

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

இப்பொழுது தேவனுடைய சமூகத்தில் கதறி அழ நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய குறிப்பிட்ட பாவத்தை மன்னிக்கும்படி கேளுங்கள். விசுவாசத்தினாலே, தேவனுடைய முழுமையான மன்னிப்பையும், பரிசுத்தமாக்கப்படுதலையும், பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் இருதயத்தை அவருடைய அன்பினால் நிரப்பவும், அடுத்த கட்டத்திற்கு கீழ்ப்படிவதற்கான, வலிமையையும் விருப்பத்தையும் அருளவும், பரிசுத்த ஆவியானவரைக் கேளுங்கள்.

**படி 2: நீங்கள் தவறு செய்த நபரிடம் பணிவுடன் வருத்தம் தெரிவித்து, அவர்களிடம் மன்னிப்பு கேட்கவும்**.

ஆங்கில மொழியில் மிகவும் சக்திவாய்ந்த சொற்றொடர்களில் ஒன்று தான் "நான் தவறு செய்தேன். தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள்." உங்களால் முடிந்தால், இந்த வார்த்தைகளை நேருக்கு நேர் பகிர்ந்து கொள்ள நான் உங்களை ஊக்குவிக்கிறேன். இது மிகவும் கடினமாக இருக்கலாம், ஆனால் இது பொதுவாக மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இருப்பினும், தயக்கம் இருக்கும் பட்சத்தில் நீங்கள் தொலைபேசி மூலமாகவோ, அல்லது தேவன் நமக்கு கட்டளையிட்டிருக்கிற வார்த்தைகளை எழுதுவதின் மூலமாகவோ, தற்பொழுது நமக்கு இருக்கக்கூடிய தொடர்பு கொள்வதற்கு, ஏதுவான ஒரு நவீன, சரியான தகவல் தொடர்புகள் மூலமாக செய்யலாம்; நாம் துன்பப்படுத்தின யாரிடமாவது தாழ்மையோடு மன்னிப்பு கேட்பதற்கு, தாமதப்படுத்துவதற்கு ஏதுவாக நமது பெருமையோ, கவன சிதறல்களோ, அல்லது வேறு ஏதாவது தடைகளையோ, இந்தக் கீழ்ப்படியும் செயலை தாமதப்படுத்தும்படி அனுமதிக்கக் கூடாது.

> **அடிப்படை சத்தியம்**
>
> தேவனுடைய வார்த்தை, நாம் புண்படுத்திய எவரிடமும் சென்று பணிவுடன் மன்னிப்பு கேட்கும்படி கட்டளையிடுகிறது.

நீங்கள் தவறு செய்தவர்களிடத்தில், ஒப்புரவாகுவதற்கு ஏதுவானவற்றை பின்பற்ற உங்களுக்கு இன்னும் உதவி தேவைப்படும்போது, உங்களோடு ஜெபிப்பதற்கு, ஒரு நம்பகமான கிறிஸ்தவ நண்பனை கேட்டுக் கொள்ளுங்கள்.

**நீங்கள் மன்னிக்க வேண்டும் என்றால்**

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் கசப்பைக் கொண்டிருக்கும் யாராவது ஒரு நபரை, வெளிப்படுத்த பரிசுத்த ஆவியானவரைக் கேளுங்கள். உங்கள் இருதயம் குணப்படுத்தப்பட, தேவனை அனுமதிப்பதற்கு, நீங்கள் உங்களைத் தாழ்த்தி இந்த படிகளைப் பின்பற்றுங்கள்.

**படி 1: கீழ்ப்படிதலுடன் மன்னிக்கும் வலிமையை தேவனிடம் கேளுங்கள்.**

1 யோவான் 5:14 மற்றும் மத்தேயு 21:22 ஆகியவற்றிலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

விசுவாசத்தோடு "அவருடைய சித்தப்படி நீங்கள் எதைக் கேட்டாலும்", அதைப் பெறுவீர்கள். என்று கர்த்தருடைய வாக்குதத்தம் சொல்லுகிறது. மன்னிக்கும் இருதயம், தேவன் உங்களுக்கு கொடுக்க விரும்பும் ஒரு பண்பு, ஆனால் நீங்கள் அதைக் கேட்க வேண்டும். இது இயற்கையாக வருவதில்லை, மற்றும் சில சமயங்களில் மிகவும் கடினமாக இருக்கும், ஆனால் தேவன் உங்களுக்குக் கீழ்ப்படியத் தேவையான பலத்தை அளிப்பார் என்ற வாக்குறுதியில் உண்மையாக இருப்பார்.

**படி 2: உங்கள் மன்னிப்பைத் தொடர்பு படுத்துங்கள்.**

மன்னிப்பு என்ற சொல் ஒரு வினைச்சொல், அதாவது அதற்கு நடவடிக்கை தேவை. இது முனைப்பற்ற, தனியாக செய்யப்படும் வாய்மொழி வெளிப்பாடு அல்ல. ஒரு பரிசு அளிப்பது போல இது ஒரு குறிப்பிட்ட நபருக்கு கொடுக்கப்பட வேண்டியது. ஒருவருக்கு பென்சில் கொடுப்பது போல் சிந்தியுங்கள். நான் பீட்டருக்கு இந்த பென்சிலைக் கொடுக்கிறேன், என்று எனக்குள்ளே சொல்லிக்கொள்கிறேன் ஆனால் நான் உள்ளபடியே பீட்டருக்கு பென்சில் கொடுக்கவில்லை, அப்படியானால் நான் பீட்டருக்கு பென்சில் கொடுத்தேனா? சுத்தமாக கொடுக்கவில்லை. பீட்டருக்கு பென்சில் கொடுக்க நினைக்கும் வரை நான் காத்திருக்க தேவையில்லை. நான் கொடுக்கும் முன் அவர் பென்சிலுக்கு தகுதியானவர் என்று நான் நினைக்கும் வரை நானும் காத்திருக்க வேண்டியதில்லை. உண்மை என்னவென்றால், நான் பீட்டருக்கு பென்சில் கொடுக்க வேண்டும் என்று தேவன் கட்டளையிடுகிறார். முழுவதும் கீழ்ப்படிந்து வாழ்வதோ அல்லது தொடர்ந்து கசப்பை பின்பற்றி பென்சிலை எனக்கு நானே வைத்துக் கொள்வதோ முழுப் பொறுப்பும் என்னிடத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது.

மன்னிப்பது எளிதான காரியம் அல்ல; எனவே, நீங்கள் தனியாக நிற்க முயற்சிக்கக்கூடாது. தேவனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து மன்னிக்க அர்ப்பணிக்கும்படி ஒரு முதிர்ந்த கிறிஸ்தவ நண்பரின் ஆதரவையும் பொறுப்பையும் தேடுங்கள்.

> மன்னிப்பு என்பது ஒரு உணர்வு அல்ல… மன்னிப்பு என்பது விருப்பத்தின் செயல், மற்றும் இருதயத்தின் மனநிலையை பொருட்படுத்தாமல் விருப்பம் செயல்பட முடியும். - கோரி டென் பூம்

**படி 3: கசப்பை தனக்குள்ளேயே அடக்கி வைத்ததற்காக மன்னிப்பு கேட்கவும்**.

உங்களுக்கு எதிராக செய்யப்பட்ட பாவம் மன்னிக்க முடியாததை நியாயப்படுத்தாது. மன்னிக்க மறுப்பது, உங்கள் இருதயத்தில் கசப்பு மற்றும் மனக்கசப்பைத் தக்கவைத்துக்கொள்வது பாவத்திற்கு சமமானது மற்றும் உண்மையான ஒப்புரவாகுதலுக்காக மனந்திரும்ப வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில், தயக்கம், பயணச் செலவு, உங்களுக்குப் பாதுகாப்பு, அல்லது மற்றவர் நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லும் அளவுக்கு அமைதியாக இருக்கும் திறன் காரணமாக, ஒரு கடிதம், மின்னஞ்சல் அல்லது தொலைபேசி அழைப்பு உங்கள் மன்னிப்பைத் தொடர்பு கொள்வதற்கான சிறந்த வழியாக இருக்கலாம்.

எழுதும் போது அல்லது பேசும்போது இந்த விஷயங்களை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்:

1. உங்களை நேசிக்கும் மற்றும் அக்கறை கொள்ளும் உங்கள் பரலோகத் தந்தைக்குக் கீழ்ப்படிந்து இதைச் செய்கிறீர்கள். உங்கள் இருதயத்தில் ஏற்பட்ட காயம் மற்றும் மன்னிக்காதின் விளைவாக நீங்கள் அனுபவிக்கும் அடிமைத்தனம் மற்றும் ஒடுக்குமுறையிலிருந்து நீங்கள் விடுபட வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

2. உங்களுக்கு எதிராக செய்யப்பட்ட குற்றத்தின் ஒவ்வொரு விவரத்தையும் நீங்கள் ஒத்திகை பார்க்க வேண்டியதில்லை. இது அப்பட்டமான பாவமாக இருந்தால், உங்களுக்கு குற்றம்புரிந்தவர் பெரும்பாலும் விவரங்களை அறிந்திருப்பார். குற்றவாளி தாங்கள் ஏற்படுத்திய காயத்தை அறியாமலிருக்கும் சூழ்நிலைகளும் உள்ளன. பெற்றோருக்கும் அவர்களின் பிள்ளைகளுக்குமான உறவுகளில் இது பொதுவாக காணப்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் கூட, அதை சுருக்கமாக வைத்திருங்கள். நீங்கள் ஏன் மன்னிக்க வேண்டும் என்பதற்கான அனைத்து காரணங்களுக்கும் விரிவான விளக்கத்தை வழங்குவது முக்கியமல்ல.

3. மற்றவர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்த முயற்சிக்காதீர்கள். தேவன் உங்களை மன்னிக்கும்படி அழைத்திருக்கிறார், ஒரு வழக்கறிஞராகவோ, நடுவர் அல்லது நீதிபதியாகவோ இருப்பதற்கு அல்ல. உங்கள் கீழ்ப்படிதலின் காரணமாக உங்களின் குணப்படுத்துதல் தேவனிடமிருந்து வரும், தங்கள் தவறை ஏற்றுக் கொள்ளவோ அல்லது ஏற்றுக் கொள்ளாமலோ இருக்கிற மற்ற நபர்களிடத்திலிருந்து அல்ல.

4. இதை சுருக்கமாக வைக்கவும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், அதிகபடியான உணர்ச்சிகளின் காரணமாக, திட்டமிடப்படாத விஷயங்களைச் சொல்வது எளிது அது சந்திப்பு, கடிதம், அல்லது உரையாடலின் நோக்கத்தை குறைத்து மதிப்பிடுவதற்கு உட்படுத்தக்கூடியதாகும்.

> ***அடிப்படை சத்தியம்***
>
> தேவனுடைய வார்த்தை, விசுவாசிகள் தங்களை காயப்படுத்திய அல்லது தவறு செய்த மற்றவர்களை தாழ்மையுடன் மன்னிக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறது.

நீங்கள் ஒருவரிடத்திலிருந்து மன்னிப்பை பெற வேண்டும், அல்லது ஒருவரை மன்னிக்க வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு வெளிப்படுத்தியிருந்தார் என்றால், இப்போது அதை வெளிப்படையாகக் கூறி, நீங்கள் தொடர்பு கொள்ளும், தேதியைக் குறிப்பிடுங்கள், நீங்கள் புண்படுத்திய, அல்லது அவர்களுக்கு அநீதி இழைத்ததற்கு உங்களை பொறுப்பேற்க முயன்று, மன்னிப்பு, மற்றும் ஒப்புரவாகுதலுக்கான தேவனின் கட்டளைக்கு கீழ்ப்படிய அர்ப்பணியுங்கள்.

## பாடம் 7

### மன்னிக்க வேண்டும் என்ற உங்கள் அர்ப்பணிப்பை காத்துக் கொள்ளுதல்.

மன்னிப்பு மற்றும் ஒப்புரவாகுதலுக்கான, தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து செயல்படுபவர்கள், புரிந்துக்கொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், நாம் பெறப்போகும் மன்னிப்போ, அல்லது கொடுக்கப்போகும் மன்னிப்போ, ஒரு புதிய தொடக்கத்தின் அடையாளமாக இருக்கிறது. நாம் ஒன்றும் கணினிகள் அல்ல. நம் மனம் மற்றும் நடத்தைகளுக்கு "புதுப்பித்தல்" பொத்தான் அல்லது "கண்ட்ரோல்-ஆல்ட்-டெலிட்" இல்லை. உங்கள் கீழ்ப்படிதலைப் பேணுவதற்கு, சுய கட்டுப்பாடு, ஒழுக்கம் தேவன், மற்றும் அவரது வார்த்தை மீதான உங்கள் தாழ்மையான நம்பிக்கை, உங்கள் இருதயத்தில் தொடர்ந்து இடம்பெற வேண்டும்.

**மன்னிக்கப்பட்டவர்கள்**

கர்த்தருக்கு முன்பாக உங்கள் தோல்விகளை ஒப்புக்கொள்ள போதுமான அளவு உங்களைத் தாழ்த்துவது, மற்றும் நீங்கள் புண்படுத்திய, அல்லது தவறு செய்த, அந்த நபருக்கு உங்கள் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் வல்லமை கிரியை செய்கிறதென்பதற்கு அழகான சான்றாகும். ஆனாலும் தேவன் உங்களிடத்தில், அதோடு முடித்துக் கொள்வதில்லை. உங்கள் குற்றத்தை மீண்டும் செய்வதற்கான தூண்டுதலை நீங்கள் உணரலாம், மற்றும் தொடர்ந்து மற்றவர்களை காயப்படுத்தலாம். அங்குதான் உங்கள் போராட்டம் தொடங்குகிறது.

**மன்னிப்பவர்களுக்கு**

உங்கள் கசப்பு, மற்றும் எரிச்சலை, விட்டுவிடுவதன் மூலம், தேவனின் இருதயத்தை பிரதிபலிப்பதாகவும், உங்களை காயப்படுத்தியவர்களின் குற்றங்களை மன்னிப்பது, பரலோக தந்தைக்கு கனத்தையும், மகிமையையும், தருவதாக இருக்கிறது. ஆனாலும் தேவன் உங்களிடத்தில் அதோடு முடித்துக் கொள்வதில்லை. உங்கள் எதிராளி ஏற்படுத்திய வலியை, நினைவில் கொள்ள நீங்கள் உந்தப்படுவீர்கள். மனக்கசப்பு, மீண்டும் உங்கள் இருதயத்தில் வேரூன்ற முயற்சிக்கும். அங்குதான் உங்கள் யுத்தம் தொடங்குகிறது.

நீங்கள் காயப்படுத்தியவர்கள், அல்லது உங்களை காயப்படுத்தியவர்கள், உங்கள் வாழ்க்கையின் வழக்கமான ஒரு பகுதியாக தொடரக்கூடும். தேவன் உங்களில் ஒரு பெரிய வெற்றியைப் பெற்றிருந்தாலும், அவர்கள் மாறிவிட்டார்கள் என்று அர்த்தமாகாது. அவர்கள் தொடர்ந்து உங்கள் மீது கசப்பு, மற்றும் மனக்கசப்பைக் கொண்டிருக்கலாம், அல்லது அவர்கள் உங்களைத் தொடர்ந்து காயப்படுத்தலாம். உங்கள் மாமிசம் பழகிய அதே பெருமை, மற்றும் சுயநல வழியில் எதிர்வினையாற்ற விரும்பும்.

ஆனால் எபேசியர் 4: 22-24 -ன்படி நம்முடைய பழைய மனுஷனை நாம் என்ன செய்ய வேண்டும்?

________________________________________

________________________________________

________________________________________

நீங்கள் ஏற்கனவே செய்து வந்தது போல மனிதர்களுக்கு பதில் கொடுப்பதை நிறுத்தி, தேவன் உங்களை மறுரூபமாக்குவதற்கான அந்த புதிய மனிதனை தீவிரமாக தரித்துக்கொள்ள வேண்டும். நீங்கள் தொடர்ந்து ஒவ்வொரு நொடியும் உங்களை அவருக்கு அர்ப்பணித்தால், உங்களுடைய வாழ்க்கையில் அவருடைய பலனைத் தருவதற்கு அவர் உண்மை உள்ளவராய் இருப்பார். உங்கள் கீழ்ப்படிதல் மற்றவர்களை மாற்றாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் கீழ்ப்படிதல் என்பது தேவன் உங்களில் செய்யும் மாற்றதிற்கான பிரதிபலிப்பாகும்.

பிலிப்பியர் 1: 6 ஐ எழுதுங்கள்.

_______________________________________________________________________________
_______________________________________________________________________________
_______________________________________________________________________________

நான் மன்னிக்கும் நபர் உறவில் ஒப்புரவாக விரும்பவில்லை என்றால் என்ன செய்வது? ரோமர் 12:18 சமாதானத்தைக் காப்பதில் உங்கள் பங்கு பற்றி என்ன சொல்கிறது?

_______________________________________________________________________________
_______________________________________________________________________________
_______________________________________________________________________________

ஒப்புரவாகுதலில் உங்கள் ஒரு பங்குக்கு மாத்திரமே நீங்கள் பொறுப்பு. நீங்கள் மற்றவர் மீது எந்த எதிர்பார்ப்புகளையும் தேவைகளையும் வைக்க முடியாது. அவர்களின் நிலைப்பாட்டைப் பொருட்படுத்தாமல், நீங்கள் தேவனுக்கு கீழ்ப்படிந்து கேட்டு மன்னிப்பை கொடுக்க வேண்டும். மற்றவர் உங்களுக்கு மன்னிப்பு வழங்க மறுத்தால், அல்லது அவர்கள் உங்களுக்கெதிரான தங்கள் தவறை ஒப்புக் கொள்ளாவிட்டால், தேவன் உங்கள் கீழ்ப்படிதலுக்காக உங்களை ஆசீர்வதிப்பார், மேலும் உங்கள் வாழ்க்கையை தயவு கிருபை மற்றும் சமாதானத்தினால் நிரப்புவார். மற்றவரின் பதிலைப் பொருட்படுத்தாமல் உங்கள் அடிமைத்தனத்திலிருந்து அவருடைய விடுதலையை நீங்கள் இன்னும் அனுபவிப்பீர்கள்.

இந்த ஜெபத்தை வழிகாட்டியாகப் பயன்படுத்தவும்:

> *கர்த்தராகிய இயேசுவே, இந்த சூழ்நிலைகளில் உம்மை நம்புவதற்கு பெலனை தரும்படியாக ஜெபிக்கிறேன். நான் உமக்காக இதைச் செய்கிறேன் என்பதை நினைவில் கொள்ள எனக்கு உதவி செய்யும். நான் எதற்காகவும் ______________ உம்மைப் பார்க்கவில்லை, ஆனால் என் வாழ்க்கையை உம் கைகளில் ஒப்புவிக்கிறேன். நான் ______________ உடன் ஒப்புரவாகும்படி ஜெபிக்கிறேன், ஆனால் என்னால் என் பங்கை மட்டுமே செய்ய முடியும் என்று அறிந்திருக்கிறேன். நீர் மகிமைப்படத்தக்கதாக ______________உமக்கு ஒப்புக் கொடுக்கும்படி ஜெபிக்கிறேன். இதற்கான பதில் வரும் என்று உம்மை முழுவதுமாக நம்புகிறேன். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன் ஆமென்.*

நான் மன்னிக்க வேண்டிய நபர் இறந்துவிட்டால் என்ன செய்வது? நான் இன்னும் அவர்களை மன்னிக்க முடியுமா?

**மரித்த பிறகும் மனித இருதயத்தில் கசப்பு, அந்த கசப்பின் பொருள் வாழ்கிறது. மன்னிப்பு மட்டுமே மாற்று மருந்து மற்றும் எப்போதும் நடவடிக்கை தேவைப்படுகிறது. கொள்கைகள் அப்படியே இருக்கின்றன. மரித்த நபருக்கான உங்கள் கசப்பை தேவனிடம் ஒப்புக்கொள்வதன் மூலம் தொடங்குங்கள். பிறகு நீங்கள் தேவனிடம் அவர்களுடைய தவறுகளையோ குற்றங்களையோ இனிமேல் மனதில் வைத்திருக்க மாட்டீர்கள் என்று சொல்லுங்கள், அதற்கு பதிலாக, அவர்களுக்கு மன்னிப்பு அளியுங்கள். நம்பகமான நண்பர் அல்லது போதகர் முன்னிலையில் உங்கள் மன்னிப்பை உரக்கச் சொல்ல நான் உங்களை ஊக்குவிக்கிறேன்.**

உங்களுக்கு வழிகாட்ட பின்வரும் ஜெபத்தைப் பயன்படுத்தவும்:

> *கர்த்தராகிய இயேசுவே, என் பாவங்களுக்காக சிலுவையில் மரித்து, என்னை மன்னித்ததற்காக நன்றி. இந்த நபர் எனக்கு ஏற்படுத்திய காயத்திற்கு நான் மன்னிக்க வேண்டும் என்ற உமது வார்த்தையை நான் ஏற்றுக்கொள்கிறேன். உமக்கு கீழ்ப்படிந்து*

*மன்னிப்பு வார்த்தையை பேசுவதற்கான வலிமையை நான் உம்மிடம் வேண்டிக்கொள்கிறேன்.*
*நான் ______________ க்கு ______________ ஐ மன்னிக்கிறேன் (அந்தக் காரியத்தை குறிப்பிட்டு சொல்லவும்). என் கசப்பை நீக்கிப்போடும், இந்த கசப்பை நீண்ட காலமாக வைத்திருந்ததற்கு என்னை மன்னிக்கும்படி நான் உம்மிடம் மன்றாடுகிறேன். ஆமென்*

**ஒரு இறுதி சிந்தனை**

நான் இறுதியாக தேவனுக்கு கீழ்ப்படிந்து என் தந்தையை மன்னித்தபோது, அவருக்காக நான் என் இருதயத்தில் வைத்திருந்த கசப்பு மற்றும் வெறுப்பை தேவனிடம் ஒப்புக் கொடுத்த உடனே விடுதலையும் ஆசீர்வாதமும் என்னை தொடர்ந்ததை உணர்ந்தேன்.

தேவன் உங்களிடத்திலும் அதையே விரும்புகிறார். மற்றவர்களை மன்னிக்கும் அல்லது மற்றவர்களிடம் மன்னிப்பு கேட்கும் உங்கள் செயல் தேவ மன்னிப்பு கூட உங்கள் அனுபவத்தோடு நேரடி தொடர்புடையதாய் இருக்கிறது. மன்னிப்பதற்கும், மன்னிப்பைப் பெறுவதற்கும், ஆயத்தமாய் இருப்பது நாம் நம்முடைய வாழ்க்கையை ஆண்டவரிடத்தில் ஒப்புக் கொடுத்து, தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுக்கொண்டு, உண்மையாக மனந் திரும்பினோம், என்பதற்கான அடையாளமாக இருக்கிறது. தேவனுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட இருதயம், ஒரு நாளும் மற்றவர்களுக்கு கடினமான இருதயமாக இருக்காது. தேவனுக்கு முன்பாக தாழ்மைப் பட்டு குற்ற உணர்வு, மற்றும் மனக்கசப்பு, ஆகிய அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி, வெளியே வாருங்கள்.

> ***அடிப்படை சத்தியம்***
>
> மற்றவர்களுடைய செயலையும் பதிலையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்துஅவருக்கு கீழ்ப்படிய வேண்டும் என்று தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது.

> முதலாவது, மன்னிப்பினால் அதிக பட்சமாக குணமடையும் ஒரே நபர், மன்னிப்பை கொடுப்பவராகவே இருக்கிறார். . .. நாம் உண்மையாக மன்னிக்கும் போது, நாம் ஒரு கைதியை விடுதலை செய்கிறோம், பின்னர் நாம் விடுவித்த அந்தக் கைதி நாமே தான் என்பதைக் கண்டுபிடிப்போம். - லூயிஸ் ஸ்மெடிஸ்.

மன்னிப்பு மற்றும் ஒப்புரவாகுதலின் மூலம் தேவன் உங்களுக்கு வழங்க விரும்பும் விடுதலையைப் பெற இந்த அத்தியாயம் உங்களுக்கு உதவ, வழிகாட்டியாக இருக்க, பிரார்த்திக்கிறேன். இது எளிதானது அல்ல, ஏனென்றால், கிறிஸ்துவில் நமக்கு இருக்கும் விடுதலையை அனுபவிக்க விடாமல், அயராது பாடுபடும் ஒரு எதிரி, நம்மிடம் இருக்கிறான். அடுத்த அத்தியாயம், ஆவிக்குரிய உலகில் பொங்கி எழும் கண்ணுக்கு தெரியாத போரில் கவனம் செலுத்துகிறது, மற்றும் நமது எதிரியை எதிர்த்துப் போராட, உங்களுக்குத் தேவையான பரிசுத்த வேத ஆயுதங்களை உங்களுக்குத் தயார்படுத்தும்.

# அத்தியாயம் 6

## ஆவிக்குரிய போராட்டம்

நானும் என் மகன்களும் சிறு வயதில் அடிக்கடி பெயிண்ட் பந்து விளையாடுவோம். இந்த விளையாட்டைக் குறித்து உங்களுக்கு அறிமுகம் இல்லை என்று சொன்னால், இது ஒரு ஏர்கன் (காற்றுச் சுடுகலன்) வைத்துக்கொண்டு, அதில் சிறிய, சிறிய பெயிண்ட் நிரப்பப்பட்ட பந்துகள் இருக்கும், அதை போட்டு எதிரியை சுடவேண்டும். அந்த பந்து உங்கள் மீது பட்டு அது உடைந்து அந்த இடம் கலராக மாறி விடும், நீங்கள் அவுட் ஆகி விடுவீர்கள். உங்கள் எதிரியை மேற்கொள்ளும்படி, நீங்கள் பயன்படுத்துவதற்கு, அங்கே ஏராளமான யுத்த நுட்பங்கள் இருக்கிறது. அதில் ஒரு சிறந்த நுட்பம் என்னவென்றால், ஓசையில்லா ரகசிய செயல்பாடு-சப்தமில்லாமல் ரகசியமாக சென்று எதிரிக்கு பின்புறத்தில் கண்டுபிடிக்காத வண்ணம் திடீரென்று பயங்கர சத்தத்தோடு செயல்படுவது! சரியான பாதுகாப்பு இல்லாமல், அந்த அடி நம் மீது விழும்போது அது நமக்கு வலியையும், வீக்கத்தையும், ஏற்படுத்திவிடும். யாரெல்லாம் வெறும் பனியனோடு, விளையாடினார்களோ, அவர்கள் அடுத்த முறை அதிகபட்சமான பாதுகாப்புகளை அணிந்துகொள்வார்கள். அந்த அடி சிறிய அடியை விட கடுமையானதாக இருந்தால் என்ன செய்வீர்கள்? யுத்தத்துக்கு எப்படி ஆயத்தமாவீர்கள்?

நாம் உலகப்பிரகாரமாக வாழ்கின்ற படியால், சுலபத்தில் நம்முடைய சரீரத்திற்கே, அதிக கவனம் செலுத்திக் கொண்டிருக்க நேரிடும். வரலாற்றுப் புத்தகங்களில், நாடுகள் தன் எதிரிகளோடு பல காரணங்களுக்காக போர் செய்யும் செய்திகள் தான் நிறைந்திருக்கிறது. தனிப்பட்ட முறையில், நாம் நமக்கு காயத்தை, அழிவை ஏற்படுத்தும் வார்த்தைகளையும் செயல்களையும் பல தரப்பட்ட நிலையில் செய்யும் ஒரு சரீரப் பிரகாரமான நபரைத்தான் நம்முடைய எதிரியாக பார்க்கிறோம். நெடுஞ்சாலையில் வெறி பிடித்த டிரைவர், அவதூறு வதந்திகள் மற்றும் பொய்களை பரப்புபவர், ஏமாற்றுபவர், திருடன், கற்பழிப்பு, கொலைகாரன் - இப்படிப்பட்டவர்கள் தான் நாம் பார்க்கவும், தொடவுந்தக்கதான எதிரிகளாக இருக்கிறார்கள். ஆனால் ஆவிக்குரிய உலகில், கண்ணுக்குத் தெரியாத எதிரி ஒருவன் இருக்கிறான். நீங்கள் பார்க்கக்கூடிய, தொடக்கூடிய, மற்றும் உணரக்கூடிய, எதையும் விட ஆபத்தானவன் ஒருவன் இருக்கிறான், நீங்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

### பாடம் 1 - கண்ணுக்கு தெரியாத எதிரி

எபேசியர் 6:12 நாம் ஒவ்வொரு நாளும் போராடும் மிக ஆபத்தான அச்சுறுத்தல்களைக் குறிப்பிடுகிறது. அவை என்ன?

___________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________

நம்முடைய உண்மையான எதிரி சரீரப் பிரகாரமானது இல்லை என்றும், அது ஆவிக்குரியது என்றும், தேவனுடைய வார்த்தை போதிக்கிறது. இதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களோ, இல்லையோ, உங்களை சுற்றி சீறி எழும்புகிற ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டு கொண்டிருக்கிறீர்கள். துரதிர்ஷ்டவசமாக அத்தகைய யுத்தத்தில், இருந்து வெளியேற உங்களுக்கு வாய்ப்பே இல்லை. நீங்கள் தன்னார்வமாக பங்குபெற இந்த யுத்தம் காத்திருக்காது. நீங்கள் எந்நேரமும் யுத்தத்தின் முன் வரிசையில், நின்று கொண்டே இருக்கிறீர்கள். நீங்கள் வசனத்தின் வெளிச்சத்தில் நின்று, தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் எதிரியோடு போராடலாம், அல்லது அந்தகாரத்திற்கு அடிபணிந்து தோல்வியின் வலியை அனுபவிக்கலாம்.

இது உங்களுக்கு வியக்கத்தக்க விதத்தில் தெரிகிறதா? அப்படி தான் என்று நான் அறிந்திருக்கிறேன். கண்ணுக்குப் புலப்படாத, இந்த யுத்தத்தில், ஆவிக்குரிய எதிரியானவன் உங்களை இருளில் ஆழ்த்தி, உங்கள் இருதயத்தை தன்வசப்படுத்தி, தேவனுக்கு எதிராக கிளர்ச்சி செய்யும்படி செய்வான், இவ்வுலகத்தை விட்டு சற்று விலகியது போல் தோன்றும். ஆனால் இந்த யுத்தத்தில் நீங்கள் இருக்கிறீர்களா, இல்லையா, என்பதைவிட இந்த யுத்தம் இருக்கிறது என்பதை நம்ப வேண்டும். உண்மையில், அவர் இருக்கிறார் என்பதை நீங்கள் அறியாமல் இருக்க வேண்டும் என்பதுதான் உங்கள் எதிரியினுடைய விருப்பமாக இருக்கும். எதிரி இல்லை என்று எண்ணுகிறவனே சுலபமான இரையாக இருக்கிறான். ஆனால் உங்கள் கண்களால் காண முடியாத எதிரியோடு நீங்கள் எவ்வாறு போரிடுவீர்கள்?

யாரோடு எதற்காக போராடுகிறீர்கள் என்பதை அறிந்து யுத்தத்திற்காக அனுதினமும் ஆயத்தப்படுப்படுவதுதான் முதல் படியாகும்.

**சாத்தானின் தொடக்கம்**

பிசாசு அனைத்து தீமைகளின் பிரதிநிதி என்று அநேகர் புரிந்து கொள்கிறார்கள். அவன் அடிக்கடி நகைச்சுவையாக உங்கள் தோளில் சிறிய சிவப்பு பையனாக கொம்புகளுடன் உட்கார்ந்து, கெட்ட காரியங்களை செய்ய உங்களை வற்புறுத்த முயற்சிக்கிறான் என்பதை போல சித்தரிக்கப்படுகிறான். உண்மை என்னவென்றால், அவன் அதை விட மிகவும் தந்திரமான மற்றும் அபாயகரமானவன். ஆனால் அவன் எங்கிருந்து வந்தான்?

கொலோசியர் 1:16 மற்றும் நெகேமியா 9: 6 ஐ சுருக்கமாக விவரிக்கவும்.

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

ஆதியாகமம் 1:31 -ஐ வாசிக்கவும். அவருடைய படைப்பு பற்றி தேவன் என்ன சொன்னார்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

தேவன் உருவாக்காத பட்சத்தில், காணப்படுகிற, மற்றும் காணப்படாத, எவ்விடத்திலும் எந்த விதமான ஒன்றும் இருப்பதில்லை. மேலும் தேவன், தான் உருவாக்கிய அனைத்தையும், நல்லதாகக் கருதினார் என்று வேதம் கற்பிக்கிறது. இதன் பொருள் சாத்தான் கூட ஆவிக்குரிய எல்லைக்குள் தேவனால் படைக்கப்பட்டான், ஆரம்பத்தில் அவன் நல்லவனாகதான் உருவாக்கப்பட்டான். அவன் தேவனுடைய ராஜ்யத்தில் தேவதூதர்களின் பரலோக சேனைகளில் ஒருவனாக இருந்தான். அதனால் என்ன நடந்தது? யூதா 1: 6 மற்றும் 2 பேதுரு 2: 4 ஐ வாசியுங்கள். தேவதூதர்களைப் பற்றி இந்த வசனங்கள் என்ன சொல்கின்றன?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

1தீமோத்தேயு 3: 1–7 சபையில் ஒரு கண்காணியாக ஆக விரும்பும் ஒரு நபருக்குள் இருக்க வேண்டிய தன்மையைப் பற்றி பேசுகிறது. 1 தீமோத்தேயு 3: 6 இல் என்ன எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

முதலில் நல்லவனாக இருந்த பிசாசு அவனது பெருமையின் காரணமாக கடிந்து கொள்ளப்பட்டான். சாத்தான் ஒரு தேவதூதனாக இருந்தபோது, அவன் தேவனைப் போல இருக்க விரும்பினான், அதிகாரத்தில் சமமாகவோ அல்லது பெரியவனாகவோ மாறி அரசனாக வணங்கப்பட வேண்டும் என்று நம்பப்பட்டது. ஏதேன் தோட்டத்தில் அவர் ஏவாளை ஆதியாகமம் 3: 5 ல் இதே போன்ற கருத்துடன் "தேவனைப் போல இருப்பீர்கள்" என்று கூறி அவளை ஆச்சரியப்படுத்தியதில் ஆச்சரியமில்லை.

மத்தேயு 4: 9 இல் உலகின் அனைத்து ராஜ்யங்களையும் அவருக்கு வழங்கிய பிறகு சாத்தான் இயேசுவிடம் என்ன கேட்டான்?
______________________________________________________________________

சாத்தான், தேவனின் நித்தியமான வல்லமை, மற்றும் ஆராதனைக்கான தகுதியைக் கண்டு பொறாமை கொண்டான். தேவனுக்கு எதிரான அவனது பெருமையும், கலகமும், அவனது வீழ்ச்சியாக மாறியது. வெளிப்படுத்துதல் 12: 7–9 மற்றும் லூக்கா 10:18 ஐ வாசிக்கவும். சாத்தானின் பெருமையை தேவன் எவ்வாறு சமாளித்தார்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

பழைய சர்ப்பம் என்று குறிப்பிடப்படும் சாத்தான், அவனைப் பின்தொடர்ந்த மற்ற தேவ தூதர்களையும் பரலோகத்திலிருந்து விழத் தள்ளினான்.
வெளிப்படுத்துதல் 12: 3–4 ஐ வாசியுங்கள். சாத்தானுடன் எத்தனை தேவதூதர்கள் வெளியேற்றப்பட்டனர்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

வெளிப்படுத்தல் புத்தகம் உவமை மொழி, மற்றும் அடையாளத்தால் நிரம்பியுள்ளது, மேலும் பல அறிஞர்களும், வேத விளக்கவுரையாளர்களும், ஒவ்வொரு வசனத்தின் பின்னால் உள்ள பொருளைப் படிக்க, எண்ணற்ற மணிநேரங்களை செலவிட்டனர். "பழைய சர்ப்பம்" என்ற சாத்தான், தேவதூதர்களில் மூன்றில் ஒரு பகுதியை "நட்சத்திரங்களை" பூமிக்கு அழைத்துச் சென்றான் என்று நம்பப்படுகிறது. இந்த வீழ்ந்த தேவதூதர்கள் சாத்தானின் பிசாசுகள் என்று அழைக்கப்படுகிறார்கள், அவர்கள் அவனுடைய தீய செயல்களைச் செயல்படுத்துகிறார்கள். சாத்தானின் வீழ்ச்சி எப்போது நடந்தது என்பதற்கு வேதம் ஒரு குறிப்பிட்ட காலவரிசையை வழங்கவில்லை. சிருஷ்டிப்பின் கடைசி நாளுக்கு இடையில் அவன், ஏவாளின் முன் ஒரு சர்ப்பமாக தோன்றிய காலத்திலும் நடந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

பல வேதாகம விரிவுரையாளர்கள், சாத்தானின் வீழ்ச்சி, ஏசாயா 14: 12-17 மற்றும் எசேக்கியேல் 28: 12-19 இல் ஆவணப்படுத்தப்பட்டதாக நம்புகிறார்கள். ஏசாயாவில் குறிப்பிடப்பட்ட பகுதி, ஒரு பாபிலோனிய மன்னரை குறித்த தீர்க்கதரிசன வார்த்தைகளாகும். எசேக்கியேலில் தீரு ராஜாவை குறித்த புலம்பலாக இருக்கிறது. சாத்தானும் இந்த பகுதிகளில் உள்ள வார்த்தைகளுக்கு, உட்பட்டவன் என்பதை நம்மால் உறுதியாக அறிய முடியவில்லை என்றாலும்,

இந்த இரண்டு அரசர்களுக்காக கொடுக்கப்பட்ட வார்த்தைகளுக்கும், சாத்தானின் வீழ்ச்சிக்கும், இடையே ஒரு தெளிவான இணைப்பு உள்ளது. லூக்கா 22: 3 இல் இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்கு முன்பு அவன் யூதாஸ் ஸ்காரியோத்திடம் உள்புகுந்தது போல, இந்த பத்தியில் உள்ள சம்பவங்களின்போது, சாத்தானே இந்த அரசர்களுக்குள் புகுந்திருக்கலாம் அல்லது பாதித்திருக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, மனிதகுலத்தின், பாவத்தின் சாபம் சாத்தானுக்கு இந்த பூமியில் அழிவை ஏற்படுத்த ஒரு அடித்தளத்தை கொடுத்தது.

## பாடம் 2

## இப்பிரபஞ்சத்தின் தேவன்

பின்வரும் வேத பகுதியில் சாத்தான் எப்படி விவரிக்கப்படுகிறான்?

யோவான் 14:30; 16:11

______________________________________________

______________________________________________

______________________________________________

2 கொரிந்தியர் 4: 4

______________________________________________

______________________________________________

______________________________________________

எபேசியர் 2: 2

______________________________________________

______________________________________________

______________________________________________

நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் சாத்தான் ஒரு சக்திவாய்ந்த எதிரி, அவன் சிருஷ்டிகருக்கு எதிராக இந்த உலகத்தையும் அதின் குடிகளையும் கலகம் செய்யும்படிக்கு, அவர்கள் மீது திறமையாக செல்வாக்கு செலுத்தக் கூடியவன். தேவன் முதலில் படைத்து, நல்லது என்று கண்ட அனைத்தையும், களங்கப்படுத்த அவன் விரும்புகிறான். 1பேதுரு 5: 8 ல் அவன் எப்படி விவரிக்கப்படுகிறான்?

> *சாத்தான்*-மனிதனின் பெரும் எதிரி; இருளின் இளவரசன், பிசாசு.
>
> *பிசாசு*-தேவனுக்கு எதிரி, அவருக்கு அடிபணிந்திருந்தாலும், அவன் சற்று லூசுதனமா செயல்பட கூடியவன்; தீமை மற்றும் அநீதியின் தனிப்பட்ட பெரிய ஆவி; சோதனைகாரன்,

______________________________________________

______________________________________________

______________________________________________

2 தீமோத்தேயு 2: 25- 26 ஆகிய வசனங்களின்படி பிசாசும், அவனுடைய தூதர்களும், உண்மையாகவே யாரை விழுங்கலாம் என்று சுற்றி திரிந்து கொண்டிருக்கிறான், அப்படியானால், அவனுக்கு எதிராக இருப்பவர்களின் நிலை என்ன?

______________________________________________

______________________________________________

______________________________________________

யார் யாரெல்லாம் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளவில்லையோ அவர்கள், எதிரிக்கு முன்பாக பாதுகாப்பற்றவர்களாக இருக்கிறார்கள். மனிதர்கள் அவனுக்கு சமமானவர்கள் அல்ல. கிறிஸ்து இல்லாமல் தங்கள் சுய பலத்தில் நிற்கக்கூடிய யாரையும் மேற்கொள்ளக்கூடிய புத்திசாலித்தனமும், பெலமும், அவனுக்கு உண்டு.

**நிச்சயமான தோல்வி**

தேவனுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் முன்பாக சாத்தான் தான் எதிரி. ஆனால் நாம் புரிந்து கொள்ள வேண்டிய முக்கியமானது என்னவென்றால் அவன் தேவனுக்கு நிகரானவன் அல்ல. அவன் வல்லமை உள்ளவன் தான், ஆனால் சர்வ வல்லமை உடையவன் அல்ல. அவன் தந்திரமானவன், ஆனால் அவனுக்கு சர்வ ஞானமும் இல்லை. அவனால் பேரழிவை கொடுக்க முடிகிறது, ஆனால் அவனே அழிக்கப்பட போகிறவனாயிருக்கிறான்.

ஆதியாகமம் 3:15 இல் தேவன் சர்ப்பத்திற்கு என்ன சொன்னார்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

எபிரேயர் 2:14 -ஐ வாசியுங்கள். இயேசு எப்படி சாத்தானை தோற்கடித்தார்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

மத்தேயு 25:41 மற்றும் வெளிப்படுத்துதல் 20:10 இன் படி, சாத்தானின் இறுதி விதி என்ன?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஏற்கனவே அவர்கள் தோற்றுப்போன போரில் சாத்தானும் அவனுடைய தூதர்களும், சண்டையிடுகிறார்கள், அவர்கள் உண்மையை நன்கு அறிந்திருக்கிறார்கள். தேவனின் தீர்க்கதரிசன வார்த்தையின் நிறைவேற்றமாகிய, ஸ்திரியின் "வித்து" சாத்தானின் தலையை நசுக்கும் கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் சாத்தானின் வல்லமைக்கு இறுதி அடியைக் கொடுத்தது.

மத்தேயு 28:18 -ஐ வாசியுங்கள். யாருக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது?

______________________________________________________________________________

மத்தேயு 8: 28-32 இயேசுவிற்கும் பிசாசுகளால் பாதிக்கப்பட்ட இரண்டு மனிதர்களுக்கும் இடையிலான தொடர்பை ஆவணப்படுத்துகிறது. இயேசு வந்த பிறகு பிசாசுகள் என்ன சொன்னது?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

இயேசு யார் என்று பேய்களுக்கு சரியாக தெரியும், அவைகள் அவருக்கு பயந்தன. அருகிலிருந்த பன்றிகளின் கூட்டத்திற்குள் நுழைய அவைகள் அவரிடம் அனுமதி கேட்க வேண்டியிருந்தது. வசனம் 32 இல் இயேசு எவ்வாறு பதிலளித்தார்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஒரு வார்த்தையால், இயேசு கிறிஸ்து பிசாசுகளால் பீடிக்கப்பட்ட மனிதனிடமிருந்து பிசாசுகளை வெளியேற்றினார். மாற்கு: 23-27 -ஐ வாசியுங்கள். வசனம் 27 இல் இதை பார்த்த சாட்சிகள் இயேசுவிடம் கண்டதென்ன?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

இயேசு கிறிஸ்துவுக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் உள்ளது, மேலும் சாத்தான் மற்றும் அவனது பிசாசுகளை நரகத்திற்கு அனுப்ப அவர் எப்போது வேண்டுமென்றாலும் திரும்பி வருவார். ஆனால் அந்த நாள் வரை, எதிரியின் தாக்குதல்களை எதிர்த்துப் போராடுவதற்கு "நிதானமாகவும் விழிப்புடனும்" இருக்க வேண்டும் என்ற பேதுருவின் அறிவுறுத்தலுக்கு நாம் செவிசாய்க்க வேண்டும்.

## பாடம் 3

### பிசாசின் தந்திரங்கள்

சாத்தானின் முடிவு நெருங்கிக்கொண்டிருக்கிறது, ஆனால் அது இன்னும் வரவில்லை. அவனுக்கு இன்னும் எவ்வளவு காலம் இருக்கிறது? மத்தேயு 24:36 -ஐ வாசியுங்கள். முடிவு எப்போது என்று யாருக்குத் தெரியும்?

______________________________________________________________________________

சாத்தானுக்கு எவ்வளவு நேரம் இருக்கிறது என்று தெரியாது; எனவே அவன் தனது அழிவுக்கு முன்பே முடிந்தவரை பலரின் இருதயங்களிலும் மனதிலும் களைப்பின்றி கலக விதைகளை விதைக்கிறான்.

**தேவனை விட்டு தூரமானவர்களை குருடாக்குதல்**

சாத்தானின் தந்திரங்கள் என்ன?

2 கொரிந்தியர் 4: 4

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

மத்தேயு 13:19

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

2 கொரிந்தியர் 2:11

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

2 தீமோத்தேயு 2:26

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

சுவிசேஷத்தின் சத்தியத்திலிருந்து, மனிதனின் மனதை குருடாக்க சாத்தான் முதலில் தன்னால் முடிந்த அனைத்தையும் செய்கிறான். துரதிஷ்டவசமாக, அவன் சத்தியத்திற்கு பதிலாக தேர்ந்தெடுப்பதற்கு பல போலியான மாற்று காரியங்களையும் வைத்திருக்கிறான். மத்தேயு 7: 13-14 இல் ஜீவனுக்கு போகிற வழியையும், அழிவுக்கேதுவான வழியையும் பற்றி இயேசு என்ன சொன்னார்?

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

ஜீவனுக்கு போகிற ஒரே ஒரு வழி இருக்கிறது, அது இயேசு கிறிஸ்துவின் மூலமாக மட்டுமேயாகும். மற்ற அனைத்து முயற்சிகளும் அர்த்தமற்றவை மற்றும் மரணத்தில் முடிவடைபவை. சாத்தானுக்கு இந்த உண்மை நன்றாகத் தெரியும். மனித குலத்தின் மேல் வெற்றிகொள்ள கொலைகாரர்களையும் பலாத்காரர்களையும் கூட்டுச் சேர்ந்து, தனக்கு சாதகமாகப் பயன்படுத்த அவசியமில்லை, இருப்பினும் அவன் அந்த வழிகளைப் பின்பற்ற சிலரை ஊக்குவிக்கத்தான் செய்கிறான். அவன் சாத்தான் வயப்பட்டவர்களின் பாராட்டு மற்றும் ஆராதனையை வரவேற்றாலும், அவனது விருப்பத்தை நிறைவேற்ற சாத்தானியவாதிகளின் இராணுவம் அவனுக்கு தேவையில்லை, அவன் வெறுமனே நற்செய்தியின் செய்தியிலிருந்து மனிதகுலத்தின் இருதயங்களையும் மனதையும் கெடுத்தாலே போதுமானது. ஆனால் அவன் எப்படி மனிதகுலத்தை சத்தியத்தில் இருந்து விலக்கி வைக்க முடிகிறது? 2 கொரிந்தியர் 11:14 எழுதவும்.

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

இதனால் தான், சாத்தான் மிகவும் அபாயகரமானவனாகவும், எவ்வாறு உலக வழிகளை அவனே வடிவமைக்க கூடியவனாகவும் இருக்கிறான். அவன் தனது தீமையை "நல்லது" என்று மறைப்பதில் வல்லவன், மேலும் தேவனையும், இயேசுவின் நீதியையும், அதிகாரத்தையும் நிராகரிப்பவர்கள் அவனுடைய தந்திர செயலுக்கு முற்றிலும் பாதிக்கப்படக்கூடியவர்கள்.

அவனை விவரிக்க ஆதியாகமம் 3: 1 இல் என்ன வார்த்தை பயன்படுத்தப்படுகிறது?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

எபேசியரில் 6:11 ல் உள்ளபடி சர்வாயுத வர்க்கத்தை கொண்டு நாம் எதை எதிர்த்து நிற்க வேண்டும்?

*தந்திரம்*- மற்றவர்களை ஏமாற்றுவதில் திறமையான; புத்திசாலி; தந்திரமான;

*தந்திரமான*-புத்திசாலித்தனமான கருத்தாக இருத்தல்; புத்திசாலித்தனம் உடையவர்.

*திட்டங்கள்*-திட்டங்கள் அல்லது வடிவமைப்புகளை உருவாக்குதல்; புத்திசாலித்தனமான சதித்திட்டத்தை நிறைவேற்றுவது.

*வைல்ஸ்*-ஒரு தந்திரம் அல்லது தந்திரம் சிக்கவைக்கவும் அல்லது ஏமாற்றுதல்.

______________________________________________________________________
______________________________________

2 கொரிந்தியர் 11: 3 இன் படி, சாத்தான் ஏன் பொய் சொல்கிறான் மற்றும் திட்டமிடுகிறான்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

இராஜாவாகிய இயேசு கிறிஸ்து, அவரை நம்பும் அனைவருக்கும் இரட்சிப்பையும், நித்திய ஜீவனையும், அளிக்கிறார். இந்த எளிய சத்தியத்திலிருந்து சாத்தான் தன்னால் முடிந்தவரை பலரை குருடாக்க முயற்சிக்கிறான், மேலும் அவன் தனது திட்டங்களை நிறைவேற்ற, இவ்வுலகத்தை தனக்கு சாதமாக, மிகவும் திறமையாக கையாளுகிறான்.

## பாடம் 4

### உலகத்தின் வழிகள்

1 யோவான் 5:19 ன் படி உலகின் நிலை என்ன?

________________________________________
________________________________________
________________________________________

கிறிஸ்தவர்களைப் பற்றி உலகத்தின் கருத்து என்னவென்று யோவான் 15: 18-21 ல் சொல்கிறது?

________________________________________
________________________________________
________________________________________

"இப்பிரபஞ்சத்தின் தேவனானவன்" இந்த உலகின் அனைத்து அமைப்புகளிலும் ஊடுருவியுள்ளான். அரசியல், பொருளாதாரம், கல்வி, நாகரீகம் என்ற போர்வை, பொழுதுபோக்கு மற்றும் உலக தத்துவம் அனைத்தும் அவனது தீய செல்வாக்கின் ஆளுகையின் கீழ் உள்ளது. அவன் அனேக ஆலயங்களையும் பிற மத நிறுவனங்களையுங்கூட வெற்றிகரமாக கையாளுகிறான். இந்த உலகம் இருளில் நிறைந்திருப்பதில் ஆச்சரியமில்லை. யோவான் 3: 19-20 இல் மனிதகுலத்தின் செயல்களைப் பற்றி இயேசு என்ன கூறுகிறார்?

________________________________________
________________________________________
________________________________________

கொலோசெயர் 2: 8 இல் என்ன எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது? இந்த வசனம் உங்களுக்கு எப்படி தனிப்பட்ட முறையில் பொருந்தும்?

________________________________________
________________________________________
________________________________________

இந்த உலகத்தின் வழிகள், பலரை ஈர்க்கும் என்று வேதம் எச்சரிக்கிறது. மாற்கு 4: 1–20 இல் விதைப்பவரின் உவமையைப் படியுங்கள். 18-19 வசனங்களில் விவரிக்கப்பட்டுள்ளபடி "முட்களில்" விதைக்கப்பட்ட விதைகளின் பொருள் என்ன?

________________________________________
________________________________________
________________________________________

நாம் இந்த பூமியில் பல "முட்கள்" மத்தியில் வாழ்கிறோம். சாத்தானால் ஒரு நபரின் ஆத்துமாவை ஆட்கொள்ள முடியாவிட்டால், இந்த உலகத்தின் அற்பமான விஷயங்களைப் பயன்படுத்தி தேவனின் ராஜ்யத்திலிருந்து அவர்களைத் திசைதிருப்புவதன் மூலம் அவன் அவர்களின் பாசங்களைப் பெற முயற்சிப்பான்.

உங்களை திசைதிருப்பும், இந்த உலகின் அற்ப விஷயங்கள் என்ன?

1 யோவான் 2: 15-17 -ஐ வாசித்து,
இந்த உலகம் வழங்கக்கூடிய மூன்று விஷயங்களைப் பட்டியலிடுங்கள்.

1. ____________________________________________________
2. ____________________________________________________
3. ____________________________________________________

**மாம்சத்தின் இச்சை**

நாம் மாம்சத்தில் படைக்கப்பட்டு தற்போது மாம்சத்தில் வாழ்கிறோம். நம் மாம்சம் இயற்கையானது, தேவன் கொடுத்த ஆசைகள் அதில் உள்ளன. நமக்கு உணவுக்காக பசி எடுக்கிறது, குடிக்கத் தாகம் கொள்கிறது, தோழமைக்காக ஏங்குகிறோம், பாலியல் நெருக்கத்தை விரும்புகிறோம், பல்வேறு வகையான பொழுதுபோக்குகளில், இன்பம் காண்கிறோம். நம் தேவன் கொடுத்த மாம்சத்தில் உள்ள விருப்பங்கள் நமக்கு பாவம் இல்லை; இவை எல்லாவற்றோடும் கூட தான் தேவன் அவர்களை படைத்தார். ஆனால் இந்த ஆசைகளை நிறைவேற்றுவதில் தேவனின் விருப்பத்திற்கு எதிராக திருப்திப்படுத்த முற்படும்போது பாவமாக மாறுகிறது.

> ***அடிப்படை சத்தியம்***
>
> மாம்சத்தில் இச்சை கொள்வது பாவத்திலிருந்து நிறைவைப் பெறுவதாகும்.

கலாத்தியர் 5: 19-21 ல் மாம்சத்தின் இச்சைகளால் சிறைப்படுத்தப்பட்டவர்களின் சான்றுகளை அப்போஸ்தலனாகிய பவுல் பட்டியலிடுகிறார். இந்த விஷயங்களில் ஏதாவது உங்கள் வாழ்க்கையில் தெரிகிறதா?

"பிசாசு என்னைச் செய்ய வைத்தது" அல்லது "தேவன் எனக்கு இப்படிச் செய்தார்" என்ற சொற்றொடரை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். நம்முடைய பாவ ஆசைகள் அல்லது செயல்களுக்கு நம்மைத் தவிர வேறு யார் மீதாவது குற்றம் சுமத்துவது மனித இயல்பாயிருக்கிறது. ஆனால் யாக்கோபு 1: 13-14 படி, பாவத்திற்கான நமது சோதனையின் உண்மையான ஆதாரம் என்ன?

மாற்கு 7: 21-23 -ஐ வாசியுங்கள். நம் சொந்த இருதயத்திலிருந்து என்ன வருகிறது?

உங்கள் பாவ ஆசைகள் உங்களுக்குள் இருந்து வருகின்றன; குற்றம் சொல்ல வேறு யாரும் கிடையாது. சத்துருவான, பிசாசு, ஏதேன் தோட்டத்தில் ஏவாளிடத்தில் செய்தது போலவே, தேவனின் விருப்பத்திற்கு வெளியே உங்கள் ஆசைகளை நிறைவேற்ற உங்கள் பலவீனங்களைப் பயன்படுத்துவான். ஆதியாகமம் 3: 6 -ஐ வாசியுங்கள். தடை செய்யப்பட்ட கனியைப் பற்றி ஏவாள் கவனித்த முதல் விஷயம் என்ன?

____________________________________________________________

____________________________________________________________

____________________________________________________________

சாத்தான் ஏவாளுக்கு கனியை சாப்பிட ஆசை காட்டவில்லை. அவளுடைய ஆசை அவளுடைய இருதயத்திலிருந்தோ அல்லது மாறாக, அந்த குறிப்பிட்ட தருணத்தில், அவளது வயிற்றிலிருந்தோ வந்திருக்கலாம். ஏவாளின் வயிறு பசிக் கூக்குரலிடுவதை நீங்கள் கற்பனை செய்து பாருங்கள். அவளுடைய சரீரம் உணவை விரும்பியது, சாத்தான் வெறுமனே அவளது பசியைப் போக்க தடைசெய்யப்பட்ட கனியை பரிந்துரைத்தான். ஏவாள் தன் பசியாற்றிக் கொள்ள நூற்றுக்கணக்கான பழ வகைகளை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை ஆண்டவர் உதாரத்துவமாய் கொடுத்திருந்தார், ஆனாலும் தேவன் தடை செய்த கனியையே அவள் விரும்பினாள். தேவனிடமிருந்து தேர்வு செய்ய ஏவாளுக்கு வேறு நூற்றுக்கணக்கான உணவு விருப்பங்கள் அவளுக்கு தாராளமாக வழங்கப்பட்டது, ஆனால் அவளோ தேவன் விலக்கி வைத்த கனியையே தெரிந்து கொண்டாள்.

## பாடம் 5

### கண்களின் இச்சை

ஆதியாகமம் 3: 6 இல் தடைசெய்யப்பட்ட கனியைப் பற்றி ஏவாள் கவனித்த இரண்டாவது விஷயம் என்ன?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

தடை செய்யப்பட்ட கனி, ஏவாளின் பசியை பூர்த்தி செய்யக் கூடியதாய் மட்டும் இல்லாமல், அது புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமுமாயிருந்தது. ஒருவேளை ஏவாள், அவள் சாப்பிட்ட அனைத்து கனிகளையும் விட, இது அதிக ருசி உள்ளதாக இருக்கக்கூடும் என்று நினைத்திருக்கலாம். உங்களுக்கு நன்றாக தோன்றுகிற "தடைசெய்யப்பட்ட கனி" எது?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

தாவீது ராஜாவும் அவரது கண்களின் இச்சைக்கு பலியானார். 2 சாமுவேல் 11: 2–4 ஐ வாசியுங்கள். அவர் என்ன செய்தார்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

வரலாற்றின் மற்ற எந்த காலகட்டங்களையும் விட, தற்போது அதிகமான மக்கள் மிகவும் தீவிரமாக கீழ்நோக்கி பார்க்கிறார்கள் என்று நான் வாதிடுவேன். இணைய உருவாக்கம், மற்றும் கணினிகளின் தொழில்நுட்ப முன்னேற்றம், மற்றும் மொபைல் சாதனங்கள், பல சமூக ஊடக தளங்களின் வளர்ச்சியினால், கண்ணின் இச்சை இதற்கு முன் ஒருபோதும் இவ்வளவு அதிகமாக நெருங்கவோ, ஈர்க்கவோ, அடிமைப்படுத்தவோ, செய்யவில்லை. ஏனெனில் உலகம் தரக்கூடிய சகலத்தையும் உங்கள் உள்ளங்கையில் இருந்து எந்த நேரத்திலும் பார்க்கக்கூடும். ஆகவே பிசாசு அதை பார் என்று கிசுகிசுத்தால் போதுமானது.

யாத்திராகமம் 20:17 எழுதவும்.

______________________________________________________________________
______________________________________________________________________

> *இச்சை* - உடைமையாக்க ஆசை; பாலியல் உணர்வோடு நெருங்கு; தன்னுடையதல்லாத வேறு ஒருவருடையதை வாஞ்சித்தல்.

__________________________________________

தாவீது ஒரு அழகான பெண்ணைப் பார்த்து, பாலியல் இச்சை கொண்டு அவளுடன் நெருக்கம் கொள்கிறான், பின்னர் அவன் ராஜாவாக தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, அவனுக்கு அல்லாததை எடுத்துக்கொள்கிறான். தாவீதின் பாவத்தை அடையாளம் காண்பது சுலபம், ஏனெனில் இந்த சம்பவம் தான், நாம் ஒவ்வொரு முறை ஆபாச படங்களை பார்க்கும் போதும், அல்லது ஏதோ ஒரு பெண்ணின் மீதோ, ஆணின் மீதோ, இச்சை கொள்ளும் போது நடைபெறுகிறது.

மத்தேயு 5:28 இல் பாலியல் இச்சையைக் குறித்து இயேசு என்ன கூறினார்?

________________________________________________________________________________
________________________________________________________________________________
________________________________________________________________________________

பாலியல் ஒழுக்கக்கேடு, எப்போதும் கண்களின் இச்சையில் வேரூன்றியுள்ளது, ஆனால் இந்த உலகத்தில் உள்ள காரியங்களில், நம்முடைய கண்கள் இச்சிக்கக் கூடிய வேறு சில முன்னுதாரணங்கள் என்ன?

மத்தேயு 6: 22-23 இல் இயேசு நம் கண்களைப் பற்றி என்ன சொல்கிறார்?

________________________________________________________________________________
________________________________________________________________________________
________________________________________________________________________________

**ஜீவனத்தின் பெருமை**

ஆதியாகமம் 3: 6 இல் தடைசெய்யப்பட்ட கனியைப் பற்றி ஏவாள் கவனித்த மூன்றாவது விஷயம் என்ன?

________________________________________________________________________________
________________________________________________________________________________
________________________________________________________________________________

அவள் தேவனுடைய அறிவைப் பெற்று, அவரைப்போல் இருப்பார்கள் என்று, ஆண்டவருடைய சித்தத்திற்கு மாறாக சாத்தான் ஏவாளை நம்ப வைத்தான். இங்குதான் மனிதகுலத்தின் பிரச்சனையின் அடித்தளம் உள்ளது: ஜீவனத்தின் பெருமை. அகந்தையே அனைத்து பாவங்களின் வேராயிருக்கிறது - தேவனுடைய ஆதிக்கத்திற்கு எதிரான முரட்டாட்டத்தின் ஊற்றுக் காரணியாக உள்ளது. பெருமை மற்றவர்களை விட தன்னை உயர்த்திக் கொள்ள முயல்கிறது மேலும் தன்னையே இறுதி அதிகாரம் என்று வலியுறுத்துகிறது. ரோமர் 1: 20-25 ல் ஜீவனத்தின் பெருமைக்கு பலியானவர்களை குறித்து கூறுகிறது, அவர்கள் எவ்வாறு விவரிக்கப்படுகிறார்கள்?

________________________________________________________________________________
________________________________________________________________________________
________________________________________________________________________________

சுருக்கமாக கூறினால், தேவன் தேவையற்றவர், அவருடைய ஆளுகை என்பது இல்லை, நீங்கள் தான் இவ்வுலகத்தின் மையப் பொருள் என்று இவ்வுலகம் போதிக்கிறது. ஆகையினாலே வாழ்க்கை என்பது நீங்கள் எப்படி விரும்புகிறீர்களோ அப்படித்தான், எது நல்லது என்று நீங்களே தீர்மானியுங்கள், எது உண்மை என்று நீங்களே தீர்மானியுங்கள், உங்கள் சரீரம் உங்களுடையது, உங்கள் சரீரத்தின் விருப்பங்கள் எல்லாம் எது சரி என்று நீங்கள் தீர்மானிக்கிறீர்களோ, அதுவே உங்களை திருப்திப்படுத்த கூடியதாக இருக்கிறது. அதனால்தான் துல்லியமாக இந்த உலகத்தின் விஷயங்கள் ஈர்க்கக் கூடியதாய் இருக்கிறது. நீங்கள் நேர்மையானவர் என்றால், உங்கள் சரீரம் இந்த செய்தியை நம்ப விரும்புகிறது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். நீங்கள் ஒவ்வொரு

முறையும் பாவம் செய்யும் போது வெளிப்படையாக இந்த செய்தியை ஏற்றுக்கொள்ள தேர்ந்தெடுப்பீர்கள்.

ஜீவனத்தின் பெருமை இயல்பாகவே பாவம் என்று சொல்லப்படாத விஷயங்களில் தன்னை மறைத்துக் கொள்ள கூடும். உலக சாதனைகளில் மனிதர்கள் பெருமைப்படக்கூடிய சில உதாரணங்கள் என்ன?

________________________________________

________________________________________

________________________________________

1 தீமோத்தேயு 6:10 செல்வத்தைப் பற்றி என்ன சொல்கிறது?

________________________________________

________________________________________

________________________________________

பரிசுத்த வேதத்தில் தவறாக மேற்கோள் காட்டப்பட்ட வசனங்களில் பணம் தான் எல்லா தீமைக்கும் வேர் என்று, நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் அது தவறானது, பண ஆசைதான் எல்லாத் தீமைக்கும் வழிநடத்தக் கூடியதாக இருக்கிறது. உலகத்தில் நாம் செய்யும் சாதனைகள் எல்லாம் பாவம் இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. கல்வியில் சிறந்து பட்டம் பெறுதல், ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்றவர், அமைதிக்கான நோபல் பரிசு பெறுதல், ஆஸ்கார் விருது பெறுதல், தொழிலில் வெற்றிகரமான வளர்ச்சி அடைதல், இது போன்று மற்றும் பல நல்ல விஷயங்கள் இருக்கலாம். ஆனால் இந்த நல்ல காரியங்கள் தான் உங்களுக்கு வாழ்க்கையின் லட்சியமாக இருக்கும் என்றால், அது உங்கள் வாழ்க்கையின் தனிப்பட்ட அடையாளமாக அல்லது தகுதியாக இருக்கும் என்றால், அது வஞ்சகத்தினாலோ, அல்லது பாவ வழியினாலோ, பெற்றிருந்தால் அவைகள் தேவனின் மகிமைக்கு பதிலாக, இச்சித்திருந்தால் அல்லது சுய திருப்திக்கு தேடப்பட்டால், சுய மேன்மைக்காக செய்திருந்தால், அவைகளெல்லாம் பாவம் என்ற பெருமையின் ஜீவியத்தின் கீழ் வருகின்றன.

***அடிப்படை சத்தியம்***

கிறிஸ்துவின் விசுவாசிகளாக, நாம் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய மூன்று கொடூரமான எதிரிகள் நமக்கு இருக்கிறார்கள். 1.இவ்வுலகத்தின் அமைப்பு 2. நம்முடைய விழுந்துபோன சுபாவமாகிய தெய்வ பயமற்ற விருப்பம் 3. பிசாசு.

உங்களுடைய சொந்த பெருமைக்காக, சந்தோஷத்திற்காக சாதனை புரிய நாடுகிறீர்களா? அல்லது அவர் உங்களுக்கு அளித்த திறமைகளை நீங்கள் பயிற்சி செய்வதன் மூலம் தேவனுக்கு கனத்தை கொண்டுவர முயற்சிக்கிறீர்களா?

**பாடம் 6**

**எதிரியின் தாக்குதல்கள்**

கிறிஸ்தவர்களை விட, சாத்தான் அதிகம் வெறுக்கும் சில விஷயங்கள் உள்ளன, அது அவன் எல்லாவற்றையும் விட அதிகமாக வெறுக்கிற ஒருவருக்கு இவர்கள் ஸ்தானாதிபதிகளாய் இருப்பது தான். நீங்கள் உங்கள் வாழ்க்கையை கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தால், சாத்தான் உங்கள் இரட்சிப்பை பறித்துக்கொள்ள முடியாது. நீங்கள் சர்வ வல்லவருடைய பாதுகாப்புக்கு கீழ் வந்து, அவர் சிந்திய இரத்தத்தினால் நீதிமான்கள் என்று அறிவிக்கப்படுகிறீர்கள். ஆனால் பிசாசு உங்களுடைய சமாதானத்தை கொள்ளையடிக்கவும், உங்களுடைய வாழ்வில் பரம தகப்பனுடைய திட்டங்களை அபகரிக்கவும் எல்லாவற்றையும் செய்வான், என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும். உங்கள் குணத்தை அழித்து, நீங்கள் மாம்ச இச்சையில் சிக்கிக்கொள்ள கண்ணிகளை வைப்பான். விசுவாசிகளாக, இந்த பொறிகளைப் பற்றி அறிந்திருப்பது அவசியம்.

யோவான் 8:44 இல் சாத்தான் எப்படி விவரிக்கப்படுகிறான்?

________________________________________
________________________________________
________________________________________

மத்தேயு 4: 3 ல் சாத்தான் என்னவென்று அழைக்கப்படுகிறான்?

________________________________________

வெளிப்படுத்தல் 12:10 இல் சாத்தான் என்னவென்று அழைக்கப்படுகிறான்?

________________________________________

இந்த வசனங்கள் கிறிஸ்தவர்கள் மீது, சத்துரு தாக்கும் பல்வேறு வழிகளை வெளிப்படுத்துகின்றன. அவனது ஆவிக்குரிய ஆயுதக் கிடங்கு பொய்கள், பாவத்திற்கான சோதனைகள், மற்றும் நியாயந்தீர்ப்பது அல்லது குற்றச்சாட்டுகளைக் கொண்டுள்ளது. சாத்தானின் நுட்பமான தாக்குதல்களை பின்வரும் வசனங்களிலிருந்து விவரிக்கவும்:

மத்தேயு 16: 21-23

________________________________________
________________________________________
________________________________________

யோவான் 13: 2

________________________________________
________________________________________
________________________________________

அப்போஸ்தலர் 5: 3

________________________________________
________________________________________
________________________________________

2 கொரிந்தியர் 11:14 பற்றிய *பார்னஸின் புதிய ஏற்பாட்டு விளக்கக் குறிப்புகளிலிருந்து* (studylight. Org) சாத்தானின் இரகசிய உத்திகள் பற்றிய தெளிவான நுண்ணறிவை வழங்குகிறது.

> சாத்தான் வெளிப்படையான போரை நடத்தவில்லை. அவன் கிறிஸ்தவ போராளியை நேருக்கு நேர் சந்திப்பது இல்லை. அவன் மறைமுகமாக முன்னேறுகிறான்; இருளில் தனது அணுகுமுறைகளை செயல்படுத்துவது; சக்தியை விட தந்திரத்தை பயன்படுத்துவது, மேலும் சாதாரண சக்தியை பயன்படுத்தி வெற்றி பெறுவதை விட ஏமாற்றவும், துரோகம் செய்யவும் முயல்வது... சாத்தான் வெளிப்படையாகத் தோன்றுவதில்லை. அவன் நம்மை வெறுப்புடன் அணுகுவதில்லை, ஆனால் உடனடியாக வெறுப்பு தராத சில சோதனைகளை நமக்கு முன்வைக்க வருவான். அவன் உலகத்தை ஒரு கவர்ச்சியான அம்சத்தில் முன்வைக்கிறான்; பாதிப்பில்லாதது போல் தோன்றுகிற சிற்றின்பங்களுக்கு நம்மை அழைத்து, மேலும் நாம் திரும்பி வரமுடியாத அளவு தூரம் வரை நம்மை இன்பத்தில் ஆழ்த்தி விடுகிறான்.

சாத்தான் உங்களை விட புத்திசாலி என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். நீங்கள் அவனை மிஞ்ச முடியாது. நீங்கள் அவனை தனியாக எதிர்கொண்டால், நீங்கள் ஒவ்வொரு முறையும் தோற்றுப் போவீர்கள். அவன் அதிவேகமாக உங்கள் மனதை ஆராய்ந்து, உங்கள் இருதயத்தின் பலவீனமான பகுதியை கண்டு, அங்கே அடிக்கடி தாக்குதல் நடத்துவான்.

பின்வரும் வேத வசனங்கள் நம் இருதயங்களையும், மனதையும், பற்றி என்ன சொல்கின்றன?

எரேமியா 17: 9

________________________________________
________________________________________
________________________________________

நீதிமொழிகள் 4:23

________________________________________
________________________________________
________________________________________

சோதனைகளாலும், பொய்களாலும், உங்கள் உணர்வுகளையும், எண்ணங்களையும், தன் வசப்படுத்தினால், உங்கள் சுபாவங்களை ஆள முடியும் என்று சாத்தான் அறிந்திருக்கிறான். நீங்கள் பாவத்தில் விழுந்தால், அவன் உங்களை ஒடுக்க, உங்கள் மனம் மற்றும் இருதயத்தில் குற்றஞ்சாட்டி, மற்றும் நியாயந்தீர்த்து உடனடித் தாக்குதல் செய்வான்.

***அடக்குமுறை -***

பாரமான நிலை; ஒரு கனமான உணர்வு அல்லது

உடல் அல்லது மனதில் செயல்படாமல் இருப்பது.

***அடிப்படை சத்தியம்***

தேவன் தமது பிள்ளைகள், தன்னார்வமாக வந்து இவ்வுலகத்தின் அடையாளங்களை மறுத்து அவருடைய ராஜ்யத்தின் நியமங்களை பின்பற்றி வாழ வேண்டும் என்று சொல்லுகிறார்.

தேவனுடைய போதனைகளை கவனிக்கும் வரை, அவருடைய வார்த்தைகளில் நிலைக்கும் வரை, அவருடைய வல்லமையில் பெலப்படும் வரை இந்த சுழற்சி மீண்டும் மீண்டும் தொடரும். சாத்தானுடைய தாக்குதலில் இருந்தும், மாம்ச இச்சைகளிலிருந்தும் முழுமையான வெற்றியைப் பெறுவதற்கு போதுமான அனைத்து வழிமுறைகளையும் தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கிறார். நீங்கள் ஏமாற்றப்படவோ, தோற்றுப்போகவோ அல்லது அழிந்து போகவோ தேவையில்லை.

**பாடம் 7 - போரில் வெற்றி**

மனிதகுலத்தின் மீது சாத்தானின் முதல் தாக்குதலை ஆதியாகமம் ஆவணப்படுத்துகிறது, மேலும் மனிதகுலம் தோற்றுப் போனது. வெற்றி என்பது எப்படி இருக்கும்? மத்தேயு 4: 1–11 சாத்தானால் சோதிக்கப்படும்படி இயேசு வனாந்தரத்திற்குச் சென்ற ஒரு காலத்தை ஆவணப்படுத்துகிறது. வசனம் 2 இல், இயேசு நாற்பது நாள் இரவும் பகலும் உணவில்லாமல் சென்றார் என்று அறிகிறோம். அவர் எவ்வளவு பசியாகவும் பலவீனமாகவும் இருந்திருப்பார் என்று உங்களால் கற்பனை பண்ணிப் பார்க்க முடியும்.

மத்தேயு 4: 3 இல் சாத்தான் அவரை எப்படி முதலில் சோதித்தான்?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

அவர் தம் பசியை உணவு கொண்டு ஆற்றவும், தம்முடைய மாமிசத்தின் தேவையை சந்திக்கவும், அவரை உற்சாகப்படுத்தி முதன்முதலில் பிசாசு இயேசுவை சோதித்தான்.

வசனம் 4 இல் இயேசு எவ்வாறு பதிலளித்தார்?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

5-6 வசனங்களில் சாத்தானின் இரண்டாவது சோதனையைப் படியுங்கள். இயேசு ஆலயத்தின் உப்பரிகை மேல் சென்று, அவரைத் தாங்க தேவன் தூதர்களை அனுப்புவார் என்ற எதிர்பார்ப்போடு, அவரை ஆலயத்தின் உப்பரிகை செல்லும்படி பிசாசு அவரை சோதித்தான். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இயேசு தம் பதவிப் பெருமையை வெளிப்படுத்த வேண்டுமென்று அவன் விரும்பினான்.

வசனம் 7 இல் இயேசு எவ்வாறு பதிலளித்தார்?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

8-9 வசனங்களில் சாத்தானின் மூன்றாவது சோதனையைப் படியுங்கள். சாத்தான் இயேசுக்கு கண்ணின் இச்சையை காண்பித்து, இயேசுவை கவர்ந்திழுக்க முயன்று, தன்னை சாஷ்டாங்கமாய் பணிந்து, வணங்கினால் பூமியினுடைய ராஜ்ஜீயத்தை எல்லாம் அவருக்கு தருவதாக உறுதியளித்தான்.

வசனம் 10 இல் இயேசு எவ்வாறு பதிலளித்தார்?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

வசனம் 11 ல் சாத்தான் என்ன செய்தான்?

இயேசு சந்தித்த ஒவ்வொரு சோதனைகளுக்கும் எவ்வாறு பதிலளித்தார்?

சத்துரு தாக்கும் ஒவ்வொரு சோதனையையும், அவனுடைய மாம்சத்தின் ஒவ்வொரு ஆசையையும், எதிர்க்கவும், எதிர்த்துப் போராடுவதற்கும், இயேசு தேவனுடைய பரிசுத்த வார்த்தையை ஆயுதமாகப் பயன்படுத்தினார். சங்கீதம் 119: 11 என்ன செய்ய உங்களை ஊக்குவிக்கிறது?

எபிரேயர் 4:12 இல் வார்த்தை எவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளது?

தேவனுடைய வார்த்தை, ஒரு பட்டயம் என்று விவரிக்கப்பட்டுள்ளது. இது சாத்தானின் தாக்குதல்களுக்கும், சரீர சோதனைகளுக்கும், எதிரான நமது முக்கிய ஆயுதமாகும். இயேசு எதிரியின் பொய்களை சத்தியத்தால் எதிர்த்துப் போராடினார். தேவனுடைய வார்த்தையை உங்கள் இருதயத்தில் மறைத்துவைப்பது பற்றி நீங்கள் எப்படி செல்வீர்கள்? யோசுவா 1: 7-9 என்ன கற்பிக்கிறது?

இந்தப் போரில், உங்களுக்கு உதவியாக இருக்கப் போகிற வேதத்தை தினமும் படிக்கவும், சத்தியத்தை தியானிக்கவும், மற்றும் ஞாபகத்தில் வைக்கவும், ஒழுக்கம் தேவைப்படுகிறது. பட்டயத்தை உடைய ஒரு போர்வீரனின் திறமை, அவனுடைய கவனம், அர்ப்பணிப்பு மற்றும் நடைமுறையால் தீர்மானிக்கப்படுகிறது. கர்த்தருடைய வார்த்தைக்கு இது பொருந்தும். இதை இரவு பகலாக தியானிக்க வேண்டும், அதை ஞாபகத்தில் வைக்க வேண்டும், ஞாபகத்தில் வைத்ததை பயிற்சி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் சாத்தானுடைய பொய்களை தகர்த்தெறியத்தக்கதான பலமான எதிர்ப்பை நம்மால் கொடுக்க முடியும். ஆனாலும் உங்களுக்கு பலமான பாதுகாப்பு தேவை.

> ***அடிப்படை சத்தியம்.***
>
> நாம் கிறிஸ்துவோடு கூட நெருங்கிய உறவில் இருந்து ஆவியில் நடக்கும்போது பாவத்திலிருந்தும் மாமிசத்தில் இருந்தும்வெற்றியை பெறுவோம்.

எபேசியர் 6: 10–11 வாசிக்கவும். ஆவிக்குரிய வல்லமை எங்கே இருந்து வருகிறது?

______________________________________________________________________________

சாத்தானுக்கு எதிராக நாம் எப்படி நிற்போம்?

______________________________________________________________________________

**தேவனுடைய சர்வாயுதவர்க்கம்.**

எபேசியர் 6: 14–17 ல் ஒரு விசுவாசி வெற்றி அடைவதற்கு ஆறு வகையான ஆவிக்குரிய கவசங்களை பட்டியலிடுகிறார்.

எதிரியின் தாக்குதல்ளைக் கீழே எழுதுங்கள்.

1. ________________________________________
2. ________________________________________
3. ________________________________________
4. ________________________________________
5. ________________________________________
6. ________________________________________

வசனம் 18 இல் என்ன கூடுதல் அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளது?

______________________________________________________________________________

> ***அடிப்படை சத்தியம்***
>
> தேவனுடைய பிள்ளைகள், தேவன் அளித்துள்ள முழுமையான கவசங்களை அணிந்து செயல்படும்போது முழுமையான

| |
|---|
| வெற்றியை தேவன் உத்தரவாதம் அளிக்கிறார். |

ஜெபம் என்பது, கிறிஸ்தவர்களாகிய நம்மிடம் உள்ள மிக சக்திவாய்ந்த கருவி. நாம் தேவனோடு, ஒரு நிலையான, மற்றும் நேரடி வெளிப்படையான தொடர்பு கொண்டிருக்க வேண்டும், அவர் வானத்திலும் பூமியிலும், சகல அதிகாரமும் உடையவர். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், மற்றும் எல்லா சூழலிலும், நாம் ஜெபத்தின் மூலம், நம்முடைய பரலோக பிதாவோடு, நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும்.

## பாடம் 8

## கிறிஸ்து நம் பரிந்துரையாளர்.

ரோமர் 8:13 மற்றும் கலாத்தியர் 5:17 நம் மாம்சத்தையும் ஆவியையும் பற்றி என்ன சொல்கிறது?

______________________________________________

______________________________________________

______________________________________________

ஒரு கிறிஸ்தவராக, உங்களுக்குள் இரண்டு எதிரெதிர் இயல்புகள் உள்ளன - ஆவி மற்றும் மாம்சம். உங்கள் மாம்சம், உங்கள் பாவ இயல்பு - உங்கள் "பழைய சுயம்" அல்லது வேதம் சொல்வது போல், உங்கள் "பழைய மனிதன்". பழக்கங்கள், ஆசைகள், எண்ணங்கள், மற்றும் தேவனுடைய நீதிக்கு எதிராக எழும்பி தேவனை விட்டு விலகி, தன்னிச்சையாக செயல்படும் காரியங்கள்.

ரோமர் 6 ஐப் படியுங்கள்.

கிறிஸ்துவுடன் மரித்தது எது (வசனம் 6)?

______________________________________________

______________________________________________

______________________________________________

உங்கள் பழைய சுயம் எதற்காக மரித்தது (வசனங்கள் 2, 6, 10, 11)?

______________________________________________

______________________________________________

______________________________________________

நாம் இப்போது எதிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளோம் (வசனம் 7)?

______________________________________________

______________________________________________

______________________________________________

பாவத்திற்கும், நமது பாவ இயல்புக்கும், எதிரான நமது போராட்டத்தில் என்ன செய்ய தேவன் நமக்கு அறிவுறுத்துகிறார் (வசனம் 13)?

கிறிஸ்துவிடம் வருவதற்கு முன்பு, நாம் பாவத்தின் அடிமைகளாக இருந்தோம் என்று, ரோமர் 6 நமக்குக் கற்பிக்கிறது. நாம் பாவத்தின் மீது வெற்றி பெறுவதற்காக, இப்போது யாருக்கு அடிமையாக இருக்க வேண்டும். (வசனங்கள் 16–22)?

கலாத்தியர் 2:20 ஐ உங்கள் சொந்த வார்த்தைகளில் மீண்டும் எழுதுங்கள்.

சிலுவையில் உங்கள் பாவங்களுக்காக, இயேசு பரிகாரம் செய்தார். உங்கள் பாவ இயல்பு, சிலுவையில் அறையப்பட்டு, கிறிஸ்துவுடன் அடக்கம் செய்யப்பட்டது, இப்போது நீங்கள், அவரிடத்தில் ஒரு புதிய ஜீவனை அடைந்திருக்கிறீர்கள்! ஆனால், சாத்தான் உங்களுக்கு அளிக்கப்பட்ட சுயாதீனத்தை பயன்படுத்தி, உங்களை ஒடுக்க முயற்சிப்பான். நீங்கள் மேலும் சாத்தான், மற்றும் மாம்சத்தின் சோதனைகளை அனுபவிப்பீர்கள். குறை கூறுபவன் நீங்கள் திடீரென்று தாக்கப்பட்டு வீசி எறியப்படும் அந்த தருணத்துக்காக பொறுமையாகக் காத்திருந்து, யோபுவிடம் நடந்து கொண்டது போல, உனக்கு எதிராக பரலோகப் பிதாவிடம் குறை கூறுவான். ஆனால் நீங்கள் தனியாக இல்லை.

இயேசுவைப் பற்றி எபிரேயர் 2:18 என்ன சொல்கிறது?

நீங்கள் எதிர்கொள்ளும் சோதனைகளை, இயேசு அறிவார், மற்றும் உங்கள் மாம்சத்தின் விருப்பங்களை புரிந்துகொள்கிறார். இன்னும் சாத்தான் உங்களை எப்படி தாக்குவான் என்று முன்கூட்டியே அறிந்திருந்திருக்கிறார்.

லூக்கா 22:31 இல் இயேசு பேதுருவிடம் என்ன சொன்னார்?

மீண்டும், சாத்தான் தாக்குவதற்கு முன், அவன் இயேசுவிடம் அனுமதி பெற வேண்டும் என்று பார்க்கிறோம். வசனம் 32 ல் இயேசு என்ன சொன்னார்? இயேசுவின் வார்த்தைகளைக் கவனியுங்கள்: "நீ குணப்பட்ட பின்பு." பேதுரு கிறிஸ்துவிடம் திரும்புவதற்கு முதலாவது, அவன் அவரை விட்டு விலகி போக வேண்டும். வசனம் 33 ல் பேதுரு, இயேசுவிடம் சாவிலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்று முழு நம்பிக்கையோடு கூறுகிறான்.

ஆனால் இயேசு வசனம் 34 இல் எப்படி பதிலளித்தார்?

நிச்சயமாக, லூக்கா 22: 56-62 ல் பேதுருவின் துரோகத்தை ஆவணப்படுத்துகிறது. சாத்தான் அவனை கோதுமையை போட்டு புடைக்கிறது போல, புடைப்பதற்கு இயேசுவிடம் அனுமதி கேட்டான். இயேசுவும், அனுமதி அளித்தார். இயேசு நம்மை சோதிக்க ஏன் எதிரியிடம் அனுமதிக்கிறார்?

லூக்கா 22:32 ஐ எழுதுங்கள்.

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

துக்கத்துடனும், அவமானத்துடனும், இயேசுவை காட்டிக் கொடுப்பதன் மூலம், பேதுருவினுடைய விசுவாசத்தை சாத்தான் அழிப்பான் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை, ஆனால் இயேசுவுக்கு, வேறு திட்டங்கள் இருந்தன - “நீ குணப்பட்ட பின்பு, உன் சகோதரரை ஸ்திரப்படுத்து".

சோதனையை பற்றி 1 கொரிந்தியர் 10: 12-13 என்ன சொல்கிறது?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

1 யோவான் 2: 1-2 ஐப் படியுங்கள். நம் பரிந்துரையாளர் யார்?

*பரிந்துரையாளர்* - மற்றவருக்காக கெஞ்சி கேட்பவர்; வாதத்தால் ஒருவருக்கு பாதுகாப்பளிப்பவர், நிரூபித்தவர், துணையாய் இருப்பவர்; ஒரு பரிந்துரையாளர்.

______________________________________________________

கொலோசெயர் 2: 14-15 ன் படி கிறிஸ்து என்ன செய்தார்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

சாத்தான் உங்களை குற்றஞ்சாட்டக்கூடிய, மற்றும் உங்களைக் கண்டிக்கக்கூடிய, அனைத்தும் சிலுவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் மரணமும், உயிர்த்தெழுதலும், சாத்தானை நிராயுதபாணியாக்கியது. தற்பொழுது அவன், ராஜாதி ராஜாவுடைய தயவில் இருக்கிறான். இயேசு, தேவனுடைய வலது பாரிசத்தில் அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருந்து, உங்களுக்காக பரிந்துரைத்துக் கொண்டிருக்கிறார். உங்கள் வெற்றி என்பது, முழுவதுமாக இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கிறது! ஆனால் உங்கள் கடைசி மூச்சு, இந்த பூமியில் இருக்கும் வரைக்கும், ஒவ்வொரு தருணத்திலும், ஒளியில் நடக்கவோ, அல்லது இருளில் நடக்கவோ, உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

## பாடம் 9

### வெளிச்சத்தில் நட

ஒரு கணம், இருளைப் பற்றி சிந்தியுங்கள். அது என்ன? இது வெறுமனே வெளிச்சம் இல்லாத இடம் அல்லவா? ஒரு முழுவதுமான இருளை கொண்டு வர வேண்டுமானால், அங்கு உள்ள எல்லா வெளிச்சத்தையும் அப்புறப்படுத்துவதுதான் ஒரே வழி. எபேசியர் 6:12 சாத்தானை இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதி என்று கூறுகிறது. பின்வரும் வசனங்கள் ஒளியைப் பற்றி என்ன சொல்கின்றன?

1 யோவான் 1: 5

____________________________________________

____________________________________________

____________________________________________

யோவான் 8:12

____________________________________________

____________________________________________

____________________________________________

சங்கீதம் 119: 105

____________________________________________

____________________________________________

____________________________________________

இவ்வுலகத்தின் அந்தகாரம் என்பது, தேவன், இயேசு கிறிஸ்து, பரிசுத்தஆவியானவர் இல்லாமல் இருப்பதுதான். அங்குதான் சாத்தான் ஆளுமை செய்கிறான். பவுல் ஒரு காலத்தில் அவனுடைய பொல்லாத ஆளுகைக்கு கீழ் இருந்து, இருளில் ஜீவனம் பண்ணினான். கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதற்காக தமஸ்கு போகிற வழியிலே, இயேசு அவரை எதிர்கொண்டு, அவனது பணியை மாற்றினார்.

அப்போஸ்தலர் 26: 17–18 இல் பவுலை எப்படி பயன்படுத்தப் போவதாக இயேசு சொன்னார்?

____________________________________________

____________________________________________

____________________________________________

தேவனின் ஒளி, இந்த உலகின் இருளை வெளிச்சமாக்குகிறது. அவருடைய ஒளி, உங்களை அடைந்திருக்கிறது.

பின்வரும் வசனங்களை உங்கள் சொந்த வார்த்தைகளில் எழுதுங்கள்.

கொலோசெயர் 1:13

____________________________________________

____________________________________________

எபேசியர் 5: 8–9

தேவனுடைய கிருபையினாலும், இயேசுகிறிஸ்துவினுடைய தியாகத்தினாலும், நீங்கள் இவ்வுலகத்தினுடைய இருளில் இருந்து விடுவிக்கப்பட்டு இருக்கிறீர்கள். நீங்கள் அவருடைய ஒளியைப் பெற்று இருக்கிறீர்கள், ஆனாலும் இருளை மேற்கொள்ளத்தக்கதாக அல்ல.

லூக்கா 11:35 உற்சாகப்படுத்துவது என்ன?

யோவான் 3: 20-21 படி இருளுக்கு பயம் என்ன?

இருளுக்கு, ஒரே அச்சுறுத்தல் ஒளி தான் - கண்ணுக்குப் புலப்படாத ஒன்றை எல்லோருக்கும் தெரியும்படி செய்தல். நீங்கள் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்பட்டீர்கள், ஆனால் சாத்தானும், இந்த உலகமும், நீங்கள் வேண்டுமென்றே இருளில் அடி எடுத்து வைக்கும்படி மயக்குவார்கள். வேண்டுமென்றே, தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போவது, நீங்கள் தேவனை விட்டு வெளியேறி, சாத்தானுடைய தாக்குதலுக்கு, உங்களை ஒப்புக் கொடுப்பதாகும். இது சாத்தான் உங்களிடத்தில் வந்து, உங்களை தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பளிக்கிறது. உங்கள் இருதயத்தில் மறைத்து வைக்கத்தக்கதான அறிக்கையிடாத, இருள் ஏதேனும் இன்னும் இருக்கிறதா?

ஐக்கியத்தைப் பற்றி 1 யோவான் 1: 6-7 என்ன சொல்கிறது?

இது உங்கள் போராட்டம் - தினசரி ஒவ்வொரு நொடியும் உங்கள் யுத்தம், நீங்கள் தாழ்மையாக, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை தரித்து, இருளின் அதிகாரத்தை எதிர்கொள்ள வேண்டும். சிறிது நேரம் யாக்கோபு 4: 6 லிருந்து 10 ஆகிய வசனங்களை தியானம் செய்யலாம். இந்த பகுதி எவ்வாறு உங்களை உணர்வு அடையச் செய்தது?

சாத்தானுடைய தாக்குதல்களையும், மாம்சத்தின் இச்சைகளையும், வெற்றிகரமாக எதிர்கொள்ளவும், தேவனுடைய வெளிச்சத்திலே நடக்கவும், உங்களுக்கு கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் என்ன?

ரோமர் 12: 1-2

________________________________________

2 கொரிந்தியர் 10: 3-6

________________________________________

பிலிப்பியர் 4: 6-8

________________________________________

2 தீமோத்தேயு 2:22

________________________________________

கலாத்தியர் 5:16

________________________________________

**ஒரு இருதி சிந்தனைத் துளிகள்**

***அடிப்படை சத்தியம்***

நமக்கு வல்லமையான ஒரு எதிரி இருந்தாலும், அதைவிட சாத்தான் மீது முழு அதிகாரம் செலுத்துகிற சர்வவல்லமையுள்ள தேவன் நமக்கு இருக்கிறார், அவர் மேல் நாம் நம்பிக்கை வைக்கும் போது பாதுகாப்பை உத்தரவாதம் செய்கிறார்.

வீழ்ச்சியடைந்த, இவ்வுலகத்தில், கிறிஸ்துவுக்காக வாழும் விசுவாசிகளுக்கு, இது ஒரு இறுதி சிந்தனை. நாம் தொடர்ந்து ஆவிக்குரிய யுத்தத்தை அனுபவிப்போம். ஆனபோதிலும், நாம் அவருடைய வெற்றியில் உறுதியாக நின்று, சாத்தான் மற்றும் மாம்சத்தின் இச்சைகளால் தோற்கடிக்கப்படாமல், வெற்றி பெறுவோம் என்று, தேவன் வாக்குத்தத்தம் அளித்திருக்கிறார். தேவன் நம்மை வழுவாதபடி காத்து, அவருடைய மகிமையுள்ள சந்நிதானத்திற்கு அழைத்துச் செல்வார். அடுத்த பாடம், கடைசி காலத்தை குறித்து வேதம் என்ன சொல்லுகிறது என்பதில் கவனம் செலுத்துகிறது

## அத்தியாயம் 7

## மரணமும் கடைசிகாலமும்

இப்படி தெரியாதவைகளை அறிந்துகொள்வதில், ஒருவித பயம் கலந்த ஆர்வம் இயற்கையாகவே மனிதனிடத்தில் இருக்கிறது. மரித்து மீண்டும் உயிரடைந்து விட்டேன் என்று சொல்லுகிறவர்கள், சுயசரிதை என்று, தங்கள் கதைகளை எழுதினால், அது பெரும்பாலும் அதிக விற்பனையாகக் கூடிய புத்தகமாக இருக்கும். இந்த வாழ்க்கைக்கு அப்பால், என்ன இருக்கிறது என்று சொல்லி, அதைப் பார்க்க ஒட்டுமொத்த மனிதர்களுமே, ஒன்றாக ஆர்வமாய் இருக்கிறார்கள், ஏனென்றால், உண்மையில் அனைவருமே கடைசியில் மரித்துப் போகிறார்கள். மரணத்துக்குப் பிற்பாடு உள்ள வாழ்க்கை குறித்தும், கடைசி காலத்தில் என்ன நடைபெறும், என்பதைக் குறித்தும், ஏராளமான தத்துவங்கள் இருக்கிறது. வரலாறு முழுக்க அதிகமான நாகரீகங்கள் மரணத்துக்குப் பிற்பாடு வாழ்க்கை முடிவதில்லை, என்பதை ஒத்துக் கொள்கின்றன.

ஒவ்வொரு தனிமனிதனுக்குள்ளும், மனித ஆத்மா நித்தியமானது என்ற உள்ளுணர்வு தோன்றுகிறது. மரணத்துக்குப் பிற்பாடு உள்ள வாழ்க்கைக் குறித்து, அனைத்து பலதரப்பட்ட தத்துவங்களில் ஒன்றை தேர்ந்தெடுப்பது எளிது, நம்மை கவர்ந்து இழுக்கின்ற ஒன்றை நாம் விசுவாசிக்கும்படி தேர்ந்தெடுப்போம். ஆனால் சத்தியத்தின் தத்துவங்களுக்கும், பொய்யின் தத்துவங்களுக்கும் உள்ள வித்தியாசத்தை, நாம் எவ்வாறு வேறு பிரித்துப் பார்க்க போகிறோம்?

**பாடம் 1 - பகுத்தறியும் உண்மை.**

1 யோவான் 4: 1 ல் என்ன எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

1 யோவான் 4: 2-3 -ன் படி சத்திய ஆவியை நாம் எவ்வாறு கண்டறிய முடியும்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

அனைத்து சத்தியங்களையும் தாங்கிப் பிடிக்கிற அடித்தளம் தான் தேவனுடைய வார்த்தை. யோவான் 14: 6 இல், இயேசுகிறிஸ்து சொல்லுகிறார், நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன், என்னை அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். யோவான் 10: 9 இல், இயேசு இவ்வாறு சொல்லுகிறார் "நானே வாசல்" "என் வழியாய் ஒருவன் உட் பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்" இயேசு கிறிஸ்து தான், சத்தியமாக இருக்கிறார், இயேசுகிறிஸ்துவினுடைய ஜீவனும், மரணமும், உயிர்த்தெழுதலும் அறிவிக்கவிக்கப்பட்டிருக்கிறதா? பாவத்தை அறிக்கையிடுதல், கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தல், அவருடைய போதனைக்குக் கீழ்ப்படிதல், ஆகியவை அறிவுறுத்தப்பட்டதா?

கலாத்தியர் 1: 6–9 இல் கொடுக்கப்பட்ட எச்சரிப்பை திரும்ப எழுதவும்.

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

பிரசங்கி 3:11 -ஐ வாசியுங்கள். தேவன் நம் இருதயத்தில் என்ன வைத்திருக்கிறார்? தேவனுடைய கிரியையை ஆரம்பத்தில் இருந்து முடிவு வரை யாரால் கண்டு பிடிக்க முடியும்?

________________________________________________________________________________________________

________________________________________________________________________________________________

________________________________________________________________________________________________

தேவன் நம் இருதயத்தில், நித்தியத்தை வைத்துள்ளார், ஆனால் நாம் காலத்தால் வரையறுக்கப்பட்ட, தற்காலிக உலகத்தில் வாழ்கிறோம். நித்தியத்தை குறித்த கருத்துக்கள், மற்றும் கடைசி காலத்தை சுற்றியுள்ள இரகசியங்கள், இவைகளையெல்லாம், நம்முடைய வரையறுக்கப்பட்ட அறிவினால், ஆழமாய்ப் புரிந்து கொள்ள கடினமாய் இருக்கிறது.

நம்முடைய சொந்த அறிவினால் தேவனுடைய கிரியைகளை அறிந்து கொள்வது முடியாத காரியம். ஆனால் அவர் நமக்கு, சில ரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்ட வேதாகமத்தை கொடுத்திருக்கிறார். மரணத்தைக் குறித்து, கர்த்தருடைய வார்த்தை என்ன சொல்லுகிறது? கடைசி காலங்களை குறித்து வசனம் என்ன போதிக்கிறது?

**குறிப்பு**: திருச்சபைக்குள்ளேயே, இந்த வசனத்தை குறித்து பலதரப்பட்ட வியாக்கியானங்கள் இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆனால் நான் உங்களை உற்சாகப் படுத்துவது என்னவென்றால் நீங்கள் 1 கொரிந்தியர் 1:10-31 ல் பவுலினுடைய அறிவுரைகளை கவனியுங்கள், இந்த வித்தியாசங்களை உங்களுக்கும், மற்ற விசுவாசிகளுக்கும், சர்ச்சை ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள்.

தேவனை எப்போதும் மகிமைப்படுத்தவும், பரிசுத்த ஆவியானவரை புரிந்து கொள்ளவும் தாழ்மையாக பரிசுத்த வேதத்தைத் தேடுங்கள்.

**ஷியோல்**

மனிதனுடைய சரீரம், அந்த மனிதனுடைய ஆவி அல்லது ஆத்துமாவிற்கு ஒரு தற்காலிக கூடாரமாய் இருக்கிறது. ஆனால் அந்த சரீரத்தினுடைய ஜீவன் முடிவுக்கு வரும்போது, அந்த ஆத்துமாவிற்கு என்ன சம்பவிக்கும்? இயேசு லூக்கா 16 ஆம் அதிகாரம் 19 31 ஆகிய வசனங்களில் ஐசுவரியவான் மற்றும் லாசரு குறித்து ஒரு கதையைச் சொல்லுகிறார், லாசரு மரித்த பின்பு அவன் எங்கே சென்றான்? (வசனம் 22)

________________________________________________________________________________________________

ஐசுவரியவான் மரித்த பிறகு எங்கே சென்றான் (வசனம் 22–23)?

________________________________________________________________________________________________

ஐசுவரியவானுக்கு பாதாளம் எப்படி இருந்தது (வசனம் 23-24)?

________________________________________________________________________________________________

லாசருவுக்கு (வசனம் 25) ஆபிரகாமின் மடி எப்படி இருந்தது?

________________________________________________________________________________________________

லாசருவையும் ஐசுவரியவானையும் பிரித்தது எது (வசனம் 26)?

________________________________________________________________________________________________

*பாதாளம்* - மரித்தவர்களின் உறைவிடம்; விலகிச்சென்ற ஆவிகளின் இடம்; ஷியோல்.

ஹேடீஸ், வேதத்தில் ஷியோல் என்றும் அழைக்கப்படுகிறது, மரணத்துக்குப் பிறகு ஆவிகள் செல்லக்கூடிய இடம் இதுதான், ஷியோல் என்ற எபிரேய வார்த்தை, சில நேரங்களில் “கல்லறை”, அல்லது “ஒரு குழி”, அல்லது “நரகம்”, என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இருந்தாலும் அது அந்த சூழலுக்கு ஏற்ப அந்த வார்த்தை பிரயோகிக்கப்படும். ஷியோலிலே இரண்டு பகுதிகள் இருப்பதாக தெரிகிறது, அது ஒரு பெரிய பள்ளத்தினால் கடக்கக் கூடாதபடிக்கு, பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பகுதியிலே தேவனை விசுவாசியாதவர்களுக்கு உபத்திரவமும், அதேவேளையில் இன்னொரு பக்கத்தில் தேவனை விசுவாசித்தவர்களுக்கான ஆறுதலும், இருக்கிறது. ஆனால் ஷியோல் எங்கே அமைக்கப்பட்டுள்ளது?

மற்ற அக்கிரம ஆட்சியாளர்களோடு, மரித்த எகிப்தியர்களும், எவ்வாறு அவர்களோடு இணைந்து ஷியோலின் படுகுழிக்குச் செல்வார்கள் என்று, எசேக்கியேல் தீர்க்கதரிசன புத்தகத்தில் முன் குறிக்கப்பட்டுள்ளது, **"குழி"**என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எசேக்கியேல் 32:18, 24 -ஐ வாசிக்கவும்.
ஷியோல் எங்கு அமைந்துள்ளது?

______________________________________________________________________________

1 சாமுவேலின் புத்தகம் சவுல் ராஜா, மறைந்த தீர்க்கதரிசி சாமுவேலின் ஆவியோடு, இயற்கைக்கு அப்பாற்பட்ட சந்திப்பை ஆவணப்படுத்துகிறது. 1 சாமுவேல் 28: 1-19 -ஐ வாசியுங்கள்.
குறிசொல்லும் பெண் எதைப் பார்த்தாள் (வசனம் 13)?

______________________________________________________________________________

அடுத்த நாள் சவுல் எங்கே இருப்பார் என்று சாமுவேல் சொன்னார் (வசனம் 19)?
______________________________________________________________________________

சாமுவேலின் ஆவி, சவுலைப் பார்த்து நாளைக்கு நீ மரித்து, என்னோடு கூட ஷியோலில் சேர்வாய் என்று சொன்னது. தேவன் சவுலை நிராகரித்த படியினால், சவுல் ஷியோலில் உள்ள வேறு பகுதிக்கு அதாவது ஆபிரகாமின் மடி என்று சொல்லப்படுகிற இடத்திற்கு போகாமல், உபத்திரவப்படுத்துகிற இடத்திற்கு சென்று இருப்பார் என்று கணிக்க முடிகிறது.

சங்கீதம் 16: 9-11 இல் தாவீது தனது எதிர்கால மரணம் பற்றி என்ன கூறினார்?

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

அவர் மரித்த பிறகு, அவர் ஷியோலில் இருக்கப் போகிறார் என்று தாவீது புரிந்து கொண்டதாகத் தெரிகிறது, ஆனால் அவருக்கு நம்பிக்கை இருந்தது, தேவன் அவரை, அங்கே விடமாட்டார் என்று அவர் நம்பினார். இறுதியில் அவர் தேவ சமூகத்தில், நித்திய நித்தியமாய் இருப்பார் என்று நம்பினார், ஏனென்றால் தேவன் அவருடைய பரிசுத்தர் இயேசுவின் அழிவை காணவொட்டார்.

**பாடம் 2**

**அழிக்கப்பட்ட ஷியோலின் சக்தி**

இயேசு மரித்து மூன்று நாள் இருந்தார் என்றும், அவருடைய ஆவி பூமிக்குரிய சரீரத்திலிருந்து பிரிந்தது என்றும், நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் அவருடைய ஆவி எங்கே சென்றது? இயேசு மரித்திருந்த அந்த நேரங்களில், அவர் எங்கே இருந்தார் என்ற விரிவான விளக்கம் ஏதும் வேதத்தில் கொடுக்கப்படவில்லை. ஆனால் சில முக்கியமான வசனங்கள், நமக்கு சில தடயங்களை கொடுக்கிறது.

மத்தேயு 12:40 ன் படி கிறிஸ்து, அவருடைய மரணத்திற்குப் பிறகு எங்கு சென்றார்?
____________________________________________________________

லூக்கா 23:43 இல் சிலுவையில் கள்ளனிடம், இயேசு என்ன சொன்னார்?

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

1 பேதுரு 3: 18-20 படி இயேசு யாருக்கு போதித்தார்?

____________________________________________________________

மரித்தவர்களைப் பற்றி 1 பேதுரு 4: 6 என்ன சொல்கிறது?

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

வெளிப்படுத்தல் 1:18 இல் இயேசு தம்மைப் பற்றி என்ன சொன்னார்?

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

இந்த வேதவாக்கியங்களிலிருந்து, கிறிஸ்து, "பாதாளத்தின் திறவுகோல்களை" கொண்டு, ஷியோலுக்குள் இறங்கினார் என்று தெரிகிறது, அது தான் ஆபிரகாமின் மடி; இங்கே அது"பரதீசு" என்று குறிப்பிடப்படுகிறது.

அங்கிருந்துதான் ஒரு பெரிய பிளவுக்கு அப்பால், துன்பம் நிறைந்த இடத்தில் உள்ள ஆவிகளுக்கு உபதேசித்தார் (1 பேதுரு 3: 18-20), அதே போல், ஆவிகளுக்கு நற்செய்தியைப் பிரசங்கித்தார். (தம்மை மேசியாவாக வெளிப்படுத்தினார்) அதாவது ஆபிரகாமின் மடியில், அவருடன் இருந்தவர்களுக்கு (1 பேதுரு 4: 6).

யோவான் 20:17 இல் உயிர்த்தெழுந்த சிறிது நேரத்திலேயே, மரியாளுக்கு இயேசு தோன்றியபோது இயேசு என்ன சொன்னார்?

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

எபேசியர் 4: 8-10 -லிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள் என்பதை விவரிக்கவும்.

___

___

___

இந்த வசனங்கள், இயேசு கிறிஸ்து மரித்த பொழுது, தேவனோடு கூட இருந்தார் என்பதை நிராகரிக்கிறது. அவர் பூமியின் தாழ்விடங்களுக்கு இறங்கினார் என்பது, ஷியோலுக்கு இறங்கி, அங்கே சிறைப்பட்ட ஆவிகளுக்கு பிரசங்கித்து, மரணத்தின் கட்டில் இருந்த பரிசுத்தவான்களை விடுவித்த சம்பவத்திற்கு அதிகம் பொருந்துகிறது.

இயேசுவின் மரணமும், உயிர்த்தெழுதலும், இவ்வுலகத்தின் வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு முன்பாக மரித்த அனைவரும், ஷியோலில் உள்ள, இரண்டு இடங்களில், ஏதாவது ஒன்றில் வைக்கப்பட்டார்கள். ஆனால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு பிற்பாடு ஷியோலில் உள்ள மரணத்தின் வல்லமை அழிக்கப்பட்டது.

ஓசியா 13:14 ல் என்ன தீர்க்கதரிசனம் கொடுக்கப்பட்டது?

___

___

___

ரோமர் 6: 9 கிறிஸ்துவைப் பற்றி என்ன சொல்கிறது?

___

___

___

யோவான் 10: 17-18 படி, இயேசுவுக்கு என்ன அதிகாரம் இருந்தது?

___

___

___

1 கொரிந்தியர் 15: 19–22 இன் படி, கிறிஸ்து மரித்தவர்களுக்கு என்னவாக ஆனார்?

___

___

___

பரிசுத்த ஆட்டுக்குட்டியானவர், அவர்களுடைய பாவங்களை மூடவும், அதற்கு விலைக்கிரயம் செலுத்தவும், தமது ரத்தத்தை சிந்தும் வரைக்கும், ஷியோலில் இருந்த எந்த பரிசுத்தவான்களின் ஆவிகளும், தேவனுடைய சமூகத்திற்கு உயர்த்தப்படவில்லை. அதனடிப்படையில் அவர் முதற்பலன் ஆனார். அவபக்தி உள்ளவர்களின் ஆவிகள் கடைசி நியாயத்தீர்ப்பு வரையிலும், பாதாளத்தில் உள்ள ஹாடிஸ் இல் இருக்க வேண்டும். ஆனால் பக்தி உள்ளவர்களின் ஆவிகள், ஆபிரகாமின் மடியில் இருந்தவர்கள் தற்போது இயேசு கிறிஸ்துவோடு பரலோகத்தில் இருக்கிறார்கள்.

பிலிப்பியர் 2: 5-6 ஆகிய வசனங்களை வாசியுங்கள்.

சிலுவையில் மரித்த பிறகு இயேசுவுக்கு தேவன் என்ன கொடுத்தார்?

இயேசுவின் நாமத்திற்கு எந்த மூன்று குறிப்பிட்ட பகுதிகள் தலைவணங்கும்?

நாவுகளெல்லாம் என்னவென்று அறிக்கையிட வேண்டும்?

வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானவர் யாவரும் இயேசுவின் நாமத்திற்கு வணங்குவார்கள். இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என்பதை ஒவ்வொரு நாவும் அறிக்கையிடும்.

**விசுவாசியின் மரணம்**

தற்பொழுது கிறிஸ்து, மரணத்தை வென்று, பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.
2 கொரிந்தியர் 5:8 படி மரிக்கிற விசுவாசிகளின் ஆவிகளுக்கு என்ன சம்பவிக்கும்?

பிலிப்பியர் 1:23

***அடிப்படை சத்தியம்***

கிறிஸ்தவர்கள் இந்த வாழ்க்கையை கடந்து செல்லும் போது, அவர்கள் உடனடியாக பரலோகத்தில் இயேசுவின் சமூகத்திற்கு கொண்டு செல்லப்படுகிறார்கள்.

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு பிறகு, மரிக்கிற அனைத்து விசுவாசிகளின் ஆவிகள் நேரடியாக பரலோகத்தில் இயேசுவோடு இருப்பார்கள். கிறிஸ்து, அவர்களுடைய பாவத்திற்கான கிரயத்தை செலுத்தியபடியால், இனி அவர்கள் ஷியோலுக்கு போக மாட்டார்கள்.

கீழ்க்காணும் வசனப் பகுதிகள் கிறிஸ்துவில் நீதிமான்களாக்கப்பட்டவர்களின் மரணத்தைக் குறித்து என்ன போதிக்கிறது?

எபிரேயர் 2: 14-15

1 தெசலோனிக்கேயர் 4: 13-14

சங்கீதம் 116: 15

நீதிமொழிகள் 14:32

நீங்கள் இயேசு கிறிஸ்துவின் விசுவாசியாக இருந்தால், மரண பயத்தில் வாழவோ, அல்லது இரட்சிக்கப்பட்ட நம்முடைய அன்புக்குரியவர்கள் மரித்துப்போனால், நம்பிக்கையில்லாமல் துக்கப்படவோ, தேவையில்லை. மாறாக, கடைசி காலம் நெருங்கி வருவதால், அவருடைய இரட்சிப்பின் கிருபையை அறியாமல் அழிந்து போகிறவர்களுக்காக இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை பகிர்ந்து கொள்ள ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

**பாடம் 3**

**கடைசி காலம்**

வேதாகமத்தில், இறுதிநாட்களைக் குறித்து ஏராளமான பகுதிகளில் தீர்க்கதரிசனமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. வேத அறிஞர்களும், வேத விரிவுரையாளர்களும், இறுதி காலத்தை சுற்றியுள்ள அனைத்து இரகசியங்களையும் புரிந்துகொள்ள முயற்சிக்கும் வேதத்தின் மீது விளக்கங்களைக் கொடுத்துள்ளனர். இந்த அத்தியாயத்தின் தொடக்கத்தில், நான் சுட்டிக்காட்டியபடி, இறுதி காலங்களில் நடக்கும் குறிப்பிட்ட நிகழ்வுகளின் காலவரிசை குறித்து கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் மாறுபட்ட வியாக்கியானங்கள் உள்ளன என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு விளக்கத்தையும் ஆராய நேரம் ஒதுக்குவதற்குப் பதிலாக, ஒவ்வொரு முக்கிய நிகழ்வையும் சுற்றியுள்ள வேத வாக்கியங்களை பொதுவாகப் பார்ப்பது, மிகவும் நன்மை பயக்கும்: அந்திக்கிறிஸ்து வெளிப்படுவது, மகா உபத்திரவம், திருச்சபை எடுத்துக்கொள்ளப்படுதல், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சி, நீதியுள்ள நியாயதிபதியான கிறிஸ்து, நரகம், மற்றும் புதிய வானம் புதிய பூமி.

**கடைசி நாட்கள்**

முடிவு நெருங்கும்போது நமக்கு எப்படித் தெரியும்? கடைசி நாட்களில் உலகின் மனநிலை பற்றி பின்வரும் வேதபகுதிகள் என்ன சொல்கின்றன?

மத்தேயு 24: 3-8

_______________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________

மத்தேயு 24: 9-14

_______________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________

2 தீமோத்தேயு 3: 1-7

_______________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________

2 பேதுரு 3: 3-4

_______________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________________

1 யோவான் 2:18

கடைசி காலத்தில், ஒரு சில திருச்சபைகளின் நிலைமை குறித்து, தீமோத்தேயு விவரிக்கிறார். பின்வரும் வசனங்களில் இருந்து நீங்கள் என்ன கற்றுக் கொள்கிறீர்கள்? 1 தீமோத்தேயு 4: 1-3

2 தீமோத்தேயு 4: 3–4

இன்று இந்த விளக்கங்கள், எவ்வளவு நடைமுறையில் இருக்கிறது என்பதை அறிவது, கவனிக்கத்தக்கதாக இருக்கிறது. இப்படிப்பட்ட சுபாவங்களும், செயல்களும், அதிகபட்சமாக எப்பொழுதுமே இருக்கிறது என்பது உண்மைதான், ஆனால் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருக்கும் பூமியில், அத்தகைய செயல்களும், அதன் பாதிப்புகளும், அதிகமாகி கொண்டே போகும்.

நான் வாதிடும் காரியம் என்னவென்றால் இத்தகைய சுபாவங்கள் வரலாற்றில் முன்பு எப்போதையும் விட தற்போது அதிகமாகவே இருக்கிறது, மேலும் நேரம் செல்லச் செல்ல அவற்றின் தீவிரம் அதிகரிக்கும். ஆனால் கடைசி காலம் எப்பொழுது தொடங்கியது என்று நாம் எப்படி அறிந்து கொள்வோம்?

2 தெசலோனிக்கேயர் 2:1-3 ன் படி, யார் வெளிப்பட வேண்டும்?

**பாடம் 4**

**அந்திக்கிறிஸ்து வெளிப்பட்டான்.**

யார் அந்திக்கிறிஸ்து? பழைய ஏற்பாட்டில் உள்ள தானியேல் புத்தகத்தில் வேதாகம தீர்க்கதரிசனங்கள் பல நிறைந்திருக்கிறது. அந்த நேரத்தில் தானியேல் தீர்க்கதரிசிக்கு, அந்த தீர்க்கதரிசனத்தின் விளக்கங்கள் புரியவில்லை, ஆனாலும் அநேக வருடங்களுக்கு பிற்பாடு, தேவன் யோவானை வெளிப்படுத்தின விசேஷம் என்ற தீர்க்கதரிசன புத்தகத்தை எழுதும்படி ஏவினார், அந்தப் புத்தகம், தானியேல் தீர்க்கதரிசனத்தைக் குறித்து சில தெளிவைக் கொடுத்தது.

வெளிப்படுத்தல் 13: 15 ஐ வாசிக்கவும். வலுசர்ப்பம் மிருகத்திடம் எதைக் கொடுத்தது?

____________________________________________________________

யோவான் மிருகத்தின் தலைகளில் ஒன்றில் எதைப் பார்த்தார்? (வசனம் 3)

____________________________________________________________

காயத்திற்கு என்ன ஆனது? (வசனம் 3)

____________________________________________________________

அற்புத குணப்படுத்துதலுக்கு உலகம் எவ்வாறு பிரதிபலித்தது (வசனம் 3–4)?

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

மிருகத்தின் அதிகாரம் எவ்வளவு காலம் தொடர்ந்தது (வசனம் 5)?

____________________________________________________________

வெளிப்படுத்தின விசேஷம் 6ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வலுசர்ப்பம்தான் சாத்தான். அந்திக்கிறிஸ்து மிருகம் என்று அறியப்படுகிறது. வெளிப்படுத்துதல் 13: 2 ல் அந்திக்கிறிஸ்து பூமியின் மேல் ஆளுகை செய்யும்படிக்கு, சாத்தான் அவனுக்கு தன்னுடைய அதிகாரத்தையும், வல்லமையையும், அளிக்கிறான் என்று கூறுகிறது. சிலகாலம் மரணத்துக்கு ஏதுவான காயப்பட்டு, கஷ்டப்படுகிறான், ஆனால் அதிசயிக்கத்தக்க விதமாக குணம் அடைகிறான். உலகம் அவனை வணங்கி, மறுமொழி கொடுக்கிறது.

தானியேல் 9: 26, தற்பொழுது நாம் அறிந்திருக்கிற அந்திக்கிறிஸ்துவாகிய "வரப்போகிற பிரபுவை" குறித்து குறிப்பிடுகிறது. தானியேல் 9:27 ஐ வாசிக்கவும். இந்த "பிரபு" முதலாவது என்ன செய்வான்?

____________________________________________________________
____________________________________________________________
____________________________________________________________

"வாரத்தின் நடுவில்" அவன் என்ன செய்வான்?

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

இந்த தீர்க்கதரிசனத்தின்படி, அந்திக்கிறிஸ்து ஒருவித சமாதான உடன்படிக்கையை, இஸ்ரேல், மற்றும் சுற்றியுள்ள நாடுகளுடன் செய்வான், அல்லது பலப்படுத்துவான். ஆனால் "வாரத்தின் நடுவில்" அவன் ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டு, பாழாக்கும் அருவருப்பை நடப்பிப்பான்.

வெளிப்படுத்துதல் 13: 5-8 ன் படி, அந்திக்கிறிஸ்து நாற்பத்திரண்டு மாதங்களுக்குப் பிறகு என்ன செய்வான்?

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

அந்திக்கிறிஸ்துவின் செயல்களை 2 தெசலோனிக்கேயர் 2: 3-4 எப்படி விவரிக்கிறது?

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

இந்த மூன்று பகுதிகள் (தானியேல் 9:27; வெளிப்படுத்துதல் 13: 6; 2 தெசலோனிக்கேயர் 2: 4) அனைத்தும் இதே நிகழ்வைப் பற்றி பேசுகின்றன. மத்தேயு 24:15-இல் இயேசு இந்த நிகழ்வை என்னவென்று அழைத்தார்?

_____________________________________________________________________________________________

பாழாக்கும் அருவருப்பு, என்பது அந்திக்கிறிஸ்து ஆலயத்திற்குள் நுழைந்து, தன்னை தேவன் என்று சொல்லி கொள்வதாகும். தானியேல் இந்த நிகழ்வை "வாரத்தின் நடுவில்" நடப்பதாகக் குறிப்பிடுகிறார், அதே நேரத்தில் வெளிப்படுத்தல் விசேஷம் நாற்பத்திரண்டு மாதங்களுக்குப் பிறகு நடைபெறும் என்று கூறுகிறது. தானியேல் புத்தகத்தில் சொல்லப்பட்ட, ஒவ்வொரு வாரமும் ஏழு வருடங்களுக்கு சமம் என்று வெளிப்படையாகிறது.

வெளிப்படுத்துதல் 13: 11-17 வாசிக்கவும்.

மற்ற மிருகம் பூமியை என்ன செய்கிறது (வசனம் 12)?

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

அந்திக்கிறிஸ்துவை வழிபட, மற்ற மிருகம் எவ்வாறு உலகை நம்ப வைக்கிறது (வசனம் 13-14)?

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

_____________________________________________________________________________________________

அந்திக்கிறிஸ்துவின் உருவத்தை வணங்காதவர்களுக்கு என்ன சம்பவிக்கும் (வசனம் 15)?

________________________________________________________________________________
________________________________________________________________________________
________________________________________________________________________________

மிருகம் ஒவ்வொரு நபரையும் என்ன செய்ய கட்டாயப்படுத்துகிறது (வசனம் 16-17)?

________________________________________________________________________________
________________________________________________________________________________
________________________________________________________________________________

வெளிப்படுத்துதல் 16:13 மற்ற மிருகத்தை எவ்வாறு குறிப்பிடுகிறது?

________________________________________________________________________________
________________________________________________________________________________
________________________________________________________________________________

தானியேல் 8: 23-25 இல் உள்ள தீர்க்கதரிசனத்தைப் படித்து அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியை விவரிக்கவும்.

________________________________________________________________________________
________________________________________________________________________________
________________________________________________________________________________

சாத்தான் (வலுசர்ப்பம்), அந்திக்கிறிஸ்து (மிருகம்) மற்றும் பொய் தீர்க்கதரிசி (மற்ற மிருகம்) ஆகியவர்கள், மகா உபத்திரவ காலம் என்று சொல்லப்படுகிற காலத்திலே, பூமியை ஆட்சி செய்வார்கள். தானியேல் புத்தகம், இந்த காலங்கள் 7 வருடம் நீடிக்கும் என்று சொல்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் இக்காலத்தில் நடைபெறும் இந்த அசாதாரணமான சம்பவங்களை, ஒரு தெளிவான விளக்கமாக அளிக்கிறது.

## பாடம் 5

### மகா உபத்திரவம்

மத்தேயு 24: 15–22 இல் உள்ள உபத்திரவத்தை, இயேசு எவ்வாறு விவரிக்கிறார்?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

தானியேல் 9:24 இல் காணப்படும் தீர்க்கதரிசனம், உபத்திரவத்தின் நோக்கத்தைப் பற்றி என்ன கூறுகிறது?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

தானியேல் தீர்க்கதரிசனமாக உரைத்த 70 வாரங்கள் (490 வருடங்கள்) இஸ்ரவேல் தேசம் இயேசு கிறிஸ்துவாகிய மேசியாவோடு ஒப்புரவாகுதலைக் குறிப்பிடுகிறது. 70 வாரத்தில், தொண்ணூற்று ஒன்பது வாரங்கள், ஏற்கனவே முடிந்துவிட்டது. இஸ்ரவேல், தீர்க்கதரிசனத்தின்படி இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளவில்லை, மேலும் இந்த நாள் வரைக்கும், அவர்களை இரட்சிக்க இரட்சகர் வருவார் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்திக்கிறிஸ்து, தன்னை வெளிப்படுத்தின பிற்பாடு, இந்த கடைசி வாரமாகிய (ஏழு ஆண்டுகள்), தொடங்கும்.

மகா உபத்திரவ காலம் என்பது, குறிப்பாக இந்த ஏழு வருடத்தை குறிக்கும், இந்த கால கட்டங்களில் தான், தேவனை அறியாத உலகம், அநீதியில் பரிபூரணப்படும், இஸ்ரவேல் தேசம், இயேசு கிறிஸ்துவை மேசியா என்று அறிந்து ஏற்றுக் கொள்ளும், தேவனும் தம்மை ஏற்றுக்கொள்ளாதவர்கள் மீது, தமது கோபத்தை ஊற்றி, அவர்களை நியாயந்தீர்ப்பார். மகா உபத்திரவ காலத்தை குறித்து, அதிகமான வரைபட விளக்கங்கள் வெளிப்படுத்தின விசேஷத்தில் காணப்படுகிறது. அநேக கிறிஸ்தவர்கள் இப்புத்தகத்தை படிக்க தயங்குகிறார்கள் ஏனென்றால் இது அதிகபட்சமாக புரிந்துகொள்ள கடினமாக இருக்கிறது, ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் 1:3 மற்றும் 22:7 இன் படி இதைப் படிப்பவர்களுக்கு, என்ன வாக்குத்தத்தத்தை தேவன் கொடுத்திருக்கிறார்?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

மகா உபத்திரவ காலத்தில் நடைபெறும் சம்பவங்களை குறித்து, ஒரு பொதுவான விவரத் தொகுப்பு பின்வருமாறு கொடுக்கிறது.

**ஆறு முத்திரைகள்**

வெளிப்படுத்தல் 5: 1 இல், ஏழு முத்திரைகளுடன், முத்திரையிடப்பட்ட ஒரு புத்தக சுருள் அறிமுகப்படுத்தப்பட்டது. தொடர்ந்து அந்த அதிகாரத்தில், ஏழு முத்திரைகளும், ஒன்றன்பின் ஒன்றாக உடைக்கப்படுகிறது; மேலும் மகா உபத்திரவ காலத்தின் சம்பவங்கள் அங்கே வெளிப்படுகின்றன. ஒவ்வொரு முத்திரையாக உடைக்கப்படும்போது, தேவனுடைய கோபத்தின் வல்லமை மிகப்பெரிய பேரழிவாக, பூமியின் மீது ஊற்றப்படுவது, செயல் விளக்கமாக காட்டப்படுகிறது. தொடர்ந்து ஆறாம் அதிகாரத்தில்.

- கள்ள கிறிஸ்து ஜெயிக்கும்படி வருகிறான் (வசனங்கள்1-2)
- பூமியை விட்டு சமாதானம் எடுத்துக்கொள்ளப்படுகிறது (வசனங்கள் 3-4)
- பஞ்சம் உண்டாகிறது (வசனங்கள்5-6)
- காட்டுமிருகம், வாதை, பஞ்சம், மற்றும் பயத்தினால் மரணம் (வசனங்கள்7-8)
- கிறிஸ்துவுக்காக இரத்தச்சாட்சியாய் மரித்தவர்கள் பழி வாங்குவதற்கான கூக்குரல் (வசனங்கள் 9-11)
- சுற்றுச்சூழல்கள் அழிவதனால் உண்டாகும் பயங்கரம் (வசனங்கள் 12-17)

**ஏழு எக்காளங்கள்**

ஏழாவது முத்திரையை உடைத்தபோது, வெளிப்படுத்தல் 8:1ல் தொடர்ந்து பரலோகத்தில் அமைதி உண்டாகி, ஏழு எக்காளங்கள் தொடர்ச்சியாக ஊதப்படுகின்றன. கிறிஸ்து ஆளுகை செய்ய வருகிறார் என்ற முழக்கத்தை கொடுக்கிற ஏழாவது எக்காளம் வரைக்கும், 6 எக்காளங்களை தூதர்கள் ஊதும்போது, பூமி தேவனுடைய கோபத்தை அனுபவித்துக் கொண்டே இருந்தது. தொடர்ந்து வெளிப்படுத்தல் 8:2-9:21 மற்றும் 11:15-19 ல்

- பூமியில் மூன்றில் ஒரு பங்கு எரிந்து போனது. (8:7)
- மூன்றில் ஒரு பங்கு சமுத்திரம் இரத்தமாக மாறியது (8:8-9)
- நதியில் மூன்றில் ஒரு பங்கு கசப்பாக மாறியது (8:10-11)
- சந்திரனும், நட்சத்திரங்களில் மூன்றில் ஒரு பங்கும் இருளாக மாறியது (8:12-13)
- உபத்திரம் ஏற்படுத்தும் ஜீவன்கள் பாதாளத்தில் இருந்து விடுவிக்கப்பட்டது (9:1-12)
- படையெடுத்து வந்த இராணுவத்தினால் மூன்றில் ஒரு பங்கு மனிதர்கள் நிர்மூலமாக்கப்பட்டார்கள். (9:13-21)
- இடி முழக்கம், மின்னல், பூமியதிர்ச்சி, கல்மழை. (11:15-19)

**ஏழு கோபத்தின் கலசங்கள்,**

கடைசி எக்காளம் ஊதிய பொழுது, நியாயத் தீர்ப்பின் தொடராக, வேறு ஏழு கோபத்தின் கலசங்கள் ஊற்றப்பட்டது, அது வெளிப்படுத்தல் 16ஆம் அதிகாரத்தில், ஏழு தேவ கோபத்தின் கலசங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த அத்தியாயங்களை தொடர்ந்து:

- மிருகத்தின் அடையாளத்தை பெற்றவர்களுக்கு கொடிய புண் உண்டாயிற்று (வசனம்2)
- சமுத்திரம் செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று, சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டுபோயின (வசனம் 3).
- ஆறுகளும் ஊற்றுகளும் இரத்தமாக மாறியது (வசனம் 4)
- சூரியன் மனிதர்களை சுட்டெரித்தது (வசனம் 8)
- மிருகத்தின் ராஜ்ஜியம் இருளானது (வசனம் 10)
- வரப்போகும் யுத்தத்திற்கு ஆயத்தமாக ஐபிராத்து நதி வற்றிப் போனது (வசனம் 12)
- மின்னல் இடி முழக்கம் மிகப்பெரிய பூகம்பம் கல் மழை (வசனங்கள்17-21)

**அர்மகெதோன் யுத்தம்**

ஆறாவது கலசம் ஊற்றித் தீர்ந்த போது, தேவனுடைய யுத்தம் என்று அறியப்படுகிற அர்மகெதோன் யுத்தம் தொடங்கியது. (16:13-16).
அந்தி கிறிஸ்துவும், பூமியின் ராஜாக்களும், அவர்கள் ராணுவமும் ஒன்றிணைந்து, இஸ்ரேலுக்கும், தேவனுக்கும் எதிராக போரிடுவார்கள். வெளிப்படுத்தல் 16:17 இன் படி ஏழாவது கலசம் ஊற்றப்பட்டபோது, பரலோகத்தின் ஆலயத்திலிருந்து என்ன வார்த்தைகள் அறிவித்தார்கள்.?

இந்த அர்மகெதோன் யுத்ததின் முடிவில், நீண்ட காலமாக எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த, இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நடைபெறும். இந்த மகிமையான சம்பவத்தை குறித்து, விவாதிப்பதற்கு முன்பாக, கடைசி கால நம்பிக்கைகளில் ஒன்றான திருச்சபையின் எடுத்துக் கொள்ளப்படுதலை குறித்து அறிமுகப்படுத்த விரும்புகிறேன்.

*எஸ்கடாலஜி* - எதிர்கால நிலை, நியாயத்தீர்ப்பு, கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, கடைசி காலம், அழியாமை, உயிர்த்தெழுதல், மரணம், இதுபோல முடிவான விஷயங்களை குறித்த உபதேசங்கள்.

***அடிப்படை சத்தியம்***

மகா உபத்திரவம்-தமது குமாரனை நிராகரித்தவர்கள் மீது தேவ கோபம் ஊற்றப்படும் ஏழு வருட காலம்.

## பாடம் 6

## திருச்சபை எடுத்துக்கொள்ளப்படுதல்

ரேப்ச்சர் Rapture- (ரகசிய வருகை) என்பது இயேசு கிறிஸ்து, சபையை பூமியிலிருந்து எடுத்து, தம்முடைய சமூகத்திற்கு கொண்டு போகும் நிகழ்வை குறிக்கிறது. 1தெசலோனிக்கேயர் 4: 16-17 என்ன நிகழும் என்று சொல்கிறது?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

*ஹர்பசோ, Harpazo* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து *காட்டப், caught up* என்ற சொற்றொடர் எடுக்கப்பட்டது. அதனுடைய அர்த்தம் பறிக்கப்படுதல் என்பதாகும். இதற்கு சமமான லத்தீன் வார்த்தை *ரேபியோ Rapio,* இதிலிருந்து தான் ஆங்கில வார்த்தை ரேப்ச்சர் வந்தது.

எப்பொழுது ரகசிய வருகை வரும் என்பதிலே சபைகளுக்குள்ளேயே விவாதங்கள் உண்டு. பொதுவாக இதைக் குறித்து, மூன்று அபிப்பிராயங்கள் உள்ளன.

- பிரி-ட்ரிபிளேஷன்-உபத்திரவ காலத்திற்கு முன்பாக நடைபெறும் ரகசிய வருகை.
- மிட்-ட்ரிபிளேஷன்-உபத்திரவ காலத்தின் மத்தியில் நடைபெறும் ரகசிய வருகை.
- போஸ்ட்-ட்ரிபிளேஷன்-உபத்திரவ காலம் முடிந்த பிற்பாடு நடைபெறும் ரகசிய வருகை.

இந்த ஒவ்வொரு கருத்துக்களையும், ஆதரிப்பதற்கு வேத வசனங்களை பயன்படுத்துகிறார்கள், ஆனால் அதன் விளக்கங்கள் வெவ்வேறாக இருக்கின்றன. இந்த வித்தியாசங்களுக்கு காரணம், பரிசுத்த வேதம் கடைசி காலங்களில் நடைபெறும் எந்த நிகழ்வுகளுக்கும், ஒரு குறிப்பிட்ட கால வரையறையை கொடுக்கவில்லை. இப்படி மாறுபட்ட கால வரிசை கோட்பாடுகள் இருந்த போதிலும், அவைகள் அனைத்தும் ரகசிய வருகையை ஒப்புக் கொள்கின்றன.
யோவான் 14: 1-3 ல் இயேசு என்ன கற்பித்தார்?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

உபத்திரவ காலத்திற்கு முந்தி நடைபெறும் இரகசிய வருகைக்கு, மற்ற இரண்டு கருத்துக்களை ஒப்பிடும்போது, இதற்கு அதிகமான வேத வசனங்களின் ஆதாரம் இருப்பதாக நான் விசுவாசிக்கிறேன். ரகசிய வருகை பற்றி பின்வரும் வசனங்கள் என்ன கற்பிக்கின்றன?

மத்தேயு 24: 36–44

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

1 தெசலோனிக்கேயர் 1: 9-10

______________________________________________________________________________

1 தெசலோனிக்கேயர் 5: 1–11

______________________________________________________________________________

வெளிப்படுத்தல் 3:10

______________________________________________________________________________

உபத்திரவ காலத்திற்கு முந்திய இரகசிய வருகை என்ற கருத்து, நீதிமானை கோபாக்கினைக்கு முன்பே, தப்புவிக்க வேண்டுமென்ற தேவனுடைய சுபாவத்தை உள்ளடக்கியதாக இருக்கிறது, என்று நான் விசுவாசிக்கிறேன். ரகசிய வருகை எப்போது நடக்கும் என்பதை பொருட்படுத்த தேவையில்லை. இயேசு கிறிஸ்து மீண்டும் வந்து, தமது சபையை தமது சமூகத்திற்கு எடுத்துக் கொண்டு செல்வார் என்பது உண்மையாக இருக்கிறது.

**மகிமையின் சரீரம்**

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கு பிறகு, மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள், ரகசிய வருகையில், அவர்களுடைய சரீரத்தை பிரிப்பதற்கு முன்பாக, அவர்கள் சரீரம் பூமியிலும், ஆத்துமா இயேசுவோடும் பரலோகத்தில் இருக்கிறது. ஆனால் இந்த ரகசிய வருகை நடைபெறும்போது, ஒரு பெரிய அற்புதம் அங்கே நிகழ்கின்றது. 1கொரிந்தியர் 15: 49-58 வாசிக்கவும். வசனம் 49 ல் யாருடைய சாயலை விசுவாசிகள் பெற்றிருப்பார்கள்?

______________________________________________________________________________

விசுவாசிக்கு என்ன நடக்கும் (வசனங்கள் 51–52)?

______________________________________________________________________________

விசுவாசி என்ன "தரித்துக் கொள்வார்கள்" (வசனம் 53)?

______________________________________________________________________________

மறுரூபமான பிறகு எது "விழுங்கப்படும்"   (வசனம் 54)?’

______________________________________________________________________________

கடைசி எக்காளத்தின்போது, பரலோகத்திலிருக்கிற ஆத்துமாக்களுடைய சரீரங்கள், அழியாமை உள்ளதாக எழுந்திருக்கும், அதோடு கண்ணிமைக்கும் நேரத்திலே, பூமியில் உயிரோடு இருக்கிறவர்களும் மறுரூபமாகி, அவர்களுக்காக ஆயத்தப்படுத்தப்பட்ட மகிமையின் சரீரத்தைப் பெற்றுக் கொள்வார்கள். தற்காலிகமான பூமிக்குரிய சரீரம், பூமியில் உள்ள மண்ணினாலே செய்யப்பட்டது, ஆனால் மகிமையின் சரீரம், அழியாமை உள்ளது, நித்தியமானது, பரலோகத்தில் நித்திய வாழ்க்கை வாழ ஏற்றது. 1 யோவான் 3: 2 இன் படி, இந்த மகிமைப்படுத்தப்பட்ட சரீரம் எப்படி இருக்கும்?

________________________________________
________________________________________
________________________________________

மகிமைப்படுத்தப்பட்ட விசுவாசிகளுடைய சரீரம், இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த பிற்பாடு பெற்றிருந்த அவருடைய மகிமையின் சரீரத்தைப் போலிருக்கும். பின்வரும் வசனங்கள் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய பண்புகளை எவ்வாறு வெளிப்படுத்துகிறது.

லூக்கா 24:31

________________________________________
________________________________________
________________________________________

லூக்கா 24: 36-43

________________________________________
________________________________________
________________________________________

யோவான் 20: 24-29

________________________________________
________________________________________
________________________________________

ரகசிய வருகை, உபத்திரவத்திற்கு முன்போ, மத்தியிலோ, அல்லது அதற்குப் பின்போ, எப்போது நடந்தாலும், அவர் பூமிக்கு மீண்டும் வருவதற்கு ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கிறபடியால், விசுவாசிகள் புதிய மகிமையின் சரீரத்தில் கிறிஸ்துவோடு கூட இருப்பது நிச்சயம்.

## பாடம் 7

### இயேசு கிறிஸ்துவின் இரண்டாவது வருகை

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, எல்லா காலத்திலும் மிகவும் வியக்கத்தக்க நிகழ்வுகளில் ஒன்றாக இருக்கும். கிறிஸ்துவினுடைய முதலாம் வருகை, தாழ்மையின் அடையாளமாக இருந்தது. - ஒரு குக்கிராமத்தில் உள்ள ஒரு தொழுவத்தில் ஏழை கன்னிக்குப் பிறந்தார், மற்றும் சாதாரண மேய்ப்பர்களால் அறிவிக்கப்பட்டார். அவரது இரண்டாவது வருகை, அவரது முழு வல்லமையையும், மகிமையையும், வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும். அர்மகெதோன் யுத்தம் தீவிரமடையும் போது, கிறிஸ்து தம்மை முழு உலகத்திற்கும் தெரியப்படுத்துவார். வெளிப்படுத்தல் 19: 11–21 -ஐ வாசியுங்கள்.

இயேசு தம் வருகையில் எவ்வாறு விவரிக்கப்படுகிறார் (வசனங்கள் 11-13)?

______________________________________________

______________________________________________

______________________________________________

கிறிஸ்துவின் பின்னால் வருபவர்கள் எவ்வாறு விவரிக்கப்படுகிறார்கள் (வசனம் 14)?

______________________________________________

______________________________________________

______________________________________________

இயேசு எதைக் கொண்டு அந்நிய தேசத்தாரை தாக்குவார் (வசனம் 15)?

______________________________________________

இயேசுவின் வஸ்திரம் மற்றும் தொடையில் என்ன எழுதப்பட்டுள்ளது (வசனம் 16)?

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

கிறிஸ்துவை நிராகரிக்கும் அனைவருக்கும் என்ன சம்பவிக்கும் (வசனம் 21)?

______________________________________________

______________________________________________

______________________________________________

வசனம் 19 இல் குறிப்பிடப்பட்டுள்ள "அவருடைய சேனை" என்பது முன்பே எடுத்துக்கொள்ளப்பட்டு, மறுரூபம் ஆக்கப்பட்ட அவருடைய விசுவாசிகள் ஆகும்.

வெளிப்படுத்தல் 17:14 படி, "அவருடன் இருப்பவர்கள்" என்னவென்று அழைக்கப்படுகிறார்கள்?

______________________________________________

யூதா 14–15 இன் படி, தமது வருகையில் இறங்கி வருகிற "கர்த்தர்" யார்?

___

தம்மை நிராகரிப்பவர்கள் மீது, இறுதித் தீர்ப்பை நிறைவேற்ற கிறிஸ்து தமது சபையுடன் பூமிக்கு வருவார்.

இயேசுவின் இரண்டாவது வருகையைப் பற்றி நீங்கள் கற்றுக்கொண்டதை எழுதுங்கள்.

மத்தேயு 24: 27-31

___

___

___

அப்போஸ்தலர் 1:11

___

___

___

சகரியா 14: 1–4

___

___

___

வெளிப்படுத்தல் 1: 7

___

___

___

*அடிப்படை சத்தியம்*

கிறிஸ்து தமது சபையை, இரகசிய வருகையில் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிற்பாடு, விசுவாசிகள் தங்கள் மகிமை அடைந்த சரீரத்தை பெற்று, அவருடைய இரண்டாம் வருகையில் பூமிக்கு திரும்பும்போது, அவரோடு கூட இவர்களும் இருப்பார்கள்.

**கிறிஸ்துவின், ஆயிர வருட அரசாட்சி**

இயேசு தமது சத்துருக்களை வென்ற பிறகு, அவர் தமது ராஜ்யத்தை பூமியில் அமைப்பார். வெளிப்படுத்தல் 20: 1–6 ஐ வாசியுங்கள்.

சாத்தானுக்கு என்ன சம்பவிக்கிறது (வசனங்கள் 1–3)?

___

___

___

யார் கிறிஸ்துவுடன் வாழ்ந்து, ஆட்சி செய்வார்கள் (வசனம் 4)?

___

இந்த கால அளவு எவ்வளவு காலம் நீடிக்கும் (வசனங்கள் 4–6)?

______________________________________________________________________________

இயேசு தமது பரிசுத்தவான்களோடு, இந்த பூமியை ஆயிரம் வருடம் அரசாட்சி செய்யும் போது, சாத்தான் சங்கிலியால் கட்டப்பட்டு பாதாளத்தில் அடைத்து வைக்கப்படுகிறான்.
பின்வரும் பத்திகளிலிருந்து, ஆயிர வருட காலத்தைப் பற்றி நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

ஏசாயா 2: 1–5

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

ஏசாயா 11: 5-10

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

லூக்கா 1: 31-33 இல் காபிரியேல் தூதன் மரியாளுக்கு என்ன சொன்னான்?

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

இயேசுவின் ஆயிர வருட ஆட்சியானது, வேதத்தில் உள்ள ஏராளமான தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றமாக இருக்கும். அந்த காலத்தில், பெரிய சமாதானமும், சந்தோஷமும், ஆறுதலும், நிறைந்ததாக இருக்கும், ஆனால் அதுவே நித்தியமாக இருக்காது.
வெளிப்படுத்தல் 20: 7-10 -ஐ வாசியுங்கள்.

ஆயிரம் ஆண்டுகளின் முடிவில், என்ன சம்பவிக்கும் (வசனம் 7)?

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

சாத்தான் விடுவிக்கப்பட்ட பிறகு என்ன செய்வான் (வசனம் 8)?

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

சாத்தானால் ஏமாற்றப்பட்டவர்களுக்கு என்ன ஆகும் (வசனம் 9)?

______________________________________________________________________________
______________________________________________________________________________
______________________________________________________________________________

சாத்தானுக்கு இறுதி தண்டனை எது (வசனம் 10)?

__________________________________________________________

__________________________________________________________

__________________________________________________________

வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள இந்தப்பகுதி 1000 வருட அரசாட்சியின் காலத்தில், அநேக மக்கள் சாத்தானின் ஆதிக்கம் இல்லாமலேயே, இயேசுவுக்கு எதிர்ப்பை காட்ட முற்படுவார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. சாத்தான் விடுவிக்கப்பட்ட பொழுது, அவன் இந்த எதிர்ப்பாளர்களை எல்லாம், ஒன்று சேர்த்து, முடிவாக கிறிஸ்துவையும், அவருடைய மக்களையும், அழிக்கும்படி தாக்குதல் பண்ணுவான். ஆனால் தேவனோ, பரலோகத்திலிருந்து அக்கினியை அனுப்பி, அவர்களை அழிப்பார். சாத்தானையோ, அந்திக்கிறிஸ்து, மற்றும் பொய் தீர்க்கதரிசியும் இருக்கிற, அக்கினிக் கடலிலே தள்ளுவார். அதற்குப் பிறகு முடிவான நியாயத்தீர்ப்பு நடக்கும்.

## பாடம் 8

### நீதியுள்ள நியாயாதிபதி.

அப்போஸ்தலர் 17: 30-31 -ன் படி, நீதியுள்ள நியாயாதிபதியாக தேவன் யாரை நியமித்திருக்கிறார்?

யோவான் 5:30 படி இயேசு ஏன் தமது தீர்ப்பை நீதியுள்ளது என்று கூறுகிறார்?

மத்தேயு 25: 31–46 வாசிக்கவும்.
தமக்கு முன் கூடியிருந்த சகல ஜனங்களோடும் இயேசு என்ன செய்வார் (வசனங்கள் 32-33)?

இயேசு தமது வலது பக்கத்தில் இருப்பவர்களுக்கு என்ன சொல்வார் (வசனங்கள் 34-40)?

இயேசு தமது இடதுபுறத்தில் இருப்பவர்களுக்கு என்ன சொல்வார் (வசனங்கள் 41–46)?

எல்லா பாதைகளும், தேவனை நோக்கி செல்கின்றன என்பதற்கு மாறாக. ஒவ்வொரு மனிதனும், சிருஷ்டிகருக்கு முன் நின்று, பணிவுடன் கிறிஸ்துவின் நீதியை அணிந்து நிற்க வேண்டும். அப்படி இல்லை என்றால், நிர்வாணமாக, குற்றவாளியாக மற்றும் அவர்களின் பாவங்களினால் தண்டிக்கப்படுவார்கள். மீண்டுமாக திருச்சபையில் கிறிஸ்துவின் நியாயத் தீர்ப்பைக் குறித்து பலதரப்பட்ட நம்பிக்கைகள் காணப்படுகிறது. வேதம் பலதரப்பட்ட காலங்களில், பல தரப்பட்ட நியாயத்தீர்ப்புகளை சொல்லுவதாக, சிலர் நம்புகிறார்கள். வேறு சிலர், ஆயிரம் வருட அரசாட்சிக்குப் பிற்பாடு, கடைசியாக ஒரே ஒரு நியாயத்தீர்ப்பு உண்டு என்று நம்புகிறார்கள். இப்படி மாறுபட்ட நம்பிக்கைகள் இருந்தாலும், அசைக்கமுடியாத உண்மை என்னவென்றால், இயேசு நீதியுள்ள நியாயாதிபதியாக இருக்கிறார்; எல்லோரும் அவருக்கு முன்பாக தீர்ப்பை பெறும்படியாக கூடி நிற்பார்கள் என்பதே.

**கிறிஸ்துவின் தீர்ப்பு சிங்காசனம்.**

கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பின் சிங்காசனம், இரட்சிக்கப்பட்டவர்களுக்காக நடைபெறும் முதலாவது நியாயத்தீர்ப்பு என்று, சிலரால் நம்பப்படுகிறது. இது மகா உபத்திரவ காலத்தில், திருச்சபை இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்ட பிற்பாடு, ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடைபெறும் என்று நம்பப்படுகிறது. இது தண்டனை அளிக்கும் தீர்ப்பாக இருக்காது, ஏனென்றால் இயேசு பாவத்திற்கான கிரயத்தை சிலுவையில் செலுத்தி இருக்கிறார், மேலும் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் யாவரும், அவர்கள் பாவங்களிலிருந்து மன்னிக்கப்பட்டு விடுகிறார்கள். மாறாக இது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட உண்மையையும், சேவையையும், குறித்த நியாயத்திற்காக இருக்கும்.

1 கொரிந்தியர் 3: 11-15 -ஐ வாசியுங்கள்.

அனைத்து விசுவாசிகளுக்கும் அஸ்திபாரம் யார் (வசனம் 11)?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

கிறிஸ்துவின் அஸ்திபாரத்தில் நீங்கள் என்ன வகையான விஷயங்களை உருவாக்க முடியும் (வசனம் 12)?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

உங்கள் வேலை எவ்வாறு சோதிக்கப்படும் (வசனம் 13)?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

முடிவுகள் என்னவாக இருக்கும் (வசனங்கள் 14-15)?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

1 கொரிந்தியர் 4: 5 இன் படி, இயேசு எதை வெளிச்சத்திற்கு கொண்டு வருவார்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

2 கொரிந்தியர் 5: 9-11 இலிருந்து நீங்கள் என்ன கற்றுக்கொள்கிறீர்கள்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

கிறிஸ்துவின் சோதனை நெருப்பில், நிலைநிற்கக் கூடாத ஏதாகிலும் உங்கள் வாழ்க்கையில், நீங்கள் கட்டி எழுப்பி இருப்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா?

____________________________________________________________________________________

____________________________________________________________________________________

____________________________________________________________________________________

அனைத்து ரகசியமான எண்ணங்களும், இருதயத்தின் நோக்கங்களும், நீதியுள்ள நியாயாதிபதிக்கு முன்பாக, அப்படியே வெளியரங்கமாக அமைக்கப்படும். சுயநலத்தோடு செய்யப்பட்ட அனைத்தும், அநீதியும், பெருமையும், சாம்பலாகப் போகும்படி எரியூட்டப்படும். ஆனால் சுயநலமில்லாமல் ராஜாவுக்கு கீழ்ப்படிந்து, செய்யப்படும் சேவைகள், தாழ்மையான செயல்கள், தகுந்த வெகுமதியை பெறும்படி நிலைத்திருக்கும்.

கீழ்க்காணும் வசனங்களிலிருந்து என்ன வெகுமதி கொடுக்கப்படுகிறது?

2 தீமோத்தேயு 4: 7-8 வெகுமதி: கிரீடம் ____________________

யாக்கோபு 1:12 வெகுமதி: கிரீடம் ____________________

1 பேதுரு 5: 4 வெகுமதி: கிரீடம் ____________________

வெளிப்பாடு 4: 9–11 படி, இருபத்து நான்கு மூப்பர்கள் தங்கள் கிரீடங்களை என்ன செய்கிறார்கள்?

____________________________________________________________________________________

____________________________________________________________________________________

____________________________________________________________________________________

இயேசு கிறிஸ்துவின் சமூகத்தில் நிற்பதை ஒப்பிடுகையில், எப்பேர்ப்பட்ட வெகுமதியும், கனமும், ஒன்றுமில்லாமல் போகும்!

## பாடம் 9

### வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு

வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு, மனந்திரும்பாத பாவிகளுக்காக வைக்கப்பட்டிருக்கிறது என்றும், அது ஆயிரம் வருட அரசாட்சிக்கு பிறகு, சாத்தான் எரிகிற அக்கினி கடலிலே தள்ளப்பட்ட பின்பு, நடைபெறும் என்று சிலரால் விசுவாசிக்கப்படுகிறது

வெளிப்படுத்தல் 20:11 - 15 வாசிக்கவும்.

நியாயத்தீர்ப்பு தொடங்கியதும் இயேசுவை நிராகரித்தவர்கள் என்ன சொல்ல முற்படுகிறார்கள் (வசனம் 11)?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

மரித்தவர்கள் எவ்வாறு தீர்ப்பளிக்கப்படுவார்கள் (வசனம் 12)?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

மரித்தவர்கள் எங்கிருந்து வருகிறார்கள் (வசனம் 13)?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

ஜீவ புத்தகத்தில் எழுதப்படாதவர்களுக்கு என்ன நடக்கிறது (வசனம் 14-15)?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

நியாயத்தீர்ப்பிற்காக பாதாளத்தில் காத்துக்கொண்டு இருந்தவர்கள், மற்றும ஆயிரம் வருட அரசாட்சிக்குப் பிற்பாடு, தேவனுடைய அக்கினியினால் அழிக்கப்பட்டவர்களின் ஆத்துமாக்கள், யாவும் தங்களால் நிராகரிக்கப்பட்டவராலே, நியாயத்தீர்ப்பு செய்யும்படி அவருக்கு முன்பாக வந்து நிற்பார்கள்.

ரோமர் 3: 19 ன் படி நியாயத்தீர்ப்பு அடைந்தவர்கள் எவ்வாறு இயேசுவிடம் பிரதியுத்திரம் கூறுவார்கள்?

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

பிலிப்பியர் 2: 9–11

______________________________________________________________________
______________________________________________________________________
______________________________________________________________________

சர்வ வல்லமையுள்ளவருடைய, நீதியுள்ள நியாயத்தீர்ப்புக்கு, முன்பாக எல்லா வாய்களும் மவுனமாக இருக்கும். எல்லோரும் அவர்தான் ஆண்டவர் என்று அறிந்து, அவருடைய தீர்ப்பை ஏற்றுக் கொள்வார்கள்.

**நரகம்**

நரகத்தைக் குறித்து வேதாகம உபதேசத்தை, கிறிஸ்தவர்கள் நிராகரிப்பது பொதுவாக அதிகமாகிக் கொண்டிருக்கிறது. இதற்கு அநேக காரணங்கள் உண்டு, அது என்னவென்றால், தேவன் அன்பாக இருக்கிறார், ஆகவே அவர் யாரையும் அப்படிப்பட்ட கொடிய நித்திய உபத்திரவம் உள்ள இடத்திற்கு அனுப்ப மாட்டார்.
பின்வரும் வேதப் பகுதிகளில் இருந்து, தேவனுடைய இருதயத்தை பற்றி நீங்கள் என்ன கற்றுக் கொள்கிறீர்கள்?

1 தீமோத்தேயு 2: 3-6

___

___

___

2 பேதுரு 3: 9

___

___

___

தேவன் உண்மையாகவே அன்புள்ள தேவன், அவர் யாரையும் நரகத்திற்கு அனுப்ப விரும்ப மாட்டார். அதனால் தான் அவர் துல்லியமாக தப்பிக்கும் வழியை ஏற்படுத்தியுள்ளார். யோவான் 3: 16–21 -ஐ வாசியுங்கள்.

தேவன் தமது குமாரனை ஏன் அனுப்பினார் (வசனங்கள் 16-17)?

___

___

___

மக்கள் எவ்வாறு கண்டிக்கப்படுகிறார்கள் (வசனங்கள் 18-20)?

___

___

___

இரட்சகரை நிராகரிப்பதன் மூலம், மக்கள் தங்களுக்கு நரகத்தை தேர்வு செய்கிறார்கள் என்பது நிஜமான உண்மை. இயேசுவே நீதியுள்ள நியாயாதிபதி, பாவிகள் மனந்திரும்பி அவருடைய மன்னிப்பைப் பெறாமல் நிராகரித்தால், அவர்கள் பாவத்திற்கான விலைக் கிரயத்தை நித்திய நித்தியமாய் செலுத்தும்படி கடிந்து கொள்ளப்படுவார்கள். நரகத்தைக் குறித்த உபதேசத்தை புறந்தள்ளுகிறவர்கள், இயேசுகிறிஸ்துவின் போதனையையும் கண்டு கொள்வதில்லை. கீழ்காணும் வேதப் பகுதிகளில் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை சுருக்கமாக எழுதவும். மாற்கு6: 15-16

___

___

___

மத்தேயு 13: 40-43

**_அடிப்படை சத்தியம்_**

அவரை யாரெல்லாம் நிராகரிப்பார்களோ அவர்கள் நியாயத் தீர்ப்பையும் தண்டனையும் அடைவார்கள் என்று கிறிஸ்து போதித்தார்.

வேதத்தின்படி, நரகம் ஒரு உண்மையான இடம், மற்றும் இரட்சகரை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு தகுந்த இடம். ஆனால் இரட்சிப்பை இயேசு கிறிஸ்துவின் மூலம் ஏற்றுக் கொண்டவர்களின் பெயர்கள், ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டு, அவர்கள் நித்திய நித்தியமாய் இயேசுகிறிஸ்துவின் சமூகத்தில் காணப்படுவார்கள்.

கீழ்க்காணும் வசன பகுதிகளில் இயேசு கிறிஸ்து, பரலோகத்தைப் பற்றி என்ன சொன்னார்?

யோவான் 14: 1-3

யோவான் 16:22

**பாடம் 10**

## புதிய வானம் புதிய பூமி

கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சி முடிந்ததும், வெளிப்படுத்தல் புத்தகம், புதிய வானம் புதிய பூமியைப் பற்றி பேசுகிறது.

வெளிப்படுத்தல் 21–22 -ஐ வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்பவும்.

- முதல் வானமும் முதல் பூமியும் ________________________________ (21: 1).
- அங்கே இல்லாமல் போனது________________________________ (21: 1).
- பரலோகம் என்பது தேவன் இருக்கும் இடம்________________________________ (21: 3).
- தேவன் என்ன செய்வார்___ ________________________________ (21: 4).
- அங்கே ________________________________ இருக்காது (21: 4).
- தேவன் எல்லாவற்றையும் உருவாக்குகிறார் ________________________________ (21: 5).
- தாகம் எடுப்பவர் ________________________________ (21: 6).
- ஜெயிப்பவர் ________________________________ (21: 7).
- பரலோகம் அதைப்போல மிகவும்________________________________ (21:11).
- சுவர் எதனால் ஆனது________________________________ (21: 18-20).
- பன்னிரண்டு வாயில்கள் எதனால் ஆனது________________________________ (21:21).
- வீதிகள் எதனால் ஆனது________________________________ (21:21).
- பரலோகத்தில் உள்ள ஆலயம்________________________________ (21:22).
- பரலோகம் எதின் மூலம் ஒளிரும்.________________________________ (21:23).
- வாயில்கள் ஒருபோதும்________________________________ (21:25).
- யார் யார் குடிமக்கள்________________________________ (21:27).
- பரலோகத்தில்________________________________ நதி உள்ளது (22: 1).
- ஒரு மரம் உள்ளது ________________________________ (22: 2).
- அங்கே என்ன இல்லை________________________________ (22: 3).
- என்ன உள்ளது ________________________________ (22: 3).
- பரலோகத்தில், நாம்________________________________ (22: 3-5).

பரலோகத்தைப் பற்றிய அனைத்தும், தேவனுடைய பரிசுத்தத்தையும், மகிமையையும், பிரதிபலிக்கிறது. தேவனின் குடும்பத்தினர் அனைவரும், பரலோகத்தில் நித்திய, நித்தியமாக, முழுமையான சமாதானம், பாதுகாப்பு, மற்றும் அவரது சமூகத்தில் நிறைவாக ஜீவிப்பார்கள்.

ஒருபோதும், மீண்டும் பயம், துக்கம், துன்பம், தனிமை அல்லது கஷ்டம் இருக்காது. தேவனுக்கு ஸ்தோத்திரம்!

**முடிவுரை**

> ***அடிப்படை சத்தியம்***
>
> பரலோகம் என்பது, தேவன் இருக்கும் இடம். அது அனைத்து விசுவாசிகளுக்கும் ஆயத்தப் பட்டுக் கொண்டிருக்கிறது.
>
> அதின் குடிகள் யாவரும், இறுதியாக முழுமையான அன்பு, சந்தோஷம், சமாதானம், விடுதலை, பரிபூரணம் மற்றும், தேவனோடும், மற்றவர்களோடும், சரியான உறவு வைத்துக் கொண்டு சந்தோஷப்படுவார்கள்.

இந்த அத்தியாயத்தில், கடைசி காலம், மரணம் ஆகியவைகளைப் பற்றி தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறது என்பதை குறித்து சில தெளிவை நீங்கள் பெற்று இருப்பீர்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். நீங்கள், சியோல், இரகசிய வருகை, உபத்திரவ காலம், போன்ற இன்னும் சிலவற்றை போதகர்கள், வேத விரிவுரையாளர்கள், இறையியலாளர்கள், மூலம் பலதரப்பட்ட வியாக்கியானங்களை கேட்கக்கூடும். ஆனாலும் உங்களுக்கு பிரச்சினை வராதபடிக்கு, இந்த பாடத்தில் மாறுபட்ட கருத்துக்களை அனுமதிக்க வேண்டாம். சத்தியத்திற்காக பரிசுத்த வசனத்தை கவனித்து, தாழ்மையாக தேவனுடைய, சர்வ ஞானத்திற்கும், முடிவான அவருடைய அதிகாரத்திற்கும், ஒப்புக்கொடுங்கள்.

நீங்கள் அவருடைய வல்லமையுள்ள கரத்தில் இருக்கிறீர்கள், கடைசி காலத்தில் நடைபெறும் அனைத்தும், அவருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஒவ்வொரு நாளும், அவரிலும், அவருடைய வார்த்தையிலும், அடங்கி இருங்கள். நீதியை பின்பற்றி, நற்செய்தியை அறிவித்து, நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையான வருகைக்கு எதிர் நோக்குங்கள்.

## பின் இணைப்பு A
## தேவனுடன் தினசரி நெருக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்.

இரட்சிப்பின் மூலம் நாம் பெற்றுக் கொண்ட மிகப்பெரிய பரிசு என்னவென்றால், தேவனோடு கூட நெருங்கி, சார்ந்து, உறவு வைத்துக் கொள்வது தான். உங்களிடத்திலே அவர் வேறு ஒன்றையும் விரும்பவில்லை.

**நேரத்தை ஒதுக்குங்கள்.**
நாளின் சிறந்த நேரத்தைத் தேர்ந்தெடுத்து, (காலை அல்லது மாலை) தேவனுடன் தினசரி தியானம்பண்ணுங்கள். உங்களை நீங்களே பெரிதாக எண்ணிக் கொண்டு சோர்ந்து போகத்தக்கதாக உங்களால் செயல்படுத்த முடியாத அளவிற்கு இலக்குகளை வைக்காதீர்கள் சிறியதாகத் தொடங்கி, பின்னர் நீங்கள் வளரும்போது நேரத்தைச் சேர்த்துக்கொள்ளவும். ஒவ்வொரு நாளும் பதினைந்து நிமிடங்களுடன் தொடங்குங்கள்.

**வேதத்திலிருந்து ஒரு புத்தகத்தைத் தேர்வு செய்**
ரு அதிகாரம் வாசிக்கவும், (அல்லது அது நீண்ட அதிகாரமாக இருந்தால் குறைவாக வாசிக்கவும்) அல்லது சில வசனங்களைப் படித்து, அதைப் பற்றி தியானியுங்கள். கூடுதலாக, தினசரி ஆவிக்குரியப் புத்தகத்திலிருந்து, நீங்கள் படிக்க விரும்பலாம். பின் இணைப்பு B ஐப் பார்க்கவும்: பரிந்துரைக்கப்பட்ட புத்தகங்கள்.

**ஜெபம்.**
நீங்கள் படித்த சத்தியத்தின் அடிப்படையில், ஜெபம் செய்யுங்கள். அவைகளை உங்கள் வாழ்க்கைக்கு எவ்வாறு பொருந்தும் என்பதை வெளிப்படுத்த தேவனிடம் கேளுங்கள். அவருடைய அதிகாரத்திற்கு உங்களை சமர்ப்பிக்கவும், கீழ்ப்படிந்து பதிலளிக்கவும் மனத்தாழ்மைக்காக ஜெபியுங்கள்.

**அவருக்கு செவிகொடுங்கள்**
சில நிமிடங்கள் அமைதியாக, செவிகொடுக்க செலவிடுங்கள்
இது முதலில் சங்கடமாக இருக்கலாம். நாம் தொடர்ந்து கவனச்சிதறல்கள் உண்டாகும் காலத்தில் வாழ்கிறோம், மற்றும் அமைதியாக உட்கார்ந்தும் பழக்கமில்லை. விடாமல் முயன்றால், தேவன் உங்களிடத்தில் பேச உண்மையுள்ளவராய் இருப்பார். பரிசுத்த ஆவியானவர், உங்களில் வாசம் செய்கிறார், மற்றும் உங்கள் சிந்தனையில் உங்களுக்கு அவர் சேவை செய்ய முடியும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**ஒரு நாட்குறிப்பை வைத்திருங்கள்.**
உங்களுடைய தனிப்பட்ட பயன்பாட்டிற்காக ஜெபங்களையும், அனுபவங்களையும், சிந்தனைகளையும், அல்லது பிரதிபலிப்புகளையும், குறித்து வைத்துக்கொள்ளுங்கள். எந்த வசனத்தினால் கர்த்தர் உங்களோடு, உங்கள் இருதயங்களில் பேசியதாக எண்ணுகிறீர்களோ, அதை எழுதி வையுங்கள்.

**மீண்டும் ஜெபியுங்கள்.**
உங்கள் ஜெபத்தை திட்டமிட்டு இருங்கள்.
உங்களுக்கு வழிகாட்ட ACTS முறையைப் பயன்படுத்தவும்:
A- *Adoration* - தொழுது கொள்ளுங்கள் - ஆராதனை செய்தல் மற்றும் தேவனைத் துதியுங்கள்.
C -*Confession* - அறிக்கையிடுங்கள் - தெரிந்த பாவங்களை அறிக்கை செய்து மனந்திரும்புங்கள்.
T- *Thanksgiving* - நன்றி சொல்லுத்துங்கள் - உங்கள் வாழ்க்கையில் தேவனின் ஆசீர்வாதங்களுக்கு நன்றியைத் தெரிவியுங்கள்.
S- *Supplication* — விண்ணப்பம் — உங்கள் தேவைகளுக்காகவும் மற்றவர்களின் தேவைகளுக்காகவும் பணிவுடன் கோரிக்கைகளை வையுங்கள்.

உங்கள் நாள் முழுவதும் அவருடைய பிரசன்னத்தை அறியவும், ஒப்புக்கொள்ளவும், தேவனிடம் உதவுமாறு கேட்டு, அந்த நாளை முடிக்கவும்.

## இணைப்பு B

**பரிந்துரைக்கப்பட்ட புத்தகங்கள்.**

தேவனுடனான உங்கள் உறவை ஆழப்படுத்த, பல சிறந்த புத்தகங்கள் இருந்தாலும், உங்களுக்கு வழிகாட்டவும், கற்பிக்கவும், சவால்செய்யவும் நாங்கள் பின்வருபவற்றை பரிந்துரைக்கிறோம்.

**சீஷத்துவ புத்தகங்கள்**

தேவனை அனுபவிப்பது: தேவனின் சித்தத்தை அறிவது மற்றும் செய்வது. ஹென்றி டி. பிளாக்கபி, ரிச்சர்ட் பிளாக்பி, மற்றும் கிளாட் வி. கிங்

சார்லஸ் ஆர். ஸ்விண்டால் எழுதிய மேன் டு மேன்

திருமணம் என்பது ஓர் ஊழியத்தொடர்- கிரேக் காஸ்டர்

தைரியமான மனிதர்கள்: டாக்டர். லாரி க்ராப் எழுதிய ஆதாமின் அமைதிக்கு அப்பால் செல்ல தேவனின் அழைப்பு

குழந்தை வளர்ப்பு ஓர் ஊழியத்தொடர் -கிரேக் காஸ்டர்

தியான புத்தகங்கள்

ஆண்ட்ரூ முர்ரே எழுதிய தேவனுடன் தினசரி அனுபவம்

அருகில் வரைதல்: ஜான் எஃப். மக்ஆர்தர் எழுதிய ஆழமான நம்பிக்கைக்கான தினசரி வாசிப்பு

ஒவ்வொரு நாளும் இயேசுவுடன்: கிரெக் லாரியின் புதிய விசுவாசிகளுடன் முதல் படிகள்

தேவனை அனுபவிப்பது: ஹென்றி டி. பிளாக்கபி, ரிச்சர்ட் பிளாக்பி, மற்றும் கிளாட் வி. கிங் ஆகியோரால் தேவனின் சித்தத்தை அறிவது மற்றும் செய்வது

வேதத்தை சந்தியுங்கள்: பிரெண்டா க்வின் மற்றும் பிலிப் யான்சியின் 366 தினசரி வாசிப்புகள் மற்றும் பிரதிபலிப்புகளில் தேவனுடைய வார்த்தையின் பனோரமா

டென்னிஸ் மற்றும் பார்பரா ரெய்னியின் தம்பதிகளுக்கான தருணங்கள்

ஓஸ்வால்ட் சேம்பர்ஸ் எழுதிய எனது உச்சகட்டம்

தோட்டத்தின் மறுபுறம்: விர்ஜினியா ரூத் ஃபுகேட் எழுதிய பைபிள் வுமன்ஹுட்

திருமதி சார்லஸ் இ. கௌமன் எழுதிய ஸ்ட்ரீம்சின் தி டெசர்ட்

தி லவ் டேர் டே பை டே: ஸ்டீபன் மற்றும் அலெக்ஸ் கென்ட்ரிக் எழுதிய தம்பதிகளுக்கான வருட தியானம்.

ஸ்டோர்மி ஓமர்டியன் எழுதிய ஜெபிக்கும் மனைவியின் வல்லமை

வில்லியம் ஜே. பீட்டர்சன் மற்றும் ராண்டி பீட்டர்சன் எழுதிய தி ஒன் இயர் புக் ஆஃப் சாம்ஸ்

கிரேக் காஸ்டரின் பதின்ம வயதினரைப் புரிந்துகொள்வது

## சொற்களஞ்சியம்

இந்த வரையறைகள் ஆங்கில மொழியின் வெப்ஸ்டரின் புதிய சர்வதேச அகராதியிலிருந்து எடுக்கப்பட்டது,

இரண்டாம் பதிப்பு தடையற்றது, ஜி & சி மெரியம் நிறுவனம் (1939).

**Abide:** "நிலைத்திரு" அர்ப்பணித்திருக்க; விட்டுக் கொடுக்காமல் தொடர்ச்சியாக தாங்கியிரு; நிலையாய் நிலைத்து; அல்லது உறுதியாய் இரு. இயேசு கிறிஸ்துவோடு நெருங்கிய உறவை வளர்த்து, வெற்றியுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு, நாம் அவரில் நிலைத்திருக்க வேண்டும். ஜெபத்தில் அவரோடு பேசுங்கள், அவருடைய வார்த்தையை தியானித்து, பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் வழிநடத்துதலுக்கு செவிகொடுங்கள். சங்கீதம் 91:1 யோவான் 15:4-1 ஐ பாருங்கள்.

**Accountability:** "கணக்கை வழங்குவதற்கு அழைக்கப்பட்டவராயிரு; ஒருவரின் செயலுக்கு பதில் சொல்லக் கூடியவனாயிரு." கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாக, தேவன் நம் ஒவ்வொருவரையும் ஒருவருக்கொருவர் சரி செய்யவும், ஆற்றவும், பாதுகாக்கவும், உற்சாகப்படுத்தவும், பொறுப்புக்கூறும்படி அழைக்கிறார். லூக்கா 9:10; ரோமர் 14:12; கலாத்தியர் 6: 1; 1 பேதுரு 4: 5.ஐ பார்க்கவும்.

**Adoption:** "சொந்தமாக எடுத்துக்கொள்வது, அல்லது பெறுவது; அங்கீகரிக்க; ஏற்க; ஒரு தேர்வு மூலம் எடுக்க. குழந்தை, வாரிசு, நண்பர் அல்லது குடிமகன் போன்ற உறவுகளாய் தேர்ந்தெடுத்தல். ஒரு பாவி மனந்திரும்பி, கிறிஸ்துவை கர்த்தரும், இரட்சகருமாக ஏற்றுக்கொள்ளும் போது, அவர்கள் தேவனுடைய குடும்பத்திற்குள் தத்து எடுக்கப்பட்டு, அவருடைய பிள்ளைகளில் ஒன்றாக மாறிவிடுகிறார்கள். அவர்கள் பிதாவிடம், அணுக வழி பெற்று, தெய்வீக பாரம்பரியத்தில் பங்கு பெறுகிறார்கள். அவர்களுக்குள் வாழும் பரிசுத்தாவியானவர், அவர்கள் தேவனுடைய பிள்ளை என்பதை இருதயத்திலே உறுதிப்படுத்துகிறார்.
ஓசியா 1:10; யோவான் 20:17; ரோமர் 8:14, 15, 17. ஐ பார்க்கவும்.

**Apostle:** "அனுப்பப்பட்டவர்**;** ஒரு தூதர்; கிறிஸ்துவின் பன்னிரண்டு சீஷர்களில் ஒருவர், குறிப்பாக தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவருடைய தோழராக, சாட்சியாக, நற்செய்தியைப் பிரசங்கிக்க அனுப்பப்பட்டவர். இயேசு கிறிஸ்து தம்மிடம் பன்னிரண்டு சீடர்களை அழைத்து, பின்னர் அவர்களை உலகிற்கு அவருடைய விருப்பத்தைச் செய்யவும் அவருடைய திட்டத்தை நிறைவேற்றவும் அனுப்பினார். மத்தேயு 28: 18-20; ரோமர் 1: 1; கலாத்தியர் 1: 1. பார்க்கவும்.

**Born Again:** "மறுபிறப்பு; புதுப்பிக்கப்பட்டது; ஆவிக்குரிய வாழ்க்கையைப் பெறுதல். "ஒவ்வொரு மனிதனும், உடல் ரீதியான பிறப்பை அனுபவிக்கிறான், ஆனால், ஒரு பாவி மனந்திரும்பி, இயேசுவை கர்த்தரும், இரட்சகருமாக ஏற்றுக்கொள்ளும்போது, அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் மறுபடியும் பிறக்கிறார்கள். தேவனுடைய ஆவியானவர், இருதயத்திலே வாழும்படி வந்து, தேவனுடைய ஜீவனை அவர்களுக்கு அளிக்கிறார். எசேக்கியேல் 36:26, 27; யோவான் 3: 1–8 ஐ பார்க்கவும்.

**Condemnation or Condemned**: "தவறு என்று சொல்லு, குற்றவாளி, பயனற்றவர், அல்லது இழந்தவர்; தண்டனை, அழிவு, அல்லது பறிமுதல். " ஒவ்வொரு மனிதனும், பாவம், மற்றும், மீறுதல் குற்றத்தில் பிறக்கிறான், மேலும் தேவனுடைய தண்டனைக்கு பாத்திரங்களாக இருக்கிறார்கள், இயேசுகிறிஸ்து, உலகத்தின் பாவத்தை தன் மீது சுமந்து, ஒவ்வொரு ஆண்களுடைய, பெண்களுடைய, குற்றங்களையும் சிலுவையிலே தீர்த்தார். அது ஒவ்வொரு விசுவாசிகளும், குற்றமற்றவர்கள் மற்றும் நீதிமான்களும் என்று சொல்லுகிறது. ரோமர் 5: 16-18; 8: 1; 13: 2 ஐப் பார்க்கவும்.

**Confession:** "தனிப்பட்ட, மறைக்கப்பட்ட அல்லது ஒருவருக்கு தீங்கு விளைவிக்கும் ஒன்றை ஒப்புக்கொள்வது." ஒரு விசுவாசி தன்னுடைய சிந்தனை, நோக்கம், மனோபாவம் அல்லது செயல்பாடு, தேவனுக்குப் பிரியமில்லை என்று கர்த்தருடைய வார்த்தையினாலோ, பரிசுத்த ஆவியினாலோ, உனர்த்தப்பட்டால், அதற்கு சரியான பதில், ஒப்புக்கொண்டு அறிக்கையிடுவது தான். உண்மையான அறிக்கை செய்தல், மனந்திரும்புதலைக் கொண்டுவரும். 2 சாமுவேல் 12:13; 1 யோவான் 1: 9-10 ஐ பார்க்கவும்.

**Conviction:** "ஒரு வலுவான தூண்டுதல் அல்லது நம்பிக்கை; பிழை அல்லது உண்மையை ஒப்புக்கொள்ள கட்டாயப்படுத்தப்பட்ட நிலை". பரிசுத்த ஆவியால் மட்டுமே இருதயத்தில் பாவ உணர்வுடையச் செய்ய முடியும். பரிசுத்த ஆவியின் உணர்த்துதல் ஒரு, தாழ்மையான விசுவாசியை அறிக்கையிட்டு மனந்திரும்பச் செய்கிறது. சங்கீதம் 32: 3-5; யோவான் 16: 7-8 ஐ பார்க்கவும்.

**Discipline:** ஒழுக்கம் "கற்பிக்க; சுய கட்டுப்பாட்டுக்கு பயிற்சி கொடுக்க, அல்லது கொடுக்கப்பட்ட தரத்திற்கு கீழ்ப்படிதல்;" செயல் விளக்க குறிப்புகளை பயிற்சி செய்வதின் மூலம், வளர்ச்சி அடைதல். ஆவிக்குரிய முதிர்ச்சியையும், தெய்வீக குணங்களையும், யாரும் இயற்கையாக வளர்க்க முடியாது. கிருபையுள்ள ஆண்டவர், ஒவ்வொரு விசுவாசிகளின் வாழ்க்கையிலும், சிட்சையை அனுமதித்து, பயிற்சி கொடுத்து, போதித்து, அவர்களை முதிர்ச்சி அடையச் செய்து, நீதியுள்ள தேவப் பிள்ளைகளாக மாற்றுகிறார்" சங்கீதம் 86:11; எபிரெயர் 12: 5–11. ஐ பார்க்கவும்.

**Edification:** "கட்டமைத்தல்; அறநெறி பற்றிய, அறிவுசார்ந்த அல்லது ஆவிக்குரிய முன்னேற்றம்; அறிவுறுத்தல். " மனிதனைத் தனது தந்தையுடன் உறவில் கொண்டு வரவே, இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்தார். அதேபோல், விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஊக்கப்படுத்தவும், கிறிஸ்துவை சார்ந்து வாழ்வதில் வளரவும், பிதாவுடன் ஆவிக்குரிய நெருக்கத்தில் வளர்ச்சி அடையவும், அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ரோமர் 15: 2; 1 கொரிந்தியர் 14:12, 26; எபேசியர் 4:29 ஐப் பார்க்கவும்.

**Fellowship:** "ஒன்றாக இருக்கும் நிலை; சமூகமாக ஆர்வம், செயல்பாடு அல்லது உணர்வு; ஒருவரின் சமமான அல்லது நட்பான முறையில் தோழமை" உண்மையான கிறிஸ்தவ ஐக்கியம் என்பது, ஒருவருக்கொருவர் கொடுப்பதும், பெறுவதும் ஆகும். இது இயேசு கிறிஸ்துவின் பொதுவான பகிர்ந்துகொள்ளும் ஐக்கியத்தையும், அவருடைய சரீரத்தில் (திருச்சபையில்) பங்குபெறவதிலும் கவனம் செலுத்துகிறது. விசுவாசிகளுடன் ஐக்கியமாய் இருப்பது, இரட்சகரோடு நெருங்கிய ஐக்கியமாய் இருப்பதன் விளைவாக இருக்கிறது. யோவான் 17: 3, 21; 1 கொரிந்தியர் 1: 9; 1 யோவான் 1: 3-7. ஐப் பார்க்கவும்.

**Glorify:** "மரியாதை அளி, பாராட்டு, அல்லது போற்றுதல், மேன்மை; மகத்துவம் கொடு." ஒரு விசுவாசியின் வாழ்க்கை, அவர்கள் அநீதியிலிருந்து திரும்பும் போது, தேவனுடைய சித்தத்திற்கு அர்ப்பணித்து வாழ்வதும், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, இரட்சகர் மீது அன்பு வைக்கும்போதும், தேவனை மகிமைப்படுத்துகிறது. மத்தேயு 5:16; 1 கொரிந்தியர் 6:20; வெளிப்படுத்துதல் 15: 4. ஐ பார்க்கவும்.

**Grace:** " தகுதி பார்க்காத தெய்வீக தயவு; இயற்கைக்கு அப்பாற்பட்ட, புதுப்பிக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்பட்ட மனிதர்களுக்கு தேவன் அளிக்கும் அன்பளிப்பு; இயேசு கிறிஸ்துவின் தகுதி மூலம் இரட்சிப்பு; தெய்வீக அன்பு; மனந்திரும்பும் பாவிக்கு அளிக்கப்படும் மன்னிப்பு. " கிருபை என்பது தகுதியற்றவர்களுக்கு தேவனுடைய நன்மை, பாவங்களுக்கு அளிக்கப்படும் மன்னிப்பு என்பது, முழுவதும் அவருடைய இயக்கத்திலிருந்து வந்ததாகும், இது எந்த ஒரு நபரின் தகுதியைச் சார்ந்ததும் இல்லை. புலம்பல் 3:22; ரோமர் 5: 1-2; 6: 14-15. ஐ பார்க்கவும்.

**Humility or Humble:** "ஆவியில் மனத்தாழ்மையுடன் இருப்பதன் நிலை அல்லது தரம்; பெருமை மற்றும் ஆணவத்திலிருந்து விடுபட்டிருத்தல்; மனதின் தாழ்வு; சமர்ப்பிக்கும் செயல் அல்லது பணிவான மரியாதை; பெருமையாகவோ அல்லது அழுத்தமாகவும் இல்லாமலிருப்பது;" பணிவு என்பது, பெருமைக்கு எதிரானது மற்றும் தேவனுடைய குணத்தின் பண்பு. தேவன் உயர்ந்தவர் மற்றும் பெரியவர், ஆயினும், அவர் தமது சிருஷ்டிப்பின் நன்மையைக் கருதித் தம்மை தாழ்த்துகிறார். தேவன் தாழ்மை உள்ளவர்கள் மீது கிருபை அளிக்கிறார். சங்கீதம் 113: 5-6; யாக்கோபு 4: 6 ஐ பார்க்கவும்.

**Intimate:** “நெருங்கிய தனிப்பட்ட உறவு அல்லது ஒன்றாக இருத்தல்; பழக்கமான; நெருக்கமாக ஒன்றிணைந்தது; தொடர்பானது நெருக்கமான. "இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தது, மனிதர்களுக்கு தேவனோடு சரியாக இருந்து, அவரோடு நெருங்கிய உறவில் பங்கு கொள்ள வழியை உண்டாக்க வேண்டும் என்பதற்காகத்தான். நீதிமொழிகள் 3:32; யோவான் 15:15.

**Justification or justify:** "குற்றம் அல்லது பழியிலிருந்து விடுபடுவது; விடுவிக்க; நீதிமான்களாக நடத்த; பாவத்தின் தண்டனையிலிருந்து விடுபடுவது. " தண்டனையில் இருந்து விடுபடுவது என்பது, தண்டனை கொடுப்பதற்கு நேர் எதிராக இருக்கிறது. பரிசுத்த நீதிபதியாகிய தேவன் ஒவ்வொரு நபருக்கும் கண்டிப்பான தண்டனையோ, அல்லது தண்டனையிலிருந்து விடுதலையோ கொடுக்கிறார். தேவனுடைய பிள்ளைகள் கிறிஸ்துவில் மன்னிக்கப்படுகிறார்கள் அல்லது நீதிமான்கள் ஆக்கப்படுகிறார்கள். ஏசாயா 53:11; ரோமர் 3:28 ஐப் பார்க்கவும்.

**Mercy:** "தீங்குக்கு தண்டனை அளிப்பதற்கு பதிலாக அதை சகித்துக் கொள்ளுதல்;" கருணை அல்லது மன்னிப்பு காட்டுகிற மனப்பான்மை; உதவி செய்யவோ காப்பாற்றவோ விருப்பப்படுவது; இரக்கம் அல்லது தயவின் அடிப்படையில் கொடுக்கப்படும் ஒரு ஆசீர்வாதம்; "துன்பப்பட்ட சிறுமைப்பட்டவர்கள் இடத்தில், தேவன் இரக்கமும், உருக்கமும், நன்மையும், நிறைந்தவராக இருக்கிறார். எல்லா மனிதர்களும் தேவனுக்கு முன்பாக குற்றவாளிகளும், நியாயத்தீர்ப்புக்கு பாத்திரவான்களுமாக இருந்தாலும், அவர் இயேசு கிறிஸ்துவை, இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள் இடத்தில் தமது தயவை காண்பிக்கிறார். யாத்திராகமம் 34: 6; எபேசியர் 2: 4.ஐ பார்க்கவும்.

**Pride:** "ஒருவரின் சொந்த மதிப்பு, மற்றும்தனக்கு கீழேயுள்ள அல்லது தகுதியற்றவற்றின் மீது வெறுப்பு உணர்வு; மேன்மை பற்றி நியாயமற்ற கருத்து. “பெருமை என்பது, மனத்தாழ்மைக்கு எதிரானது. பெருமை என்பது, சுய-நீதி, சுய-நாட்டம், சுய-சார்பு, மற்றும் தேவனிடமிருந்து தனிமைப்படுத்தல். இது தன் மீது, தன் சொந்த திறன்களின் மீது, போடப்படும் நம்பிக்கை அல்லது விசுவாசம். தேவன் பெருமை உள்ளவர்களை எதிர்த்து நிற்கிறார். நீதிமொழிகள் 11: 2; 16:18; ஏசாயா 2:17; 1 யோவான் 2:16; யாக்கோபு 4: 6 ஐ பார்க்கவும்.

**Propitiation:** "சமாதானப்படுத்த மற்றும் சாதகமாக வழங்க; சமரசம் செய்ய; பிராயச்சித்தம் செய்ய; தம்மையே அர்ப்பணித்த கிறிஸ்துவின் மரணம், தெய்வீக தீர்ப்பின் சினம் தணித்து, தேவனுக்கும் மனிதனுக்கும் ஒப்புரவாக்குவதாக கருதப்படுகிறது. “தேவன் பரிசுத்தர், மற்றும் தீமையை கடுமையாக எதிர்க்கிறார். தேவனின் கோபம் அவருடைய நியாயமான மற்றும் புனிதமான சினம் உலகத்தின் பாவத்தை நோக்கி செல்லுகிறது. இயேசு கிறிஸ்து சிலுவையில் தம்முடைய ஜீவனைக் கொடுத்தபோது, அவர் எல்லோருடைய பாவங்களையும், எல்லா மனிதனுடைய அநீதியையும், தம்மீது ஏற்றுக்கொண்டார். அவருடைய பலியின் ரத்தம், தேவனுடைய கோபத்தை, தணிந்து போகச் செய்தது, இயேசு தான், நம்முடைய பாவங்களுக்கு சமாதான காரணர், தங்கள் பாவத்தை தேவனிடத்தில் அறிக்கை செய்து, கிறிஸ்துவை கர்த்தரும், இரட்சகருமாக ஏற்றுக்கொள்ளும் போது, அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு தேவ கோபாக்கினைக்கு பதிலாக கிருபை அவர்களுக்கு அளிக்கப்படும் சங்கீதம் 7: 11-13; 1 யோவான் 2: 1-2.ஐ பார்க்கவும்.

**Reconciliation or reconcile**: "நல்லிணக்கம் அல்லது நட்புக்கான மறுசீரமைப்பு; அமைதியை மீட்டெடுத்தல், ஒற்றுமை, அல்லது மீண்டும் தயவு." பாவிகள் தேவனின் எதிரிகள், மற்றும் அவருடைய கோபத்திற்கு தகுதியானவர்கள் என்பதை வசனம் தெளிவாகக் கற்பிக்கிறது. கிறிஸ்து மனிதனுக்கும், தேவனுக்கும், இடையிலான பகையை சிலுவையில் மரித்து, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்த்தத்தின் மூலம் நிவர்த்தி செய்தார். ஒரு பாவி, தேவனோடு ஒப்புரவாக ஏதுவான சூழ்நிலையை இயேசு உண்டாக்கினார். ரோமர் 5:10; 2 கொரிந்தியர் 5: 18-19. ஐ பார்க்கவும்

**Redemption** or **redeem**: மீட்பு அல்லது மீட்க:"பணம் செலுத்துவதன் மூலம் மீண்டும் உடைமை பெறுதல்; மீட்பு, சிறையிருப்பு, அல்லது அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தல்; மீட்க அல்லது விடுவிக்க. "ஏதேன் தோட்டத்திலிருந்து மனிதகுலம் பாவத்திற்கு அடிமையாக இருக்கிறது இயேசு கிறிஸ்து தமது மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலம் மனித குலத்தை தேவனிடத்தில் மீட்டுக் கொண்டு வந்தார் கிறிஸ்துவுக்குள் விசுவாசிகள் இந்த அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கும் அதேவேளையில் அவிசுவாசிகள் தொடர்ந்து அந்த பாவத்தின் அடிமைத்தனத்தில் கிடக்கிறார்கள். மாற்கு10:45; 1 பேதுரு 1: 18-19 ஐப் பார்க்கவும்.

**Repentance:** "துக்கம் அல்லது வருத்தத்தை உணர; கடந்த காலத்தைப் பொறுத்து ஒருவரின் மனதையோ அல்லது இருதயத்தையோ மாற்றும் நோக்கம் கொண்ட நடவடிக்கை; ஒருவர் செய்த அல்லது செய்யத் தவறியதற்காக மன வருத்தம்." ஒரு விசுவாசி தங்கள் பாவத்திற்காக உண்மையாக வருந்தும்போது, அவர்கள் பாவத்தை தேவனிடம் ஒப்புக்கொண்டு, அதிலிருந்து திரும்புவார்கள், தேவனுக்கு தங்களை அர்ப்பணித்து, அவருடைய கிருபையால் நடப்பார்கள். மத்தேயு 3: 8; அப்போஸ்தலர் 26: 20b; எபேசியர் 4:28 ஐ பார்க்கவும்.

**Righteous:**"சரியானதைச் செய்வது; நீதி; நேர்மை; சமமான; குறிப்பாக, தவறு, குற்ற உணர்ச்சியிலிருந்து, அல்லது பாவத்திலிருந்து விடுபட்டு; நல்லொழுக்கமுள்ள; தகுதியானது." வேதத்தின்படி, தேவனோடு நடப்பவர்கள் நீதிமான்கள். விழுந்துப்போன பாவிகளை இயேசு கிறிஸ்து நீதிமான்களாக உருவாக்குகிறார். அவர் நம்முடைய இரட்சிப்பை பெறுகிறவர்களுக்கு, கருணையுடன் அவருடைய நீதியை வழங்குகிறார். ஆதியாகமம் 6: 9; ரோமர் 5:19 ஐ பார்க்கவும்.

**Sanctification:** "சுத்திகரிக்கப்பட்ட நிலை; தேவனுடைய கிருபையின் மூலம் மனிதர்களின் ஆசைகள் பாவத்திலிருந்து அந்நியப்படுத்தப்பட்டு, தேவன் மற்றும் நீதியின் மேல் அன்பு செலுத்தும் அளவிற்கு உயர்த்தப்படுகிறார்கள்." இரட்சிப்பின் தருணத்தில், தேவன் விசுவாசியைப் பரிசுத்தப்படுத்துகிறார். விசுவாசிகள் அவரோடு கூட ஐக்கியப்பட்டு, கீழ்ப்படிந்து நடக்கும் போது, அவர் தம்முடைய பரிசுத்தமாக்குதலை தொடர்ந்து செயல்படுத்துகிறார். விசுவாசிகள் இரட்சகரை நித்தியத்தில் சந்திக்கும் போது, இந்த பரிசுத்தமாக்கும் வேலை நிறைவடைகிறது. 1 கொரிந்தியர் 6:11; 1 தெசலோனிக்கேயர் 5:23; 1 யோவான் 3: 2.

**Sin:** பாவம் "தேவனுடைய சட்டத்தை மீறுதல்; தெய்வீக விருப்பத்தை மீறுதல்; தார்மீக தோல்வி; ஒரு குற்றம்." பாவம் என்பது தேவனுடைய வார்த்தை, அதிகாரம், நன்மை, ஞானம், நீதி, அல்லது கிருபை, இவைகளுக்கு எதிரான குற்றம் ஆகும். ஒரு கலகத்தனமான இருதயத்திலிருந்தோ அல்லது ஏமாற்றக்கூடிய மனத்திலிருந்தோ உருவாகி, மனோபாவம் சிந்தனை வார்த்தை மற்றும் கிரியைகளில் செயல்படுகிறது. சங்கீதம் 51: 4; 1 யோவான்3: 4; ரோமர் 14:23 ஐப் பார்க்கவும்

**Sovereign-**இறையாண்மை: "உயர்ந்த அல்லது அதிகாரத்தில் உயர்ந்தவர், மற்றவர்களை விட உயர்ந்தவர், சுதந்திரமானவர் அல்லது உயர்ந்த அதிகாரம்". தேவன் இறையாண்மை உடையவர். அவர் உயர்ந்த அதிகாரம் பெற்றவர், மற்றும் முழுமையான ஞானம் அதிகாரம் உடையவர், அவர் உருவாக்கிய அனைத்தின் மீதும் முழுமையான அதிகாரம் உடையவர். சங்கீதம் 139: 1–16; தானியேல் 4:35; வெளிப்படுத்துதல் 4:11 ஐ பார்க்கவும்.

**Transform-** மறுரூபம்**:** "வடிவத்தை மாற்ற; இயல்பு, மனநிலை, அல்லது இருதயம் போன்றவற்றை மாற்ற." நாம் இயேசு கிறிஸ்துவுடன் நெருங்கிய உறவில் நடக்கும்போது, அவர் நம் வாழ்க்கையில், அவருடைய சுபாவமும், சாயலும் பிரதிபலிக்கும் வகையில் மாற்றுகிறார். நாம் அவரோடு கூட நித்தியத்தில் பிரவேசிக்கும்போது, அவருடைய மகிமையை பிரதிபலிக்கும் வண்ணமாக முழுவதும் மறுரூபம் ஆக்கப்படுவோம். 1 கொரிந்தியர் 15: 51-52; 2 கொரிந்தியர் 3:18; பிலிப்பியர் 3:21; 1 யோவான் 3: 2

**Transgression or Transgressor-**மீறுதல் அல்லது மீறுபவர்**:** "பாவம்; கட்டளை, சட்டம் அல்லது ஒருவரின் கடமையை மீறல்; சட்டத்தை, அல்லது அறியப்பட்ட விதி, அல்லது நேர்மை கொள்கையை மீறுகிற ஒரு நபர். தேவன் தனது நீதியை பத்து கட்டளைகளில் நிறுவினார். அவருடைய கட்டளைகளை மதியாதவர்கள் மீறுபவர்கள் ஆவர், மேலும் மரணத்திற்கு பாத்திரவான்கள். நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவும், மனிதகுலத்தின் பாவத்தை சிலுவையில் சுமக்கவும், மற்றும் அவரை நம்புகிற அனைவருக்கும் நியாயத்தை உறுதிப்படுத்தவும், இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்தார். ஏசாயா 53:12; மத்தேயு 5:17; ரோமர்5:18; 7:12; எபிரேயர் 2: 2 ஐப் பார்க்கவும்.

**சீஷருக்கு ஒரு கடிதம்**

அன்புள்ள சீஷரே,

சீஷத்துவம் பயிற்சி புத்தகத்தை நிறைவு செய்கிற போது, ஒரு கிறிஸ்தவராக விசுவாசத்தில் வாழ்வதென்றால் என்னவென்று நீங்கள் கற்றுக்கொண்டவைகளை பிரதிபலிக்கும்படியாக, உங்களை ஊக்குவிக்கிறேன். தேவனுடைய சீஷத்துவ திட்டத்தை உங்கள் கண்கள் காணும்படிக்கு, இயேசு கிறிஸ்துவில் உங்கள் உறவை வளர்த்து முதிர்ச்சியடைய, இந்தப் படிப்பினை உங்களுக்கு வழிகாட்ட உதவும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

அனைத்து விசுவாசிகளும் கீழ்ப்படியும்படிக்கு கொடுக்கப்பட்ட பிரதான கட்டளையை திருச்சபை இழந்து கொண்டிருக்கிறது, இந்த பிரதான கட்டளை என்றால் என்ன என்பதைக் குறித்து, கிறிஸ்தவர்கள் அதிகமாக அறியாமையில் வளர்கிறார்கள். தங்கள் சொந்த விஷயங்களிலும், செயல்பாடுகளிலும், அதிக கவனம் செலுத்தி, தங்கள் உறுப்பினர்களை, இயேசுவின் தெளிவான கட்டளைக்கு கீழ்ப்படிய ஆயத்தப்படுத்தாமல், உலகம் முழுவதும் திருச்சபை, திசை திருப்பப்படுகிறது. ஆனால் இயேசு கொடுத்த கட்டளையை நீங்கள் இனிமேலும் அறியாமல் இருக்கக் கூடாது.

ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும், அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28: 19-20)

அவருடைய சீஷர்களில் ஒருவராக மாறுவதற்கு, அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படியுமாறு, நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன். நீங்கள் வளர்ந்து, உங்கள் விசுவாசத்தில் முதிர்ச்சியடையும்போது, நீங்கள் ஆயத்தப்பட்டு, மற்றவர்களை விசுவாசத்தில் சீஷர்களாக்கும்படிக்கு ஞானம் மற்றும் பகுத்தறியும் திறனுக்காகவும், ஜெபியுங்கள். நீங்கள் ஆயத்தமானபோது, தேவன் உங்கள் வாழ்க்கையில் அனுமதித்த மனிதர்களை கண் திறந்து பாருங்கள், மேலும் நீங்கள் யார் யாரை சீஷர்களாக மாற்ற முடியுமோ, அவர்களை ஆர்வமாய் தேடுங்கள். இந்தப் பயிற்சி புத்தகம், உங்களுக்கு கீழ்ப்படிய உதவக்கூடிய ஒரு நல்ல கருவியாக இருக்கிறது.

குடும்ப சீஷத்துவ ஊழியங்கள், திருமணம் மற்றும் பெற்றோர்களைப் பற்றிய அநேக தொகுதிகளை, தேவ வார்த்தையினால் அருளப்பட்ட ஞானத்தோடும் அறிவுறுத்தல்களோடும் வழங்கப்படுகிறது.

திருமணம் ஒரு ஊழியம் என்ற தொடர், மேலும் பிள்ளைகளை வளர்ப்பது ஒரு ஊழியம் என்ற தொடர் ஆகிய இரண்டும், உங்கள் குடும்பத்தின் மூலமாக தேவனை மகிமைப்படுத்துவதற்கு உதவக்கூடிய, ஒரு நல்ல கருவியாக இருக்கும். அவைகளை கூட மற்றவர்களை சீஷர்களாக உருவாக்க பயன்படுத்தலாம். இந்தப் புத்தகங்கள் நம்முடைய வெப்சைட்டில் காணமுடியும், FDM. World.

தேவன் உங்களை ஆசீர்வதித்து காப்பாராக.

கிறிஸ்துவில் உங்கள் சகோதரன்

பாஸ்டர் கிரை காஸ்டர்.

## ஆசிரியரைப் பற்றி...

ஒரு காலத்தில் பாஸ்டர் கிரேக் காஸ்டர் ஒரு முட்டாள். படிப்பு ஏறாத மாணவர். மூன்றாம் நிலை மதிப்பெண்ணில் வாசிப்பு நிலை கொண்ட ஒரு உயர்நிலைப் பள்ளி பட்டதாரி. ஒரு அறிவற்ற கணவன் மற்றும் கொடுமைப்படுத்தும் தந்தை என்று விவரித்ததுண்டு, ஆனால் தேவன் அவருக்காக வேறு திட்டத்தை வைத்திருந்தார். கிரேக் அவர்களுக்கு பொது இடங்களில் பேச பயம் இருந்தபோதிலும், 1994 இல் தேவன் அவரை முழு நேர ஊழியத்திற்கு அழைத்தார். சரியான கல்வி படிப்பும், கல்லூரி டிகிரியும் இல்லாதபோதும் அவர் விசுவாசத்தோடு ஊழியத்தில் இறங்கினார். 1995இல் ஊழிய அபிஷேகம் பெற்றார், பின்னர் நான்கு புத்தகங்களை எழுதினார்; பலரை சீஷராக்கினார்; நூற்றுக்கணக்கானவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்; எண்ணற்றவர்களை கிறிஸ்துவிடம் நடத்தினார்; அமெரிக்கா மற்றும் வெளிநாடுகளில் திருமணம் மற்றும் பெற்றோருக்குரிய கருத்தரங்குகள், ஆண்களுக்கான கூடுகைகள், போதகர் கருத்தரங்குகள் ஆகியவற்றின் மூலம் ஆயிரக்கணக்கானவர்களுக்கு போதித்திருக்கிறார். இவை அனைத்தும் தேவனுடைய கிருபை மற்றும் வல்லமையினால் மட்டுமே.

கிரேக் 1979 இல் இயேசுவுக்கு தனது வாழ்வை ஒப்புக்கொடுத்த போதிலும், எப்பொழுது இயேசுவிலும் அவருடைய வார்த்தையிலும் அனுதினமும் நிலைத்திருக்க தொடங்கினாரோ, அப்போதிலிருந்து அவரது வாழ்வில் மாற்றம் தொடங்கியது. இயேசு உண்மையிலேயே நம் ஒவ்வொருவருடனும் நெருங்கிய உறவை வைக்க விரும்புகிறார் என்று அவர் ஆணித்தரமாக நம்புகிறார். அவர் இந்த உறவைப் பின்தொடர்ந்து கிறிஸ்துவின் மீது முற்றிலும் சார்ந்து இருப்பதால் அவரது வாழ்க்கை என்றென்றும் மாற்றப்பட்டிருக்கிறது.

**ஊக்கமடையுங்கள்**

உங்கள் வாழ்விலும் உங்கள் வாழ்க்கையின் மூலமாகவும் தேவன் செயல்பட முடியும் என்பதை நம்புவதில் உங்களுக்கு போராட்டம் இருந்தால், பாஸ்டர் கிரேக்கின் சம்பவம் உங்களை ஊக்கப்படுத்தும். உங்கள் வாழ்க்கையில் கடந்தகால பாவங்கள், கல்வி அறிவு இல்லாமை, கற்பித்தல் அல்லது பேசுவதற்கான பயம் அல்லது கல்வித் தகுதியின் பற்றாக்குறை ஆகியவை தேவனுடைய அழைப்புக்கு கீழ்ப்படிய தடையாகயிருப்பதற்கு ஒருபோதும் அனுமதிக்காதீர்கள். தேவன் உங்களை அவருடைய சீஷராக உருவாக்க விரும்புகிறார், நீங்கள் திருமணமானவர்களாகவோ அல்லது குழந்தைகளை உடையவர்களாகவோ இருந்தால், அவர் உங்களை கவனத்திற்குரிய ஒரு வாழ்க்கை துணைவராகவும் பெற்றோராகவும் உருவாக்க விரும்புகிறார். அவருடைய கிருபை ஆச்சரியமானது மற்றும் எல்லையற்றது. அவர் உங்களை நேசிக்கிறார் மற்றும் உங்கள் மூலம் மகிமைப்பட விரும்புகிறார்.

**உங்களுக்கான தேவனுடைய வாக்குத்தத்தம்**

தேவனுடைய ஏராளமான வாக்குத்தத்தத்திற்காகவும், போஷிப்பிற்காகவும் அவருக்கு நன்றி செலுத்துகிறேன். "இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுருவின் வார்த்தைகளான அவருடைய வாக்குத்தத்தங்களை தியானியுங்கள்."

> நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய நீதியால் எங்களைப்போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு, இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு எழுதுகிறதாவது: தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது.

தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும். அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. (2 பேதுரு 1: 1-8)

**குடும்ப சீஷத்துவ ஊழியத்தைப் பற்றி…**

குடும்ப சிஷத்துவ ஊழியத்தின் (FDM என்று சுருக்கமாக அழைக்கப்படுகிறது) இலக்கை அடைவதற்காக, 1994 இல் இயக்குனர் பாஸ்டர் கிரேக் காஸ்டர் அவர்களால் கிறிஸ்துவின் சரீரத்தை ஆதரிக்கவும், கற்பிக்கவும், பயிற்சியளிக்கவும் நிறுவப்பட்ட ஒரு இலாப நோக்கமற்ற ஊழியமாகும், FDM-ன் மூலம் பயிற்சிப்புத்தகங்கள், குறும்படங்கள் மற்றும் இணையதளத்தில் தனிப்பட்ட கல்விக்கான புத்தகங்கள், சிறிய குழுக்கள், வீட்டு-குழு ஆய்வு மற்றும் ஒருவர்- ஒருவரை சீஷராக்குதல் போன்றவற்றை செய்து வருகின்றார்கள். மேலும் அவர்கள் திருமணம், பிள்ளை வளர்ப்பு, இளம் வயதினரைப் புரிந்துகொள்வது மற்றும் திருச்சபையில் சீஷத்துவத்தை திட்டமிடல் போன்ற கருத்தரங்குகளை நடத்தி வருகிறார்கள்.

FDM ஊழியத்தின் தரிசனம் என்னவென்றால், கிறிஸ்தவ திருச்சபைத் தலைவர்களுக்கு, ஆலோசனை வழங்கி, பயிற்றுவித்து மற்றும் அவர்களை தேறினவர்களாக நிறுத்தி, மேலும் அதற்கு தேவையான வேதாகமத்தின் அடிப்படையிலான பயிற்சி புத்தகங்களை வழங்கி அவர்களுடைய திருச்சபைக்கும் குடும்பங்களுக்கும் ஊழியம் செய்யவைப்பதாகும்.

1995 வருடம் முதல், ஆயிரக்கணக்கானோர் திருமணம் மற்றும் பெற்றோருக்கான வகுப்புகளை முடித்துள்ளனர், மேலும் அமெரிக்காவிலும் வெளிநாடுகளிலும் உள்ள நூற்றுக்கணக்கான திருச்சபைகள் FDM பயிற்சி புத்தகங்களை உபயோகித்து தங்கள் திருச்சபைக்கு ஊழியம் செய்துள்ளனர். அவர்களுடைய ஊழியமானது FDM. world இன் இணையதளத்திலுள்ள இலவச (பயிற்சிப் புத்தகங்கள்) ஆதாரங்கள் பல குடும்பங்களுக்கு உதவியாக இருக்கிறது.

FDM இன் ஊழியங்கள் ரஷ்யா, உக்ரைன், கியூபா, மெக்சிகோ, ஆப்பிரிக்கா சிங்கப்பூர், ஜப்பான் சீனா மற்றும் மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் சர்வதேச அளவில் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. மேலும் அறிந்து கொள்ள FDM.World இணையதளத்தைப் பார்க்கவும்.

# கிறிஸ்தவ அஸ்திபார சத்தியங்கள்

## சீஷருக்கான வலுவானஅடிப்படை

### பயிற்சி புத்தகம்

“நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம்விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.” - யோவான் 17: 20-21

**கிறிஸ்துவோடு கூட நாம் எப்படி ஒன்றினைவது மற்றும் நாம் எப்படி அவரை நம் வாழ்வில் மகிமைப்படுத்துவது என்று கற்றுக்கொள்வதே சீஷத்துவத்தில் தேவனுடைய திட்டம்.**

பன்னிரெண்டு அப்போஸ்தலர்களிடம் அவர் வைத்திருந்த உறவின் மூலம் இயேசு ஒரு தெளிவான சீஷத்துவ மாதிரியை கொடுத்திருக்கிறார். தன் வாழ்க்கையில் மூன்று வருடங்கள் அவர்களோடு பயணித்து, தேவனுடைய வார்த்தையை போதித்து, சத்தியத்தில் நடந்து மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க வண்ணம் அவர்களை பயிற்றுவித்தார். இந்த தியான பயிற்சி புத்தகமானது உங்களுடைய தனிப்பட்ட சீஷத்துவவழிநடத்தலில் நீங்கள் சீஷர்களாக இருந்தாலும் அல்லது மற்றவர்களை சீஷர்களாக மாற்றுபவராக இருந்தாலும் உங்களை வழிநடத்தும். இப்புத்தகம் ஒருவர்மற்றவரை சீஷராக்குவது, தனித்தியானம் அல்லது சிறு குழுவிற்கு சரியாக இருக்கும்.

**கிறிஸ்தவ அஸ்திபார சத்தியங்களானது கிறிஸ்தவ விசுவாசத்தின் ஏழு அடிப்படைக் கோட்பாடுகளில் அடங்கியுள்ளது:**

- குமாரனாகிய இயேசு கிறிஸ்து
- பிதாவாகிய தேவன்
- பரிசுத்த ஆவியானவர்
- ஆவிக்குரிய வளர்ச்சியும், முதிர்ச்சியும்
- மன்னிப்பு மற்றும் ஒப்புரவாகுதல்
- ஆவிக்குரிய யுத்தம்
- மரணமும்,கடைசிகாலங்களும்

இயேசு கிறிஸ்து கற்றுக்கொடுத்த இதே கோட்பாடுகளை நீங்களும் கற்றுக்கொண்டு உங்கள் தனிப்பட்ட சீஷத்துவ பயணத்தை தொடங்கி, தேவனுடைய பிரதான கட்டளைக்கு (மத்தேயு28: 19-20) கீழ்ப்படிந்து வாழுங்கள்.

பரிசுத்தவான்களை ஊழியத்திற்கென்று தகுதிப்படுத்துங்கள், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை ஊக்கப்படுத்துங்கள் மற்றும் தேவனுடைய பிரதான கட்டளைக்கு கீழ்ப்படிந்து கிறிஸ்துவிற்காக சீஷர்களை உருவாக்குவதில் செயல்படுங்கள். (எபேசியர் 4: 12, மத்தேயு 28: 19-20)



பாஸ்டர் கிரேக் காஸ்டர் அவர்கள் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்களையும் பெண்களையும் சீஷர்களாக உருவாக்கியுள்ளார். குடும்ப சீஷத்துவ ஊழியத்தின் (FDM), நிறுவனராக அவர் பல சீஷத்துவ புத்தகங்களின் ஆக்கியோனாக உள்ளார் மற்றும் அமெரிக்காவிலும், ரஷ்யா, உக்ரைன், கியூபா, மெக்சிகோ, ஆப்பிரிக்கா சிங்கப்பூர், ஜப்பான், சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலும் சபைகளில் சீஷத்துவத்தை பற்றி கற்றுக்கொடுத்துள்ளார். கிரேக், FDM மற்றும் கூடுதல் சீஷத்துவ புத்தகங்களுக்கான தகவல்களுக்கு www.FDM.world என்ற வலைத்தளத்தை அணுகவும்.

FDM •WORLD

ISBN 978-1-7331045-5-5